உ

கணபதிதுணை

# சோதிட நூலாதாரம்

என்னும்

# சோதிட பாலபாடம்

(முதற்பாகம்)

ஏழாம்பதிப்பு

இவை

சில சோதிடர்கள் அனுமதியின் பேரில் பற்பல கணித நூல்களையும் ஆராய்ந்து சிறுவர்முதல் யாவரும் சுலபமாகக் கற்று உணரும்பொருட்டு

**செஞ்சி - ஏகாம்பர முதலியார் அவர்கள்**

எழுதியதுடன்

காவேரிப்பாக்கம்

**K. M. தெய்வசிகாமணி சோதிடரால்**

சில புதிய விஷயங்களைச் சேர்த்து

**அ. முத்துவடிவேல் முதலியாரால்**

பூமகள்விலாச அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

சென்னை

1939

இதன் விலை] Registered Copy Right. [ ... 191

## 7-ஆம் பதிப்பின் முகவுரை

சர்வஜீவகோடிகளுக்கும் இன்றியமையாத வடமொழியாகிய பல சாஸ்திரங்களாலுங்கூடிய அரும்பொருளான அனேக கணிதசாஸ்திரங்களை ஆராய்ச்சிசெய்து பெரும்பாலும் பிரயாசை யெடுத்து அனேக சோதிடரைக்கொண்டு ஆராய்ச்சிசெய்து சேகரித்து ஆங்கிலங் கற்ற ஆடவரும் பெண்களுங்கூட சோதிடத்தின் மர்மத்தைத் தெரிந்து, தங்கள் தங்களது வாழ்நாளின் சுகதுக்காதிகளை பிறர் உதவியின்றித் தாமே தெரிந்து கொள்ளும் முறையில், ம-ா-ா-ஸ்ரீ, செஞ்சி-ஏகாம்பர முதலியார் அவர்களால் எழுதி முடிவுபெற்ற இந்த 'சோதிட பாலபாடம்' என்னும் நூலை ம-ா-ா-ஸ்ரீ, கோ - செல்லப்ப முதலியார் அவர்கள் மேற்படியாரிடம் சர்வசுதந்திரமும் பெற்று, ஐந்து பதிப்புகள் வரையில் தானே அச்சிட்டு வெளியிட்டு வந்ததை, அடியிற் கையொப்பமிட்டுள்ள யான் ஷை கோ-செல்லப்ப முதலியார் அவர்களிடம் இந்நூலினது சர்வசுதந்திரமும் கிரயம்பெற்று என்னால் 1932-ஆம் வருஷத்தில் ஆறும் பதிப்பாய் அச்சிட்டு வெளியிட்டுள்ளதை நேயர்கள் அறிந்துள்ளாராயினும், இந்நூலினைவாங்கி வாசித்த எமது சோதிட நண்பர்கள், இந்நூல் ஆரம்ப சோதிடர்கள் முதல் கணித சோதிடர்கள் வரையிலுமுள்ள அனைவருக்கும் பயன்படும் என்றும், இந்நூலின்கண் இன்னுமுள்ள சோதிட ரகஸ்யங்களையும், பாவபலன் முதலியனவற்றையும் சேர்த்து அச்சிட்டு வெளியிட்டால், அவை பெரிதும் பரோபகாரமாயிருக்குமென அனேகர் எம்மிடம் வந்து கேட்டுக்கொண்டதால், ஷை சோதிடர்களின் கருத்துக்கு இணங்கி, காவேரிப்பாக்கம் K. M. தெய்வசிகாமணி சோதிடரைக் கொண்டு இந்நூலிலிருந்துள்ள விஷயங்கள் போக, மற்றும் சில முக்கிய விஷயங்களைச் சேர்த்து 7-ஆம் பதிப்பாய் புதுப்பித்து அச்சிட்டுள்ளோம். ஆனதால் இந்நூலை ஒவ்வொருவரும் வாங்கி வாசித்து உண்மைப்பலன் அறிந்துகொள்வதுடன் எமது உத்தரவின்றி இந்நூலை வேறு எவரும் அச்சிடக்கூடாதென்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

சென்னை }
10-8-39 }

அ. முத்துவடிவேல் முதலியார்

உ

கடவுள் துணை

# பொருள் அகராதி


| பொருள் | பக்கம் |
|---|---|
| **அ** | |
| அங்காரகபகவான் | 4 |
| அவசவ்விய நட்சத்திரம் | 13 |
| அலிநட்சத்திரம் | 14 |
| அகரத்தின்பலன் | 173 |
| அஷ்டகவர்க்கம் | 32 |
| **ஆ** | |
| ஆண்ராசி அல்லது ஒற்றைராசி அறியும் வகை | 16 |
| ஆண் பெண் அலிக்கிரகங்கள் அறியும் வகை | 20 |
| ஆகாரத்தின் பலன் | 173 |
| **இ** | |
| இராகுபகவான் | 4 |
| இராசிப்பெயர்தொகுதி | 10 |
| இராசிசங்கிரக விபரம் | 14 |
| இராசிமாதங்கள் | 5 |
| இராசிவுருவங்கள் | 15 |
| இராசி அங்கங்கள் | 15 |
| இராசி திக்குகள் | 15 |
| இராசிகளின் ஜாதி | 15 |
| இராசிகளின் நிறம் | 15 |
| இராசிகளின் விழிப்புகள் | 15 |
| இருகால்ராசிகள் | 16 |
| இராக்குருடுராசிகள் | 17 |
| இராசெவிட்டுராசிகள் | 17 |
| இராசிகளின்மூடம் | 17 |
| இராசிபார்வை | 29 |
| இராசியில் கிரகங்கள் சஞ்சார கால அளவு அறியும்வகை | 29 |
| இராகு | 56 |
| இராகு | 58 |
| இராகுதிசையில் ராகுபுத்தி | 67 |
| இராகுதிசையில் குருபுத்தி | 68 |
| ,, சனிபுத்தி | 68 |
| ,, புதன்புத்தி | 68 |
| ,, கேதுபுக்தி | 68 |
| ,, சுக்கிரபுத்தி | 69 |
| ,, சூரியபுத்தி | 69 |
| ,, சந்திரபுத்தி | 69 |
| ,, செவ்வாய்புத்தி | 69 |
| ,, குருபுத்தி | 70 |
| ,, சனிபுத்தி | 70 |
| இகாரத்தின் பலன் | 123 |
| **ஈ** | |
| ஈகாரத்தின் பலன் | 123 |
| **உ** | |
| உபயராசிகள் | 16 |
| உடலுதைய ராசிகள் | 17 |
| உகாரத்தின் பலன் | 123 |
| **ஊ** | |
| ஊகாரத்தின் பலன் | 124 |
| **எ** | |
| எகாரத்தின் பலன் | 124 |
| **ஏ** | |
| ஏகாரத்தின் பலன் | 124 |
| **ஐ** | |
| ஐகாரத்தின் பலன் | 124 |

| பொருள் | பக்கம் |
|---|---|
| ஒ | |
| ஒகாரத்தின் பலன் | 124 |
| ஓ | |
| ஓகாரத்தின் பலன் | 124 |
| க | |
| கணிதமுறை | 1 |
| காணங்களின் பெயரும் அவற்றின் உருவம் | 13 |
| ககரத்தின் பலன் | 124 |
| கா | |
| காலுதைய ராசிகள் | 17 |
| காரக்கிரகங்களறியும் வகை | 53 |
| கால ஓரை | 21 |
| கி | |
| கிரகங்களின் பெயர்த்தொகுதி | 11 |
| கிரகங்களின் ஜாதி முதலியவை அறியும்வகை | 17 |
| கிரகபுத்திரர்கள் | 20 |
| கிரகங்களின்நட்பு அறியும்வகை | 28 |
| கிரகங்களின் சமமறியும்வகை | 28 |
| கிரகங்களின் பகையறியும்வகை | 28 |
| கிரகபார்வையறியும்வகை | 31 |
| கிரகபார்வையின் பலன் | 31 |
| கிரகபார்வைகள் எத்தனை வகையெனக்காணல் | 29 |
| கிரகவெண்களறியும்வகை | 31 |
| கிரகங்களின் பலன்தருங் காலமறியும் வகை | 59 |
| கிரகங்களின் மகாதிசைப்பலன் | 69 |
| கு | |
| குஜாதி பஞ்சக்கிரகங்கள் | 20 |
| குரு | 58 |
| குரு | 54 |
| குருதிசையில் குருபுத்தி | 70 |
| ,, சனிபுத்தி | 70 |
| ,, புதன்புத்தி | 70 |
| ,, கேதுபுத்தி | 70 |
| ,, சுக்கிரபுத்தி | 71 |
| ,, சூரியபுத்தி | 71 |
| ,, சந்திரபுத்தி | 71 |
| ,, செவ்வாபுத்தி | 71 |
| ,, ராகுபுத்தி | 72 |
| கே | |
| கேதுபகவான் | 31 |
| கேந்திரஸ்தானம் | 25 |

| பொருள் | பக்கம் |
|---|---|
| கேது | 59 |
| கேது | 56 |
| கேதுதிசையில் கேதுபுத்தி | 77 |
| ,, சுக்கிரபுத்தி | 77 |
| ,, சூரியபுத்தி | 77 |
| ,, சந்திரபுத்தி | 77 |
| ,, செவ்வாய்புத்தி | 78 |
| ,, இராகுபுத்தி | 78 |
| ,, குருபுத்தி | 78 |
| ,, சனிபுத்தி | 78 |
| ,, புதன்புத்தி | 79 |
| கோ | |
| கோசாரத்தின் பார்வைகாலம் | 52 |
| கோசாரப்பலன் அறியும்வகை | 57 |
| கோசாரப்பலன் | 53 |
| கோசாரவேதை அறியும்வகை | 59 |
| கௌ | |
| கௌரி பஞ்சாங்கம் பார்க்கும் வகை | 121 |
| ங | |
| ஙகாரத்தின் பலன் | 125 |
| ச | |
| சந்திரபகவான் | 53 |
| சனிபகவான் | 55 |
| சவ்விய நட்சத்திரம் | 13 |
| சரராசிகள் | 16 |
| சந்திரன் | 4 |
| சனி | 55 |
| சந்திரன் | 53 |
| சனி | 4 |
| சந்திரதிசையில் சந்திரபுத்தி | 63 |
| ,, செவ்வாபுத்தி | 63 |
| ,, இராகுபுத்தி | 63 |
| ,, குருபுத்தி | 64 |
| ,, சனிபுத்தி | 64 |
| ,, புதன்புத்தி | 64 |
| ,, கேதுபுத்தி | 64 |
| ,, சுக்கிரபுத்தி | 65 |
| ,, சூரியபுத்தி | 65 |
| சனி திசையில் சனிபுத்தி | 72 |
| ,, புதன்புத்தி | 72 |
| ,, கேதுபுத்தி | 72 |
| ,, சுக்கிரபுத்தி | 73 |
| ,, சூரியபுத்தி | 73 |
| ,, சந்திரபுத்தி | 73 |





| பொருள் | பக்கம் |
|---|---|
| சனிதிசையில் செவ்வாபுத்தி | 73 |
| ,, ராகுபுத்தி | 74 |
| ,, குருபுத்தி | 74 |
| சகரத்தின் பலன் | 125 |
| சா | |
| சாத்துவீகாதிகுண கிரகங்களறியும் வகை | 20 |
| சு | |
| சுக்கிரபகவான் | 4 |
| சுபக்கிரகங்கள் பாபக்கிரகங்களறியும்வகை | 20 |
| சுபஸ்தான கிரகபலன் அறியும் வகை | 30 |
| சுக்கிரன் | 55 |
| சுக்கிரன் | 58 |
| சுக்கிரதிசையில் சுக்கிரபுத்தி | 79 |
| ,, சூரியபுத்தி | 79 |
| ,, சந்திரபுத்தி | 79 |
| ,, செவ்வாய்புத்தி | 80 |
| ,, இராகுபுத்தி | 80 |
| ,, குருபுத்தி | 80 |
| ,, சனிபுத்தி | 80 |
| ,, புதன்புத்தி | 81 |
| சுக்கிரனில் கேதுபுத்தி | 81 |
| சூ | |
| சூரியபகவான் | 3 |
| சூரியன் | 57 |
| சூரியன் | 53 |
| சூரியன் திசையில் சூரியன்புத்தி | 61 |
| ,, சந்திரன்புத்தி | 61 |
| ,, செவ்வாய்புத்தி | 61 |
| ,, இராகுபுத்தி | 61 |
| ,, குருபுத்தி | 62 |
| ,, சனிபுத்தி | 62 |
| ,, புதன்புத்தி | 62 |
| ,, கேதுபுத்தி | 62 |
| ,, சுக்கிரபுத்தி | 63 |
| செ | |
| செவ்வாய் | 54 |
| செவ்வாய் | 57 |

| பொருள் | பக்கம் |
|---|---|
| செவ்வாதிசையில் செவ்வாபுத்தி | 66 |
| ,, ராகுபுத்தி | 66 |
| ,, குருபுத்தி | 66 |
| ,, சனிபுத்தி | 66 |
| ,, புதன்புத்தி | 66 |
| ,, கேதுபுத்தி | 66 |
| ,, சுக்கிரபுத்தி | 67 |
| ,, சூரியன்புத்தி | 67 |
| ,, சந்திரபுத்தி | 67 |
| ஞ | |
| ஞகாரத்தின் பலன் | 125 |
| ட | |
| டகாரத்தின் பலன் | 125 |
| த | |
| தலையுதைய ராசிகள் | 16 |
| தகாரத்தின் பலன் | 125 |
| தி | |
| திதிகளின் பெயர்த்தொகுதி | 12 |
| தா | |
| தாமாதி பஞ்சக்கிரகங்கள் | 20 |
| ந | |
| நவக்கிரக ஸ்துதிகள் | 3 |
| நவக்கிரகதேசங்களறியும்வகை | 20 |
| நட்சத்திரப் பெயர்த்தொகுதி | 5 |
| நட்சத்திரங்கள் பெயர் | 12 |
| நட்சத்திரங்களின் ஆதியந்த நாழிகை யறியும்வகை | 14 |
| நட்சத்திர அதிதேவதையறியும் நட்பாட்சி யுச்சமறியும்வகை | 25 |
| நகரத்தின் பலன் | 125 |
| நா | |
| நாற்கால் ராசிகள் | 16 |
| நாமநட்சத்திர யெழுத்துக்களறியும்வகை | 47 |
| நாமநட்சத்திர யெழுத்துகளைக் கொண்டு ராசிகளறியும்வகை | 48 |
| ப | |
| பட்சங்களின் பெயர் | 13 |
| பலசால் ராசிகள் | 16 |
| பறக்கும் ராசிகள் | 16 |
| பகற்குருடு ராசிகள் | 17 |
| பகற்செவிட்டு ராசிகள் | 17 |
| பஞ்சபூதகிரகங்களறியும்வகை | 20 |

| பொருள் | பக்கம் |
|---|---|
| பணபரம் ஆபோகில் ஸ்தான மறியும்வகை | 31 |
| பனிரெண்டு பாவகவிபரம் அறியும் வகை | 48 |
| பகரத்தின் பலன் | 126 |
| **பா** | |
| பாபக்கிரகபலன் அறியும்வகை | 30 |
| பாவபலன் | 82 |
| **பு** | |
| புதபகவான் | 4 |
| புருஷநட்சத்திரம் | 13 |
| புதன் | 54 |
| புதன் | 57 |
| புதன்திசையில் புதன்புத்தி | 74 |
| ,, கேதுபுத்தி | 74 |
| ,, சுக்கிரபுத்தி | 75 |
| ,, சூரியபுத்தி | 75 |
| ,, சந்திரபுத்தி | 75 |
| ,, செவ்வாய்புத்தி | 75 |
| ,, ராகுபுத்தி | 76 |
| ,, குருபுத்தி | 76 |
| ,, சனிபுத்தி | 76 |
| **பெ** | |
| பெண்ராசி அல்லது ரெட்டைராசி அறியும்வகை | 16 |
| **போ** | |
| போதகர் முதலியோர்களுக்குப் பலன் | 60 |

| பொருள் | பக்கம் |
|---|---|
| **ம** | |
| மகாதிசைக்கு போதகன் வேதகன் பாசுகன் காரகன் முதலியோர் அறியும்வகை | 60 |
| மகரத்தின் பலன் | 126 |
| **மு** | |
| முகவுரை | 3 |
| முக்குணவேளை | 24 |
| முப்பிணி கிரகங்களறியும்வகை | 20 |
| **ய** | |
| யகரத்தின் பலன் | 126 |
| **யோ** | |
| யோகத்தின் பெயர் | 13 |
| **ர** | |
| ரகரத்தின் பலன் | 126 |
| லகரத்தின் பலன் | 126 |
| **வ** | |
| வகரத்தின் பலன் | 126 |
| **ழ** | |
| ழகரத்தின் பலன் | 126 |
| **ள** | |
| ளகரத்தின் பலன் | 127 |
| **ன** | |
| னகரத்தின் பலன் | 127 |
| **ஸ்** | |
| ஸ்திரீ நட்சத்திரம் | 13 |
| ஸ்திரராசிகள் | 13 |
| **ஜ** | |
| ஜாதகம் பார்க்குமடைவு வினா விடை | 40 |


பொருள் அகராதி முற்றிற்று.

---

உ

கடவுள் துணை

## நூலாசிரியர் கருத்து

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

சீராருஞ் சித்தரொடு முனிவ ரெல்லாம்
    செப்பியதோர் கணிதவகைப் பலநூ லாய்ந்து
பேராருஞ் சோதிடமாம் பால பாடப்
    பெட்டகத்தைக் கையேந்திக் கண்ணுற் றோர்க்கு
நேராகும் நெடுங்கணக்கிற் சிக்கில் லாமல்
    நிலைகண்டு பலாபலனை நீட்டிச் சொல்ல
ஏராருஞ் செஞ்சிநகர் வாழ்வே ளாளன்
    ஏகாம்பர மின்னூலை வெளியிட் டேனே. 1

வெளியிட்ட யின்னூலின் விளக்கம் பாரீர்
    வெகுசூட்சஞ் சோதிடங்கள் கற்றுக் கொள்ள
உளவுசொல்லி யோதிவைக்கு மாசா னைப்போ
    லுறுதியுள்ள சோதிடமாம் பால பாடம்
களிப்புறவே கண்டவர்க்கு மெய்ந்நூ லாகுங்
    கைதொட்டுக் காட்டுதற்போல் கருத்துக்கெட்டும்
தெளிவடையு மின்னூலை வாசித் தோர்கள்
    தெள்ளுமணி போற்கணிதஞ் செப்பு வாரே. 2

---

## நவக்கிரகஸ்துதி

விநாயகர் வணக்கம்

வெண்பா

மேதினி யோர்நாளும் மிகமகிழ்ந்து தானோத
சோதிடபா லபாடஞ் சொல்லுதற்கு—நீதியுறும்
பேரானைப் பரமசிவன் புகழ்ந்தளித்த வாதியெனுங்
காரானை முகவனடிக் காப்பு.

சூரியபகவான்

சீரருள்மிகச்சுரந்து செகத்துயரனைத்தும்போக்கும்
பேரருள்பிதாவுமாகிப் பெருந்துன்பவிருளையோட்டி
காரருள்சுகத்தைநல்கக் கதிர்களாயிரம்பரப்பும்
பாரருள்பருதிபுத்தேள் பதமலர்சென்னிவைப்பாம்.

சந்திரபகவான்

செழித்திடச்செல்வம்நல்கி செகத்துளவுயிர்கட்கெல்லாம்
வழித்திடும்பிதாவுமாகி வல்லிருளதனையோட்டித்

தழைத்திடவமுதமாகத் தக்கதோர்கதிர்பரப்பி
பொழிந்திடுஞ்சோமனார்தன் பொற்பதந்தலைக்கொள்வோமே.

அங்காரகபகவான்

வெற்றியும்வீரமாண்மை விதரணம்பராக்கிரமங்கள்
சுற்றமாந்தீரம்நல்கிச் சோதரன் தானுமாகி
பற்றியபூமியின்பம் பண்புறுதான்யமோங்கி
எற்றிசைபுகழுஞ்சேயி னிருபதந்தலைக்கொள்வோமே.

புதபகவான்

இணக்கமாமகிழ்ச்சியின்ப மியலுறும்புக்தியுக்தி
வணக்கமாங்கல்விமேன்மை வருந்தனமகிழ்ச்சிபுண்யம்
துணக்கமாம்பந்துவாகித் துலங்கிடச்சுகங்கள்நல்கும்
கணக்கனுமெந்தைபாதம் கழலடிசென்னிவைப்பாம்.

வியாழபகவான்

பெருநிறைச்செல்வமேன்மை புகழ்ந்திடுஞ்சுபங்கல்யாணம்
வருநிறைமரபுநீடி வாய்க்குஞ்சந்ததிதழைக்க
தருநிறையாடைரத்னந் தான்பெறவருளுந்தேவ
குருநிறைவியாழன்பொற்றாள் குறைகழற்றலைக்கொள்வோமே.

சுக்கிரபகவான்

திரைகடல்சூழும்பூமி தனில்வளருயிர்கட்கெல்லாம்
நிறைதரும்யோகபோக நீடியமனைவியின்பம்
தரைபுகழ்வாகனங்கள் தக்கதோர்சுகத்தைநல்கும்
மறைமொழிபுகரின்பொற்றாள் மலரடிதலைக்கொள்வோமே.

சனிபகவான்

கோரியவுலகத்தின்கண் குலவியவுயிர்கட்கெல்லாம்
மீரியசுகமளித்து மெய்த்தளர்பிணியைநீக்கிச்
சீரியதுன்பந்தீர்ந்து சிறக்கத்தீர்க்காயுள்நல்கும்
காரியின்கமலபாதத் தாமரைதலைக்கொள்வோமே.

இராகுபகவான்

பணியெனவுருவமாகிப் பட்சமாயமுதமுண்டு
தணியெனவுயிர்கட்கெல்லாந் தகும்படியோகபோகந்
துணிவுடனளித்துநாளுந் துலங்கிடயின்பநல்கும்
மணமுறுமிராகுபொற்றாள் மலரடிசென்னிசேர்ப்பாம்.

கேதுபகவான்

மாதுமைபாகன்சொற்ற வரத்தினாலமுதபானக்
கேதுவுமுடையனாகி யெவ்வுயிர்களுந்தழைப்ப
கோதிலாஞானமோட்சங் குருபத்தியருளும்நல்கும்
கேதுவாம்பகவன்பாதம் கிளர்முடிமிசைக்கொள்வோமே.

---

உ

கடவுள் துணை

# சோதிட பாலபாடம்

## கணிதமுறை

ஜாதககணிதம் செய்தற்கு முக்கியமாய் வேண்டிய முறைகளையும் பிரச்சினம் விவாகம் முதலிய சர்வகர்மங்களுக்கும் முக்கியமாயிருப்பது காலநிர்ணயம் என்பதே பண்டைய சாத்திரீகர்களின் கருத்து. இதனை தமிழ் நூலாசிரியர்களும் ஆமோதித்துள்ளனர். எப்படியெனில், ஆசிரியர் கீரனார் நடராஜர் தாம் கூறிய ஜாதக அலங்காரம் பொதுப்பாயிரத்தில்.

செப்பியதோர்பலபாகம் பகர்வதற்கேஇரவி
 தேசதேசத்தின் விழச்சாயைதெரிந்துஎண்ணி
தப்பறவேகண்டருளும் சரபிண்டத்தொகையின்
 தகமைபெறமருவிலக் கினங்கடமையறிந்தே
ஒப்புடன்லக்கின சந்திகண்டாலக்காலை
 உயர்கடிகாலக்கின சுத்திகளுணர்ந்துகண்டு
விப்பிரர்சோதிடவல்லோர் சரணமதைப்போற்றி
 விளம்பினர்க்குப் பலபாகம்விளங்குமிகத்தானே.

என்று கூறியதால் ஜாதகம் கணிக்கும்போது அக்குழவியானது எந்ததேசத்தில் பிறந்தனவோ அந்ததேசத்தின் அக்ஷாம்சப்படி உதயாதி நாழிகை வினாடி கலை விகலை முதலியனவற்றை எவ்வளவு பிரயாசையுடன் கண்டறிய வேண்டுமோ அவ்வளவும் நன்றாய் கண்டறிந்த பின்பே, ஜனன லக்கினத்தைக் கண்டறியவேண்டும்.

வடமொழி சோதிடர்களும் தென்மொழி சோதிட ஆசிரியர்களும் கூறிய தென்னவெனில்? கிரேதாயுகத்திற்கு, ஆதான லக்கினமே ஜென்மலக்கினமென்றும், திரேதாயுகத்திற்கு ஜலோதய லக்கினமே ஜென்மலக்கினமென்றும், துவாபரயுகத்திற்கு சிரோதய லக்கினமே ஜென்மலக்கினமென்றும், இக்கலியுகத்திற்கு பூபத லக்கினமே ஜென்மலக்கினமென்றும் கூறியுள்ளார். ஆயினும், ஆதான லக்கினமே முக்கியமென முடிவு செய்துள்ளனர்.

ஆதான லக்கினத்தை சோதிடர் அறியவேண்டுமானால், பிரசவ வீட்டிலுள்ளவர்கள் ஆதான நேரத்தை நிச்சயமாய்ச் சொன்னால் தானே அறிய முடியும்.

பிரசவகாலத்தில் பிரசவ ஸ்திரீயுட னிருப்பவர்களோ எனில், மேற்படி பிரசவ ஸ்திரீக்கு வேண்டிய சிகிச்சா விஷயங்களில் மனதைச் செலுத்துகின்றனரேயன்றி நேரத்தை கவனிப்பதே யில்லை.

குழவி பிறந்தபின், மேற்படி குழவிக்கும் தாய்க்கும் வேண்டிய சிகிச்சை யாவும் செய்தபின், இப்போது மணி என்ன இருக்கும் சுமார் கால்மணிநேரத்திற்கு முன்பு தானே குழந்தைபிறந்தது என்று தோராயமணி நிமிஷங்களை குறிப்பிடுவதுண்டு.

நாட்டுவாசங்களிலோ வென்றால் கடிகாயந்திர மிருப்பதே யில்லை. அப்படி இருந்தாலும் சுமார் ½-மணி நேரம் முன்னும் பின்னுமாகவே யிருக்கும். இப்படிப்பட்ட மாறுபாடுடன் குறித்த நேரத்தை சோதிடர்களிடம் சொன்னால் அவர்களும், மேற்படி குழவிக்குச் சொந்தமானவர் சொல்லும் தோராயமணி நிமிஷங்களைக் கொண்டே ஒருமணிக்கு இரண்டரை நாழிகை வீதம் கணக்கிட்டு லக்கினம் எடுத்து பஞ்சாங்கத்திலுள்ள கிரகங்களையமைத்து பலன் சொல்லி விடுகின்றனர்.

பஞ்சாங்கங்களை சொல்லவேண்டியதில்லை. சனி, ராகு, கேது குரு முதலிய கிரகங்கள் ஒன்றிற்கொன்று 3-மாதங்கள் வரையில் வித்தியாசம் வரும். இவற்றுள் எவைசரி எவைசரியல்ல என்பதை கிரகஸ்புடரீதியால் கண்டறிவதில்லை. பஞ்சாங்கத்திலுள்ள கிரக பாதசாரப்படி எந்தமாதம் எந்ததேதியில் எத்தனை நாழிகை விநாடியில் தானிருந்த ராசியைவிட்டு அடுத்தராசிக்கு மாறினார். அப்படி மறுராசிக்கு மாறியது முதல் குழவி பிறந்தநாள்வரையில் எத்தனை பாகைகளை சென்றிருக்கிறார் என்பதை கண்டறிவோமாயின் கிரகபலம் நன்கு விளங்குமன்றோ.

லக்கினத்தையும் இவ்வாறே கண்டறியவேண்டும். உதாரணமாக மேஷலக்கினம் என வைத்துக்கொண்டால் அந்த லக்கினப்படி கிரகங்கள் அமைந்துள்ள வரிசைப்படி சில முக்கிய அனுபவங்களை ஆராய்தல் வேண்டும். முதலாவது ஜென்மலக்கினம் எது? ஜென்ம லக்கினாதி யார்? ஜென்மலக்கினாதி ஜென்மலக்கின முதல் எந்த ராசியிலிருக்கிறார்? எந்த கிரகத்துடன் கூடினார்? எவரால் பார்க்கப் பட்டார்? நட்பு, ஆக்ஷி, உச்சம், நீச்சம், பகை, சமம் முதலிய சட் பலத்துள் எந்தபலத்தை யடைந்தார்? ஆனதால் மேற்படி லக்கினாதி எவ்வித பலமுடையவனாவான் என அறிந்து ஜென்மலக்கினத்திற் குள்ள விதி விசேஷப்படி அந்த ஜாதகனுக்குள்ளனவா என்பதை ஆராய்ந்து அவை அனுபவத்திலிருந்தாலொழிய அந்த லக்கினத்தை நிச்சயிப்பது கூடாது.

லக்கினஸ்புடப்படியும் ஜாதகனுக்குள்ள சில அடையாள அனு பவப்படி முன்னாகவோ பின்னாகவோ புறட்டிப் புறட்டிப் பார்த்து



நிச்சயிக்க வேண்டுவதே முக்கிய கடமையாகும். பொதுவாய் ஜன்ம லக்கினத்தைக் கொண்டு கவனிக்கவேண்டிய சில முக்கிய விதிகளை இங்கு கூறுவாம்.

| | | | |
|---|---|---|---|
| 1 ஜாதகனது | கீர்த்தி | 8 மேற்படி | ஆசாரம் |
| 2 மேற்படி | ஆயுள் | 9 மேற்படி | பலம் |
| 3 மேற்படி | குணம் | 10 மேற்படி | சிரசு |
| 4 மேற்படி | நிறம் | 11 மேற்படி | கபாலம் |
| 5 மேற்படி | கௌரவம் | 12 மேற்படி | வயிறு |
| 6 மேற்படி | தொழில் | 13 மேற்படி | சுகம் |
| 7 மேற்படி | ஜாதி | 14 சுகம் | |

இவற்றுள் மதவேற்றுபாட்டால் 4-ஆம் இடம் என்பதைக் கொண்டு அவனது ஜாதியை யறியவேண்டுமெனச் சிலரும், ஜென்ம இலக்கினத்தைக்கொண்டு தத்தமது ஜாதியை அறியவேண்டுமெனச் சிலரும் கூறுவர்.

### 2-ஆம் இடத்தால் கவனிக்க வேண்டிய விதி

| | |
|---|---|
| 1 வாக்கு நாணயம் | 7 வலது கண் விஷயம் |
| 2 குடும்ப விசேஷம் | 8 பார்வை இலக்ஷணம் |
| 3 தனது யுக்தி புக்தி | 9 எந்தசாஸ்திர ஆராய்ச்சி யுடையவன் |
| 4 பேசும் பொய் மெய் முதலியன | 10 எவ்வித ஆதாயமுடையவன் |
| 5 தனார்ச்சிதம் | 11 எவரால் ஜீவிப்பவன் |
| 6 சாதுர்யம் | 12 எவ்வித வாகனத்தில் ஊர்ந்து செல்லுவன் |

இரண்டாம் வீட்டால் அந்தந்த ஜாதகன் எவ்விதத்தால் தனம் தேடுவான் என்பதை அறிய யேதுவான இடமெனச் சிலரும், எவ்விதமான லாபத்தை யடைவான் என்பதை அறிய யேதுவான இடமெனச் சிலரும் கூறியுள்ளனர். ஏனெனில் லாபம் என்பது 11-ஆம் இடத்தைப் பொருத்த தாதலால் 11-ஆம் இடமே லாபத்தை யறியும் க்ஷேத்திரமென்பது கருத்து.

### 3-ஆம் இடத்தால் கவனிக்கவேண்டிய முக்கிய விதி

1 ஜாதகனுக்கு இளையவர் உண்டா இல்லையா?
2 ஜாதகனின் இளையசகோதரர் ஆணா? அல்லது பெண்ணா?
3 ஜாதகனின் இளையசகோதரனோ சகோதரியோ உண்டாயின் அன்னவர்களது நிறம், குணம், செய்கை, யோகம் முதலியன.
4 இளையசகோதரர் பிறந்தார்களேயாமானால் அவர்களது ஆயுள் விஷயங்கள்.

5 இவனுக்குப் பின்பிறந்தவருக்கும் இந்த ஜாதகனுக்கும் உள்ள சத்துரு மித்துரு முதலியன.

6 இவனுக்குப் பின்பிறந்தோர்க்குள்ள ஆயுள் எவ்வளவு?

7 மேற்படி இளைய சகோதரர்கள் புத்ரவிருத்தி குடும்பவிருத்தி முதலியனவும் அறிவது கடமை. இதுநிற்க அந்தந்த ஜாதகனது பலம், அடிமை, எசமானன் விஷயம், தாயா லுண்டாகும் தீங்கு, தைரியம், வீரியம், போகவன்மை போஜனபாத்திரம், பொறுமை, முதலிய விசேஷங்களை யறிய ஏதுவான இடமாகும்.

## 4-ஆம் இடத்தைக்கொண்டு கவனிக்கவேண்டிய முக்கிய விதி

1 மாதாவின் பொது விஷயம்
2 மாதாவின் சகோதர சகோதரிகள்
3 மாதாவின் குணம் செய்கை நிறம்
4 மாதாவின் யோகம்
5 மாதாவின் ஆயுள்

6 மாதாவினது அந்தரங்க எண்ணம் என்பதை முக்கியமாய் ஆராய்ந்தே தீரவேண்டும். மற்றும் நான்காமிடத்தால் கவனிக்கவேண்டிய முக்கியவிதி யென்ன வெனில்.

| | |
|---|---|
| 1 சிற்பவித்தை | 7 தன்வீட்டின் அந்தஸ்து |
| 2 வாசனுதிப்பிரியம் | 8 தனக்குண்டாகும் பூமிவிஷயம் |
| 3 வாகனம் | 9 சுக விஷயம் |
| 4 பால் பசு | 10 விரதாதி விஷயம் |
| 5 புதையல் பொருள் | 11 பந்துக்கள் |
| 6 பிதுர் வியாகூலம் | 12 கையினது லக்ஷணம் |

என்னு மிவைகளைக் கண்டறிய ஏதுவானதாகும். சிலர் புதையற் பொருள் என்பது 10-ஆம் இடத்தால் கண்டறிவது சிலாக்கிய மென்றுங் கூறுவர்.

## 5-ஆம் இடத்தால் கவனிக்கவேண்டிய முக்கியவிதி

1 புத்திரன் உண்டா இல்லையா?

2 புத்திரர் உண்டு எனின் மொத்தம் எவ்வளவு? அவற்றுள் ஆண் எத்தனை? பெண் எத்தனை?

3 புத்திர புத்திரிகளின் நிறம், குணம், சுபாவம், யோகம் செய்கை ஆயுள், புத்திரர்களின் கல்வி முதலியனவும் நிலைத்திருக்கும் புத்திர புத்திரிகள் எவ்வளவு என்பதை தெரிக.



4 புத்திர புத்திரிகளுக்கும் தனக்கும் உள்ள ஒற்றுமை.

5 எந்தவயதில் புத்திருண்டாவர் என்பதை ஆராய்வது அவசியம்.

நிற்க 5-ஆம் இடம் என்பது தாய்அம்மான் க்ஷேத்திரமென சாத்திரங்கள் கூறுதலால்.

1 அம்மான் உண்டா இல்லையா என்பதையும், உண்டு எனின் எத்தனை அம்மான் பிறந்தவர் என்பதையும், நிலைத்திருப்பவர் எவ்வளவு என்பதையும், அவர்களுக்குள்ள நிறம், குணம், யோகம், செய்கை ஆயுள் முதலியவற்றையும் ஆராய்வது சிலாக்கியமாகும். இதுவன்றி ஷை 5-ஆமிடத்தால் கவனிக்கவேண்டிய சில முக்கியவிதி.

| | |
|---|---|
| 1 புத்தி சாதுர்யம் | 7 பூர்வத்தின் வினைப்பயன் |
| 2 மனோநிலை | 8 தாய்பாட்டன் |
| 3 சித்த துணிபு | 9 வித்துவத்துவம் |
| 4 நீதி மார்க்கம் | 10 விவேகத்தின் சிறப்பு |
| 5 சிறப்பு விதி | 11 மாமன் விஷயம் |
| 6 யோசனை விவரம் | 12 சந்ததி விஷயம் |

ஜாதக அலங்கார நூலாசிரியர் 9-க்கு 9-ஆம் இடமே ஜென்ம ராசிக்கு 5-ஆம் இடமாவதால், மேற்படி 5-ஆம் ராசியால் பிதுர் விஷயங்களையும் கண்டறிய ஏதுவானதெனவும், மற்றும் சிலநூலாசிரியர்கள் 5-ஆம் இடத்தால் பொதுவாய் பாட்டன் பாட்டி என்னும் இருவரது விஷயமும் கண்டறியலாமெனக் கூறியுள்ளனர்.

## 6-ஆம் இடத்தைக்கொண்டு கவனிக்கவேண்டிய முக்கிய விதி

1 வியாதியுடையவனு இல்லாதவனு?
2 வியாதியுடையவன் எனில் எவ்வித வியாதியுடையவன்?
3 மேற்படி வியாதியானது எந்தெந்த காலங்களிலுண்டாகும்?
4 கடனுடையவனு?
5 கடனுண்டு எனில் எக்காலத்திலுண்டு?
6 எக்காரணத்தால் கடன் வாங்குவான் என்னும் விஷயங்களை ஆராய்வது கடமையாகும். மற்றும்,

| | |
|---|---|
| 1 சத்துரு பயம் | 7 அவமிருத்து |
| 2 உயுத்தம் | 8 கெண்டம் |
| 3 குறித்த விஷய விக்கினம் | 9 மானக்கேடு |
| 4 கிலேசம் | 10 தாயாதி பகை |
| 5 வைராக்கியம் | 11 சிறைவாசம் |
| 6 நோய் | 12 மறதி என்னும் விஷயங்களை |

யும் ஆராய வேண்டுவது அவசியமாகும்.

## 7-ஆம் இடத்தைக்கொண்டு கவனிக்கவேண்டிய முக்கிய விதி

1 கலியாணம் உண்டா இல்லையா?
2 கலியாணம் உண்டெனின் மேற்படி மனைவியானவள் சுய பந்துவா? பழைய பந்துவா? அன்னிய பந்துவா?
3 மேற்படி மனைவியின் குணம் செய்கை குறி முதலிய விசேஷங்கள் என்ன?
4 மனைவியின் ஆயுள் எவ்வளவு?
5 மனைவிக்கும் தனக்குமுள்ள ஒற்றுமை
6 கலியாணம் எந்தவயதில் நடக்கும்?
7 மனைவி ஒன்று அல்லது ஒன்றுக்குமேல் எத்தனை?
8 மனைவியின் கற்பு முதலியனவற்றை கவனிக்க வேண்டுவது அவசியம். மற்றும்

| | |
|---|---|
| 1 காமம் | 7 விவாத ஜெயம் |
| 2 மனைவி சுகம் (துக்கம்) | 8 நடனம் |
| 3 போகம் | 9 ஜனவசியம் |
| 4 போகவன்மை | 10 பிரீதி |
| 5 வியாபாரம் | 11 பிரயாண பங்கம் |
| 6 ஸ்திரீ கலகம் | 12 இளைய மனைவியின் சந்ததி. |

சிலர் முதல் மனைவியின் விஷயத்தை 7-ஆம் இடத்தாலும் இளைய மனைவியின் விஷயத்தை 11-ஆம் வீட்டாலும் ஆராய்வது கடமை என்பர்.

## 8-ஆம் இடத்தால் கவனிக்க வேண்டிய முக்கிய விதி

1 ஆயுள் உள்ளவனா இல்லாதவனா?
2 ஆயுள் உண்டென்றாலும் இல்லையென்றாலும் வயதின் அளவு எவ்வளவு?
3 எந்த திசையில் மாரகம் செய்யும் என்னு மிவ்விவரத்தையும் ஆராய்க. மற்றும்,

| | |
|---|---|
| 1 கலகம் | 7 மனையின் பகை |
| 2 தோல்வி | 8 விஷபீடை |
| 3 பாவம் | 9 நீண்ட வியாதி |
| 4 மரணவகை | 10 ஜீவ இம்சை |
| 5 இரணநோய் | 11 சிரச்சேதம் |
| 6 விசனம் | 12 அங்கஹீனம் னு மிவற்றைமன் யும் ஆராய்வது கடமையாகும். |

## 9-ஆம் இடத்தைக்கொண்டு கவனிக்கவேண்டிய முக்கிய விதி

1 பிறந்தகாலத்தில் பிதா அங்கு இருந்தனரா?
2 பிதாவுடன் பிறந்த சகோதரர் மொத்தம் எவ்வளவு? நிற்பவர் எவ்வளவு? அதில் ஆண் எத்தனை? பெண் எத்தனை?



3 பிதாவினது பொது விஷயம் என்ன?
4 பிதாவின் யோகாவ யோகம் எப்படி?
5 பிதாவின் ஆயுள் எவ்வளவு?
6 பிதாவினது அந்தஸ்து குணம் குறி முதலியனவற்றையும் ஆராய வேண்டுவது கடமையாகும். மற்றும்

| | |
|---|---|
| 1 குருபக்தி | 7 சகோதர துன்பம் |
| 2 தெய்வபக்தி | 8 திருப்பணி |
| 3 தருமம் | 9 ஞானம் |
| 4 நியாயம் | 10 பாக்கியம் |
| 5 தீர்தஸ்தானம் | 11 சுபம் |
| 6 தானம் | 12 ஜலப் பிரதேசம் |

என்னு மிவற்றை ஆராய்வது கடமையாகும். இத்துடன் 9-ஆம் இடம் என்பது பிதுர்ஸ்தானம் என்றும் பாக்கியஸ்தானம் என்றுங் கூறுதலால், இவ்விரண்டு விஷயங்களையும் செவ்வனே ஆராய்வது கடமை. சிலர் பிதாவின் பாக்கியம் 5-என்றும், ஜாதகனது பாக்கியம் 9-ஆம் இடமென்றும் கூறுவர்.

## 10-ஆம் இடத்தைக்கொண்டு கவனிக்க வேண்டிய முக்கியவிதி

1 தொழில் உள்ளவனா இல்லாதவனா?
2 தொழில் இல்லையென்றால் ஜீவனம் எவ்வாறு நடக்கும்?
3 தொழில் உண்டு என்றால் எவ்விதமான தொழில்?
4 ஜாதகர்தொழிலில், உத்தியோகமா? வியாபாரமா? கைத் தொழிலா? என்பதையும் ஆராய்வது கடமையாகும். மற்றும்,

| | |
|---|---|
| 1 புண்ணியம் | 7 அனுக்கிரகம் |
| 2 காரியம் | 8 மானம் |
| 3 ஞானம் | 9 தானம் |
| 4 கீர்த்தி | 10 தத்து புத்திரன் |
| 5 ராஜ தயவு | 11 யாகம் |
| 6 மானாபிமானம் | 12 ரசவாதம் என்னும் இவற்றை ஆராய்ந்து கூறுக. |

## 11-ஆம் இடத்தைக்கொண்டு கவனிக்க வேண்டிய முக்கியவிதி

1 ஜேஷ்டன் உண்டா? இல்லையா?
2 உண்டெனின் ஆண் எத்தனை? பெண் எத்தனை?
3 ஜேஷ்டனுக்கும் தனக்கும் உள்ள ஒற்றுமை
4 ஜேஷ்டனது ஆயுள் எவ்வளவு?
5 ஜேஷ்டனது குணம் செய்கை யோகம் முதலியவற்றையும் ஆராய வேண்டுவது அவசியம். மற்றும்,

1 தாயின் இடமுள்ள பிரியம்
2 லாபம்
3 நஷ்டதிரவியலாபம்
4 பல மனைவி
5 கல்வியால் லாபம்
6 பல்லக்கு
7 லாபமுண்டாகும் வழி
8 பிறர் பொருள் சேர்தல்
9 நிந்தை
10 துக்க நிவர்த்தி
11 மூத்த சகோதரன்
12 போஜனம் பிரீதி என்பனவற்றை அறியவேண்டிய க்ஷேத்திரமாகும்.

12-ஆம் இடத்தைக்கொண்டு கவனிக்க வேண்டிய முக்கியவிதி

1 விரய முடையவனா இல்லாதவனா?
2 விரயம் உண்டு எனின் எக்காரணத்தால் விரயம் உடையவன்
3 எந்த வயதில் விரயம் உண்டாகும் என்னு மிவற்றை ஆராய்வது முக்கியம். மற்றும்

1 தனச்சேதம்
2 ஜனவிரோதம்
3 காரியக்கேடு
4 அதிகதுக்கம்
5 மயக்கம்
6 நித்திரை சுகம்
7 அங்கஹீனம்
8 அன்னிய தேசவாசம்
9 விவாதம்
10 ராஜமூல தொந்திரவு என்னும் இவற்றையும் ஆராயவேண்டுவதுகடமையாகும்.

சர்வ சோதிட நூற்களில் சொல்லப்பட்டிருக்கும்

நட்சத்திரம், இராசி, கிரகம் முதலிய பெயர்களுக்கு

## நி க ண் டு.

### நட்சத்திரப்பெயர்த் தொகுதி.

அசுவினியின் பெயர்:—இரலை, ஏறு, ஐப்பசி, சென்னி, பரி, புரவி, மருத்துவநாள், முன்னாள், யாழ், வாசி. ஆக 10

பரணியின் பெயர்:—அடுப்பு, காடு, கிழவன், சோறு தருமநாள், தாசி, தாழி பகலவன் பாகு பாதம், போதம், முக்கட்டு. ஆக 12

கார்த்திகையின் பெயர்:—அங்கி, அளகு, அளக்கர், அறுமீன், அறுவாய், ஆரல், இறால், எரிநாள், தழல், நாடன், நாவிதன், வாணன். ஆக 12

உரோகணியின் பெயர்—அயனாள், உருளி, உருள், உரோகணி, ஊற்றால், சகடம், சகடு, சதி, தேர், பண்டி, பார், விமானம், வையம். ஆக 13

மிருகசீரிடத்தின் பெயர்:—இந்திரன், ஐந்தானம், நரிப்புறம், பாலை, பேராளன், மதிநாள், மார்கழி, மாழ்கு, மான்றலை, மும்மீன், வெய்யோர். ஆக 11



திருவாதிரையின் பெயர்:—ஆதிரை.ஈசனாள், செங்கை, மூதிரை,யாழ். ஆக 5

புனர்பூசத்தின் பெயர்:—அதிதிநாள், ஆவணம், ஏறி, கரும்பு, கழை, பாலை, பிண்டி, புணர்தம். ஆக 8

பூசத்தின் பெயர்:—கார்க்குளம், குருநாள், கொடிறு, தை, வண்டு. ஆக 5

ஆயிலியத்தின் பெயர்:—அரவுநாள், ஆயில், கௌவை, பாம்பு. ஆக 4

மகத்தின் பெயர்:—ஆதிச்சனி, எழுவாயெழுஞ்சனி, கொடுநுகம், பிதுர்நாள், மாசி, வாய்க்கால், வேட்டுவன், வேள்வி, மகரமீன், கலை, சுறா, மான், மீனேறு, மீன். ஆக 14

பூரத்தின் பெயர்:—இடையெழுஞ்சனி, எலி, கணை, நாவிதன், பகவதிநாள். ஆக 5

உத்திரத்தின் பெயர்:—கடையெழுஞ்சனி, கதிர்நாள், செங்கதிர்நாள், செங்கதிர்பிறந்தநாள், பங்குனி, பார்க்குனி, மானேறு. ஆக 7

அத்தத்தின் பெயர்:—அங்கிநாள், ஐமீன், ஐவிரல், களிறு, கன்னி, காமரம், கைமீன், கைனி, கௌவுத்துவம், நவ்வி. ஆக 10

சித்திரையின் பெயர்:—அரிவை, ஆடை, சுவை, செவ்வி, தச்சன், துவட்டநாள், தூசு, நடுநாள், நெய், பயறு, மீன். ஆக 11

சோதியின் பெயர்:—அனிலநாள், காற்று, தீபம், துணி, துளக்கம், மரக்கால், விளக்கு, வீழ்க்கை, வெறுநாகம். ஆக 9

விசாகத்தின் பெயர்:—அனிலநாள், காற்றுமுந்துநாள், களகு, சேட்டை, முறம், முற்றில், வைகாசி. ஆக 7

அனுடத்தின் பெயர்:—தாளி, தேள், பனை, புல், பெண்ணை, போந்தை, மித்திரநாள். ஆக 7

கேட்டையின் பெயர்:—இந்திரநாள், எரி, செந்தழல், சேட்டை, வல்லாரை, வேதி, கேது, கதிர்ப்பகை, சிகி, செம்பாம்பு, மதிப்பகை, மதியுணி. ஆக 12

மூலத்தின் பெயர்:—அசுரநாள், அன்றில், ஆனி, குருகு, கொக்கு, சிலை, தேட்கடை, வில். ஆக 8

பூராடத்தின் பெயர்:—உடைகுளம், நீர்நாள், முற்குளம். ஆக 3

உத்திராடத்தின் பெயர்:—ஆடி, ஆனி, கடைக்குளம், விசுவநாள். ஆக 4

திருவோணத்தின் பெயர்:—உலக்கை, ஓணம், சிரவணம், சோனை, நள்ளு, மாயோநாள், முக்கோல், வயிரம். ஆக 8

அவிட்டத்தின் பெயர்:—ஆவணி, காகப்புள், பறவை, புளவசுநாள். ஆக 4

சதையத்தின் பெயர்:—குன்று, சுண்டன், செக்கு, போர், வருணநாள். ஆக 5

பூரட்டாதியின் பெயர்:—நாழி, பூரட்டாதி, மூள், கொழுங்கோல். ஆக 4

உத்திரட்டாதியின் பெயர்:—அறிவநாள், நீபம், முள்கொழுங்கோல், மன்னன், முரசு. ஆக 5

இரேவதியின் பெயர்:—இரவிநாள், கடைநாள், கலம், குலம், சூலம், தொழு, தோணி, நாவாய், பறி, புருடநாள், பெருநாள். ஆக 11

நட்சத்திரப்பெயர்த்தொகுதி

முற்றிற்று.

---

## இராசிப்பெயர்த் தொகுதி

மேடவிராசியின் பெயர்:—ஆடு, உதள், கொறி, தகர், மறி, மை, யாடு, வருடை, வாக்காலி, அஜம், மேழகம், கொச்சை, மொல்லை, மொத்தை. ஆக 14

இடபவிராசியின் பெயர்:—ஏறு, குண்டை, சே, நந்தி, நரை, பசு, பாண்டில், பாறல், புல்லம், விடை, காளை. ஆக 11

மிதுனவிராசியின் பெயர்:—இரட்டை, சயமகள், தண்டு, பாடவள், பாடவை, யாழ், விழவு, தாரம், கவிஞ்சை, வீணை, ஸ்திரீ, புருஷர். ஆக 12

கடகவிராசியின் பெயர்:—அலவன், கள்வன், குளிர், சேக்கை, ஞெண்டு, நண்டு, நள்ளி, மதி, கொண்டன். ஆக 9

சிம்பவிராசியின் பெயர்:—அரிமா, ஆளி, ஜயானனம், புலி, சிங்கம், மிருகவிராஜன், மலைமா, சீயம், கோன், மாகெடுவான். ஆக 10

கன்னியின் பெயர்:—மடந்தை, பெண், மாது, தையல், சேடி, தெரிவை, இருபெண்ணினிற்குரிய பெயர்கள் யாவுமேயாம்.

துலாவிராசியின் பெயர்:—கட்டளை, கோல், சீர், தராசு, துலை, தூக்கு, நிரை, வாணிகன். ஆக 8

விருச்சிகவிராசியின் பெயர்:—தெருக்கால், தேள், பறப்பன், துடர், மணி, விட்டன், துட்டன், விஷராசி. ஆக 7



தனுசுவிராசியின் பெயர்:—காண்டீபம், கொடுமரம், சாபம், சிலை, துரோணம், வில், பாணம், கார்முகம். ஆக 8

மகரவிராசியின் பெயர்:—கலை, சுறு, தை, மான், முதலை, கேது. ஆக 6

கும்பவிராசியின் பெயர்:—கரீரம், குடங்கா, குடம், ஜாடி, பானை, குண்டிகை, கலசம், குட்டுவம். ஆக 8

மீனவிராசியின் பெயர்:—சலசரம், சலசலம், மச்சம், மயிலை, மீன், கயல், சேல்கண்டை. ஆக 7

இராசியின் பெயர்த்தொகுதி

முற்றிற்று.

---

## கிரகங்களின் பெயர்த்தொகுதி

சூரியன் பெயர்:—அண்டயோனி, அரி, அரியமா, அருக்கன், அருணன், அலரி, அழலன், அனலு, ஆதவன், ஆதித்தன், ஆயிரஞ்சோதி, இரவி, இருள்வலி, இனன், உதையன், எல், எல்லை, என்று, என்றாழ், ஏழ்பரியோன், ஒளி, ஒளியோன், கதிரவன், கனலி, கிரணமாலி, சண்டன், சவிதா சான்றோன், சித்திரபானு, சுடரோன், சூரன், செங்கதிரோன், சோதி, ஞாயறு, தபனன், தரணி, திவாகரன், தினகரன், தினமணி, நபோமணி, பகலோன், பகல், பங்கயன், பதங்கன், பருதி, பார்க்கன், பனிப்பகை, பானு, பார்க்கரன், மார்த்தாண்டன், மித்திரன், விகர்த்தனன், விண்மணி, விருச்சிகன், விரோசனன், வெஞ்சுடர், வெயில், வெய்யோன், ஆதி, தாமரைநாயகன். ஆக 60

சந்திரன் பெயர்.—அமுதகதிரோன், அம்புலி, அரி, அரிச்சிகன், அலவன், அல்லோன், ஆலோன், இந்து, இமகரன், இராக்கதிர், இனன், உடுபதி, உடுவின், வேந்தன், கலாநிதி, கலையினன், களங்கன், குபேரன், குமுதநண்பன், குரங்கி, சசி, சீதன், சுதாகரன், சோமன், தண்சுடர், தண்ணவன், தாரபதி, தானவன், திங்கள், தெவ்வு, நிசாகரன், நிசாபதி, நிலவு, பசும், கதிர்த்தே, மதி, மதியம் மானேந்தி, முயலின்கூடு, விதுவிபத்து, வெண்கதிரோன், வேந்தன், (அன்றியு மிளஞ்சந்திரன் பெயர்) குழவி, பிறை. ஆக 42

செவ்வாயின் பெயர்:—அங்காரகன், அரத்தன், அழலோன், அழல் அறிவன், ஆரல், உதிரன், குசன், செந்தீவண்ணன், சேய்,

நிலமகன், பௌமன், மங்கலன், வக்கிரன், சுசி, பூசுதன், அங்குசன், விக்கிரன், குருதி, தீக்கோள். ஆக 20

புதன் பெயர்:—அநாரு, அருணன், அனுவழி, கணக்கன், சவுமன், சாமன், சிந்தை சூரியன், சௌமியன், தூதுவன், தேர்ப்பாகன், நற்கோள், நிபுணன், பச்சை, பண்டிதன், பாகன், புந்தி, புலவன், மதிமகன், மாலவன், மால், மேதை, வணிகன். ஆக 23

வியாழத்தின் பெயர்:—அந்தணன், அமைச்சன், அரசன், ஆசான், ஆண்டளப்பான், குரு, சிகண்டிகன், சீவன், சுரகுரு, தராபதி, தெய்வமந்திரி, நற்கோள், பிரகஸ்பதி, பீதகன், பொன், மறையோன், வேதகன், வேந்தன். ஆக 17

சுக்கிரன் பெயர்:—சுரர் மந்திரி, அநாவிலன், ஆசான், உசனன், ஒள்ளியோன், கவிகாப்பியன், சல்லியன், சிதன், சீதகன், சுங்கன், தைத்தியமந்திரி, நற்கோள், பளிங்கு, பார்க்கவன், பிரசுரன், பிருகு, புகர், புயல், மழைக்கோள், வெள்ளி. ஆக 20

சனியின் பெயர்:—அந்தணன், அந்தன், கதிர்மகன், கரியவன், காரி, கீழ்மகன், சந்தில், சவுரி, சாவகன், தமனியன், நீலன், நோய்முகன், பங்கு, மந்தன், முடவன், முதுமகன், மேற்கோள், சுன். ஆக 18

இராகுவின் பெயர்:—கரும்பாம்பு, தமம், மதிப்பகை, மதியுணி. 4

கேதுவின் பெயர்:—கதிர்ப்பகை, சிகி, செம்பாம்பு, மதிப்பகை, மதியுணி. ஆக 5

பாம்பு என்பதும் பணியென்பதும் இராகுவினிற்குங் கேதுவினிற்கும் பொதுவான பெயரேயாம். ஆகையால் பாம்பென்று சொல்லுமிடங்களில் இராகுவுங் கேதுவுமெனக் கொள்ள வேண்டும்.

கிரகப்பெயர்த்தொகுதி முற்றிற்று.

---

## திதிகளின் பெயர்த்தொகுதி

பிரதமை - துவிதியை-திரிதியை - சதுர்தசி - பஞ்சமி - சஷ்டி-சப்தமி-அஷ்டமி-நவமி-தசமி-ஏகாதசி-துவாதசி-திரையோதசி- சதுர்தசி-பௌர்ணமி அல்லது அமாவாசை. ஆக 15

நட்சத்திரங்களின் பெயர்

அசுவனி-பரணி-கார்த்திகை - உரோகணி-மிருகசீரிஷம்-திருவாதிரை-புனர்பூசம்-பூசம் - ஆயிலியம்-மகம்-பூரம் - உத்திரம்-அஸ்தம்-சித்திரை - சோதி-விசாகம் - அனுஷம்-கேட்டை - மூலம்-பூராடம் - உத்திராடம்-திருவோணம்-அவிட்டம்-சதையம்-பூரட்டாதி-உத்திரட்டாதி-ரேவதி. ஆக 27



பட்சங்களறியும் வகை

பூர்வபட்சம் அல்லது வளர்பிறை அமரபட்சம் அல்லது தேய்பிறை. ஆக 2

யோகங்களின் பெயர்

விஷ்கம்பம்-பிரீதி-ஆயுஷ்மான் - சௌபாக்கியம்-சோபனம்-அதிகண்டம்-சுகர்மம்-திருதி-சூலம் - கண்டம்-விருத்தி - துருவம்-வியாகரணம் - அரிஷணம்-வச்சிரம்-சித்தி-விதிபாதம்-வரியான்-பரீகம்-சிவம்-சித்தம்-சாத்தியம்-சுபம்-சுப்பிரம்-பிரமம்-ஐந்திரம்-வைதிருதி. ஆக 27

திதிகளின் பெயர்த்தொகுதி முற்றிற்று.

---

## கரணங்களின் பெயரும் அவற்றின் உருவமும்

பவம் - சிங்கம், பாலவம்-புலி, கௌலவம் - பன்றி, தைதுலை-கழுதை, கரசை-யானை, வனசை-எருது, பத்திரை-கோழி, சகுனி-காக்கை, சதுஷ்பாதம்-நாய், நாகவம்-பாம்பு, கிமிஸ்துக்கினம்-புழுகு. ஆக 11

சவ்விய நட்சத்திரம்

அசுவனி - பரணி - கார்த்திகை - புனர்பூசம் - பூசம்-ஆயிலியம்-அஸ்தம்-சித்திரை-சோதி-மூலம்-பூராடம் - உத்திராடம்-பூரட்டாதி-உத்திரட்டாதி-ரேவதி இவை பதினைந்துமெனக் கொள்கவும்.

அபசவ்விய நட்சத்திரம்

உரோகணி - மிருகசீரிடம் - திருவாதிரை - மகம் - பூரம் - உத்திரம் - விசாகம் - அனுஷம் - கேட்டை - திருவோணம் - அவிட்டம்-சதையம். ஆக 12

புருட நட்சத்திரம்

அசுவனி-புனர்பூசம்-பூசம் - அஸ்தம் - திருவோணம்-அனுஷம்-பூரட்டாதி-உத்திரட்டாதி. ஆக 8

ஸ்திரி நட்சத்திரம்

பரணி-கார்த்திகை - உரோகணி - திருவாதிரை- ஆயிலியம்-மகம்-பூரம்-உத்திரம்-சித்திரை-சோதி-விசாகம்-கேட்டை - பூராடம்-உத்திராடம்-அவிட்டம்-ரேவதி. ஆக 19

அலி நட்சத்திரம்

மிருகசீரிடம் - மூலம் - சதையம் இவை மூன்றுமெனக் கொள்கவும்.

---

## நட்சத்திரங்களின் ஆதியந்தம் நாழிகை அறியும்வகை

அசுவனிக்கு நாழிகை-65, பரணி-56, கார்த்திகை-59, உரோகணி-56, மிருகசீரிடம்-56, திருவாதிரை-56, புனர்பூசம்-62, பூசம்-52, ஆயிலியம்-56, மகம்-54, பூரம்-53, உத்திரம்-56, அஸ்தம்-57, சித்திரை-60, சோதி-65, விசாகம்-61, அனுஷம்-60, கேட்டை-62, மூலம்-$63\frac{1}{2}$, பூராடம்-62, உத்திராடம்-55, திருவோணம்-$65\frac{1}{2}$, அவிட்டம்-$66\frac{1}{2}$, சதையம்-$53\frac{1}{2}$, பூரட்டாதி-$66\frac{1}{2}$, உத்திரட்டாதி-$63\frac{1}{2}$, ரேவதி-64 ஆக $1481\frac{1}{2}$.

## நட்சத்திர அதிதேவதைகள் அறியும்வகை

அசுவனிக்கு-தேவதை சரஸ்வதி, பரணிக்கு-துர்க்கை, கார்த்திகைக்கு-அக்கினி, உரோகணிக்கு-பிரமன், மிருகசீரிடம்-சந்திரன், திருவாதிரை - பரமசிவன், புனர்பூசம் - அதிதி, பூசம் - பிரகஸ்பதி, ஆயிலியம்-ஆதிசேஷன், மகம்-சுக்கிரன், பூரம்-பார்வதி, உத்திரம்-சூரியன், அஸ்தம்-சாத்தா, சித்திரை - விஸ்வகர்மா, சோதி-வாய்வு, விசாகம்-குமரன், அனுஷம்-லக்குமி, கேட்டை - இந்திரன், மூலம்-அசுரர், பூராடம் - வருணன், உத்திராடம்-கணபதி, திருவோணம்-விஷ்ணு, அவிட்டம்-வசுக்கள், சதையம்-எமன், பூரட்டாதி-குபேரன், உத்திரட்டாதி-காமதேனு, ரேவதி-சனி இவ்விதமாகப் பார்த்துக் கொள்கவும்.

---

## இராசி சங்கிரக விபரம்

| | | | |
|---|---|---|---|
| மீனம் 12 | மேஷம் 1 | ரிஷபம் 2 | மிதுனம் 3 |
| கும்பம் 11 | இராசி சக்கரம் | | கடகம் 4 |
| மகரம் 10 | | | சிம்பம் 5 |
| தனுசு 9 | விருச்சிகம் | துலாம் | கன்னி 6 |

மேஷம்-$4\frac{1}{4}$, ரிஷபம்-$4\frac{3}{4}$, மிதுனம்-$5\frac{1}{4}$, கடகம்-$5\frac{1}{2}$, சிங்கம்-$5\frac{1}{4}$, கன்னி-5, துலாம்-5, விருச்சிகம்-$5\frac{1}{4}$, தனுசு-$5\frac{1}{2}$, மகரம்-$5\frac{1}{4}$, கும்பம்-$4\frac{3}{4}$, மீனம்-$4\frac{1}{4}$.
ஆக நாழிகை 60



இராசி மாதங்கள்

மேஷம்-சித்திரை, ரிஷபம்-வைகாசி, மிதுனம் - ஆனி, கடகம்-ஆடி, சிங்கம்-ஆவணி, கன்னி-புரட்டாசி, துலாம்-ஐப்பிசி, விருச்சிகம்-கார்த்திகை, தனுசு - மார்கழி, மகரம்-தை, கும்பம்-மாசி, மீனம்-பங்குனி.

இராசி உருவங்கள்

மேஷம்-வெள்ளாடு, ரிஷபம்-எருது, மிதுனம்-ஸ்திரீ புருஷன், கடகம்-நண்டு, சிங்கம்-சிங்கஉருவம், கன்னி-பெண், துலாம்-தராசு, விருட்சிகம் - தேள், தனுசு-வில், மகரம் - முதலை, கும்பம்-குடம், மீனம்-மீன்.

இராசி அங்கங்கள்

மேஷம்-தலை, ரிஷபம்-எருது, மிதுனம்-கழுத்து, கடகம்-தோள், சிங்கம்-மார்பு, கன்னி-பக்கம், துலாம் - முதுகு, விருட்சிகம்-பீஜம், தனுசு-தொடை, மகரம் - முழங்கால், கும்பம் - கணுக்கால், மீனம-பாதம்.

இராசி திக்குகள்

மேஷம் - ரிஷபம்-மிதுனம் - கிழக்கு, கடகம்-சிங்கம் - கன்னி-தெற்கு, துலாம்-விருட்சிகம்-தனுசு-மேற்கு, மகரம்-கும்பம்-மீனம்-வடக்கு.

இராசிகளின் சாதி

கடகம் - விருட்சிகம் - மீனம் இவை மூன்றும் பிராமணஜாதி, தனுசு - மேஷம்-சிம்மம் இவை மூன்றும் க்ஷத்திரியஜாதி, துலாம்-கும்பம் - மிதுனம் இவை மூன்றும் வைசியஜாதி, கன்னி-ரிஷபம்-மகரம் இவை மூன்றும் சூத்திரஜாதியாம்.

இதுவுமது

மேஷம்-வெள்ளாழன், ரிஷபம்-இடையன், மிதுனம்-சக்கிலியன், கடகம்-கன்னுன், சிங்கம்-பிராமணன், கன்னி - நாவிதன், துலாம்-செட்டி, விருட்சிகம்-வேடன், தனுசு-தட்டான், மகரம்-வண்ணான், கும்பம்-குயவன், மீனம்-பறையனும்.

இராசிகளின் நிறம்

மகரம்-கன்னி - மிதுனம்-கருமை, விருட்சிகம் - கும்பம்-மீனம்-பச்சை, மேஷம்-தனுசு-சிங்கம்-செம்மை, ரிஷபம் - துலாம்-கடகம்-வெண்மையாகும்.

இராசிகளின் விழிப்புகள்

மேஷம்-ரிஷபம்-மிதுனம் - கடகம்-தனுசு-மகரம் இவை ஆறும் இராமுழுதும் சந்திரனுக்குறவாய் விழிக்கும், சிம்பம்-கன்னி-துலாம்-

விருட்சிகம்-கும்பம்-மீனம் இவை ஆறும் பகலில் சூரியனுக்குறவாய் விழிக்கும்.

ஆண்ராசி அல்லது ஒற்றைராசி அறியும் வகை

மேஷம்-மிதுனம்-சிங்கம்-துலாம்-கடகம்-தனுசு இவை ஆறும் ஆண்ராசி அல்லது ஒற்றைராசிகளெனக் கொள்கவும்.

பெண்ராசி அல்லது இரட்டைராசி அறியும்வகை

ரிஷபம்-கன்னி-விருட்சிகம்-மகரம்-மீனம்-கும்பம் இவை ஆறும் பெண்ராசி அல்லது இரட்டை இராசிகளெனக் கொள்கவும்.

சர ராசிகள்

மேஷம்-கடகம்-துலாம்-மகரம் இவை நாலும் சரவிராசிகளெனக் கொள்கவும்.

ஸ்திர ராசிகள்

ரிஷபம்-சிங்கம்-விருட்சிகம்-கும்பம் இவை நாலும் ஸ்திரவிராசிகளெனக் கொள்கவும்.

உபய ராசிகள்

மிதுனம்-கன்னி - தனுசு-மகரம் இவை நாலும் உபயவிராசிகளெனக் கொள்கவும்.

இருகால் இராசிகள்

மிதுனம் - கன்னி - துலாம் - கும்பம் இவை நாலும் இருகால் விராசிகளெனக் கொள்கவும்.

நாற்கால் இராசிகள்

மேஷம்-ரிஷபம்-சிங்கம்-தனுசு இவை நாலுவிராசியும் நாற்காலெனக் கொள்கவும்.

பலகால் இராசிகள்

கடகம் - விருட்சிகம் இவை இரண்டும் பலகால் விராசிகளெனக் கொள்கவும்.

பறக்கும் இராசிகள்

மகரம்-மீனம் இவை இரண்டும் பறக்கும் இராசிகளெனக் கொள்கவும்.

தலையுதைய இராசிகள்

மிதுனம்-சிங்கம் - கன்னி-விருட்சிகம் - கும்பம் இவை ஐந்தும் தலையுதைய விராசிகளெனக் கொள்கவும்.



காலுதைய விராசிகள்

மேஷம்-ரிஷபம்-கடகம்-தனுசு-மகரம் இவை ஐந்தும் காலுதைய விராசிகளெனக் கொள்கவும்.

உடலுதைய விராசிகள்

மீனவிராசி ஒன்றேயென்றறியவும்.

பகற்குருடு இராசிகள்

மேஷம் - ரிஷபம் - சிங்கம் இவை மூன்றும் பகற்குருடு விராசிகளெனக் கொள்கவும்.

இராக்குருட்டு விராசிகள்

மிதுனம் - கடகம் - கன்னி இவை மூன்றும் இராக்குருட்டு விராசிகளெனக் கொள்கவும்.

பகற்செவிட்டு இராசிகள்

துலாம் - விருட்சிகம் இவை இரண்டும் பகற்செவிட்டு ராசிகளெனக் கொள்கவும்.

இராச்செவிட்டு இராசிகள்

தனுசு - மகரம் இவை இரண்டும் இராச்செவிட்டு விராசிகளெனக் கொள்கவும்.

இராசிகளின் மூடம்

கும்பம் பகல் மூடம் மீனம் இராமூடமெனக் கொள்கவும்.

இராசி சங்கிரக விபரம் முற்றிற்று.

---

## கிரகங்களின் ஜாதி நிறம் முதலியவை அறியும் வகை

கிரகங்கள்—சூரியன்-சந்திரன்-செவ்வாய்-புதன்-குரு-சுக்கிரன்-சனி-இராகு-கேது. ஆக 9

கிரக ஜாதி—சூரியன் - அரசன், சந்திரன் - பெண், செவ்வாய் - ஆண், புதன்-வைசியன், குரு-புருடன், சுக்கிரன்-பெண், சனி-சூத்திரன், இராகு-பாம்பு, கேது-ஈனகுலமாகும்.

கிரக நிறங்கள்—சூரியன் - பவளம், சந்திரன் - தவளம், செவ்வாய் - செகப்பு, புதன்-பச்சை, குரு-குங்குமம், சுக்கிரன்-வெண்மை, சனி-மைநிறம், இராகு-கருமை, கேது-செம்மையாகும்.

கிரக அங்கங்கள்—சூரியன்-மார்பு, சந்திரன்-தோள், செவ்வாய்-தலை, புதன்-கழுத்து, குரு-வயறு, சுக்கிரன்-முகம், சனி-தொடை, இராகு-முழங்கால், கேது-உள்ளங்காலெனக் கொள்கவும்.

கிரக குணங்கள்—சூரியன் - குரூரன், சந்திரன் - சௌமியன், செவ்வாய்-குரூரன், புதன்-சௌமியன், குரு-சௌமியன், சுக்கிரன்-சௌமியன், சனி-குரூரன், இராகு-குரூரன், கேது-குரூரன், சந்திரன் - வளர்பிறையில் சௌமியன், தேய்பிறையில் - குரூரன் இவ்விதமாகக் கொள்கவும்.

கிரக பாஷைகள்—சூரியன்-சமஸ்கிருதம், சந்திரன்-தமிழ், செவ்வாய்-மந்திரம் தெலுங்கு, புதன் - சோதிடம், குரு - சமஸ்கிருதம், சுக்கிரன்-சமஸ்கிருதம்,சனி-இராகு-கேது இவர்கள் மூவருக்கும் அன்னிய பாஷைகளெனக் கொள்கவும்.

கிரக வாகனங்கள்—சூரியன்-தேர், சந்திரன்-முத்துவிமானம், செவ்வாய்-அன்னம், புதன்-குதிரை, குரு-யானை, சுக்கிரன்-கருடன், சனி-காகம், இராகு-ஆடு, கேது-சிங்கமெனக் கொள்கவும்.

கிரக ரத்தினங்கள்—சூரியன் - மாணிக்கம், சந்திரன் - முத்து, செவ்வாய்-பவளம், புதன்-பச்சை, குரு-புஷ்பராகம், சுக்கிரன்-வயிரம், சனி-நீலம், இராகு-கோமேதகம், கேது-வைடூரியமாகும்.

கிரக லோகங்கள்—சூரியனுக்கு - தம்பாக்கு சூரியகாந்தம், சந்திரனுக்கு-ஈயம் சந்திரகாந்தம், செவ்வாய்க்கு-செம்பு, புதனுக்கு-பித்தளை, குருவிற்கு-பொன், சுக்கிரனுக்கு-வெள்ளி, சனிக்கு-இரும்பு, இராகுவிற்கு-கருங்கல், கேதுவிற்கு-துருக்கல்லெனக் கொள்கவும்.

கிரக தான்யங்கள்—சூரியனுக்கு - கோதுமை, சந்திரனுக்கு-நெல்லு, செவ்வாய்க்கு - துவரை, புதனுக்கு - பச்சைப்பயறு, குருவிற்கு - கடலை, சுக்கிரனுக்கு - மொச்சை, சனிக்கு - எள்ளு, இராகுவிற்கு - உளுந்து, கேதுவிற்கு - கொள்ளெனக் கொள்கவும்.

கிரக திக்குகள்—சூரியன் - நடுதிக்கு, சந்திரன்-தென்கிழக்கு, செவ்வாய்-தெற்கு, புதன் - வடகிழக்கு, குரு - வடக்கு, சுக்கிரன்-கிழக்கு, சனி-மேற்கு, இராகு-தென்மேற்கு, கேது-வடமேற்குவெனக் கொள்கவும்.

கிரக ஊண்கள்—சூரியன் - சுடுகை, சந்திரன்-குளிர்ச்சி, செவ்வாய்-சுடுகை, புதன்-சிதோஷ்ணம், குரு-சுடுகை, சுக்கிரன்-குளிர்ச்சி, சனி-சிதோஷ்ணம், இராகு-சிதோஷ்ணம், கேது-சிதோஷ்ணம் இவ்விதங் கொள்கவும்.



கிரக சுவைகள்—சூரியன்-கார்ப்பு, சந்திரன் - தித்திப்பு, செவ்வாய்-துவர்ப்பு, புதன்-உவர்ப்பு, சுக்கிரன்-தித்திப்பு, குரு-தித்திப்பு, சனி-கைப்பு, இராகு-கேது-புளிப்பு எனக்கொள்கவும்.

கிரக புஷ்பங்கள்—சூரியனுக்கு - செந்தாமரை, சந்திரனுக்கு - வெள்ளல்லி, செவ்வாய்க்கு - சண்பகம், புதனுக்கு - வெண்காந்தல், குருவிற்கு - முல்லை, சுக்கிரனுக்கு - வெண்டாமரை, சனிக்கு-கருங்குவளை, இராகுவிற்கு-மந்தாரை, கேதுவிற்கு-செவ்வல்லி எனக்கொள்கவும்.

கிரக சமித்துகள்—சூரியனுக்கு - எருக்கு, சந்திரனுக்கு - முருக்கு, செவ்வாய்க்கு-கருங்காலி, புதனுக்கு-நாயுருவி, குருவிற்கு-அரசு, சுக்கிரனுக்கு-அத்தி, சனிக்கு-வன்னி, இராகு - கேதுகளுக்கு-அறுகு எனக்கொள்கவும்.

கிரக தேவதைகள்—குரு-சுக்கிரன்-பிரமன், சந்திரன்-புதன்-விஷ்ணு, சூரியன் - செவ்வாய் - உருத்திரன், சனி - அன்னியதேவதை, சூரியன்-சிவன், சுக்கிரன் - வள்ளியம்மை, சந்திரன்-பார்வதி, சனி-இயமன், செவ்வாய் - கந்தசுவாமி, இராகு - பத்திரகாளி, புதன்-விஷ்ணு, கேது-இந்திரன், குரு-பிரமன் என்பர் சிலரென வறிக.

கிரக வடிவங்கள்—சூரியன்-சமனுவர், சந்திரன்-குறியர், செவ்வாய்-குறியர், புதன்-நெடியர், குரு - நெடியர், சுக்கிரன் - சமனுவர், சனி-குறியர், இராகு - நெடியர், கேது-நெடியர் இவ்விதமாகக் கொள்கவும்.

கிரக திரையங்கள்—சந்திரன்-செவ்வாய் - இராகு-கேது - சரக்கிரகங்கள், சூரியன்-சுக்கிரன் - ஸ்திரக்கிரகங்கள், புதன்-குரு - சனி - உபயகிரகங்களெனக் கொள்கவும்.

கிரக ஆசனங்கள்—சூரியனுக்கு-வட்டவடிவம், சந்திரனுக்கு - சவுக்கவடிவம், செவ்வாய்க்கு - திரிகோணவடிவம், புதனுக்கு-அம்புவடிவம், குருவிற்கு - நீண்ட சவுக்கவடிவம், சுக்கிரனுக்கு-ஐங்கோணவடிவம், சனிக்கு - வில்வடிவம், இராகுவிற்கு-கொடிவடிவம், கேதுவிற்கு-முச்சல்லவடிவம், இவ்விதம் கொள்கவும்.

கிரகங்களின் ஜாதி நிறம் முதலியவை முற்றிற்று.

## சாத்துவீகாதி குணக்கிரகங்கள் அறியும் வகை

சந்திரன்-குரு-சாத்மீகர், சுக்கிரன்-செவ்வாய்-இராக்கதர், புதன்-சூரியன்-இராகு-தாமதர்களாம்.

### முப்பிணிக்கிரகங்கள் அறியும் வகை

குரு-புதன்-சனி - வாதக்கிரகங்கள், சூரியன்-செவ்வாய்-இராகு-கேது - பித்தக்கிரகங்கள், சுக்கிரன்-சந்திரன் - சிலேத்துமக்கிரகங்களாகும்.

### ஆண் பெண் அலிக்கிரகங்கள் அறியும் வகை

சூரியன்-செவ்வாய்-குரு - ஆண்கிரகங்கள், சந்திரன்-சுக்கிரன்-இராகு-பெண்கிரகங்கள், புதன்-சனி-கேது-அலிக்கிரகங்களாகும்.

### பஞ்சபூத கிரகங்கள்

செவ்வாய்-பிரிதிவுக்கிரகம், சந்திரன்-சுக்கிரன் - அப்புக்கிரகம், குரு-சூரியன்-தேயுக்கிரகம், புதன்-வாயுக்கிரகம், இராகு-கேது-சனி-ஆகாயக்கிரகங்களாகும்.

### நவக்கிரக தேசங்கள் அறியும் வகை

சூரிய-சந்திரர்களுக்கு உலகெலாஞ்சொந்தம், இப்பரதகண்டத்தில் சனி-இராகுகளுக்கு இமயமலைமுதல் கேகையநாடுவரைக்கும், புதனுக்கு கேகயநாடுமுதல் விந்தைமலைவரையிலும், குருவினுக்கு விந்தைமலைமுதல் கௌதம நதிவரையிலும், சுக்கிரனுக்கு கௌதமை நதிமுதல் கிருஷ்ணாநதிவரையிலும், செவ்வாயினுக்கு கிருஷ்ணாநதி முதல் இலங்கைவரையில் இச்கிரகங்களின் ஆக்ஷிவீடுவரையிலுமெனக் கொள்கவும்.

### குஜாதி பஞ்சக் கிரகங்கள்

குஜன்-புதன் - குரு-சுக்கிரன் - சனி இவைகள் ஐந்துமெனக் கொள்கவும்.

### கிரக புத்திரர்கள்

காலன்-கலக்யானபாதன்-கரேசன்-அர்த்தப்பிரகாணன்-யமகண்டன்-விஷகடிகன்-குளிகன்-அமுதகடிகன்-அவமிருத்து இவை ஒன்பதுமெனக் கொள்கவும்.

### தூமாதி பஞ்சக்கிரகங்கள்

தூமன், விதிபாதன், பரிவேடன், இந்திரதனு, தூமகேது. ஆக 5



## கால ஓரையின் விவரம்

அருக்கன் புகர்புந்தி யிந்துமைந்தனே டந்தணன்சேய்
இருக்கும் கடிகை மிரண்டரையாமிந்த வோரைகளில்
மரிக்கும் மணம்செய்யும் மக்களைப்பெற்று மகிழ்ந்துஇருக்கும்
சிரிக்கும் சிறைப்படும் செல்வமும்போம்எனத் தேர்ந்துகொள்ளே.

(பொ-ரை) அருக்கன், புகர், புந்தி, இந்து, மந்தன், அந்தணன், சேய் என்னும் ஓராதிபர்கள் தங்கள் தங்களது வாரத்தில் சூரியோதயத்தில் தோன்றி முறையே 2½-நாழிகைவரையில் பின்வரும் ஒவ்வொருவரும் ஓராதிபராய் நிற்பர்; இவர்களது பலம் அல்லது பலன் என்னவெனில்? அருக்கனோரைக்குப் பலன். (இறக்கும்) புகர் ஓரைக்குப் பலன். (மணம் செய்யும்) புந்தி ஓரைக்குப் பலன். (புத்திரப்பேறு) இந்து ஓரைக்குப் பலன். (சந்தோஷமுண்டு) மந்தனோரைக்குப் பலன். (சிறை பயம்) அந்தணனோரைக்குப் பலன். (செல்வமுண்டு) சேய் ஓரைக்குப் பலன் (சகலமும் நாசம்) என்பனவாம்.

(வி-ரை) இச்செய்யுளின் முக்கிய கருத்தாவதென்னவெனில்? அந்தந்த வாராதிபர் எவரோ அவர் அன்று சூரியோதயத்தில் தோன்றி இரண்டரை நாழிகை இருந்து பின் மேற்கண்டவாறு ஒவ்வொருவரும் முறையே இரண்டரை நாழிகைவீதம் தமது ஆதிபத்தியத்தைச் செய்வார் என்பதுவேயாகும்.

இவை அந்தந்த ஓரையில் பிறந்தவர்களது பொதுப்பலனையும் குறிக்கும். இவைநிற்க ஒவ்வொருவரும் பிறந்தகால நோத்திற்கு ஓரை விவரம் கீழ்க்கண்டவாறு தெரிக.

## பகல் ஓரையின் விவரம்

| மணி | ஞாயிறு | திங்க | செவ் | புதன் | வியா | வெள் | சனி |
|---|---|---|---|---|---|---|---|
| 6 முதல் 7 | அருக் | இந்து | சேய் | புந்தி | அந்தண | புகர் | மந்தன் |
| 7 „ 8 | புகர் | மந்த | அருக் | இந்து | சேய் | புந்தி | அந்தண |
| 8 „ 9 | புந்தி | அந்தண | புகர் | மந்தன் | அருக் | இந்து | சேய் |
| 9 „ 10 | இந்து | சேய் | புந்தி | அந்த | புகர் | மந்த | அருக்க |
| 10 „ 11 | மந்த | அருக்க | இந்து | சேய் | புந்தி | அந்த | புகர் |
| 11 „ 12 | அந்த | புகர் | மந்தன் | அருக் | இந்து | சேய் | புந்தி |
| 12 „ 1 | சேய் | புந்தி | அந்த | புகர் | மந்த | அருக் | இந்து |
| 1 „ 2 | அருக் | இந்து | சேய் | புந்தி | அந்த | புகர் | மந்தன் |
| 2 „ 3 | புகர் | மந்தன் | அருக்க | இந்து | சேய் | புந்தி | அந்தண |
| 3 „ 4 | புந்தி | அந்த | புகர் | மந்த | அருக்க | இந்து | சேய் |
| 4 „ 5 | இந்து | சேய் | புந்தி | அந்த | புகர் | மந்தன் | அருக்க |
| 5 „ 6 | மந்த | அருக்க | இந்து | சேய் | புந்தி | அந்த | புகர் |

## இரவு ஓரையின் விவரம்

| மணி | ஞாயிறு | திங்க | செவ் | புதன் | வியா | வெள் | சனி |
|---|---|---|---|---|---|---|---|
| 6 முதல் 7 | அந்த | புகர் | மந்தன் | அருக் | இந்து | சேய் | புந்தி |
| 7 „ 8 | சேய் | புந்தி | அந்த | புகர் | மந்தன் | அருக்க | இந்து |
| 8 „ 9 | அருக்க | இந்து | சேய் | புந்தி | அந்த | புகர் | மந்த |
| 9 „ 10 | புகர் | மந்த | அருக்க | இந்து | சேய் | புந்தி | அந்தண |
| 10 „ 11 | புந்தி | அந்த | புகர் | மந்த | அருக் | இந்து | சேய் |
| 11 „ 12 | இந்து | சேய் | புந்தி | அந்த | புகர் | மந்த | அருக் |
| 12 „ 1 | மந்தன் | அருக் | இந்து | சேய | புந்தி | அந்த | புகர் |
| 1 „ 2 | அந்த | புகர் | மந்த | அருக் | இந்து | சேய் | புந்தி |
| 2 „ 3 | சேய் | புந்தி | அந்த | புகர் | மந்த | அருக்க | இந்து |
| 3 „ 4 | அருக்க | இந்து | சேய் | புந்தி | அந்த | புகர் | மந்தன் |
| 4 „ 5 | புகர் | மந்த | அருக் | இந்து | சேய் | புந்தி | அந்தண |
| 5 „ 6 | புந்தி | அந்த | புகர் | மந்த | அருக் | இந்து | சேய் |

## கால ஓரையின விவரம்

### 1 அருக்கன் ஓரையின் பலன்

அருக்கனுகிய சூரிய ஓரையில் பிறந்தவர்களுக்கு பலவித சங்கடம் கெண்டாதிகெண்டம் பல உடையவன், முன்கோபி, சூரன், பலருக்கும் தெரிந்தவன், படபடப்பாய் பேசுபவன், சிவந்த தேகி.

### 2 புகர் ஓரையின் பலன்

புகர் என்னும் சந்திர ஓரையில் பிறந்தவர்களுக்கு இளம்பிராயத்தில் கலியாணம் செய்துக் கொள்ளுவோன், சகல சந்தோஷி, வெண்ணிறதேகி, சந்தோஷ வாக்கு, எவருக்கும் நல்லவன்.

### 3 புந்தி ஓரையின் பலன்

புந்தியென்னும் புதன் ஓரையில் பிறந்தவர்கள் அனேக புத்திர புத்திரிகளை யுடையவன், தந்திரவார்த்தை யுடையவன், வியாபாரி, சகலஜன சந்தோஷி, கறுத்ததேகி, பலதேசவாசி.

### 4 இந்து ஓரையின் பலன்

இந்துவாகிய சந்திர ஓரையில் பிறந்தவன் சகலஜன சந்தோஷ சகல சுகபோகங்களையும் அடைந்து சந்தோஷிப்பவன், வெண்ணிற தேகி, சயன சந்தோஷி, நானுவித புஷ்ப அலங்காரப் பிரியன், நல் வசனன்.



### 5 மந்தன் ஓரையின் பலன்

மந்தனுகிய சனி ஓரையில் பிறந்தவன் சகல காரியதுக்கி, விசன முடையவன், துர்மார்க்கச்செயலை யுடையவன், மானுபிமானம் இல்லாதவன், சேவை செய்பவன், இட்டஜன விரோதி, போகங் குறைந்தவன்.

### 6 அந்தணன் ஓரையின் பலன்

அந்தணனுகிய குரு ஓரையில் பிறந்தவர்கள் மிக்க செல்வமுடையவன், நானுவித வருமான முடையவன், பொன்னிற தேகி, சைவாகமச் செயல்களை யுடையவன், மனவருத்தம் இல்லாதவன், பிரபுக்கள் நேசமுடையவன், பக்திவிஸ்வாச முடையவன்.

### 7 சேய் ஓரையின் பலன்

சேய் என்னும் செவ்வாய் ஓரையில் பிறந்தவன் சிவந்த தேகி, சகல பொருளும் நாசம் செய்பவன், மனோதுக்கி, கலகன், வியாகூலன், தரித்திரி, விவசாயம் செய்வோன், கஷ்டப்படுவோன், ஆயுதமில்லான், சதா சோம்பலுடையோன் என்பனவாம்.

## முக்குணவேளையின் விவரம்

வேளைகளறியத் திங்கள் வியாழஞ்சாத் வீகம்ஆகும்
நீளும்சுக்கிரன் செவ்வாய்க்கு நீண்டஇரா சதமேஆகும்
வாளைநேர் கண்ணுய்புந்தி மந்தன்செங் கதிர்வாரந்தான்
நாளுந்தா மதமாக்காலை நாழிகை மூன்றேமுக்கால்.

(பொ-ரை) வாள்போன்று கூரிய விழியினையுடைய பெண் பாவாய்! முக்குணவேளை என்பதை அறியவேண்டின் திங்கட்கிழமையிலும், வியாழக்கிழமையிலும் முதற்ருெழில் சாத்துவீக வேளையாகும். வெள்ளிக்கிழமையிலும், செவ்வாய்க்கிழமையிலும் முதற்ருெழில் ராசதவேளையாகும். செவ்வாய் - புதன் - சனி என்னும் மூன்றுநாளிலும் முதற்ருெழில் தாமதவேளையாகும். இவை தத்தமது வேளை ஆரம்பமுதல் $3\frac{3}{4}$ - நாழிகைவரையில் நடக்கும் என்பதாம்.

(வி-ரை) இச்செய்யுளின் கருத்தாவது என்னவெனில்? திங்கள்-வியாழத்தில் சாத்துவீகவேளை முதலாயும், செவ்வாய் - வெள்ளியில் ராசதவேளை முதலாயும், செவ்வாய்-புதன்-சனி என்னும் வாரத்தில் தாமதவேளை முதலாயும், வேளையொன்றுக்கு $3\frac{3}{4}$-நாழிகை வீதம் நோய் நடத்தி பிறந்த காலவேளையை அறிக. விவரம் பின்வருமாறு.

## முக்குண வேளையின் விவரம் பகல்

| மணி | ஞாயி | திங்க | செவ் | புதன் | வியா | வெள் | சனி |
|---|---|---|---|---|---|---|---|
| 6 முதல் 7½ | தாம | சாத் | ராச | தாம | சாத் | ராச | தாம |
| 7½ ,, 9 | சாத் | ராச | தாம | சாத் | ராச | தாம | சாத் |
| 9 ,, 10½ | ராச | தாம | சாத் | ராச | தாம | சாத் | ராச |
| 10½ ,, 12 | தாம | சாத் | ராச | தாம | சாத் | ராச | தாம |
| 12 ,, 1½ | சாத் | ராச | தாம | சாத் | ராச | தாம | சாத் |
| 1½ ,, 3 | ராச | தாம | சாத் | ராச | தாச | சாத் | ராச |
| 3 ,, 4½ | தாம | சாத் | ராச | தாம | சாத் | ராச | தாம |
| 4½ ,, 6 | சாத் | ராச | தாம | சாத் | ராச | தாம | சாத் |

## இ ர வு

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 6 ,, 7½ | ராச | தாம | சாத் | ராச | தாம | சாத் | ராச |
| 7½ ,, 9 | தாம | சாத் | ராச | தாம | சாத் | ராச | தாம |
| 9 ,, 10½ | சாத் | ராச | தாம | சாத் | ராச | தாம | சாத் |
| 10½ ,, 12 | ராச | தாம | சாத் | ராச | தாம | சாத் | ராச |
| 12 ,, 1½ | தாம | சாத் | ராச | தாம | சாத் | ராச | தாம |
| 1½ ,, 3 | சாத் | ராச | தாம | சாத் | ராச | தாம | சாத் |
| 3 ,, 4½ | ராச | தாம | சாத் | ராச | தாம | சாத் | ராச |
| 4½ ,, 6 | தாம | சாத் | ராச | தாம | சாத் | ராச | தாம |

## முக்குண வேளையின் பலன் விவரம்

### சாத்துவீக வேளையின் பலன்

சாத்துவீகவேளையில் பிறந்தவன் பிரகாசமான தேகமுடையவன், நல்லறிவுடையோன், திரண்டபுத்திமான், விதரணமுடையோன், ஞானவான், பிராமணவிஸ்வாசன், துன்பமில்லான், இன்பமுடையவனும் ஆவன்.

### ராசத வேளையின் பலன்

ராசதவேளையில் பிறந்தவன் அறிவாளன், சந்தோஷமுடையவன், நல்லுரையாளன், சகலசாத்திரீகன், பரோபகாரி, நீதியுடையவன், அரசு செய்வோன், அனேக சுகசௌக்கியங்களை யுடையவன், நற்கருமி.

### தாமத வேளையின் பலன்

தாமதவேளையில் பிறந்தவன் அதிக நித்திரைப்பிரியன், பொய் சொல்வோன், மயக்கம் சோம்பல் முதலியன வுடையவன், வித்தை குறைந்தவன், பலரும் பாவி என்று சொல்லப் பெயரெடுப்பவனும் ஆவன்.



## நட்பு ஆட்சி உச்சம் பகை நீசம் அறியும் வகை

### விருத்தம்

சூரியன் தனக்கு மேடமுச்சமாகும்
        சொல்லுமந்த நிறைய துவும்நீசமாகும்
எரியதோர்சிம்மமது ஆட்சியாகும்
        இடபமொடுமான்மிதுனங் கன்னிதேளும்
சீரியதோர்பகையாகு மென்றுகொள்ளுஞ்
        சிலைஜாடிமீன்கடக மிந்தநான்கும்
கோரியதோர்நட்பாகு மிடமேயென்றும்
        குருமொழியாய் முன்னோர்களுரைத்தவாறே.

இ-ள். சூரியனுக்கு - மேடம் - உச்சம், துலாம் - நீசம், சிம்பம்-சொக்ஷேத்திரம் அதாவது ஆட்சிவீடு, மகரம் - ரிஷபம் - மிதுனம் - கன்னி - விருச்சிகம் இந்த ஐந்துவிராசியும் பகை, தனுசு - கும்பம் - மீனம்-கடகம் நான்கு விராசியும் நட்பாகும் எ-று. 1

பாரப்பாசந்திரர்க்குப் பாரலுச்சம்
        பரிவிலாத்தேள துவும் நீசமாகும்
காரப்பாவீணையறி கோன்மான்கும்பம்
        கயலோடுயிவ்வாறும் பகையதாகும்
நேரப்பாகன்னியொடு தனுசுமேடம்
        நிலையாகவேறிடிலோ நட்பதாகும்
சீரப்பாகணித நூலாய்ந்தவல்லோர்
        செப்பியதோர்மொழிகண்டு சீராய்ப்பேசே.

இ-ள். சந்திரனுக்கு-ரிஷபம்-உச்சம், விருட்சிகம்-நீசம், கடகம்-ஆட்சி, மிதுனம்-சிம்பம்-துலாம்-மகரம்-கும்பம்-மீனம் இந்த ஆறு விராசிகளும் பகைவீடாகும், கன்னி-தனுசு-மேஷம் இந்த மூன்று விராசியும் நட்பாகும் எ-று. 2

பேசவேகுஜனுக்குத் தகர்தேளாட்சி
        புகலுவாய்மகரமுச் சங்கடகம்நீசம்
நேசமாந்தண்டுபுலி நிரைசேல்நட்பாம்
        நீடியதோர்தேள்கன்னி தனுவினோடு
வாசமுருங்கும்பமெனு மிந்தநான்கும்
        வமர்ந்திடிலோபகையென்றே வழுத்தலாகும்
பாசமாய்மறைபலவு முணர்ந்தமேலோர்
        பரிட்சையாய்சொன்னமொழி பரிந்துசொல்லே.

இ-ள். குஜனுக்கு-மேஷம் விருட்சிகம்-ஆட்சி, மகரம்-உச்சம், கடகம்-நீசம், மிதுனம்-சிம்பம்-துலாம்-மீனம் இந்த நாலுவிராசியும்

நட்பு, விருஷபம் - கன்னி - தனுசு - கும்பம் இந்த நாலுவிராசியும் பகைவீடாகும் எ-று. 3

சொல்லவேபுதன் தனக்கு யாழ்பெண்ணாட்சி
 சுகமாகும்பெண்ண துவே யுச்சமாகும்
புல்லவேமீனமது நீசமாகும்
 புகழானகோல்மகரம் மேடஞ்சிங்கம்
வல்லமுருமின்னான்கும் நட்பதாகும்
 வருஞ்சிலைஜாடிவிடை கடகமின்னால்
தொல்லையுரும்பகையாகு மென்றேமேலோர்
 தொடுத்தமொழியெடுத்துபலன் துணிவாயோதே.

இ-ள். புதனுக்கு - மிதுனமும் கன்னியும்-ஆட்சி, கன்னியே உச்சம், மீனம்-நீசம், துலாம்-மகரம்-மேஷம்-சிம்மம் இந்த நான்கு விராசியும் நட்பு, தனுசு-கும்பம்-ரிஷபம்-கடகம் இந்த நான்கு விராசியும் பகையாகும் எ-று. 4

ஓதவேகுருவினிற்குத் தனுமீனாட்சி
 உற்றதோர்மகரமது நீசமாகும்
போதவேகடகமது வுச்சமாகும்
 புகழ்பானைதகர்மிதுனந் தெருக்கால்நட்பு
தீதெனவேவிடைபுலியுங் கன்னிகோலும்
 தேடிநிற்கவின்னான்கும் பகையதாகும்
ஆதியெனவருமறைக ளாய்ந்தமேலோர்
 அட்சயமாய்ச்சொன்னமொழி யன்பாய்காணே.

இ-ள். குருவுக்கு-தனுசு மீனம்-ஆட்சி, மகரம்-நீசம், கடகம்-உச்சம், கும்பம்-மேஷம்-மிதுனம், விருட்சிகம்-நட்பு, ரிஷபம்-சிம்பம்-கன்னி-துலாம் இந்த நான்கு விராசியும் பகையாகும். 5

காணவேசுக்கிரர்க்கு விடைகோலாட்சி
 கருதியமீனமது வுச்சமாகும்
பூணவேகன்னியது நீசமாகும்
 புகழ்சிலைசாடிதகர் நட்பதாகும்
தோணவேதேள்மகரம் மிதுனம்நண்டு
 தொடுத்திடவேயின்னான்கும் பகையதாகும்
வேணவேமுன்னோர்கள் புகன்றவாக்கு
 வேதமொழிகண்டுபலன் கூறிடாயே.

இ-ள். சுக்கிரனுக்கு-ரிஷப துலாம் ஆட்சி, மீனம்-உச்சம், கன்னி-நீசம், தனுசு-கும்பம், மேஷம்-நட்பு, விருட்சிகம், மகரம், மிதுனம், கடகம், சிம்பம் இவை ஐந்தும் பகையாகும் எ-று. 6



கூறிடுவாய்சனிக்கு மான்கும்பமாட்சி
 கோலதனிலேறிடிலோ வுச்சமாகும்
சீறியதோர்மேடமதே நீசமாகும்
 சிம்பமுடன்தேள்மிதுனம் நட்பதாகும்
நேறிடவேமீன்விடையுங் கடகம்வில்லும்
 நிற்கிலிந்தநான்கிடமும் பகையதாகும்
தேறியநற்கலையுணர்ந்து தெளிந்தமுன்னோர்
 தானுரைத்தமொழிகண்டு திடங்கொள்வாயே.

இ-ள். சனிக்கு மகரம் கும்பம்-ஆட்சி, துலாம் - உச்சம், மேஷம்-நீசம், மிதுனம்-சிம்பம், விருட்சிகம்-நட்பு, மீனம், ரிஷபம், கடகம், தனுசு இந்த நான்கு விராசியும் பகையாகும் எ-று. 7

கொள்ளவேராகுவிற்கு மகரமாட்சி
 கூறுவாய்விருட்சிகமே யுச்சமாகும்
விள்ளவேவிடையதுவும் நீசமாகும்
 விளங்குமீன்நண்டுதுலாம் நட்பதாகும்
உள்ளவேதனுசுகும்பம் மேடம்நண்டோ
 டுற்றபுலிகன்னியிவை பகையதாகும்
கள்ளமிலாக்கலையுணர்ந்த மேலோர்வாக்கு
 கண்ணாடிபோல்கண்டு கருத்தைநாட்டே.

இ-ள். இராகுவிற்கு மகரம்-ஆட்சி, (ஒருசார்பாய் கிடைத்தவை) விருட்சிகம்-உச்சம், ரிஷபம்-நீசம், மீனம்-மிதுனம், துலாம்- நட்பு, தனுசு, கும்பம், மேஷம், கடகம், சிம்பம், கன்னி இந்த ஆறுவிராசிகளும் பகையாகும் எ-று. 8

நாட்டுவாய்க்கேதுவிற்கு மேடமாட்சி
 நலமாகும்விருட்சிகமே யுச்சமாகும்
கேட்டிடுவாய்ரிஷபமது நீசமாகும்
 கயல்மிதுனங்கோன்மேட மகரமின்னால்
சேஷ்டமுரும்நட்பான விராசியாகும்
 சிலைகும்பங்கடகமுடன் சிங்கங்கன்னி
வாட்டமுறுமிவையைந்தும் பகையாமென்றே
 வழுத்தியமேலோரின் வாக்கிதாமே.

இ-ள். கேதுவுக்கு மேஷம் - ஆட்சி, (ஓர் சார்பாய்க் கிடைத்தவை) விருட்சிகம்-உச்சம், ரிஷபம்-நீசம், மீனம்-மிதுனம், துலாம்-மேஷம், மகாம்-நட்பு, தனுசு, கும்பம், கடகம், சிம்பம், கன்னி இந்த ஐந்துவிராசியும் பகையாகும் எ-று. 9

கேந்திரகோணஸ்தான மறியும் வகை

மன்னியஜென்மந்தொட்டு மகிழ்ந்துயெண்ணுங்காலை
உன்னியவிரண்டுமூன்று முகந்தவாரெட்டினோடு

பன்னியப்பன்னிரெண்டும் பாங்குளயிவ்விடங்கள்
துன்னமாங்கேந்திரகோணந் துலங்கிடகண்டுகூறே.

இ-ள். யாதாமொரு பிரஜை ஜெனனமான விராசிக்கு 2-3-6-8-12-இந்த ஸ்தானங்கள் கேந்திர திரிகோணங்களெனக் கொள்கவும் எ-று. 10

கிரகங்களின் நட்பு அறியும் வகை

ஆதவனுக்குறவுதிங்கள் செவ்வாய்ப்பொன்னும்
அம்புலிக்குப்புதனுஞ் செங்கதிரிருவர்நேசம்
நிதிசெறிசேய்க்குறவுகுரு திங்கள்வெய்யோன்
நின்றபுதன் தனக்குச் சுக்கிரநிரவிநேசம்
ஓதியபொன்றனக்குமே கதிர்திங்கள்செவ்வாய்
உயர்வெள்ளிக்குறவு சனியுடன்புந்திஇருவர்
பூதலமேற்சவுறிக்கே புதனுஞ்சுக்கிரனும்
பொருந்தியநல்லுறவென்றே போற்றிடுவர்புலவர்.

இ-ள். சூரியனுக்குறவு சந்திரன், செவ்வாய், குரு. சந்திரனுக்குறவு புதனுஞ் சூரியனுமாகும். செவ்வாய்க்குறவு குரு, சந்திரன், சூரியன். புதனுக்குறவு சுக்கிரன், சூரியன். குருவினிற்குறவு சூரியன், சந்திரன், செவ்வாய். சுக்கிரனுக்குறவு சனி, புதன். சனிக்குறவு புதனும் சுக்கிரனும் உறவாகுமென மேலோர் கூறுகின்றனர். 11

கிரகங்களின் சமமறியும் வகை

போற்றியசெங்கதிர்தனக்கு சமன்புந்திஒருவன்
புனிதமதிக்கிணைசெவ்வாய் குருசனிசுக்கிரனே
ஏற்றசெவ்வாய்க்கிணை சனிசுக்கிரனிருவர்தாமே
இனியபுதர்க்குச்சமனுஞ்சனி செவ்வாயரசன்
நாற்றிசையெண்ணறசனுக்கே சமன்சவுரிஒருவன்
நலந்திகழ்சுக்கிரர்க்கிணை பொன்நவில்செவ்வாயிருவர்
தோற்றிடுஞ்சனிதனக்கே சமனதாகவுமே
துய்யவியாழந்தனையே சொல்வர்மிகத்தானே.

இ-ள். சூரியனுக்குச்சமன் புதன் ஒருவனேயாகும். சந்திரனுக்குச்சமன் செவ்வா, குரு, சனி, சுக்கிரனாகும். செவ்வாய்க்குச்சமன் சனி, சுக்கிரனாகும். புதனுக்குச்சமன் சனி, செவ்வாய், குரு. குருவினுக்குச்சமன் சனி ஒருவனேயாகும். சுக்கிரனுக்குச்சமன் குரு செவ்யாகும். சனிக்குச்சமன் குருவாகும் எ-று. 12

கிரகங்களின் பகையறியும் வகை

சொல்லிரவிக்குருபகைசுக்கிரன் சனியோடிருவர்
சோமனுக்குப்பகையில்லைச் சொல்லவுமெக்காலும்
அல்லனுறுஞ்செவ்வாய்க்குப் பகைபுந்தியொருவன்
ஆனபுந்திக்குற்ற பகைஅம்புலியொன்றாகும்



நல்லவியாழந்தனக்குப் புதன்வெள்ளிப்பகையாம்
நாடியசுக்கிரர்க்கிரவி நவிற்றிங்கள்பகையே
வல்லசனிதனக்கிரவி திங்களுடன்செவ்வாய்
மட்டுமேபகையென்று வழுத்துவரெக்காலும்.

இ-ள். சூரியனுக்குப்பகை சுக்கிரன் சனியுமாகும். சந்திரனுக்குப்பகை எக்காலுமில்லையாம், செவ்வாய்க்குப்பகை புதன் ஒருவனாகும். புதனுக்குப்பகை சந்திரன் ஒருவனாகும். குருவினுக்குப்பகை புதன் சுக்கிரனுமாம். சுக்கிரனுக்குப்பகை சூரியன் சந்திரனாகும். சனிக்குப்பகை சூரியன் செவ்வாயாகும் எ-று. 13

கிரகபார்வையறியும் வகை

வெண்பா

சேய்நான்கேழெட்டினையுஞ் சீவனைந்தேழொன்பானும்
ஏய்சனிமூன்றேழுடனீரைந்தினையும்—தூய்குளிகன்
பனிரெண்டேழினையும் பாம்பேழீரைந்தைமற்றத்
துன்னுங்கோ ளேழினையேநோக்கும்.

இ-ள். செவ்வாயினிற்குப்பார்வை 7-8-ம் இடமாகும். குருவினிற்குப்பார்வை 5-7-9-ம் இடமாகும். சனிக்குப்பார்வை 3-7-10-ம் இடமாகும். குளிகனுக்குப்பார்வை 12-7-ம் இடமாகும். இராகு கேதுகளுக்குப்பார்வை 7-10-ம் இடமாகும். சூரியன், சந்திரன், புதன், சுக்கிரன், இவர்களுக்கு 7-ம் இடம் பார்வையாகும் எ-று. 14

இராசிபார்வை கவி

திரமும்சரமுமே தான்மாறிப்பார்த்திடும்
உரமாமுபயமே உபயத்தைநோக்கிடும்
மருமமன்றிமன மகிழ்ந்தோதவே
வரமாய்கணித வல்லோர்களுரைத்தனர்.

இ-ள். திராசியும் சராசியும் மாறிமாறிப்பார்க்கும். உபய விராசியானது உபய விராசியையே பார்க்குமென மேலோர் கூறுகின்றனர் எ-று. 15

இராசியிற் கிரகங்கள் சஞ்சாரகால அளவு அறியும்வகை

இரவிந்திபுகரென்னு மிந்தமூவர்
இராசியொன்றிற்கோர் மாதமிருந்தேவாழ்வர்
பரவியசேய்தனக்கு வொண்ணரையேமாதம்
பாங்காகுங்குருவினிற்கு வருடமொன்றும்

அறியவேஇராகுவொடு கேதுவிற்கும்
ஆண்டதுவாமொண்ணரையே யாகும்பாரு
கரியவனுக்காண்டு ரெண்டரையேயாகுங்
களங்கனுக்கேநாள்ரெண்டே காலென்றோதே.

இ-ள். சூரியன், புதன், சுக்கிரன், இவர்கள் இராசியொன்றில் ஒரு மாதமிருப்பார்கள். செவ்வாய் ஒண்ணரைமாதமிருப்பார். குரு ஒரு வருடமிருப்பர். இராகு கேது ஒண்ணரைவருடமிருப்பர். சனி இரண்டரைவருடமிருப்பர். சந்திரன் ரெண்டேகால்நாள் இருப்பாரென வறிகவும் எ-று. 16

சுபக்கிரகங்களாவது குரு, சுக்கிரன், புதன், சந்திரன், இவை நான்குமாகும். பாபக்கிரகமாவது சனி, இராகு, கேது, செவ்வாய், சூரியன், இவை ஐந்துமாகும். இவர்களில் குரு முழுசுபன் சுக்கிலபட்சம் பஞ்சமிமுதல் கிருஷ்ணபட்சம் பஞ்சமிவரையில் ஜெனித்தஜாதகங்களுக்கு சந்திரனும் முழுசுபன் சுக்கிலபட்ச பிரதமைமுதல் சுக்கிலபட்ச பஞ்சமிவரை ஜனித்தவர்களுக்கு சந்திரன் காற்சுபனென்றும் புதன் அரைசுபனென்றும் பெயராகுமெனக் கொள்ளவும்.

பாபக்கிரகங்களாவது சனி, இராகு, கேது, இவர்கள் முழுபாபிகளாகும். செவ்வாய் (முக்கால்பாபி) சூரியன் அரைபாபி பாபர்களுடனே கூடியிருக்கும் சந்திரன், புதன், இவர்கள் காற்பாபிகள். சந்திரன் அமாவாசையில் புதனுடன் கூடில் சந்திரனுக்கு முக்கால் சுபபலனென கொள்கவேண்டும்.

சுபஸ்தான கிரகபலன் அறியும்வகை

ஜென்மலக்கினத்திற்கு 1-4-7-10-5-9 இந்த சுபஸ்தானங்களில் குரு-சந்திரன்-சுக்கிரன்-புதன் இவர்களிருக்கில் சுப பலத்தையும் இராஜயோகத்தையுங் கொடுப்பார்கள். ஜென்மலக்கினத்திற்கு 6-8-12 இந்த இடங்களிலிருக்கில் கெட்டபலனைக் கொடுப்பார்கள். 2-11-9 இந்த இடங்களிலிருக்கில் மத்திபபலனும் சமகஷ்டங்களையும் நிறவிக் கொடுப்பார்கள்.

பாபக்கிரகபலன் அறியும்வகை

ஜென்மலக்கினத்திற்கு 1-4-5-9-ல் சனி-இராகு-கேதுகளிருக்கில் கெட்டபலனைக் கொடுப்பார்கள். செவ்வாய் சூரியன் இவர்கள் 1-2-7-8-12 இந்த இடங்களிலிருக்கில கெடுதற்பலனைக் கொடுப்பார்கள். மற்றவிடங்களிலிருக்கில் உத்தம சுபபலன்களைக் கொடுப்பார்கள்.



கேந்திரஸ்தானம்

ஒருவன் ஜெனித்த லக்கினமுதற்கொண்டு 1-4-7-10-ஆமிடங்களெனக் கொள்கவும். அவற்றில் கேந்திரத்தை கண்டகமென்றும் அதுஷ்டியமென்றும் வடமொழிகளில் கூறுவதுண்டு.

கிரகபார்வையின் பலன்

ஒண்ணு முக்கால் பெலமுடைய சுபக்கிரகங்கள் பாவர்களையாவது ஜென்மலக்கினத்தையாவது பார்க்கில் அப்படி பார்க்குமிடமான பாவபலன் மிகவும் யோகத்தையும், சுகத்தையும், ஆயுளையும் விருத்தியாகக் கொடுக்கும்.

பணபரம் ஆபோகில்லியஸ்தானம் அறியும்வகை

ஒரு பிரஜை ஜெனித்த இலக்கினமுதல் 2-5-8-11 இந்த நான்கும் பணபர இடமாகும். 3-6-9-10 இந்த நான்கும் ஆபோகில்லிய இடமாகும், இதற்குறுதொழிந்த மற்ற 1-4-7-10-ம் கேந்திர இடமாகும். மற்ற நட்பு-ஆட்சி-யுச்சம்-பகை-நீசாதி கிரகபலாபலன்களை அறிந்துச் சொல்வதேயாம்.

கிரகபார்வைகள் எத்தனைவகையெனக் காணல்

கிரகங்களானவைகள் ஒன்பதினுக்கும் ஒவ்வொன்றினுக்கும் தாங்கள் தங்களிருக்குமிடத்திற்கு 2-12 இந்த இடங்கள் தவிர மற்றயவிடங்கள் ஒவ்வொன்றையும் நோக்குகின்றன. இதில் 1-ம் 7-ம் முழுநோக்கென்றும், 8-ம் 9-ம் முக்கால் நோக்கென்றும், 5-அரை நோக்கென்றும், 4-10-ம் கால் நோக்கமென்றும், 3-ம் 6-ம் 1-ம் அரிக்கால் நோக்கென்றும் இவ்விதங் காணல்வேண்டும்.

கிரக எண்கள் அறியும்வகை

சூரியனுக்கு முழுமையான பலனுறில் கிரணம் 5-ம், சந்திரனுக்குக் கிரணம்-21, குஜனுக்குக் கிரணம்-7, புதனுக்குக் கிரணம்-9, குருவினிற்குக் கிரணம்-10, சுக்கிரனுக்குக் கிரணம்-16, சனிக்குக் கிரணம்-4, இராகு-கேதுகளுக்குக் கிரணம்-4 இத்தொகைகளைத்தான் அவர்கள் பலன்படிக்கி எடுத்துப் பெருக்க அல்லதுகூட்டவோ சொல்லியபடி பார்க்க அப்பலன் அறியலாகும். (கிரகவெண்களென்பது கிரகங்களின் கிரணங்களென்று பெயர்.)

---

## அஷ்டகவர்க்கம்

### சூரியன் பரல் 48-க்கு விவரம்

| | | | |
|---|---|---|---|
| சூரியன் | 1-2-4-7-8-9-10-11 | குரு | 5-6-9-11 |
| சந்திரன் | 3-6-10-11 | சுக்கிரன் | 6-7-12 |
| குஜன் | 1-2-4-7-8-9-10-11 | சனி | 1-2-4-7-8-9-10-11 |
| புதன் | 3-5-6-9-10-11-12 | லக்கினம் | 3-4-6-10-11-12 |

| சந்திரன் பரல் 49-க்கு விவரம் | | குரு பரல் 56-க்கு விவரம் | |
|---|---|---|---|
| சூரியன் | 3-6-7-8-10-11 | சூரியன் | 1-2-3-4-7-8-9-10-11 |
| சந்திரன் | 1-3-6-7-10-11 | சந்திரன் | 2-5-7-9-11 |
| குஜன் | 2-3-5-6-9-10-11 | குஜன் | 1-2-4-7-8-10-11 |
| புதன் | 1-3-4-5-7-8-10-11 | புதன் | 1-2-4-5-6-9-10-11 |
| குரு | 1-4-7-8-10-11-12 | குரு | 1-2-3-4-7-8-10-11 |
| சுக்கிரன் | 3-4-5-7-9-10-11 | சுக்கிரன் | 2-5-6-9-10-11 |
| சனி | 3-5-6-11 | சனி | 3-5-6-12 |
| லக்கினம் | 3-4-10-11 | லக்கினம் | 1-2-4-5-6-7-9-10-11 |

| செவ்வாய் பரல் 39-க்கு விவரம் | | சுக்கிரன் பரல் 52-க்கு விவரம் | |
|---|---|---|---|
| சூரியன் | 3-5-6-10-11 | சூரியன் | 8-11-12 |
| சந்திரன் | 3-6-11 | சந்திரன் | 1-2-3-4-5-8-9-11-12 |
| குஜன் | 1-2-4-7-8-10-11 | குஜன் | 3-5-6-9-11-12 |
| புதன் | 3-5-6-11 | புதன் | 3-5-6-9-11 |
| குரு | 6-10-11-12 | குரு | 5-8-9-10-11 |
| சுக்கிரன் | 6-8-11-12 | சுக்கிரன் | 1-2-3-4-5-8-9-10-11 |
| சனி | 1-4-7-8-9-10-11 | சனி | 3-4-[illegible]-8-9-10-11 |
| லக்கினம் | 1-3-6-10-11 | லக்கினம் | 1-2-3-4-5-8-9-11 |

| புதன் பரல் 54-க்கு விவரம் | | சனி பரல் 39-க்கு விவரம் | |
|---|---|---|---|
| சூரியன் | 5-6-9-11-12 | சூரியன் | 1-2-4-7-8-10-11 |
| சந்திரன் | 2-4-6--8-10-11 | சந்திரன் | 3-6-11 |
| குஜன் | 1-2-4-7-8-9-10-11 | குஜன் | 3-5-6-10-11-12 |
| புதன் | 1-3-5-6-9-10-11-12 | புதன் | 6-8-9-10-11-12 |
| குரு | 6-8-11-12 | குரு | 5-6-11-12 |
| சுக்கிரன் | 1-2-3-4-5-8-9-11 | சுக்கிரன் | 6-11-12 |
| சனி | 1-2-4-7-8-9-10-11 | சனி | 3-5-6-11 |
| லக்கினம் | 1-2-4-6-8-10-11 | லக்கினம் | 1-3-4-6-10-11 |

விவரம்:—மேற்சொன்ன எண்கள் அந்தந்த கிரகங்களிருந்த ராசி முதல் மேலே எண்களால் காட்டிய ஸ்தானங்களில் (பரல் ஒன்று)



என்பது அர்த்தமாகும். இவ்வாறு கூட்டிக்காண்பதே சமுதாயம் எனப்படும். சமுதாய பரலைக்கொண்டே திரிகோணப் பரல் காண வேண்டும். ஆனதால் திரிகோண சோதனை செய்யும் விவரங்களை இங்கு கூறுவாம்.

### திரிகோண சோதனை விவரம்

திரிகோணம் என்பது 1-5-9 எனப்படும். அவையாவன:—மேஷத்திற்கு சிங்கம்-தனுசு, ரிடபத்திற்கு கன்னி-மகரம், மிதுனத்திற்கு துலா-கும்பம், கடகத்திற்கு விருச்சிகம்-மீனம் என்பனவாம்.

ஆனதால், மேற்சொன்ன மும்மூன்று ராசிகளில் எந்த ராசியில் பரல் குறைந்திருக்கின்றனவோ அதைப்போலவே மற்ற இரண்டு ராசிகளிலுமுள்ள பரலைக் குறைக்கவேண்டும் மேற்சொன்ன மூன்று ராசிகளிலும் ஏற்றக்குறைச்சலின்றி சமமான பரலிருக்குமேயாமானல் மூன்று ராசியிலுமுள்ள எல்லா பரலையும் எடுத்துவிடவேண்டும். மேலேசொன்ன மூன்று ராசிகளுள் ஏதேனுமொரு ராசியில் பரலில்லாது சூன்னியமாயிருக்கின் மேற்படி ராசி மூன்றையும் சோதனை செய்யாமல் விட்டுவிடவேண்டும். இவையே திரிகோண சோதனையாகும். திரிகோண சோதனையான பின்பு ஏக ஆதிபத்திய சோதனை செய்யவேண்டுவது அவசியம் ஆனதால் ஏகாதிபத்திய சோதனை விவரங்களைக் கூறுவாம்.

### ஏகஆதிபத்திய சோதனை விவரம்

திரிகோண சோதனையான பின்பு, மேஷம்-விருச்சிகம், ரிஷபம்-துலாம், மிதுனம்-கன்னி, தனுசு-மீனம், மகரம்-கும்பம் என்னும் ராசிகள் ஏககிரக ஆதிபத்தியமானதால் மேற்படி ராசிகளுள் கிரகமிருந்த ராசிப்பரல் அதிகமாக இருந்தால் குறைந்தபடி சரி செய்யவும். சரியாக இருந்தாலும், கிரகமில்லாத ராசிப்பரல் குறைந்திருந்தாலும், கிரகமில்லாத ராசிப்பரலை எடுத்துப் போடவும். இரண்டு ராசிகளிலும் கிரகமில்லாமலிருந்து பரல் ஏற்றக்குறைச்சலாக இருந்தால் குறைந்தபடி சரி செய்யவும். இரண்டு ராசிகளிலும் சமமான பரலிருந்தால் இரண்டு ராசிப்பரலையும் எடுத்துப் போடவும்.

இரண்டு ராசியிலும் கிரகமிருந்து பரல் ஏற்றக்குறைச்சலாயிருக்கினும், சரியாக இருக்கினும், இரண்டு ராசியிலும் கிரகமில்லாமலிருந்து ஒரு ராசியிற் பரலில்லாமலிருந்தாலும் சோதனை இல்லை. கிரகமிருக்கும் ராசியில் பரலிருக்குமாகில் கிரகமில்லாத ராசிப்பரல் எடுத்துப் போடவும். இவ்விடம் ஏகாதிபத்திய சோதனையான பின்பு இராசி குணகாரம் காணவேண்டுவது அவசியமாதலால் இராசி குணகாரம் செய்யும் விதத்தைக் கூறுவாம்.

### இராசி குணகாரம் காணும்விதம்

ஏகாதிபத்திய சோதனையான பின்பு ஏகாதிபத்தியத்திலுள்ள ராசிபரலை மேஷம்-துலாம் என்னும் இவ்விரண்டிலுமுள்ள ராசிபரலை 7-லும், ரிஷபத்திலும் சிங்கத்திலுமுள்ள ராசிப்பரலை 10-லும், மிதுனத்திலும் விருச்சிகத்திலுமுள்ள ராசிப்பரலை 8-லும், கன்னி மகரத்திலுள்ள ராசிப்பரலை 5-லும், தனுசிலுள்ள ராசிப்பரலை 9-லும், கும்பத்திலுள்ள ராசிப்பரலை 11-லும், மீனத்திலுள்ள ராசிப்பரலை 12-லும் பெருக்கி அந்தந்த ராசியிலடைத்து கூட்டிக் கண்டதே ராசி குணகாரமாகும்.

### கிரக குணகாரம் காணும்விதம்

குருவிருந்த ராசிப்பரலை 10-லும், செவ்வாயிருந்த ராசிப்பரலை 8-லும், சுக்கிரனிருந்த ராசிப்பரலை 7-லும், மற்ற சூரியன்-சந்திரன்-புதன்-சனி இவர்களிருந்த ராசிப்பரலை 5-லும் பெருக்கி அந்தந்த ராசியிற் போடுவதுவேயாம். இவை ஏகாதிபத்திய ராசியிலுள்ள எண்களை மேற்கண்ட கிரக எண்களால் பெருக்கவேண்டுமென்றறிக.

### குணசமுகம் காணும்விதம்

மேலே சொன்ன இராசி குணகாரம்-கிரக குணகாரம் என்னும் இரண்டையும் ஒன்றாய்க்கூட்டி அந்தந்த ராசியில் போடுக.

மேலேசொன்ன இராசி குணகாரம் என்னும் இரண்டையும் ஒன்றாய் கூட்டிய குணசமுகத்தொகையை ஒன்றாய்க்கூட்டி 7-ல் பெருக்கி 27-ல் வகுத்த தொகை வருஷமெனவும், மிச்சத்தை 12-ல் பெருக்கி 27-ல் வகுத்த தொகை மாதமெனவும், அதின் மிச்சத்தை 30-ல் பெருக்கி 27-க்கு இந்த தொகை நாளெனவும், அதின் மிச்சத்தை 60-பெருக்கி 27-ல் வகுத்த தொகை நாழிகை எனவுங் கொள்க.

இவ்வாறு ஒவ்வொரு கிரக அட்டவர்க்கங்களின் குண சமுகத் தொகையை மேற்சொன்னபடி பெருக்கி வகுத்துக்கண்ட வருடம் மாதம் தினம் நாழிகையில், வருஷமொன்றுக்கு 36 - நாளும், மாதம் 1-க்கு 3-நாளும், நாள் ஒன்றுக்கு 6-நாழிகையும், நாழிகை 1-க்கு 6-விநாடியும், சேர்த்த மொத்தத்தில் கீழ்கண்டவாறு பலாபலப்படி பிரித்தறிக. எப்படி எனில்.

### நீச்சமடைந்த கிரகத்திற்கு

அவர்கள் கொடுத்த வருஷம், மாதம், தேதி, நாழிகை, விநாடியில், மூன்றிலொருபாகம் கழித்த மிச்சமும் நட்பு ஆட்சி மூலத்திரிகோணங்களிலிருக்கும் கிரகங்கள் தான் கொடுத்த வருடம் மாதம் தினம் நாழிகையில் முழுப்பாகத்தையும் உச்சமடைந்த கிரகங்கள் கொடுத்த வருஷம் மாதம் தினம் நாழிகையை இரண்டு பாகமாக்கிச்



சேர்த்தும் கூட்டிய தொகையே அந்த ஜாதகனின் பூரண ஆயுளாகும். அதிலும் மேற்சொன்னவாறு கூட்டிக்கண்டாலும் செவ்வாய், சனி, சுக்கிரன் இவர்கள் பாவசக்கரப்படி பகைவீட்டிலிருந்தார்களாயின், மேலேசொன்ன அஷ்டகவர்க்கு வயதே நிச்சயம். மேற்சொன்ன கோட்கள் பகையில்லாதிருக்கில், மேற்சொன்ன அஷ்டகவற்கு ஆயுளிலும் அதிகப்படும். இதுவுமன்றி மேலேசொன்ன சனி, செவ்வாய், சுக்கிரன் இவர்கள் தசவற்கமேறில் நற்பலனும், பாபவற்கமேறில் தீயபலனும் உண்டாகும். இதனுடன் மகாதிசை புக்தியில் திசைவீடு ஏககாலத்தில் சம்பவித்தல் கூடாது. இவைகளை பிராண தேக மிருத்தியுமுதலிய ஸ்புடவிஷயங்களையறிந்து இஷ்ட தேவதா ஆக்கினையாலும் நவக்கிரக சகாயத்தாலும் குரு கடாக்ஷத்தாலும் நிர்ணயம் சொல்லவேண்டுவது அவசியம். இனி சர்வாஷ்டகவற்கின் விவரம் கூறுவாம்.

விவரம்:—சப்தகோட்களின் சமுதாய பரலை கூட்டி அந்தந்த ராசியில் போடுவதே சர்வா அஷ்டவர்க்கமாகும். அதனுள் அமைந்த பரலுக்குப் பலன்.

1 சர்வா அஷ்டவர்க்கத்தில் 30-பரலுக்குமேல் எந்த ராசியில் உள்ளனவோ அந்த ராசி வர்க்கத்தாருக்கு பூரண ஆயுளும் யோகமும் உண்டு.

2 எந்த ராசியில் 25-பரலுக்குக் கீழிருந்தனவோ அந்த ராசி வர்க்கத்தார்க்கு உத்தமபலனும், அதமபலனுமல்லாது மத்திய பலனுகவே நடக்கும்.

3 எந்த ராசியில் 20-க்குக் குறைந்தபரல் உள்ளனவோ அந்த ராசி வர்க்கத்தாற்கு மகாகொடிய பலனும், அற்ப ஆயுளும் உண்டாகும்.

இதுவன்றி பிதுரு-மாதுரு-சகோதரர் - மாதா-புத்திரர்-மனைவி-ஜாதகனென்னும் சூரியன்-சந்திரன்-குஜன்-புதன்-குரு-சுக்கிரன்-சனி என்னுமிவர்கள் அஷ்டவர்க்கத்தில் ராசிலக்கினப்படி ஜாதகனுக்கு சனி அஷ்டவர்க்கத்தில் ஜென்மராசி எவையோ அவையே லக்கினமாயும், சந்திரன் அஷ்டவர்க்கத்தில் ஜென்மலக்கினத்திற்கு 4-ஆம் இடம் எவையோ அவையே மாதுரு லக்கினமாயும், செவ்வாய் அஷ்டவர்க்கத்தில் ஜென்மலக்கினத்திற்கு மூன்றாமிராசி எவையோ அவையே சகோதர லக்கினமாயும், புதன் அஷ்டவர்க்கத்தில் ஜென்மலக்கினத்திற்கு 5-ஆம் இராசி எவையோ அவையே அம்மான் லக்கினமாயும், குரு அஷ்டவர்க்கத்தில் ஜென்மலக்கினத்திற்கு 5 - ஆம் இராசி எவையோ அவையே புத்திர லக்கினமாயும், சுக்கிரன் அஷ்டவர்க்கத்தில் ஜென்மலக்கினத்திற்கு 7-ஆம் இராசி எவையோ அவையே களத்திர லக்கினமாயும் கொண்டு அவ்வவர்களது குடும்பம்-சகோ

தரம்-மாதா-புத்திரர் - சத்துரு-களத்திரம் அல்லது பர்த்தா-ஆயுள் - பிதா-தொழில்-லாபம்-விரயம் என்னும் பாவப்படி அந்தந்த இராசியிலுள்ள பரலை யறிந்து கீழ்க்கண்டவாறு பலன் சொல்லுக. விவரம் வருமாறு.

1 ஒன்றுக்குமேல் மூன்று பரலுக்குள்ளிருந்தால் அற்பபலன் எனவும், 4-பரலிருக்கின் சமபலன் எனவும், 5-முதல் 8-வரையிலிருந்தால் விசேஷபலன் எனவுங் கொள்க.

விவரம் வருமாறு

| | | |
|---|---|---|
| பரல் | 1-க்கு | திரவியநாசம் |
| ,, | 2-க்கு | அவமானம் பீடை |
| ,, | 3-க்கு | சஞ்சலம் |
| ,, | 4-க்கு | லக்ஷ்மீகரம் |
| ,, | 5-க்கு | தனவருத்து |
| ,, | 6-க்கு | வித்தைலாபம் சந்தோஷம் |
| ,, | 7-க்கு | ஐஸ்வர்யம் |
| ,, | 8-க்கு | ராஜயோகம் |

எந்தராசியில் பரல் குறைந்தனவோ அந்தராசியில் கோசாரப்படி சூரியன் பிரவேசகாலம் மகாதீமையானபலனும் ஷ்டி பால் குறைந்த ராசியானது சூரியனுக்குப்பகை நீசராசியாயின் அதிக நஷ்டமும் எந்த ராசியில் பரல் அதிகப்பட்டனவோ அந்த ராசியில் சூரியன் பிரவேசகாலம் சமலாபமும் உண்டு.

மற்றும் சூரியன் அஷ்டவர்க்க சமுதாயத்தில் சூரியனிருந்த ராசிக்கு 9-ல் இருந்த ராசிப்பரலெத்தனையோ அவையே பிதாவின் சகோதரமென்றும், இவற்றுள் ஆண் கிரகம் கொடுத்தபரலை ஆண் சகோதரமென்றும், பெண் கிரகம் கொடுத்த பரலை பெண்சகோதரமென்றுங் கூறுக. அலிகிரகமாயின் சகோதரர் இல்லை என்பதாம்.

இவ்வாறே மாதாவின் சகோதரர்களுக்கு நான்காமிராசிப்பரலாலும், ஜாதகனின் சகோதரர்களுக்கு குஜன் நின்ற ராசிக்கு மூன்றுமிராசிப் பரலாலும், அம்மான் சகோதரர்களுக்கு புதன் அஷ்டகவர்க்கில் புதனிருந்த ராசிக்கு 5-ஆம் ராசிப்பரலாலும், புத்திர சகோதரர்களுக்கு குருநின்றராசிக்கு 5-ஆம் ராசிப்பரலாலும், களத்திர சகோதரர்களுக்கு சுக்கிரனஷ்டகவர்க்கில் சுக்கிரனிருந்த ராசிக்கு 7-ஆம் ராசிப்பரலாலும் கண்டுணர்க.

## சூரியன் அஷ்டவர்க்க பலன்

1 அஷ்டகவர்க்கில் சன்ம லக்கினத்திலும், சந்திரலக்கினத்திலும், பரல் குறைந்திருந்து சூரியன் நீச்சனுகவும் இருக்கில் பிதாவுக்கு அரிட்டமுண்டு.



2 சூரியனிருந்தராசிக்கு, 2-5-ல் 3-பரலிருக்கின் பிதாவுக்கு கஷ்டமும் நஷ்டமும் உண்டு.

3 சர்வா அஷ்டகவர்க்கில் சூரியனிருந்த ராசிக்கு 5-9-ல் 30-க்கு குறைந்த பரலிருக்கின் பிதாவுக்கு மத்திப ஆயுளென்றும், 25-க்கு குறைந்த பரலிருக்கின் அற்பாயுளென்றும், 30-க்கு மேற்பட்ட பரலிருக்கின் பூரண ஆயுளெனவுங் கூறுக.

## சந்திரன் அஷ்டவர்க்க பலன்

சந்திரன் அஷ்டகவர்க்கில் சந்திரனிருந்த ராசியிலும், சந்திரனிருந்த ராசிக்கு நான்கிலும், 3-க்கு குறைந்த பரலிருக்கின் மாதாவுக்கு அற்ப ஆயுளெனவும், 3-ச்குமேல் 5-க்குள்ளிருக்கின் சமவயதென்றும், 5-க்குமேல் 8-பரலுக்குள்ளிருக்கின் பூரண வயதெனவுங் கொள்க.

ஏகாதிபத்திய ராசியிலுள்ள மொத்த தொகையைக் கூட்டி சமுதாயசக்கரத்தில் சந்திரனிருந்த ராசிக்கு நான்கிலுள்ளபரலால் பெருக்கி 27-ல் வகுத்த நின்றபரலெவ்வளவோ அந்த எண்ணை ஜனனம் பூர்வபக்ஷமாயின் அச்சுவினி முதலாயும், கிருஷ்ணபக்ஷமாயின் அவிட்டமுதலாயும், எண்ணிக்கண்ட நக்ஷத்திரராசியில் கோசாரப்படி சனிவரும்போது தாய்க்குப் பீடையும், சந்திரன் குரு இவர்கள் வாசகாலம் தாய்க்கு யோகமும் உண்டெனக் கூறுக.

## குஜன் அஷ்டவர்க்க பலன்

இராசி சக்கரத்தில் செவ்வாய் எந்தராசிலிருந்தானே அந்த ராசிக்கு மூன்றுமிராசியில், சமுதாய சோதனையில் எத்தனைபரலிருந்தனவோ அத்தனை சகோதரர் உண்டாவார் எனக்கூறுக. அவற்றுள்ளும் ஆண்கிரகம் கொடுத்தபரலை ஆண் சகோதரர் எனவும், பெண் கிரகம் கொடுத்தபரலை பெண் சகோதரர் எனவுங் கூறுக.

இதுவன்றி செவ்வாய் அஷ்டகவர்க்கின் ஏகாதிபத்தியப் பரலை எண்ணி, சமுதாய சக்கரத்தில் செவ்வாய் நின்ற ராசிக்கு மூன்றிலிருந்த பரலாகில் பெருக்கிய துகையை ஜாதகன் ஜனித்தது சுக்கில பக்ஷமாயின் அச்சுவினி முதலாயும், கிருஷ்ணபக்ஷமாயின் அவிட்ட முதலாயும், எண்ணிக்கண்ட ராசியில் கோசாரப்படி சனி, செவ்வாய், ராகு, கேது இவர்கள் சஞ்சார காலங்களில் துற்பலனும் குரு சந்திரன் இவர்கள் வாசகாலம் நற்பலனும் உண்டாகுமெனக் கூறுக.

## புதன் அஷ்டவர்க்கப் பலன்

1 புதன் கேந்திரகோண ஸ்தானங்களில் நின்று சமுதாய பரலில் 5-க்கு மேற்பட்ட பரலோடிருக்க குரு பார்வைபெற்றிருக்க

அந்த ஜாதகன் பிரபல வித்தையுடையவனாகி எக்காலத்தும் நீங்கப்பட மாட்டாத கௌரவம் முதலியன உடையவனாவன்.

2 புதனிருந்த ராசிக்கு 2-ஆம் அதிபதி உச்சசொரூப க்ஷேத்திரத்திலிருந்து மேற்சொல்லிய வண்ணம் 5-பரலுக்கு மேற்பட்ட பரலுடன் நிற்கில் அவன் அம்மான் குடும்பம் பூரண ராஜயோகத்துடன் இருக்கும். 3-பரலோடிருக்கில் மேற்படி அம்மான் குடும்பம் சமயோகவாழ்க்கை யுடையதாகும். 3-க்கு குறைந்த பரலிருக்கின் அம்மான் கிடையாதென்றும், அப்படி அம்மான் இருந்தாலும் பிறந்த காலத்திற்குப் பின் மேற்படி அம்மான் மரணமாவானென்றுங் கூறுக.

3 புதனிருந்த ராசிக்கு அதிபன் சுபனாகி 5-க்கு கேந்திரமேறி 5-க்கு மேற்பட்ட பரலுடன் நிற்கில் அந்த ஜாதகன் சகலகலை வித்துவானாகி இவ்வுலகெங்கணும் தெரிந்தவனாகி வாழ்வன்.

4 புதன் நின்ற இராசிக்கு 5-ஆம் இராசியில் எத்தனை பரலிருந்தனவோ அத்தனைபேர் அம்மான் என்றும், ஏகாதிபத்திய சோதனையில் நின்ற பரல் எத்தனையோ அவையே நீண்ட ஆயுளுடன் நிலைத்திருப்பதென்றுங் கூறுக.

5 ஐந்தாம்ராசி யதிபன் எந்த ராசியிலிருந்தானோ அந்த ராசியில் எத்தனை பரலிருந்தனவோ அத்தனை காணி பூமியுண்டெனவும், அவற்றுள் ஏகாதிபத்திய சோதனையில் எத்தனை பரல் நின்றனவோ அத்தனை காணி பூமியே நிலைத்திருக்கு மென்றும் கூறுவர். இதனை மேல்நாட்டு சாத்திரீகர்கள் வீடு அல்லது ராஜ்யம் எனக் கணக்கிட்டுக் கூறி வருகின்றனர்.

6 புதன் அஷ்டவர்க்கில் புதனிருந்த ராசிக்கு எத்தனையாவது ராசியில் பரல் குறைந்தனவோ அந்த ஸ்தானாதிபர்களுக்கு தோஷம் உண்டு.

## குரு அஷ்டவர்க்கப் பலன்

1 குரு நின்ற ராசிக்கு 5-ஆம் ராசியில் மூன்று பரலிருந்தால் அகால புத்திரரும், 3 - பரலுக்கு மேல் 5 - பரலுக்குள் ளிருந்தால் மத்தியகால புத்திரரும், 5-பரலுக்கு மேலிருந்தால் காலபுத்திரரும், (25-வயதுக்குள்) புத்திரரும் உண்டாவர்.

2 சமுதாய சோதனையில் குரு நின்ற ராசிக்கு 5-ல் எத்தனை பரலிருந்தனவோ அத்தனை புத்திரருண்டு. அவற்றுள் ஆண் கிரகம் கொடுத்த பரலாயின் ஆண் எனவும், பெண் கிரகம் கொடுத்த பரலாயின் பெண் எனவுங் கூறுக.

3 ஏகாதிபத்திய சோதனையில் மேற்படி குரு நின்ற ராசிக்கு 5-ஆம் ராசியில் எத்தனை பரலிருந்தனவோ அவை அந்த ஜாதகன் பெற்ற புத்திர புத்திரிகள் பூரண ஆயுளுடன் நிலைத்திருப்பதாகும்.



4 குரு நின்ற ராசியில் பரல் குறைந்து மேற்படி குரு நின்ற ராசிக்கு ஐந்தில் அதிகப் பரலிருக்குமேயாமானால் அந்த ஜாதகனுக்கு புத்திரரால் யோகம் உண்டெனவும், குருநின்ற ராசிப் பரலுக்கு குரு நின்ற ராசிக்கு ஐந்தாம் ராசிப் பரல் குறைந்திருக்குமேயாமானால் அந்த ஜாதகனுக்குத் தன் புத்திரரால் யோகமில்லை எனவுங் கூறுக.

5 லக்கினத்திற்கு ஐந்தாமிடத்திலும், குருநின்ற ராசியிலும், 3-க்குக் குறைந்தால் அவனுக்கு கெர்ப்பமே உண்டாகாதெனவும், 5-பரலுக்குள்ளிருந்தால் புத்திரர் பிறந்து மரணமாவார் எனவும், 5-க்கு மேலிருந்தால் புத்திரருண்டு எனவுங் கூறுக.

6 சில சாத்திர நூற்கள் லக்கினத்திற்கு 5-ஆம் ராசியிலும், குருநின்ற ராசியிலும், 3-பரலிருந்தால் பெண் பிரஜையுண்டு என்றும், மேற்படி இரண்டு ராசியிலும், 5 - பரலே நிற்குமாயின் ஆண்-1, பெண்-1 நிலைக்குமெனவும், அவை மத்திப ஆயுளுடைய தெனவுங் கூறுகின்றன.

## சுக்கிரன் அஷ்டகவர்க்க பலன்

1 சுக்கிரனிருந்த ராசிக்கு 7-ஆம் ராசியில் ஏகாதிபத்திய சோதனைப் பரலில் எத்தனைப் பரலிருந்தனவோ அத்தனை களத்திரமுண்டு. அவற்றுள் சுபகிரகம் கொடுத்த பரல் எத்தனை யுண்டாயினும் அத்தனை விவாகம் எனவும், பாவகிரகங்கள் கொடுத்த பரல் எத்தனையோ அத்தனை சேர்க்கை ஸ்திரீ அல்லது காந்தர்வ விவாஹம் எனக்கூறுக.

2 மேலே சொன்னபடி சுக்கிரனிருந்தராசிக்கு 7-ஆம் ராசியில் ஏகாதிபத்திய சோதனையில் நின்ற பரல் எத்தனையோ அத்தனை விவாஹம் உண்டு எனினும், அவற்றுள் சூரியன் கொடுத்த பரல் எத்தனையோ அத்தனை மனைவி பிதுர்வர்க்கத்தில் கிடைப்பாரெனவும், சந்திரன் கொடுத்த பரல் எத்தனையோ அத்தனை மாதுர்வர்க்கத்தில் கிடைக்குமெனவும், செவ்வாய் கொடுத்த பரலாகில் சகோதர சகோதரி வகையில் கிடைக்குமெனவும், சனி கொடுத்த பரலாயின் நூதன பந்துவில் கிடைக்குமெனவும், குரு கொடுத்த பரலாயின் நீண்டநாள் பந்துவில் கிடைக்குமெனவும், சுக்கிரன் கொடுத்த பரலாயின் தனது முன்களத்திரவகை எனவும், புதன் கொடுத்த பரலாயின் அம்மான் பெண் அல்லது அம்மான்வகையராப் பெண் எனவுங் கூறுக.

3 லக்கினத்திற்கு 7-ல் பரல் குறைந்தும் 3-க்குள் சுக்கிரனிருந்த ராசிக்கு எழிலும் பரல் குறைந்து மிருக்குமேயாமாயின் அந்த ஜாதகனுக்கு விவாஹமே இல்லை.

4 சுக்கிரனிருந்த ராசிக்கு எழில் 4-பரலிருக்கின் ஏகதாரனென்றும், 5-பரலிருக்கில் இருதாரமுடையவனென்றும், 6-பரலிருக்கில்

3-தாரமுடையவன் என்றும், 7-பரலிருக்கில் பல்தாரமுடையவன் என்றும், 7-க்குமேல் எத்தனை பரலிருந்தாலும் உத்தமதாரம் ஒன்றே யுடையவன் எனவுங் கூறுக.

## சனி அஷ்டகவர்க்க பலன்

1 சனி நின்ற ராசிக்கு எட்டாம் ராசியிலிருந்த சமுதாய பரலை ஏகாதிபத்திய ராசியில் சனிநின்ற ராசியில் உள்ள பரலால் பெருக்க எத்தனை எண் வருகின்றனவோ அந்த வயதில் ஜாதகனுக்குப் பிரபல கெண்டம் உண்டு. இவை ஜாதக அலங்காரம், சாதக சிந்தாமணி, வீமேஸ்வர உள்ளமுடையான் என்னும் நூற்கள் சம்மதித்துள்ளன. மற்ற ஓராசாரம், சந்திராவளி, பிருகத் ஜாதகம் முதலிய நூற்கள் சம்மதிக்கவில்லை. இம்மூவரும் கூறியதென்னவெனில்? சர்வ அட்டக வர்க்கில் மூன்றும் ராசியில் எத்தனை பரலிருந்தனவோ அவை முதல் கெண்டமென்றும், மூன்றும் ராசிப்பரலுடன் 8-ஆம் ராசிப்பரலைக் கூட்டினால் எத்தனை பரலாகிறதோ அத்தனையாம் வயதில் இரண்டாம் கெண்டம் என்றும், இவ்விரண்டுடன் 12-ஆம் ராசிப்பரலைக் கூட்டினால் எத்தனை பரல் ஆகிறதோ அந்த வயதில் மரணமுண்டாகும் எனவுங் கூறுகின்றன.

2 சோதித்திய சக்கிரத்துள் ஜென்மலக்கினமுதல் சனிநின்ற ராசிவரையிலும் உள்ள பரல் யாவையும் ஒன்றாய்க் கூட்டி மேற்படி சோதித்திய சக்கரத்துள் ஜென்ம ராசிக்கு 8-ஆம் ராசிப்பரலால் பெருக்க எத்தனை எண் வருகின்றனவோ அத்தனையாவது வயதில் பிரபல கெண்டம் உண்டு.

3 ஏகாதிபத்திய சோதனையான பின்பு எட்டில் உள்ள பரலை லக்கினப் பரலால் பெருக்கி 27-ல் வகுத்து நின்ற சேஷம் எவ்வளவோ அதனை அஸ்வனிமுதலா யெண்ண எந்த நட்சத்திரம் வருகிறதோ அந்த ராசியில் சனி சம்பவகாலம் ஜாதகருக்கு நோய், யோக குறைவு, கஷ்டம், தனநாசம், தேசசஞ்சாரம், அன்னியரும் சுயஜனமும் விரோதம் முதலிய பாபபலன் நடக்கும் என்றுணர்க.

---

## ஜாதகம்பார்க்கு மடைவு வினாவிடை

வினா:—ஜாதகமென்றாலென்ன?

விடை:—ஓர்பிரஜை ஜெனித்தகாலத்தை எந்திரங்களாலோ அல்லது சாயையினாலோ அறிந்து நிதானித்து அக்காலத்திற்குப் பொருந்தி இருக்கும் இலக்கினத்தையும் கிரகத்தையுங் குறித்து நோக்குவதேயாம்.



வினா:—அவ்விதமாக கிரக இலக்கினங்களை எவ்விதம் பார்க்க வேண்டும்?

விடை:—ஒருவன் ஜெனித்தகாலம் மேஷவிராசியான சித்திரைமாதமாகில் அவ்வித சித்திரைமாதத்தில் மேஷத்திலே சூரியனிருக்கப்படுமென்றும், வைகாசிமாதமாகின் விருஷபத்தி லிருக்கப்படுமென்றும், ஆனிமாதமாகின் மிதுனத்திலிருக்கப் படுமென்றும், ஆடிமாதமாகின் கடகத்தி லிருக்கப்படுமென்றும், ஆவணி மாதமாகின் சிம்பத்திலிருக்கப் படுமென்றும், புரட்டாசி மாதமாகின் கன்னியி லிருக்கப்படுமென்றும், ஐப்பிசி மாதமாகின் துலாத்தி லிருக்கப்படுமென்றும், கார்த்திகைமாதமாகின் விருட்சிகத்தி லிருக்கப்படுமென்றும், மார்கழி மாதமாயின் தனுசுவி லிருக்கப்படுமென்றும், தைமாதமாகின் மகரத்தி லிருக்கப்படுமென்றும், மாசிமாதமாயின் கும்பத்தி லிருக்கப்படுமென்றும், பங்குனிமாதமாகின் மீனத்தி லிருக்கப்படுமென்றும், அந்தந்த மாதங்களும் அதற்கேற்ற இராசிகளிற் காலையிற் சூரியனுதித்து வரப்படுமென்றும் காணல்வேண்டும்.

வினா:—இந்த விராசிகளானது முதற்றேதிமுதல் கடைசிதேதிவரையி லிருக்கிறதானால் ஒவ்வொரு தேதிகளிலும் அதற்கேற்பட்ட நாழிகை பூராவுமிருக்கின்றதா? அல்லது தேதிக்குத் தேதி குறைவதுண்டா? அதின்பின் தினமொன்றுக்கு எத்தனை இராசிகள் சஞ்சரிக்கும் அந்த இராசிகளுக்குக் கடிகையின் அளவுகளென்ன?

விடை:—சித்திரை முதல்தேதியிரவில் 28-நாழிகையளவிற் சனித்தால் அந்த மாதத்தின் தேதி எத்தனையென்றும் கடிகை விகடிகை எத்தனையென்றும் வைத்தும் அந்த மேஷவிராசியின் சங்கியையான கடிகை-4 விகடிகை-15 அம்மாதத்தேதி கடிகை விநாடிகை பெயருக்குக் கொடுத்து தேதி ஒன்றுக்குக் கடிகை விகடிகை சுவாசமிவ்வளவென்றும் பிரித்து செனித்த தேதி நாழிகை விகடிகைவரைக்குமுள்ள தேதி கடிகை முதலியதற்கு கொடுத்த சேஷத்தை யறிந்து அந்த கடிகை விகடிகை கலையை மேஷவிராசியின் பாக்கியாக வைத்துக்கொண்டு அவ்வித பாக்கி நாழிகை முதலியதுடன் விருஷபம் நாழிகை-4, விகடிகை-45, மிதுனம்-5, விகடிகை 15-ஆகவும், கடகம் நாழிகை-5, விகடிகை 30-ஆகவும், சிம்பம் நாழிகை-5, விகடிகை 15-ஆகவும், கன்னி

நாழிகை 5-ஆகவும், துலாம் நாழிகை 5-ஆகவும், விருட்சிகம் நாழிகை 5-ஆகவும், விகடிகை 15-ஆகவும், தனுசு நாழிகை-5, விகடிகை 30-ஆகவும், மகரம் நாழிகை-5, விகடிகை 15-ஆகவும், கும்பம் நாழிகை-4, விகடிகை-45, மீனம் கடிகை-4, விகடிகை 15-ஆக விராசி 12-க்கும் கூடிய கடிகை-60, இவ்வறுபது கடிகைகொண்டது ஒருதினம். இதையே இலங்கையின் இராசிமான சங்கிலையென்றுங் கூறப்படும்.

வினா:—விகடிகைப்பின் சுவாசமென்றவை ஏற்பட்டன எவ்வகை எனில்?

விடை:—சமரசசதானந்த யோகிகளின் சுவாசம் மூன்று கொண்டவையே ஓர் விகடிகை, விகடிகை 60-கொண்டவையே ஓர்கடிகை, கடிகை 60-கொண்டவையே ஓர் தினமென்றுங் கூறப்படும். இக்காலத்துள் வழங்குங் கடிகாரயந்திரப்பிரகாரம் கடிகை 2-ம் விகடிகை 30-கொண்டவையே ஒருமணி நேரமென்றும், 2-விகடிகையும் ஓர் சுவாசமும், ஓர் நிசுவாசமும், 30-அணுக்கொண்டவையே ஓர் கடிகாரயந்திரத்தின் ஓர்நிமிஷம் மினிட் என்றும் 9-அணுக்கொண்டவையே ஓர் ஸகிண்டென்றும் கூறப்பட்டிருக்கின்றது.

வினா:—ஓர் பிரஜையானது வைகாசிமாதம் 22-ந் தேதி பகல் நாழிகை 60-க்குச் சனனமானால் அந்த பிரஜையின் ஜென்மலக்கினத்தை எவ்விதங்காணல்வேண்டும்.

விடை:—முற்கூறிய மாலை இராசியின்படி வைகாசி மாதமாகையால் விருஷப விராசியை ஆதியாக வெடுத்து அதற்குச் சொன்ன நாழிகை-4, விநாடி-45, அம்மாத மொத்ததேதி 30-தாகயிருந்தால் அந்த முப்பதுபேருக்கு நாழிகை நாலேமுக்காலை விநாடிப்படுத்த-285, இந்த இருநூற்றி எண்பத்தைந்தை ஈய வந்தவை தேதி ஒண்ணிற்கு விநாடி-9$\frac{1}{2}$, இஃதை ஜென்ன தேதியாகிய முன்தேதி 21-ல் பெருக்க 199$\frac{1}{2}$-க்கு உதாரணமானபடியால் 22-வது தேதியில் அரை தேதிக்குள்ள வகையைக் கூட்ட நாலேமுக்கா விநாடிமுன் இருபத்தோரு தேதிக்குவந்த 199$\frac{1}{2}$-யுடன் சேர்க்க 204$\frac{1}{4}$-விநாடிகை இதை கடிகையாக்க நாழிகை-3, விநாடிகை 20$\frac{1}{4}$-இது விருஷப விராசியிற் செல்லென்றறிந்தும் மொத்தநாழி-4, விநாடிகை 45-ல் பாக்கி நாழிகை-1, விநாடி 20$\frac{3}{4}$-ஆக வைத்தும் அதுமுதல் மிதுனம்-5$\frac{1}{4}$, கடகம்-5$\frac{1}{2}$,



சிம்பம்-5$\frac{1}{4}$, கன்னி-5, துலாம் கடிகை-0 இவ்வாறு இராசியின் கடிகையின் சங்கைகளை ஒன்றுசேர்க்க நாழிகை-27, விநாடி 20$\frac{3}{4}$-க்குமேல் விருட்சிக லக்கினம் நாழிகை 5$\frac{1}{4}$-லுடன் சேர்க்க கடிகை 32-விகடிகை 35$\frac{3}{4}$-ஆகையால் ஜாதகஜனன நாழிகை 30-என்று முன் விபரித்தப்பிரகாரம் உள்ளநாழிகைக்குச் ஜென்மலக்கினம் விருட்சிகம் எனக் காணல்வேண்டும். இவ்விதமே அவரவரும் ஜெனனமான விகடிகைகளை நிதானித்து லக்கினமறிய வேண்டும்.

வினா:—இலக்னஸ்புடம் ஓரிலக்கனம் விட்டு மற்றொரு இலக்கினமேறுங் காலத்தில் ஒரு பிரஜை ஜெனிக்கின் அது முன்லக்கினமாயின் இலக்கினமாவென்று தெரிவதற்கு எவ்வித ஆதாரமுண்டு?

விடை:—ஒருபிரஜை ஜெனித்த நாழிகையை அறிந்து அந்த நாழிகையை நாலால் பெருக்கி அந்நாழிகைக்கு வரும் லக்கினத்தை மேஷமுதலெண்ணி முன் பெருக்கிவைத்த தொகையுடன் ஐந்து கூட்டியும் ஸ்திரமானால் பத்து கூட்டியும் உபையமானால் பதினைந்து இவ்விதங்கூட்டிய மூவிதத்தொகைகளையும் ஒன்றுசேர்த்து 27-ல் கழித்த சேஷத்தை அசுபதிமுதலாக வெண்ணினால் எந்த நட்சத்திரம் வருகிறதோ அதற் கிணையான திருகோண நட்சத்திரமாகிய ஜென்மானு ஜென்ம நட்சத்திரங்களிலொன்றில் ஜாதகன் ஜெனனமாகியிருக்கவேண்டும். அவ்விதம் வராவிடில் அந்த நாழிகையும் ஜெனனலக்கினமும் வித்தியாசமென்றும் இந்தக் கணக்குப்படி எந்த நாழிகையு மிலக்கினமுமேற்படப்படுகிறதோ அதே லக்கினத்தையும் கடிகைகளையும் நிச்சயிக்கவேண்டும்.

வினா—திருகோண நட்சத்திர மென்பதும் ஜென்மானு ஜென்மமும் ஒருபிரஜை ஜெனித்த காலத்தின் திசைகளையும் எவ்விதங் காண்கிறது?

விடை—ஒருபிரஜை ஜெனித்த நட்சத்திரம் ஒருவனுக்கு ஜெனன காலத்தின் திசை சந்திரனென்றால் அடுத்த திசை செவ்வாய்-இராகு-குரு - சனி - புதன் - கேது - சுக்கிரன்-சூரியன் என்று வரிசையாகக் கொள்ளவேண்டும். அசுபதி-மகம்-மூலம் இவையானால் கேதுவின் திசை, பரணி - பூரம் - பூராடமானால் சுக்கிரன் திசை, கார்த்திகை-உத்திரம்-உத்திராடமானால் சூரியன் திசை, உரோகணி-அஸ்தம்-திருவோணமானால் சந்திரன்திசை, மிருகசீரிடம் - சித்திரை - அவிட்டமானால் செவ்வாயின் திசை, திருவாதிரை - சோதி - சதயமானால் இராகுவின் திசை, புனர்பூசம்-விசாகம்-பூரட்டாதியானால் குருவின் திசை, பூசம்-அனுஷம்-உத்திரட்டாதியானால் சனியின்திசை, ஆயிலியம் கேட்டை, ரேவதியானால் புதன்திசையென்று பெயராகும்.

வினா—இவ்வொன்பது திசைகளில் ஒவ்வொரு கிரகத்திற்கும் திசை வருஷங்களின் சங்கியை என்ன?

| | | |
|---|---|---|
| விடை—சூரியனுக்கு | திசை வருஷம் | 6 |
| சந்திரனுக்கு | திசை வருஷம் | 10 |
| செவ்வாய்க்கு | திசை வருஷம் | 7 |
| இராகுவிற்கு | திசை வருஷம் | 18 |
| குருவிற்கு | திசை வருஷம் | 16 |
| சனிக்கு | திசை வருஷம் | 19 |
| புதனுக்கு | திசை வருஷம் | 17 |
| கேதுவினிற்கு | திசை வருஷம் | 7 |
| சுக்கிரனுக்கு | திசை வருஷம் | 20 |

ஆக வருஷம்-120, இவையாவது தினமாகியநாள்-360 கொண்டது வருஷம் ஒன்றெனப் பெயராகும். அவ்விதங்கொண்ட வருஷம்-120, மகாதிசை ஒன்பதுமேயாம்.

வினா—ஓர்பிரஜை ஜெனனமான காலத்தில் திசையின் கெற்ப சிஷ்டமென்பது என்ன?

விடை—ஜென்ம நட்சத்திரத்தை அறிந்து அவ்வித நட்சத்திரம் ஜெனனமான தேதிக்கு முன் தேதியினும் அல்லது மறுதேதியினும் எவ்வளவு கடிகை இருக்கின்றதென்றும் அன்றையத் தேதியில் அந்த நட்சத்திர நாழிகையையும் ஒன்று சேர்த்து துகையையே ஆதியந்தமென்னும் பெயராகும். அவ்வித ஆதியந்தமென்னும் நாழிகையின் பெயருக்கு அந்த நட்சத்திரத்திற்கிசைந்த திசையின் வருஷத்தை மாதமாக்கி, அவ்வாதியந்த நாழிகையின் பெயருக்குக் கொடுத்து நாழிகை ஒன்றுக்கு இவ்வளவென்றறிந்து ஜெனனகாலத்திற்குச் செல்லான நாழிகை எவ்வளவு வருஷ மாதங்கள் முதலியதையறிந்து அதை கெற்ப செல்லாகவைத்து அத்திசையின் மொத்த வருஷத்தில் தள்ளிக் கண்ட மிச்சமான வருஷ மாதாமாத முதலியதை அறிவதே திசையாகும். அதின்மேல் முன்கூறிய கிரமப்படிக்கு உள்ள திசைகளையும் அதற்குச் சொல்லியிருக்கும் வருஷங்களையும் காணுவதும் அதற்கிசைந்த வயசுகளையும் காணுவதே திசையாகும்.

வினா—புத்தியென்றும் அந்தரமென்றும் சொல்வது என்ன?

விடை—ஒவ்வொரு திசைகளுக்கும் ஒன்பது புத்தியென்றும் புத்தி ஒன்றுக்கு ஒன்பது அந்திரமென்றும், அந்திரமொன்றுக்கு ஒன்பது சூக்ஷமாந்திரமென்றும் அறிக.

வினா—இவைகளின் காலங்கள் காணுவதெவ்விதம்?



விடை—எந்த திசைக்கு எந்த புத்திவேண்டுமோ அவ்வித புத்தி பார்க்கவேண்டிய கிரகதிசையின் வருஷத்தையும் எத்திசை நாதனோ அந்த கிரகதிசையின் வருஷத்துக்கும் பெருக்கி பத்தால் வகுக்கவந்த ஈவு மாதமென்றும், மிச்சத்தை மூன்றாற் பெருக்க நாளென்றும், கண்டவை புத்தியென்பதாகும். அந்த புத்திக்குள்ள மாதமோ அல்லது வருஷமோ கண்டு வருஷமானல் வருஷம் 1-க்கு நாள் 3-ஆகவும், மாதம் 1-க்கு நாள் கால் ஆகவும், நாள் 1-க்கு நாழிகை $\frac{1}{2}$-ஆகவும், நாழிகை 1-க்கு விநாடி $\frac{1}{2}$-ஆகவும் கண்டு துருவமாக ஏற்படுத்திக்கொண்டு அத்துகையை எந்த புத்திக்குள் அந்தரம் சூக்ஷமம் வேண்டுமோ அத்திசை வருஷம் எண்ணாற் பெருக்கியதை நாளாகவும் நாழிகையை விநாடியாக வைத்துக் காணுவதே அந்தரம் சூக்ஷமம் எனப் பெயராகும்.

இவ்வித மகாதிசை புத்திகளையும் லக்கினத்தையும் ஸ்திரஞ் செய்தபின் அவ்வித பிரஜை ஜெனனமானதிற்கு முன்தேதிக்கு முன்னும் ஜெனன நாழிகைக்கு முன்னுமுள்ள கிரகபாதங்களை கணிதத் துருவமுள்ள பஞ்சாங்கத்திற் கண்டு போட்டுக் கொள்ளவேண்டியது.

வினா:—இராசிமண்டலம் அம்சமண்டலம் இவைகளிற் கிரகம் அடைக்கும் விதங்களின் விபரமாவதென்ன?

விடை:—அசுபதிமுதல் இரேவதிவரையுள்ள நட்சத்திரம் 27-க்கும் நட்சத்திரம் ஒன்றுக்குப் பாதம் நான்கென்றும் அவ்விதபாதம் ஒன்பதுகொண்டது ஒருவிராசி யென்றும், அசுபதி நட்சத்திர முதற்கொண்டு $2\frac{1}{4}$-ல் நட்சத்திரமாகிய பாதம் ஒன்பது கொண்டது மேஷவிராசியென்றும், அவ்விதமே அசுபதிமுதல் நட்சத்திரம் 27-க்கும், மேஷமுதலான இராசி பனிரெண்டின்பேருக்கு நட்சத்திரம் 27-களை அசுபதி முதலாகக் கொடுத்துக்கண்டதே வந்தாசியில் அந்தந்த நட்சத்திரத்திற்கேற்ற இராசியிலிருக்குங் கிரகங்களைக் காணவேண்டியது இவ்விதம் போடுவதே இராசி சக்கரமாகும்.

ஒவ்வொரு கிரகத்தையும் எந்த நட்சத்திரத்தின் எத்தனைவது பாதத்திலிருக்கிறதென்று அறிந்து அசுபதி நட்சத்திர முதற்பாத முதல் அவ்வித ஜெனனகால கிரகமிருக்கும் நட்சத்திர பாதம்வரையிலும் உள்ள நட்சத்திரங்களுடைய பாதங்களை ஒன்றுபடுத்தி பனிரெண்டில் கழித்த சேஷம் முதல் யெண்ணிக்கண்ட இராசியில் அந்தந்த கிரகங்களையும் போடுவதே நவாம்ச சக்கரமாகும். நவாம்ச லக்கினங் காணவேண்டியவிதி என்னவெனில்? ஒருவன் ஜெனித்த நாழிகைக்கு வரும் இலக்கினத்திலிருத்தனை நாழிகை விநாடி செல்லென

றறிந்து, அந்த ஜென்மலக்கின மொத்த நாழிகையான இலங்கை இராசிமான சங்கையென்ற நாழிகையை ஒன்பது பங்காக்கி அந்த செல்லுநாழிகை எத்தனுவது பங்காகிறதென்றறிந்து அந்த பங்கை மேஷம்-சிம்பம்-தனுசு இந்த மூன்று இலக்கினத்தில் எந்த விராசியி லேறினும் ஜெனனமானவனுக்கு மேஷமுதல் அத்தனையாவது பங்கு வரை யெண்ணிக்கண்ட இராசியே நவாம்ச லக்கினமென்றும், விருஷ பம்-கன்னி-மகரம் இதிற் கெதிர்செனன மானவர்களுக்கும் மகர முதற்கண்ட இராசியே நவாம்ச லக்கினமென்றும், மிதுனம்-துலாம்-கும்பம் இதிலெதிற் ஜெனனமாகினும் துலா முதற்கொண்டும், கடகம்-விருட்சிகம்-மீனம் இதுகளிலெதிற் ஜெனனமானவர்களுக்கும், கடக முதற்கொண்டும் எண்ணி கண்டலக்கினமே நவாம்ச லக்கின மாகும்.

வினு:—சுபபாப க்ஷேத்திரமெவை?

விடை:—உச்சம் சோக்ஷேத்திரம் மித்துருவென்றும், நட்புஸ்தானங் களுமே சுபஸ்தானயிடங்களும் ராசிகளுமாகும். பகை நீசங்க ளும் 6-8-12-3-2-11 இவ்விடங்களும் இராசிகளுமே பாப க்ஷேத்திரமாகும்.

வினுவிடை முற்றிற்று.



## நாமநட்சத்திர எழுத்துகள் அறியும் வகை

| 1 பாதம் | 2 பாதம் | 3 பாதம் | 4 பாதம் | துடரெழுத்துகள் | நட்சத்திரங் கள் |
|---|---|---|---|---|---|
| சு | சே | சோ | ல | சூ-செ-சை | அசுவனி |
| லி | லு | லே | லோ | சொ-சோ-சௌ | பரணி |
| ஆ | இ | உ | எ | அ-ஆ-இ-ஈ | கார்த்திகை |
| ஒ | வா | வீ | வு | வ-வா-வி-வீ | ரோகணி |
| வே | வோ | கா | கி | வெ-வே-வை-வௌ | மிருகசீரிடம் |
| கு | க்க | ஞ | ச | கூ | திருவாதிரை |
| கே | கோ | ஹ | ஹி | கெ-கே-கை | புனர்பூசம் |
| கு | ஹே | ஹோ | ட | கொ-கோ-கௌ | பூசம் |
| டீ | டு | டே | டோ | மெ-மே-மை | ஆயிலியம் |
| மா | மீ | மூ | மே | ம-மி-மு | மகம் |
| மோ | டா | டி | டு | மொ-மோ-மௌ | பூரம் |
| டே | டோ | பா | பீ | ப-பி | உத்திரம் |
| பூ | ஷ | நா | ட்டா | பு | அஸ்தம் |
| பே | போ | ரா | ரி | பெ-பை-பொ | சித்திரை |
| ரு | ரே | சோ | த | தா [பௌ | சோதி |
| தி | து | தெ | தோ | தி-தூ-தே-தை | விசாகம் |
| நா | நீ | நூ | நே | ந-நி-நு | அனுஷம் |
| நோ | யா | யி | யூ | நெ-நே-நை | கேட்டை |
| எ | யோ | பா | பீ | யு-யூ | மூலம் |
| பூ | தா | பா | ட | உ-ஊ-எ-ஐ | பூராடம் |
| பே | போ | ஜா | ஜீ | ஒ-ஓ-ஔ | உத்திராடம் |
| ஜா | ஜே | ஜோ | க | கா-கி-கீ | திருவோணம் |
| க | கீ | கு | கே | ஞ-ஞா-ஞௌ | அவிட்டம் |
| சோ | ஸா | ஸீ | ஸு | தே-தோ-தௌ | சதையம் |
| சே | சோ | தோ | தீ | நொ-நோ-நௌ | பூரட்டாதி |
| தா | ஸ | த்தா | தி | ய-க | உத்திரட்டா |
| தே | தோ | க்ஷ | க்ஷி | ஸா-ஸி | ரேவதி [தி |

## நாமநட்சத்திர எழுத்தைக்கொண்டு இராசி அறியும் வகை

அகவல்

அசுவனிபரணி கார்த்திகைமுதற்கால்
வசமுறும்மேட விராசியேயாகும்
கார்த்திகைமுக்கா லுடன்ரோகணியும்
பார்த்திடுமிருகசீர மின்னறைவிடை
பின்னறைமிருக சீரமாதிரையும்
மன்னியபுனர்த மின்முக்கால்யாழ்
புனர்பூசம்பின் காலுடன்பூசம்
கனமாயிலியங் கடகமதாகும்
மகமும்பூர முத்திரமுதற்கால்
ஜெகம்புகழிராசி சிங்கமதாகும்
உத்திரபின்முக் காலுடன்சதயம்
சித்திரைமின்னறைச் சேடியேயாகும்
பேசியபின்னறை சித்திரைசோதி
நேசவிசாகமுன் முக்கால்நிறையே
நாட்டமாம்பின்கால் விசாகமோடனுஷம்
கேட்டையதாகக் காண்விருச்சிகமே
மூலம்பூராட முத்திராடமுதற்கால்
தாலம்புகழும் தனுசுவேயாகும்
உத்திராடம்பின்முக் காலொடுஓணம்
பத்தியமுன்னறை யவிட்டமுமகரம்
அவிட்டம்பின்னறை யோடுமேசதையம்
புவிட்டாமுன்முக்கால் பூரட்டாதிருடம்
முத்தியபூரட் டாதியின்காலொடு
உத்திரட்டாதி ரேவதிமீனமாம்.

## 12-பாவக விபரங்கள் அறியும்வகை

### 1-ஆம் பாவம் விருத்தம்

மன்னியமுதலாம்பாவ மறிகிடும்பலனைக்கேளீர்
உன்னியலக்கனமோடு முறையமுங்கீர்த்திதேகம்
பன்னியநிறஞ்சொரூபம் பார்நிலைவயதுசென்னி
பொன்னொடுசுபசந்தோஷம் பெருகிடவயதுகூறே.



இ-ள். முதலாம் பாவகத்தைக் கொண்டு சொல்வது இலக்கனம் உதையம், கீர்த்தி, தேகம், நிறம், சொரூபம், நிறை, வயது, தலை, பொன், சுபம், சந்தோஷம், வயது இவை முதலானதும் சொல்ல வேண்டும் எ-று. 1

### 2-ஆம் பாவம்

கூறிடுமிரண்டாம்பாவம் குறிப்புரைப்பலனைக்கேளீர்
மீறிடும்வித்தைநேத்திரம் வாக்குடன்தனங்குடும்பம்
நேரிடும்மேன்மைசெம்பொன் நிலமொடுசெல்வம்பூமி
கோரிடும்பொன்னுத்தேசங் கொண்டுரத்தினமுஞ்சொல்லே.

இ-ள். இரண்டாம் பாவகத்தைக் கொண்டு சொல்வது வித்தை, நேத்திரம், வாக்கு, தனம், குடும்பம், மேன்மை, செம்பொன், நிலம், செல்வம், பூமி, பொன், உத்தேசம், நவரத்தினம் இவை முதலானதும் சொல்லவேண்டும் எ-று. 2

### 3-ஆம் பாவம்

சொல்லவேமூன்றும்பாவச் சோதனைப்பலனைக்கேளீர்
வெல்லவேவெற்றிபோகம் வீரியஞ்சகோதரங்கள்
புல்லவேகாதுநோயும் போஜனப்பாத்திரமோடு
கொல்லவேயடிமைசோலை கனகபூஷணங்களென்னே.

இ-ள். மூன்றும் பாவகத்தைக் கொண்டு சொல்வது வெற்றி போகம், வீரியம், சகோதரம், காதுநோய், போஜனபாத்திரம், அடிமை, சோலை, கன்னபூடணதிகள் இவை முதலானதும் சொல்ல வேண்டும் எ-று. 3

### 4-ஆம் பாவம்

என்னவேநான்காம்பாவ மியலுரும்பலனைப்பாரீர்
உன்னியவாகனங்க ளுகந்திடும்பந்துபூமி
மன்னியசுகமுங்கல்வி மனையொடுநீர்வியாபாரம்
பன்னியதாயினோடு பால்பசுகன்றும்விள்ளே.

இ-ள். நான்காமிடத்தைக் கொண்டு சொல்வது வாகனம், பந்துக்கள், பூமி, சுகம், கல்வி, வீடு, நீர், வியாபாரம், தாய், பால், பசு, கன்று இவை முதலானதுஞ் சொல்லவேண்டும் எ-று. 4

### 5-ஆம் பாவம்

விள்ளவேயைந்தாம்பாவம் விளங்கியபலன்யாதென்னில்
உள்ளதோருரம்புதல்வர் உற்றிடும்மாமன்தந்தை
கொள்ளவேபூர்வபுண்யங் குலவியகர்ப்பமந்திரம்
தெள்ளியவித்தைபுத்தி தக்கநூல்வாணனுகும்.

இ-ள். ஐந்தாம்பாவகத்தைக்கொண்டு சொல்வது உரம், புதல்வர், மாமன், பிதா, பூர்வபுண்ணியம், கர்ப்பம், மந்திரம், வித்தை, புத்தி, மறையோதல், வாணன் இவை முதலானதுஞ் சொல்லவேண்டும் எ-று. 5

## 6-ஆம் பாவம்

ஆகவேயாறும்பாவ மானதோர்பலனைக்கேண்மின்
சோகமாம்சத்துருபீடை சோரமுஞ்சிறையுந்துன்பம்
வேகவாயுதங்களாலும் விரணமாந்திரேகவாதை
ஏகமாங்கள்ளராலு மேந்திழைபாம்பால்தீங்கே.

இ-ள். ஆறும்பாவகத்தைக் கொண்டுசொல்வது சத்துருக்களால் பீடை, சோரம், சிறை, துன்பம், ஆயுதங்கள், விரணம், சிரரோக வாதை, கள்ளர்களாலும், ஸ்திரீகளாலும், பாம்பினாலும், தீங்கு இவை முதலானதுங் கண்டுசொல்லவேண்டும் எ-று. 6

## 7-ஆம் பாவம்

தீங்கெனுமேழாம்பாவந் தனக்குளப்பலனைக்கேளாய்
பாங்குளகளத்திரங்காமம் பண்புரும்விவாகனுளும்
ஓங்கியரெண்டாந்தாரம் உறவினர்சேர்க்கையின்பம்
தாங்கியவரசர்நன்மை தழைத்திடுங்குமரர்பொலிவு.

இ-ள். ஏழாம்பாவகத்தைக் கொண்டு சொல்வது களத்திரம், காமம், விவாகமாகும் நாள், இரண்டாவது களத்திரம், பந்துக்கள் சேர்க்கை, இன்பம், அரசர்களின் சன்மானம், குமரர் பெருமை இவை முதலானதும் சொல்லவேண்டும் எ-று. 7

## 8-ஆம் பாவம்

பொலிவெனுமெட்டாம்பாவம் பொருந்தியபலனைக்காண்பாய்
நிலையெனுமாயுள்தீர்க்க வியாதியோடபமிருத்து
தொலையெனும்படையால்வாதை தோணிமேலேறிவீழ்தல்
கொலையெனுமரணங்கிலேசங் கொடுந்துயர்பகையுமாமே.

இ-ள். எட்டாம்பாவகத்தைக் கொண்டு சொல்வது ஆயுள், தீர்க்கவியாதி, அபமிருத்தியு, படையால்வாதை, தோணியின்மேல் யேறிவிழுகுதல், மரணம், கிலேசம், துயர், பகை, இவை முதலானதும் சொல்லவேண்டும் எ-று. 8

## 9-ஆம் பாவம்

ஆமெனுமொன்பதாம்பாவ மருளியபலனைக்கேழ்ப்பாய்
தாமெனும்பிதாதருமம் தடமொடுகுருவும்பாக்கியம்
நேமமாந்தெய்வபக்தி நிரைதிருப்பணிகள்செய்தல்
சேமமாம்விவசாயங்கள் சேயொடுசெல்வங்காணே.



இ-ள். ஒன்பதாம்பாவகத்தைக் கொண்டு சொல்வது பிதா, தருமம், குளம், குரு, பாக்கியம், தெய்வபக்தி, திருப்பணி செய்குதல், விவசாயம், மகன், செல்வம் இவை முதலானதும் சொல்லவேண்டும் எ-று. 9

## 10-ஆம் பாவம்

காணவேபத்தாம்பாவம் காட்டியபலன்கேள்நேராய்
பூணவேபுண்ணியங்கள் புதுநகர்செய்தலாள்கை
தோணவேகருமமீவு சீவனந்தேவபத்தி
நாணவேயிரக்கமாடை நற்பிதாமனைபெருதல்.

இ-ள். பத்தாம்பாவகத்தைக் கொண்டு சொல்வது புண்ணியங்கள், புதுப்பட்டணம் உண்டாக்கல், உலகையாள்கை, கருமம், ஈவு சீவனம், தேவபக்தி, இரக்கம், ஆடை, பிதாவின் மனை பெருகுதல் இவை முதலானதுஞ் சொல்லவேண்டும் எ-று. 10

## 11-ஆம் பாவம்

பெருகவேபதினொன்றென்னும் பாவகபலனைப்பாரீர்
மருகவேமூத்தோன்வித்தை மனைவிபொன்லாபம்வஸ்திரம்
பருகவேயடிமையாள்கள் பயிர்த்தொழில்பரியோடானை
தருகவேசிவிகைபுத்தி சஞ்சலம்நிவர்த்திப்பேசே.

இ-ள். பதினொரும்பாவகத்தைக் கொண்டு சொல்வது மூத்தோன், வித்தை, மனைவி, பொன், இலாபம், வஸ்திரம், அடிமையாள்கள், பயிர்த்தொழில், குதிரை, யானை, பல்லக்கு, புத்தி, சஞ்சல நிவர்த்தி இவைமுதலானதும் சொல்லவேண்டும் எ-று. 11

## 12-ஆம் பாவம்

பேசவேபனிரெண்டென்னும் பாவகவிபரங்கேளீர்
வீசவேகன்மந்தானம் விகாதமும்விரையம்மோக்ஷம்
கூசவேதனவிரையம் கோரியதொழில்கலகம்
ஆகவேயனித்தியனேயும் யயலூரில்தொழிலும்பேராம்.

இ-ள். பனிரெண்டாம் பாவகத்தைக் கொண்டு சொல்வது கன்மம், தானம், விகாதம், விரையம், மோக்ஷம், தனவிரையம், தொழில் கலகம், அனித்திய காலனேய், அன்னியதேசத்தில் உத்தியோகம் இவைமுதலானதும் சொல்லவேண்டும் எ-று. 12

பாவகவிபரம் முற்றிற்று.

## காரகக்கிரகங்கள் அறியும்வகை

### வேறு விருத்தம்

சாற்றியபிதுர்காரகன்பகற்கிரவி சனிபிதுர்க்காரகனிசிக்குப்
போற்றியவன்னைகாரகன் பகற்குப்புகர்னிசிக்கிந்துகாரகனும்
ஏற்றமாந்துணைவர்காரகன்செவ்வா யெழிற்சுதகாரகனரசன்
ஆற்றியவாயுள்காரகன் சனியில்லாள்தனக்கேப்புகராமே.

இ-ள். பிதுர்க்காரகன் பகலில் சூரியனாகும். சனி பிதுர்க்காரகன் இரவிலாகும், மாதுர்க்காரகன் பகலில் சுக்கிரன், இரவில் சந்திரன், சகோதரக்காரகன் அங்காரகன், புத்திரக்காரகன் வியாழன், ஆயுள் காரகன் சனி, களத்திரக்காரகன் சுக்கிரன் எ-று. 13

ஆனதோர்சரீரகாரகன் வெய்யோனங்கனைவாகனவகைக்கும்
தானுமேபிருகுகாரகன் கர்மத்தொழில்காரகனரசன்
கானமும்வித்தியாகாரகன்புந்தி கனதனக்காரகன்வேந்தன் [பே.
கேனமாமொழியாயிலக்கினுதியைப்போற் றெரிந்துகாரகர்பலன்செப்

இ-ள். சரீரக்காரகன்-சூரியன், வாகனக்காரகன்-சுக்கிரன், கர்ம காரகன்-சூரியன், வித்தியாக்காரகன்-புதன், தளகாரகன்-வியாழன், ஜென்மலக்கின முதல் பனிரெண்டு இராசிகளிலும் நிற்கும் கிரகங் களைக் கொண்டு காரகப்பலன் சொல்ல வேண்டும் எ-று. 14

### கோசாரத்தின் பார்வை காலம்

ஆதித்தன் தனக்குநாள் பார்வையைந்து
ஆகுமேபுந்திக்கும் புகர்க்குமேழாம்
ஓதித்தசெவ்வாய்க்கு நாளேழெட்டாம்
உத்தமராம் வேந்தர்க்குமாதம்ரெண்டாம்
காதித்தகரும்பாம்பு செம்பாம்பிற்கும்
கண்டிடுவாய்தனித்தனியே மாதம்மூன்றும்
சாதித்தசனிதனக்கே மாதமாறும்
சந்திரனுக்கே நாழிமூன்றும்பாரே.

இ-ள். சூரியனுக்கு நாள்-5, புதனுக்கும் சுக்கிரனுக்கும் தனித் தனி நாள்-7, செவ்வாய்க்கு நாள்-15, குருவினுக்கு மாதம்-2, இராகு கேதுகளுக்குத் தனித்தனி மாதம்-3, சனிக்கு மாதம்-6, சந்திர னுக்கு நாழிகை-3 ஆகும் எ-று. 15

---



## கோசார பலாபலன் அறியும்வகை

### நொண்டிச்சிந்து

ஆதித்தன்நிற்குங்கெடுதி இடந்தன்னை
அறைந்திடுவேன்பலன் தெரிந்திடுவாய்
சோதித்தஜென்மம்நான்கும் ஐந்தேழ்
சொல்லுமொருயெட்டுவொன்பான் பன்னிரெண்டும்
பேதித்துநின்றுவிடிலோ பொல்லாத
பீடைமிகுங்கேடுடனே யலைச்சலுண்டாம்
நீதித்தவிரோதம்பெருகும் தன்னுடைய
நிலையதுதான் தவரி நிந்தைவிளைக்கும்
பாதிக்குங்கண்வலியும் தலைவலிப்
பற்றிவாட்டுமாம்வீட்டை விட்டுவோட்டுமாம்
போதித்தமொழிபிசகும் பிழைப்பினும்
பொல்லாகலகமது சொல்லாலுருகும்
வாதிக்கும்பந்துவாலுங் கூடவின்னம்
மடுத்தவிடம்பகை தொடுத்திடுமாம்
சோதித்தயிவைகளெல்லாம் இராசியிற்
ஸ்தானவலிவறிந்து சாற்றிடுவீர்—தன்ன.

### சந்திரன்

சந்திரன்நிற்குங்கெடுதி இடந்தன்னை
சாற்றுகிறேன்மனம் பூர்த்திகொள்வாய் 2,4,6,8,12
விந்தையாமிரண்டுநான்கு மாறுடன்
விளங்குமெட்டு பனிரெண்டினில் நின்றால்
நிந்தையதுதான்விளையும் கஷ்டமுடன்
நீடியப்பெண்டீர்மக்கள் வாடிநலியும்
அந்தமதுதான்குறையும் பொல்லாத
அபகேடாகவேதுக்கம் தான்பெருகும்
பந்தமாம்பலவிதத்தும் நஷ்டம்
பணமதுதான்விரைய மிகவாகும்
மந்திரவாதியென்போன் வாய்தன்னையும்
மடக்கியதுபோலவே யொடுக்கிவைக்கும்
சிந்தையதுதான்கலங்கும் புத்தி
சிதறிவிடும்அங்கம் பதறிவிடும்
வந்திடுமிந்தபலனை இராசியின்
வலிகண்டுரைத்திடுவீர் சலியாமலே—தன்ன.

## செவ்வாய்

செவ்வாயின்கெடுதிஇடம் பார்க்கவே
செப்புகிறேன்கேளுமே மொப்புரவே
ஒவ்வியவொன்றுரெண்டு நான்குடன்
உற்றயெட்டுபத்துபனி ரெண்டினில்நின்றால்
அவ்வியமாம்பலவிதத்துங் கேடுரும்
அறிவையெனும்பெண்டீர்க் காகாதுன்பமாம்
சவ்வியமாய்ப்பொருளழியும் வெப்பமுடன்
சர்ப்பங்களினால்வெகு வாதைவிளையும்
கவ்வியமாங்கத்தி கோடாறிவாளறிவாள்
பவ்வியமாமாராதுயர் நாளும்
படித்தியேபதிதனைப் போக்கிவிடுமாம்
நவ்வியப்பகைகள்நேரும் நல்லோரை
நமன்போல்விரோதமது படுத்திவைக்கும்
மௌவியயிவைகளெல்லா இராசியின்
மாவலியறிந்துபலன் தானறைகுவீர்—தன்னா.

## புதன்

புதன்வாழ்கெடுதியிடம் புகல்வேன்
புத்திநிறுத்திச்செவி யுற்றுமேகேளும்
இதமுறும்ஜென்மம்மூன்று ஐந்தேழ்
எட்டோடுவொன்பான்பனி ரெண்டில்நின்றால்
சிதடுருஞ்சிந்தைபேதம் விந்தைபுத்தி
சொல்லாதாங் கல்விநில்லாதாம்
பதமாகுந்திரவியங்கள் கைவிட்டுப்
பரிபோகுங் கள்ளர்க்கிரையாகும்
சதியால்மனைவியர்க்குப் பொல்லாச்
சாதனையாயுயிர் சேதமுண்டாம்
விதியாய்விளைந்துவிடுங் கோளாற்
வந்துயராமதுப் பெருந்துயராம்
கதியாகயிவருடனே கிரகங்கள்
கலந்திருக்கபொல்லாக் கஷ்டம்விளையும்
துதியாகயிவைகளெல்லாம் இராசியிற்
துலங்கும்வலியறிந்து பலனுரைப்பீர்—தன்னா.

## குரு

கோரியக்குருவினிடக் கெடுதியிடங்
கூறுகிறேனதைச் சீருடன்கேள்
ஏறியஜென்மமுடன் நாலோடிருக்க
மெட்டுபத்து பன்னிரெண்டினில்



காரியங்கள் கெடுதலுண்டாம்மெய்யிற்
கஷ்டமுறும்பொல்லாத துஷ்டபிணியாம்
சீரிடும்பந்துகலகம் சகோதரமும்
சினமுருமாந்துயர்க் கனமுருமாம்
மீரியமாடுமக்கள் தானியமும்
மிக்கபழுதாகிவிடுந் துக்கமுருமாம்
பாரியப்பதியைவிட்டு வெறுப்பினால்
பரதேசிப்போலலைய விதிவசமாம்
தீரமதுதானடங்கி உருமாறித்
தானேபுலம்பிடவே யூனம்விளைக்கும்
தேரியயிவைகளெல்லாம் இராசியினில்
தெளிவாய்வலியறிந்து உளவுரைப்பீர்—தன்னா.

## சுக்கிரன்

சுக்கிரன்நிற்குங் கெடுதிஇடமதை
சோதனையாய்க்கேளும் மேதினியில்
உக்கிரமாகமூன்று ஆறுடன்
உகந்துயெட்டு பனிரெண்டில்நின்றால்
மக்களுடன்மாடு பெண்டீர்அழியுமென
மருமமறிந்தமறை மேலோருரைத்தார்
துக்கமுடன்துயரமுண்டாம் மனதினில்
தோணாதுந்தோணிவெட்க நாணமுறுமாம்
சிக்கியப்பொருள்கள் யாவும்வீணாய்
சிதறிப்பதறிவெகு நாசமாகுமாம்
தக்கபடிதேடிவைத்த திரவியங்கள்
தானேகளவுபோகி யூனமுருமாம்
மிக்கபகைப்பூட்டிவைக்கும் அதினால்
மெய்யதுநடுங்கஅவ மானப்படுத்தும்
பக்குவமாயிவைகளெல்லாம் இராசியின்
பதியறிந்துபலன் விதியுரைப்பீர்—தன்னா.

## சனி

சனிநிற்குங் கெடுதியிடமதனை
சாற்றியபடியதைப் பார்த்துரைப்பாய்
சனியெனும்ஜென்மம் ரெண்டுநாலைந்துஎட்டு
காட்டியப்பத்துபனி ரெண்டினில்நின்றால்
வினையுரும்மன்னர்கேடு பொருளுடன்
விளங்கியமாடோ டாடுஞ்சேதமாம்
தனியெனும்பெண்டீர்மக்கள் சேதமொடு
தன்னையுமடுமைப்படப் பண்ணிவைக்குமாம்
மனையெனும்பதியைவிட்டே துயர்கொண்டு

மறுதேசமெங்குஞ்சுற்றி யலையச்செய்யும்
நினைவதுதடுமாறும் திரேகத்தில்
நீடியப்பிணியுமெய்து வாடிடச்செய்யும்
அனியாயப்பகைநேரும் புவிமன்ன
ரரசரினால்வெகு அலைச்சலுண்டாம்
இனிமையாயிவைகளெல்லாம் இராசியி
லிருக்கும்வலியறிந்து வுரைத்திடுவீர்—தன்னா.

### இ ரா கு

பார்த்திடுங்கெடுதியிடம் இராகுவிற்குப்
பத்தியவொன்றிரண்டு நாலுவைந்துடன்
ஏர்த்தவேழெட்டு வொன்பதாம்பத்துமீரா
இருந்திடவேதுன்ப மறிந்திடுமாம்
கோர்த்திடுமெய்யிற்பிணியு மெய்து
குற்றமாம்பாதையது முற்றிடச்செய்யும்
தீர்த்திடும்வைத்தியனைக் கொண்டு
தேடியேபார்க்கவுயி ரோடிடுமோசம்
பூர்த்திடும்மெய்மயக்கம் க்ஷணத்திலொரு
புத்திதடுமாறிவிடும் பித்தனைப்போலும்
பேர்த்தல்லோ பதியைவிட்டுஓட்டியே
பெரும்பகையாலங்கே வருந்துயரம்
கார்த்திடுஞ்சகோதரமே தனக்குங்
காலனைப்போல் சத்துருவாகிடுவர்
கீர்த்தியாயிவைகளெல்லாம் இராசியிற்
கிரகங்கள்நிற்கும் பதியறிந்துசொல்வாய்—தன்னா.

### கே து

கேதுநிற்குங் கெடுதியிடமதனை
கண்டிடுவாயொன்றிரண்டு நாலுமைந்தும்
ஓதிடுமேழுயெட்டும் ஒன்பதொடு
உற்றதோர்பத்துபனி ரெண்டினில்நின்றால்
பாதைபெருங்கேடுமுண்டாம் பொல்லாத
பழியோடுநிந்தைக்கோர்த்து பற்றிவாட்டுமாம்
தீதாகச்சிறப்பழியும் பந்துக்களுக்கே
தீண்டியேதுயரமது பூண்டுவிளைக்கும
சூதுடன்மயிர்களைந்து சுடுபட்டுச்
சொரூபங்கள்மாறியே யுடல்மெலியும்
போதவேயடையாளம் பூண்டுமே
பூமியெங்குமேதிரிந் தலையச்செய்யும்
கோதிலாக்குற்றம்நேரும் அபாயங்கள்
கொடுமையதாகவே வந்துவிளையும்



தோதகமாயிவைகளெல்லாம் இராசியில்
தோற்றும்வலியறிந்து கோர்த்துச்சொல்வீர்—தன்னா.

## கோசாரப் பலன்

பரிதியுமூன்றுமாறு பத்தோடு
பதினொன்றில்நின்றிடில் வரும்பலன்கேள்
கருதியசெல்வமுண்டாம் மெய்யிற்
கண்டபிணிபோறேனென்று தெண்டனிடுமாம்
உறுதியாமொழிபலிக்கும் புகழோடு
உள்ளத்தினில்யீதலு மிதக்கமுண்டாம்
பெருகிடசேய்தரிக்கும் எதிரியை
பெலங்கொண்டுவென்றிட நலந்தருமே—தன்னா.

### ச ந் தி ர ன்

பிறையொன்றுமூன் ஆறு ஏழுபத்தில்
பேசும்பதினொன்றுறச் சுபபலன்கேள்
நிறைபெருந்தனம்பெருகும் புவிதனில்
நிறையக்குபேரனைப்போ லாகும்புகழும்
தரைதனிலெவருமெச்ச தந்திரத்தால்
தனக்குயெதிரிகளை வணங்கச்செய்வன்
வரமுருஞ்சந்ததியோடு மருவிய
வைத்திய மந்திரவாதியாமே—தன்னா.

### செ வ் வா ய்

கோரியகுஜன்மூன்றிற் பதினொன்றில்
குற்றமறநிற்கதீர்க்க வயதுளனும்
மீறியபுத்தியுண்டாம் வதுவை
மிகப்புரிவர்புத்திர பாக்கியமுண்டாம்
ஏறியமண்மனையுமுண்டாம் பயிர்த்தொழில்
ஏகமாய்ப்பலிக்கும்வெகு கீர்த்தியுமுண்டாம்
சீறியவினைகள்தீரும் தன்னுடைய
சித்தத்தினில்கொண்டவெண்ண முற்றும்பலிக்கும்—தன்னா.

### பு த ன்

பதமுறும்புதன்ரெண்டாறு எட்டுபத்துப்
பதினொன்றில்நின்றிடில் பெருகும்புத்தி
விதமுறும்மென்மேலும் யோகமுடன்
வேணவேபுத்திரர்கள் தானுமுண்டாம்
ததிபெருஞ்சுகமுமுண்டாம் வெகுமிகு
தளமெனும்யானைபரி சேனையுமுண்டாம்
துதிபெருங்கீர்த்தியுண்டாம் நாவிற்
றுலங்கியவித்தையது விளங்கிடுமாம்—தன்னா.

### குரு

பொன்னவன்ரெண்டைந்தேழ் ஒன்பான்பத்தில்
பொறிந்திடபதினொன்றில் சுபப்பலன்கேள்
மன்னியசெல்வஞ்சீரும் கீர்த்தியு
மாபரியோடுவெண் குடையுமுண்டாம்
உன்னியதானதருமம் செய்தலுண்டு
உற்றதோர்தந்தைதாய் துணையுமுண்டு
பன்னியபோகபாக்கிய மோடுமிந்தப்
பாராளுமரசர்கள் சேவையுமுண்டாம்—தன்று.

### சுக்கிரன்

புகரோனொன்றுரெண்டுநாலு ஐந்தேழும்
பேசியவொன்பான்பத்து பதினொன்றிலும்
சுகம்பெறநிற்கில்செம்பொன் மேன்மேலும்
சேர்க்கையுண்டாந்தான தருமமுண்டாம்
இகலுரும்வித்தைபுத்தி பெருகிடும்
ஏகமாம்வெள்ளிசெம்புப் பாத்திரமுண்டாம்
அகமதுமகிழ்ச்சியுண்டாம் நலந்தரும்
அம்மாள்திருமாது கிருபையுண்டாம்—தன்று.

### சனி

காரியும்மூன்ருறு பதினொன்றில்
கதிக்கவிருக்கிற்கன பாக்கியமுண்டாம்
கூறிடுங்கீர்த்தியுண்டாம் நாளுங்
குறைவில்லாச்செல்வமொடு பல்லக்குமுண்டாம்
கோரியஇடமுமுண்டாம் பொருளோடு
குலவியயேவல்கா லாளுமுண்டாம்
தேரியபத்தியுண்டாம் வீரமொடு
திருமாதுகிருபை நாளுமுண்டாம்—தன்று.

### இராகு

கண்டிடாராகுமூன்ருறு பதினொன்றில்
களிக்கவிருக்கப்பால் பழமுமுண்டாம்
தொண்டரால்தனமுமுண்டாம் காரியம்
தொடுத்திடவேவருஞ் ஜெயங்களுண்டாம்
பண்டாகும்பாட்டியருண்டாம் புகழும்
பலருமெச்சவன்ன தானமுமுண்டாம்
கொண்டாட்டமாகவேதான பாக்கியம்
கூடிவருமாம்மிக நாடிவருமாம்—தன்று.



### கேது

பூணவேமூன்றுஆறில் பதினொன்றில்
புகழாகக்கேதுநிற்குஞ் சுகபலன்கேள்
வேணதோர்தனபாக்கியம் செழிக்கவே
விருத்தியாம்பயிர்த்தொழில் மிகப்பலிக்கும்
தோணவேபுவியெங்குங் கீர்த்தித்
துலங்கிடச்சொன்னசொல் பலித்திடுமாம்
காணவேவாழ்வுபெருகி சுகமுடன்
கந்தருள்பூண்டுமிக சிந்தைமகிழ்வார்—தன்று.

கோசாரப்பலன் முற்றிற்று.

---

## கோசாரவேதை அறியும்வகை

சந்திரலக்கினத்திற்கு சூரியன் 5-ஆமிடத்திலும், சந்திரன் 8-ஆமிடத்திலும், செவ்வாய் 7-ஆமிடத்திலும், புதன் 4-ஆமிடத்திலும், குரு 3-ஆமிடத்திலும், சுக்கிரன் 6-ஆமிடத்திலும், சனி ஜென்மத்திலும், இராகு 6-ஆமிடத்திலும், கேது 2-ஆமிடத்திலும் இவ்விதமாக நின்றிருக்கில் கோசாரத்தில் சுபபலனைக் கொடுக்கமாட்டார்கள்.

சந்திரலக்கினத்திற்கு—3-6-10-11-ல் சூரியனிருக்க முறையே 5-9-4-12-ல் கிரகமில்லாதிருந்தால் தான் நின்ற இராசிப்பலனைக் கொடுப்பான்.

1-3-6-7-10-11-ல் சந்திரனிருக்க முறையே 2-4-5-8-9-12-ல் கிரகமில்லாதிருந்தால் தான் நின்ற இராசிப்பலனைக் கொடுப்பான்.

3-6-11-ல் செவ்வாய் - சனி - இராகு இவர்களிருக்க முறையே 2-5-9-ல் கிரகமில்லாதிருக்க தாங்கள் நின்ற இராசிப்பலனைக் கொடுப்பார்கள்.

2-4-6-8-10-11-ல் புதனிருக்க முறையே 1-3-6-5-8-10-11-ல் கிரகமில்லாதிருக்க தான் நின்ற இராசிப்பலனைக் கொடுப்பான்.

2-5-7-9-11-ல் வியாழனிருக்க முறையே 8-10-12-1-3-4-6-ல் கிரகமில்லாதிருக்க தான் நின்ற இராசிப்பலனைக் கொடுப்பான்.

1-2-3-4-5-8-9-11-12-ல் சுக்கிரனிருக்க முறையே 6-7-10-ல் கிரகங்களில்லாதிருக்க தானிருந்த இராசிப்பலனைக் கொடுப்பான்.

### கோசார விபரீதவேதை அறியும்வகை

சந்திரலக்கினத்திற்கு 4-5-9-12-ல் சூரியனிருக்க முறையே 3-9-10-11-ல் வேறு கிரகமிருந்தால் சூரியன் சுபபலனைக் கொடுப்பான். இவ்வாறே மற்ற கிரகங்களுக்கும் கோசார விபரீதவேதை பார்த்துக் கொள்கவும்.

### கிரகங்கள் பலந்தரும் காலம் அறியும்வகை

சூரியனும் செவ்வாயும் முதலில் பலன் தருகுவர். குருவும் சுக்கிரனும் மத்தியில் பலன் தருகுவர். சனியும் சந்திரனும் கடைபங்கில் பலன் தருகுவர். புதன்-இராகு-கேது இவர்கள் எப்போதும் பலன் தருவார்களெனக் காண்கவும்.

## மகாதிசைக்கு போதகன் வேதகன் பாசகன் காரகன் முதலியோர் அறியும்வகை

| கிரக திசை | போதகன் | வேதகன் | பாசகன் | காரகன் |
|---|---|---|---|---|
| சூரியன் திசைக்கு | செவ்வாய் | சுக்கிரன் | சனி | குரு |
| சந்திரன் திசைக்கு | செவ்வாய் | சூரியன் | சுக்கிரன் | சனி |
| செவ்வாய் திசைக்கு | சந்திரன் | புதன் | சூரியன் | சனி |
| புதன் திசைக்கு | குரு | செவ்வாய் | சந்திரன் | சுக்கிரன் |
| குரு திசைக்கு | செவ்வாய் | சூரியன் | சனி | சந்திரன் |
| சுக்கிரன் திசைக்கு | குரு | சனி | புதன் | சூரியன் |
| சனி திசைக்கு | சந்திரன் | செவ்வாய் | சுக்கிரன் | குரு |

இராகு கேதுகளுக்கு இவை யில்லையாம்.

## போதகர் முதலியோர் பலன்

வெண்பா

கூறுபலனைக் கொடுவென்பான் போதகனும்
வேறுபண்ணி தட்டிவைப்பான் வேதகனும்—தேருபலன்
கூட்டிவைப்பான் பாசகனுங் கோலமகாதிசைக்கே
ஈட்டுபொருள் காரகனீவான்.

---



## கிரகங்களின் மகாதிசைப்பலன்

### சூரியன் திசையில் சூரியன் புத்தி

அருக்கனிலருக்கன்புத்தி யறியவேனூற்றெட்டுக்கும்
கருக்கொடுமுற்றூர்கேடு கலகமாந்தன்னூற்பீடை
வருத்தமாந்தலைநோயுண்டாம் வலக்காதில்வலியுண்டாகும்
பெருக்கநீரிழிவுமேட மாதத்தில்பீடைதானே.

இ-ள். சூரியன் மகாதிசையில சூரியன்புத்தி மாதம்-3, நாள் 18-க்கும் உற்றூர்கேடு, கலகம், பீடை, தலைநோய், வலது காதில் வலி, நீரிழிவு இவைகளெல்லாம் சித்திரை மாதத்தில் காட்டும் எ-று. 1

### சூரியன் திசையில் சந்திரன்புத்தி

இரவியிலிந்துபுத்தி யினியநூற்றெண்பதுக்கும்
அரசரால்மகிழ்ச்சிலாப மதிகவாகனமுமுண்டாம்
பாவியமணமாம்பெண்ணூற் பகையிடக்கண்ணினோயாம்
திரமெனக்கடகந்திங்கள் தீவினைகாணுந்தானே.

இ-ள். சூரியன்திசையில் சந்திரன்புத்தி மாதம் 6-க்கும் அரசர்களால் மகிழ்ச்சி, இலாபங் கிடைத்தல், வாகனாதிக ளுண்டாதல், மணங்கூடும், பெண்களினால் கலகம், பகை, இடது கண்நோய் இவையெல்லாம் ஆடிமாதத்தில் கடகவிராசியில் சந்திரன் நிற்குங் காலங்களில் உண்டாகும் எ-று. 2

### சூரியன் திசையில் செவ்வாய்புத்தி

ஆதித்தன்றன்னிற்செவ்வாய் புத்திநூற்றிருபத்தாறும்
வாதித்தவியாதிசண்டை வழக்குண்டாகும்
சாதித்தவுற்றூர்கேடு தன்பொருள்சேதமாகும்
போதித்தபொருளுஞ்சாயும் பூமியின்பலனாகாதே.

இ-ள். சூரியன்திசையில் செவ்வாய்புத்தி மாதம், நாள்-6-க்கும் வியாதியுண்டாகும், சண்டை நேரும், வழக்குண்டாகும், பீடை நேரும், உற்றூர்களுக்கு கேடு சம்பவிக்கும், பொருள்சேதமாகும், பூமியிற்பலன் உண்டாகுதல் அபலமாகும் எ-று. 3

### சூரியன் திசையில் ராகுபுத்தி

சூரியன்றனிலேராகு சுகத்தையேசொல்லவென்றால்
ஏருற்றநாள்முன்னூற்றோ டிருபத்துநான்கதாகும்
பாரியஇடிவிஷத்தாற் படைபயம்பிறந்தார்பின்னம்
வீரியமைந்தன்தேசாந் திரத்தினில்மருவுவானே.

இ-ள். சூரியன்திசையில் இராகுபுத்தி மாதம்-10 நாள் 24-க்கும் இடியினாலும், விஷத்தினாலும், படைகளாலும் பயம்நேரும், பந்துக்களுக்குப் பின்னம் நேரும், மைந்தர்களுக்கு தேச சஞ்சாரமுண்டாம் எ-று. 4

சூரியன்திசையில் குருபுத்தி

எதிருறுங்கதிரிற்பொன்னி யிருநூறேடெண்பத்தெட்டாம்
சதிபெருமுற்றூர்நட்புங் கல்வியுஞ்செல்வமுண்டாம்
மதியுறுமிராஜசேவை மக்களுஞ்சுத்தமுண்டாம்
அதிகசத்துருவைவெல்லு மதிசயமிகுதியாமே.

இ-ள். சூரியன்திசையில் குருபுத்தி மாதம் 9-நாள் 18-க்கும் உற்றூர்நேசம், போகம், செல்வம், இராஜசேவை, மக்கள், சுற்றம் இவைகளுண்டாம் சத்துருக்களை வெல்லலாகும் எ-று. 5

சூரியன்திசையில் சனிபுத்தி

மன்கதிர்சனிமுன்னூற்று நாற்பதோடிரண்டினுக்கும்
நன்பயமக்கட்பீடை மனத்துயர்பகையுமுண்டாம்
தன்பொருள்சேதமுந்தி யடுப்பதுசரீரபீடை
இன்பமேயில்லைமண்ணி லெவர்களும்பகையாவாரே.

இ-ள். சூரியன்திசையில் சனிபுத்திமாதம்-11 நாள் 12-க்கும் பயம், மக்களுக்குப் பீடை, மனத்துயரம், பகை, பொருள்சேதம், சரீரபீடை, இன்பமில்லாத வாழ்க்கை, யாவர்களுக்கும் விரோதம் எ-று. 6

சூரியன்திசையில் புதன்புத்தி

நற்கதிர்தன்னிற்புந்தி நாளதுமுன்னூற்றூறும்
வற்கமும்பகையதாகும் மனதினில்சரீரபீடை
கற்கருநாசமுந்திக் கடுப்பதுவழக்குமுண்டாம்
சொற்புகழ்மன்னனாசான் துக்கமுமிகுதியாமே.

இ-ள். சூரியன் திசையில் புதன்புத்தி மாதம்-10 நாள் 6-க்கும் பந்துவர்க்கங்கள் பகை, மனவியாகூலம், சரீரபீடை, கருநாசம், வழக்கு, அரசர் ஆசான்களால் துக்கம் இவைகளுண்டாகும் எ-று. 7

சூரியன்திசையில் கேதுபுத்தி

ஆதித்தன்றனிலேகேது வணிநூற்றிருபத்தாறும்
சோதித்தநினைவுகுன்றுந் தூரதேசத்திற்போவார்
வாதித்தவிஷமுமுண்டாம் அழகுண்டுமனைவேறாகும்
பேதித்தமுற்றூர்கேடு பிணக்குண்டுபலன்செய்யாதே.

இ-ள். சூரியன்திசையில் கேதுபுத்தி மாதம்-4 நாள் 6-க்கும் நினைவானது குன்றும், தூரதேசம் போகச்செய்யும், விஷபயமுண்



டாகும், வழக்குநேரும், குடும்பம் வெவ்வேறாகும், உற்றூர்களுக்கு கேடுவிளைக்கும் பிணக்குண்டாகும் எ-று. 8

சூரியன்திசையில் சுக்கிரபுத்தி

அருக்கனில்வெள்ளிமுன்னூற் றருபதுநாளிலாபம்
திருக்கலியாணஞ்செல்வஞ் செம்பொன்னுமிகவுமுண்டு
வருக்கமாஞ்சரீரநோயு மலர்க்கண்ணில்வியாதிதோன்றும்
உருக்கியபிணியுந்தீரு முண்மையாய்க்கருமநன்றே.

இ-ள். சூரியன் திசையில் சுக்கிரன் புத்தி வருஷம் 1-க்கும் இலாபம், கலியாணங்கூடல், செல்வ முண்டாதல், பொன் கிடைத்தல், சரீரத்தில் பிணிகாணுதல், கண்களில் நோயுண்டாதல் இவை முதலான பிணியுந்தீரும் உண்மையாக நம்பவும் எ-று. 9

சந்திரன்திசையில் சந்திரன் புத்தி

சந்திரன்தனிலேசோமன் தனக்குநாள்வருமுன்னூறும்
விந்தையாங்கன்னிசேர்வள் வீரமன்னோக்கமுண்டாம்
முந்தியகாரியங்கள் நினைத்ததுமுடியுமேனும்
இந்திரன்தனைப்போல்மைந்த ரினிதுடனுண்டாம்கண்டீர்.

இ-ள். சந்திரன்திசையில் சந்திரன்புத்தி மாதம் 10-க்கும் கன்னியர்கள் சேர்க்கை யுண்டாகும், அரசர்கள் சேவையுண்டு, நினைத்தகாரியங்கள் யாவுமுன்னதாக முடியும், அழகுடைய மைந்தர்கள் உண்டாகி வாழ்குவான் எ-று. 10

சந்திரன்திசையில் செவ்வாய் புத்தி

நண்புருமதியிற்செவ்வாய் நாளிருநூற்றுபத்தும்
பண்பிதாவழக்குச்சண்டை பயித்தியங்களவுநோயாம்
தண்பொருள்சேதங்குஷ்டந் தழற்பயம்மேடமாதம்
திண்பெருந்தளையேபூணு மேந்திழைகலகஞ்சேரும்.

இ-ள். சந்திரன் திசையில் செவ்வாய்புத்தி மாதம் 7-க்கும் தகப்பனுடைய வழக்கு, சண்டை, பயித்தியம், களவு, சரீரநோய், தன்னுடைய பொருள்சேதம், குஷ்டநோய், அக்கினி பயம், சித்திரை மாதத்தில் கால் கைகளில் விலங்குபூணல், ஸ்திரீயினால் கலகம் இவை முதலான இடறுகளை விளைக்கும் எ-று. 11

சந்திரன்திசையில் ராகு புத்தி

அம்புலிதனிலேராகு வைந்நூற்றிநாற்பதுக்குள்
செம்பொன்னுஞ்சேதமாகுஞ் செற்றலர்பயம்வியாதி
நம்பியர்துன்பம் நிஷ்டுரமிகவுமாகும்
வம்பாருமதியினாலே மதலையால்பீடையாமே.

இ-ள். சந்திரன் திசையில் இராகுபுத்தி வருஷம்-1 மாதம் 6-க்கும் பொன்சேதம், அரசர்பயம், வியாதி, துயரம், நிஷ்டூரம், வம்புண்டாகும், மைந்தர்களால் பீடையுண்டாகும் எ-று. 12

சந்திரன் திசையில் குரு புத்தி

நன்றிசேர்மதியிற்பொன்னன் நானூறேடொன்பதுக்கும்
வென்றிசேர்குதிரையானை மென்பொருள் தானியங்கள்
குன்றெனுமுலையாய்சேருங் கொற்றவனாலேயின்பம்
கன்றுநற்காலியுண்டாங் காளையைப்பெறுவர்தாமே.

இ-ள். சந்திரன் திசையில் குருபுத்தி வருஷம்-1 மாதம் 4-க்கும் குதிரை, யானை, பொருள், தான்னியம், மாதர் சேர்க்கை, அரசர்களால் இன்பம், கன்று காலி இவை முதலானது உண்டாகும். மைந்தர்களைப்பெற்று வாழ்குவான் எ-று. 13

சந்திரனில் சனி புத்தி

மதிதனில்காரிபுத்தி மாதம்பத்தொன்பதுக்கும்
பதிகெடுங்கன்றுகாலி பற்றறுமனதிற்றுக்கம்
விதியுறும்மனையாளாலே மெய்ப்பொருள்சேதமாகும்
சதிபெருகருத்தோனாலே கோள்வருஞ்சாற்றினன்கேள்.

இ-ள். சந்திரன் திசையில் சனிபுத்தி வருஷம்-1 மாதம்-7க்கும் தான் வாழும் பதியானது கெடும், கன்றுகாலிப்போகும், மனதில் துக்கமுண்டாகும், மனையாளினால் பொருள்சேதமாகும், கருத்த மனிதனால் கோள்முதலான கெடுதிநேரும் எ-று. 14

சந்திரன் திசையில் புதன் புத்தி

சந்திரன் தன்னிற்புந்தி தான்பதினேழுமாதம்
அந்தரக்கலகம்போக மல்கியமக்கட்பேறும்
சிந்தைசேரிராஜயோகஞ் சேர்ந்திடும்நினைத்ததெல்லாம்
முந்தியவித்தைலாபம் புரட்டாசி முடிவிற்றானே.

இ-ள். சந்திரன் திசையிற் புதன்புத்தி வருஷம்-1 மாதம் 5-க்கும் அந்தரங்கமான கலகம், போகம், மக்கள் பெயர், சிந்தை மகிழும்படியான இராஜயோகம், சித்தியாக சேருதல், நினைத்தவை யாவும் வித்தைலாபம் இவை முதலானதும் புரட்டாசி மாதத்தில் நடக்கும் எ-று. 15

சந்திரன் திசையில் கேது புத்தி

நிலவினிற்கேதுவேழு மாதமுநெருப்பால்பீடை
தெளிவிலாச்சரீரம்வீங்கும் சுற்றஞ்சாமிடக்கண்ணோயாம்
மலைவதுபயமுமுண்டா மதிகதண்டனையுமுண்டாம்
பலசனம்வெருப்புவந்து நாசமாம்பகையுண்டாமே.



இ-ள். சந்திரன் திசையில் கேதுபுத்தி மாதம் 7-க்கும் நெருப்பினால் பீடையுண்டாம். சரீரமானது வீங்கும். சுற்றத்தாரில் மரணம் உண்டாகும். இடதுகண்ணில் பிணிபாதையுண்டாம். அலைச்சல், பயம், தண்டனையுண்டாம். பலஜனவிரோதம். பகை இவை முதலானதுமுண்டாகும் எ-று. 16

சந்திரன் திசையில் சுக்கிரன் புத்தி

வட்டமாம்மதியில்வெள்ளி மாதங்களிருபதுக்கும்
திட்டமாம்வியாதியுண்டாஞ் சேர்ந்திடும்விசனங்காட்டும்
நட்டமாமர்த்தநாச நாளிலேவிரோதமுற்றார்
கஷ்டமாம்சத்துருவாலே காரியஞ்சேதமாமே.

இ-ள். சந்திரன் திசையில் சுக்கிரன்புத்தி வருஷம்-1 மாதம் 8-க்கும் வியாதியுண்டாகும். விசனம் செய்விக்கும். பொருள் நாசமாகும். பந்துக்கள் விரோதம். சத்துருக்களால் காரிய சேதமுண்டாகும்.

சந்திரன் திசையில் சூரியன் புத்தி

வெண்மதிதனிலேவெய்யோன் வேண்டியவாறுமாதம்
உண்மதிசுரமும்பித்த முருவமுங்குலைந்துவேறாய்
கண்மதிமயக்கந்தன்னிற் கடுவலிநோயுமுண்டாம்
பண்புருகுணத்தினாலே பலனுண்டுபலன்செய்யாதே.

இ-ள். சந்திரன் திசையில் சூரியன்புத்தி மாதம் 6-க்கும் சுரம் பித்தம் உண்டாகும். உருவமானது குலையும். கண் மறைவு காட்டும். மயக்கமுண்டாம். வலியுண்டாகும். பலன் உண்டாயினும் வலுவு செய்யாதாகும் எ-று. 18

செவ்வாய் திசையில் செவ்வாய் புத்தி

நன்றிசெய்சேயின்மாதம் நாலுநாளிருபத்தேழும்
கன்றிடுங்காலிநாய்கள் கடித்திடும்மேஷமாதம்
வென்றிசேர்மன்னரச்சம் வெப்புநோய்நீசராலே
கொன்றிடுந்தேளின்மாதத் துடன்வெட்டுக்குத்துமாமே.

இ-ள். செவ்வாய் திசையில் செவ்வாய்புத்தி மாதம்-4 நாள் 27-க்கும் காலி, நாய்கள் இவைகள் கடிக்கும். சித்திரை மாதங்களில் அரசர்கள் பயமுண்டாகும். வெப்புநோய், நீசர்களாலே கார்த்திகை மாதத்தில் குத்துவெட்டுப்படச்செய்யும் எ-று. 19

செவ்வாய் திசையில் ராகு புத்தி

செவ்வாயில்ராகோராண்டுஞ் சேர்ந்தநாள்பதினெட்டுக்கும்
ஒவ்வாதவிஷத்தாற்றேளாற் திங்களிலுற்றார்நாசம்
இவ்வாறுமேகங்கட்டிப் பிரிந்திடும்தலைவேறாகும்
கொவ்வைவாய்மானேகுட்டங் குரூரமாம்பீடையாமே.

இ-ள். செவ்வாய் திசையில் இராகுபுத்தி வருஷம்-1 நாள் 18-க்கும் தேளினாலும், விஷத்தினாலும், உற்றார்கள் நாசமாகுவர். மேகக்கட்டியுண்டாகும். பிரித்து தலம்வேறாக்கும். குஷ்ட வியாதியும், பீடையுமுண்டாகும் எ-று. 20

செவ்வாய் திசையில் குரு புத்தி

முழங்கியசேயிற்பொன்னன் மூன்னூற்றுமுப்பத்தாறும்
தழங்கிடுமர்த்தநாச மன்னரால்பகையுமுண்டு
வழங்கிடுந்திசைதொடங்கி சத்துருபலருமாவர்
அழுங்களிர்நாளிற்செல்வ மரசராலுறவுமாமே.

இ-ள். செவ்வாய் திசையிற் குருபுத்தி மாதம்-11 நாள் 6-க்கும் பொருள் நாசம். அரசர்பகை. இந்ததிசை துடங்கிய முதல் சத்துருக்கள் வெகுபேர்கள் உண்டாகும். * களிர்நாளில் செல்வமுண்டாகி வாழ்குவன் எ-று. 21

செவ்வாய் திசையில் சனி புத்தி

மருவியசேயிற்காரி மாதமீராறுமொன்றும்
கருதியநாளொன்பானுங் கலகமாம்வழக்குசண்டை
பொருபடையர்த்தநாசம் பொருந்தியமெய்யிற்குஷ்டம்
மருவியநிலையுங்கெட்டு மனதினிற்கிலேசமாமே.

இ-ள். செவ்வாய் திசையில் சனிபுத்தி வருஷம்-1 மாதம்-1 நாள் 9-க்கும் கலகம் வழக்கு சண்டை பொருள் நாசம், மெய்யிற் குஷ்டம், நிலைகுலையும் மனக்கிலேசம் இவை முதலானதும் விளைவிக்கும் எ-று.

செவ்வாய் திசையில் புதன் புத்தி

முந்தியசேயிற்புந்தி முன்னூற்றோடன்பத்தேழும்
செந்திருவரிவைசேர்வள் செல்வமும்மிகுதியாகும்
வந்திடும்நோயுந்தீரு மருவியகன்னிமாதம்
நிந்தையாமரவுதீண்டி நீடியபலன்செய்யாதே.

இ-ள். செவ்வாய் திசையில் புதன்புத்தி மாதம்-11 நாள் 27-க்கும் இலட்சுமிகடாட்சமுண்டாகும். செல்வம் மென்மேலும் பெருகும். மெய்யிற் கண்டபிணிகள் தீரும். புரட்டாசி மாதத்தில் பாம்புகடிக்கும், அதினால் துன்பம் விளைவிக்காது எ-று. 23

செவ்வாய் திசையில் கேது புத்தி

செய்யவன்றனிலேகேது சேர்ந்திடுமாதம்நான்கு
உய்யுநாளிருபத்தேழு முடன்பகைமாதராலே
மெய்யிலேவியாதிதோன்றும் விஷபயமிகுதியாகும்
தையலாள்பொருட்டுநிந்தை சத்துருமிகுதியாமே.

* களிரென்பது அத்தநாள் பெண்.



இ-ள். செவ்வாய் திசையில் கேதுபுத்தி மாதம்-4 நாள் 27-க்கும் பகை ஸ்திரீகளாலுண்டாகும். திரேகத்தில் வியாதியானது தோன்றும். விஷபயம் மிகுதியாகக்காட்டும். மாதர்களின் நிந்தையால் சத்துருக்கள் மிகுதியாகத்தோன்றும் எ-று. 24

செவ்வாய் திசையில் சுக்கிரன் புத்தி

நாடியசேயிற்சுங்கன் நானூற்றியிருபதுக்கும்
நீடியபொருளுஞ்சேரும் நேரிழைவந்துசேர்வள்
தேடியதெய்வபூசை செய்யும்மாதவர்கள்சேர்வர்
வாடியசிரங்குதேமல் வாகனம்பெருவதாமே.

இ-ள். செவ்வாய் திசையில் சுக்கிரபுத்தி வருஷம்-1 மாதம் 2-க்கும் பொருள்சேரும். ஸ்திரீசேர்க்கை யுண்டாகும். தேவபூஜை செய்யும் மாதவர்கள் சேர்க்கையுண்டாகும். சிரங்கு, தேமலுண்டாகும். வாகனாதிகள் கிடைக்கும் எ-று. 25

செவ்வாய் திசையில் சூரியன் புத்தி

அங்கியிற்பருதிதிங்க ணாலுநாளாறுமாகும்
மங்கியகுட்டங்கண்ட வியாதியாமனதிற்றுக்கம்
செங்கனற்பயமுண்டாகும் சீர்மறையவரால்துன்பம்
அங்கியமனையாளேவு மெவர்களும்பகைவராமே.

இ-ள். செவ்வாய் திசையில் சூரியபுத்தி மாதம்-4 நாள் 6-க்கும் குஷ்டரோகம், கண்டத்தில் பிணி, மனதில் துக்கம், அக்கினிபயம், வேதியராலும் அரசர்களாலுந் துன்பம், மனையாளுடன் யாவர்களும் பகையாகுவார்கள் எ-று. 26

செவ்வாய் திசையில் சந்திர புத்தி

நலமுறும்சேயிலிந்து நாடியதிங்களேழும்
பலமுறுபூமிலாபம் பலித்திடுங்கன்றுகாலி
இலகியபொன்னுமுத்து மின்பமாமாடையுண்டாம்
தலமதுபேதம்பின்பு தளர்ச்சிவந்தெய்துந்தானே.

இ-ள். செவ்வாய் திசையில் சந்திரன்புத்தி மாதம் 7-க்கும் பலனுண்டாகும். பூமிலாபங்கிடைக்கும். கன்றுகாலி விருத்தியாகும். பொன், முத்து, ஆடை இவைகள் கிடைக்கும். தலபேதமாகும். பின்பு கொஞ்சம் தளர்வுண்டாகும் எ-று. 27

இராகு திசையில் இராகு புத்தி

இராகுவில்ராகுமாத நாலெட்டுநாளீராறும்
வாகுருவேந்தநாச மனத்துயர்விஷத்தால்பீடை
ஏகமாமனையாள்துன்ப மிருந்திடும்தலபேதங்கள்
காகநேர்நிறத்தனாலே கலகமுங்கோளுண்டாமே.

இ-ள். இராகு திசையில் இராகுபுத்தி வருஷம்-2 மாத-3 நாள் 12-க்கும் குருவேந்தர் நாசமாவர். விஷத்தினால் பீடையுண்டாகும். மனையாளுக்கு துன்பமுண்டாகும். தலபேதமாகும். கருத்த மனிதனால் கலகமுங் கோளுமுண்டாகும் எ-று. 28

### இராகு திசையில் குரு புத்தி

பாரியவிராகின்மன்னன் பரிவுடன்புசிக்குந்திங்கள்
நாரியேயிருபத்தெட்டு நாளுமூவெட்டிலின்பம்
ஆரியராலேசெல்வ மரசரால்மகிழ்ச்சியுண்டாம்
காரியமெல்லாங்கூடுங் காரிழைமணமுண்டாமே.

இ-ள். இராகுதிசையில் குருபுத்தி வருஷம்-2 மாதம்-4 நாள் 24-க்கும் இன்பமுண்டாகும். ஆரியனால் செல்வமுண்டாகும். அரசர்களால் மகிழ்ச்சி உண்டாகும். சகலமான காரியங்களுங் கைகூடும். மணம் செய்விக்கும். சுகமுண்டாகும் எ-று. 29

### இராகு திசையில் சனி புத்தி

வடிவுளவிராகிற்காரி மாதமுப்பத்துநான்கும்
படிமிசைநாளாறுக்கும் பகைமனத்திடர்வியாதி
முடியாதவாக்குச்சண்டை மூண்டிடும்வாதபித்தம்
இடியுருசெங்கைசோதி சதையமுமிகுதினோயே.

இ-ள். இராகுதிசையில் சனிபுத்தி வருஷம்-2 மாதம்-10 நாள் 6-க்கும் பகை, மனக்கிலேசம், இடர்வியாதி, வாக்கு விரோதத்தால் சண்டை, வாதபித்தம் இவைகளை விளைவிக்கும். ஆனால் சோதி சதையம் இந்த நட்சத்திரங்களில் அதிக நோயுண்டாம் எ-று. 30

### இராகு திசையில் புதன் புத்தி

வந்திடுமிராகிற்புந்தி மாதமுப்பதுமேநாட்கள்
முந்தியமூவாறுக்கு முயற்சியாம்வாழ்வுண்டாகும்
சிந்தையில்தெய்வபத்தி சிலபொருள்வந்துசேரும
விந்தையாமழலைசேரு மேலுருபகையுண்டாமே.

இ-ள். இராகுதிசையில் புதன்புத்தி வருஷம்-2 மாதம்-6 நாள் 18-க்கும் நன்மையான வாழ்வுண்டாகும். மனதில் தேவபக்தியுண்டாகும். பொருள்வந்து சேரும். மெல்லியவார்த்தை யுண்டாகும். மேல் விழுந்து வலியபகை விளைவிக்கும் எ-று. 31

### இராகு திசையில் கேது புத்தி

மருவியஇராகிற்கேது மாதமீராறுமிக்க
கருதியநாள்மூவாறு கடிவிஷத்தாலேஜயம்
தருமகவுக்கும்பீடை சரீரமேவீங்கிநோயாம்
அறிவையர்தனக்குத்துன்ப மரசராலச்சமாமே.



இ-ள். இராகுதிசையில் கேதுபுத்தி வருஷம்-1 நாள் 18-க்கும் கடிக்கும்படியான விஷஜெந்துக்களால் பயம் மைந்தர்களுக்குப் பீடை. சரீரம் வீக்கமுண்டாகி அதினால் துன்பம். மனையாளுக்குந் துன்பமுண்டாகும். அரசர்களால் அலைச்சலுண்டாகும் எ-று. 32

### இராகுதிசையில் சுக்கிர புத்தி

மன்னியவிராகில்வெள்ளி மாதமோமுப்பத்தாரும்
பொன்னுடன்பொருளுஞ்சேரும் பூஷணமிகுதியுண்டாம்
மன்னியமங்கைசேர்வள் அரசரால்மகிழ்ச்சியுண்டாம்
பின்னும்வஞ்சனையாற்றுன்பம் பீடைவந்தகன்றுபோமே.

இ-ள். இராகுதிசையில் சுக்கிர புத்தி வருஷம் 3-க்கும் பொன் பொருள் சேர்க்கை யுண்டாகும். பூஷணாதிகள் வருகும். மங்கையர் சேர்க்கையுண்டு. இராஜாக்களால் மகிழ்ச்சியாகும். ஆனால் பின்பு வஞ்சனையினால் துன்பமுண்டாகும் அகன்றுவிடும் எ-று. 33

### இராகுதிசையில் சூரியன் புத்தி

இராகுவில்ரவிமாதம்பத் துடனேநாள்மூவெட்டிற்கும்
வாகுருகுலத்தார்சண்டை மன்னராற்றஞ்சமாகும்
சேகுருமனையாளோடு பிராதுருசிலுகதாகும்
ஆகுமூவிதத்திலைய மிருப்பிடமகலுந்தானே.

இ-ள். இராகுதிசையில் சூரியன்புத்தி மாதம்-10 நாள் 24-க்கும் பந்துக்களில் சண்டை. அரசர்களால் மனவருத்தம். குருமனையாள் தகப்பன் இவர்களுக்கு சிலுகுண்டாகும். மூன்றுவிதத்தில் ஐயம் உண்டாகும். அதினால் இருப்பிடம்விட்டு அகன்றுபோகும்படி நேரும் எ-று. 34

### இராகுதிசையில் சந்திரன் புத்தி

உதித்திடுமிராகிலிந்து னுயர்திங்களீரொன்பானும்
பதித்திடும்பந்துநாசம் மனைவியாற்பொருளுஞ்சேதம்
கதித்திடுமந்தமோணத் திசையிலேகால்கனோவு
விதித்திடுந்தலம்விட்டேகும் விஷத்தினால்துன்பமாமே.

இ-ள். இராகுதிசையில் சந்திரன்புத்தி வருஷம்-1 மாதம் 8-க்கும் பந்துக்கள்நாசம். மனையாளினால் பொருள்சேதம். கால்நோயுண்டாகும். இருக்குந்தலம்விட்டு யேகச்செய்யும். விஷத்தினால் துன்பமுண்டாகும் எ-று. 35

### இராகுதிசையில் செவ்வாய் புத்தி

இன்புருவிராகிற்செவ்வாய் மாதமீராறுமிக்க
வன்புருநாள்மூவாறு மக்கினிபயங்கிலேசம்

மன்பகைவிஷத்தால்பீடை மருவுசண்டாளரின்பம்
துன்பமாங்களவுசண்டை துயர்மனக்கிலேசந்தானே.

இ-ள். இராகுதிசையில் செவ்வாய்புத்தி வருடம்-1 நாள் 18-க்கும் அக்கினிபயம். மனக்கிலேசம். விஷத்தினல் பீடையுண்டாகுதல். சண்டாளர்களுடைய நேசம், துன்பம், களவு, சண்டை, துயரம் இவைகளை விளவிக்கும் எ-று. 36

குருதிசையில் குரு புத்தி

மருவியபொன்னின்மன்னன் மாதமையைந்துநாளோ
ஒருபதினெட்டினுக்கு உபகாரதாபமிக்க
பொருளுடன்ருனியங்கள் பூஷணம்பூமிலாபம்
அறிவையர்சேர்த்தியின்ப மரசரால்மகிழ்ச்சியாமே.

இ-ள். குருதிசையில் குருபுத்தி வருஷம்-2 மாதம்-1 நாள் 18-க்கும் தாபம்நீங்கும். பொருள், தானியம், பூஷணம், பூமிலாபம், ஸ்திரிகள்சேர்த்தி, அரசர்களால் மகிழ்ச்சி, இவைகள் முதலானதுமுண்டாகும் எ-று. 37

குருதிசையில் சனி புத்தி

பொருந்தியகுருவிற்காரி புகழ்திங்களாகும்பத்து
வருந்தியநாளீராறு மகாகனம்பொருளும்வாய்க்கும்
திருந்தியகால்கைவாதஞ் சேயிழைதனக்குதுன்பம்
இருந்திடம்வெற்றியில்லை யிடர்வந்துநீங்குந்தானே.

இ-ள். குருதிசையில் சனிபுத்தி வருஷம்-2 மாதம்-6 நாள் 12-க்கும் நன்மையுண்டாகும். பொருள் கிடைக்கும். கால்கைகளில் வாதநோய் சம்பவிக்கும். மனையாளுக்குத் துன்பமுண்டாகும். தானிருக்குமிடத்தில் பலனிராது. இடரானது சம்பவித்து உடனே விலகிப்போகும் எ-று. 38

குருதிசையில் புதன் புத்தி

மருவியகுருவிற்புந்தி மாதமேவிருபத்தேழும்
அருகுருநாளோராறு மாடலும்பாடல்ஞானம்
வருவதுபூசையாலும் வளமுளமாதர்மைந்தர்
பெருகிடும்செல்வமன்ருற் பெருமையும்புகழுண்டாமே.

இ-ள். குருதிசையில் புதன்புத்தி வருஷம்-2 மாதம்-3 நாள் 6-க்கும் ஆடல், பாடல், ஞானம், தேவபூசை, மாதா, மைந்தர், உண்டாம். செல்வம் பெருகும். அரசர்களால் பெருமையும், புகழுமுண்டாம் எ-று. 39

குருதிசையில் கேது புத்தி

பாவியகுருவிற்கேது பதினேருமதிநாளாறும்
திரமுளவரசர்கேடு திருடியுந்தேசமெங்கும்



உரவுளவுற்ருர்மற்றை வுறவினர்பகையதாகும்
நிரவியமனையாடன்ரு னிலைவிட்டுப்போவதாமே.

இ-ள். குருதிசையில் கேதுபுத்தி மாதம்-11 நாள் 6-க்கும் மாதருக்கு கேடு உண்டாகும். களவுதொழில் தேசமெங்குஞ் செய்யும்படிநேரும். உற்ருர், மற்றவர், உறவின்முறையார் யாவரும் பகையாவார்கள். மனையாள் நிலைவிட்டு நீங்குவாள் எ-று. 40

குருதிசையில் சுக்கிரன் புத்தி

மருவியகுருவில்வெள்ளி மாதமுப்பத்திரண்டு
நிரைபரிகட்டுவர்க்க நிலைமையாம்பொருளுஞ்சேரும்
பொரையுளகன்னிமாதம் பூமியும்போகமுண்டாம்
குரைகடர்சுற்றத்தோடு குணமுடன்வாழ்வர்தாமே.

இ-ள். குருதிசையில் சுக்கிரன்புத்தி வருஷம்-2 மாதம் 8-க்கும் கன்றுகாலி, குதிரை, பொருள் இவைகள் சேரும். கன்னியர், மாதர்கள் சேர்க்கை யுண்டாகும். பூமியும், போகமுமுண்டாம். சுற்றத்தார்களோடுங்கூடி, சுகமுங் குணமு முள்ளவனுய் வாழ்குவான் எ-று. 41

குருதிசையில் சூரியன் புத்தி

குலகுருகுருவிற்பானு வொன்பதுநாண்மூவாறும்
நலமுருமர்த்தலாபம் நாடியசுகமுங்கூடும்
பலகுரைநெருப்புகாற்றில் பிணிபலர்பகையும்பீடை
கலகமாமகத்திற்பின்பு காரியம்நன்மையாகும்.

இ-ள். குருதிசையில் சூரியன்புத்தி மாதம்-9 நாள் 18-க்கும் பொருள்லாபமுண்டாம். போஜன சவுக்கிய முண்டாம். பலவிததுன்பம் நெருப்பாலுங் காற்ருலு முண்டாம். பிணியுடன் பகையினல் பீடைகாட்டும். மனையிற் கலகமாகி பின்பு காரியம் நன்மையாகும். 42

குருதிசையில் சந்திரன் புத்தி

நின்றதோர்குருவிலிந்து நேர்பதினுறுமாதம்
வென்றிநற்சிவிகைமுத்து வெண்குடைபணியுமுண்டாம்
அன்றிநன்மனையாண்மைந்தர் அறிவுளோர்பொருளுஞ்சேரும்
என்றுநற்கருமமெல்லாந் தெய்வத்தாலெய்துந்தானே.

இ-ள். குருதிசையில் சந்திரன்புத்தி வருஷம்-1 மாதம் 4-க்கும் பல்லக்கு, முத்தாபரணம், வெண்குடை, ஆபரணம் இவையுண்டாம். மனையாள், மைந்தர், அறிவுள்ளோர், பொருள் இவை முதலானதும் வந்துசேரும். இவை முதலானதும் தெய்வத்தின் கிருபையால் வந்துசேரும் எ-று. 43

குருதிசையில் செவ்வாய் புத்தி

பாங்குள்ளபொன்னிற்செவ்வா பதினென்றுமதிநாலாறு
தீங்குரும்வினைகளுண்டாந் திருடால்தீங்குறுன்பம்

ஆங்குருமுற்றூர்சேத மல்லதுபிணிகளுண்டாம்
நீங்கியேநிலைவிட்டேகும் நினைத்ததுமுடிந்திடாதே.

இ-ள். குருதிசையில் செவ்வாய்புத்தி மாதம்-11 நாள் 6-க்கும் தீங்கானவினைகள் நேரும். திருடர்களாலும், அக்கினியினாலும் துன்பமுண்டாகும். உற்றூர்சேதமாகும், அல்லது பிணியுண்டாகும். நிலையைவிட்டுவோட்டும். நினைத்தது முடியாது எ-று. 44

### குருதிசையில் ராகு புத்தி

மாதங்கக்குருவில்ராகு மாதமோரிருபத்தெட்டும்
ஓதியநாள்மூவெட்டி னுடன்பகைசிறுவழக்குச்
சேதமாம்பொருள்விரோதஞ் சேயிழைதனக்குதுன்பம்
சூதுகண்மிகவுண்டாகுந் தொடர்ந்திடுஞ்செல்வம்போமே.

இ-ள். குருதிசையில் இராகுபுத்தி வருஷம்-2 மாதம்-4 நாள் 24-க்கும் பகையுண்டாகும். சிறுவழக்கு உண்டாகும். பொருள்சேதமாகும். விரோதம் நேரும். மனையாளுக்குத் துன்பம் நேரும். சூதுகளினால் உண்டாகியிருந்த செல்வம் போய்விடும் எ-று. 45

### சனிதிசையில் சனி புத்தி

காரியிற்காரிமாதங் கருதியமுப்பத்தாறும்
வீரியமூன்றுநாளு மெய்யினில்வியாதிதோன்றும்
சீரியவடுமைமைந்தர் செல்வமுங்குறையும்பின்னும்
கூரியவுறவுதன்னாற் கொடுமையுந்தானுண்டாமே.

இ-ள். சனிதிசையில் சனிபுத்தி வருஷம்-3 நாள் 3-க்கும் திரேகத்தில் பிணியுண்டாகும். அடுமைமைந்தர், செல்வம் இவைகள் குறை உண்டாகும். உறவினர்கள் தன்னால் கொடுமை யுண்டாகும். ()

### சனிதிசையில் புதன் புத்தி

பங்கினிற்புந்திபுத்தி நாலெட்டுநாளொன்பானும்
இங்கிதக்கல்விஞான மெழிலுடைபொருளுஞ்செல்வம்
மங்கையர்மருவிக்கூடும் மைந்தரும்சுற்றமுண்டாம்
பொங்கமாய்மன்னராலே புகழ்ந்துவாழ்ந்திருப்பர்தாமே.

இ-ள். சனிதிசையில் புதன்புத்தி வருஷம்-2 மாதம்-8 நாள் 9-க்கும் இங்கிதமாகிய கல்வியும், ஞானமும், உடை, பொருள், செல்வம், மாதர்கள் சேர்க்கையுண்டாகும். மைந்தரும், சுற்றமு முண்டாகும். அரசர்களால் புகழ்ச்சியோடு வாழ்ந்திருப்பார்கள் எ-று. 47

### சனிதிசையில் கேது புத்தி

படிமிசைசனியிற்கேது பதிமூன்றுமதிநாளொன்பான்
கடியதோர்வலக்கால்வாதங் காணுமேபித்தரோகம்
மிடியதுமைந்தனாலே விஷபயமர்த்தநாசம்
கொடியிடையவராற்றுன்பங் கோளினாற்கலகமாமே.



இ-ள். சனிதிசையில் கேதுபுத்தி வருடம்-1 மாதம்-1 நாள் 9-க்கும் வலது காலில் வாதமுண்டாகும். பித்தரோகம் வாட்டும். மைந்தனால் இடியுண்டாகும். விஷபயங்காணும். மாதர்களாலும்கோளினாலுந் துன்பமுங் கலகமுமுண்டாகும் எ-று. 48

### சனிதிசையில் சுக்கிர புத்தி

முனியுருசனியிற்வெள்ளி மாதமோமுப்பத்தெட்டு
இனியதோர்பணிநல்லார்தம் மின்பமும்வெற்றியுண்டாம்
வனிதையர்சேர்வர்லாப மக்களுஞ்சுற்றமுண்டாம்
தனியொருபகையுண்டாகுந் தன்னையும்வெல்லலாமே.

இ-ள். சனி திசையில் சுக்கிரன்புத்தி வருடம்-3 மாதம் 2-க்கும் பணிகள்சேரும். நல்லோருடைய நேசங்கூடும். வெற்றியுண்டாகும், ஸ்திரீகள் சேர்க்கையும் மைந்தர்கள் சுற்றத்தாரு முண்டாகும். ஒருபகைநேரும் அதனையும் வெல்லலாகும் எ-று. 49

### சனிதிசையில் சூரியன் புத்தி

பரவியசனியிற்பானு பதினொன்றுநாளீராறும்
உரமுளரத்தமேக முதரத்தில்சூலைகண்ணோய்
திரமுளமனையாள்மக்கள் வருந்திடும்நோயினாலே
காமதுவெரிவாங்காலுங் கடுவலிவாதமாமே.

இ-ள். சனிதிசையில் சூரியன்புத்தி மாதம்-11 நாள் 12-க்கும் ரத்தமேகங்காணும். உதிரம் பெருகும். சூலைரோகமுண்டாகும். கண்ணோய்காணும். மனையாளும் மக்களும் நோயினால் வாதைப்படுகுவர். கையெரியும் காலில் வாதரோகம் சம்பவிக்கும் எ-று. 50

### சனிதிசையில் சந்திர புத்தி

மதமுருசனியிலிந்து மாதம்பத்தொன்பதிற்கும்
விதமதாங்கலகம்பீடை வீட்டினில்வழக்குச்சண்டை
பதமதாம்பணிபூணாரம் பலவளம்பொருளுஞ்சேதம்
அதமமாந்தலங்கள்விட்டே யவதியாமீள்வர்தாமே.

இ-ள். சனிதிசையில் சந்திரன்புத்தி வருடம்-1 மாதம் 7-க்கும் கலகம், பீடை, வீட்டில்வழக்கு, சண்டை, பணிகள், பலபொருள் சேதமாகும். இருப்பிடம் விட்டு நீக்கும் அவதிப்படுகுவர் எ-று. 51

### சனிதிசையில் செவ்வாய் புத்தி

பலனிலாச்சனியிற்செவ்வாய் பதிமூன்றுநாளொன்பானும்
குலங்களிலீனமிக்க கொடும்பகைபழியுங்காட்டும்
அலைந்திடும்தேசமெங்கு மனைவரும்விரோதமாவார்
தலங்களிற்பொன்னாற்சோரந் தலம்விட்டுப்பிரியுந்தானே.

இ-ள். சனிதிசையில் செவ்வாய்புத்தி வருடம்-1 மாதம்-1 நாள் 9-க்கும் குலத்தில் ஈனமானதொழில் நேரும். கொடுமையாகிய பகை விளைவிக்கும். அலைச்சலாய் தேச சஞ்சாரஞ்செய்குவன். அனைவரையும் விரோதமாக்கி வைக்கும். தலத்திற் பொன்சோரம் போகும் தலம்விட்டுப் பிரிந்துப்போம்படிச் செய்கும் எ-று. 52

சனிதிசையில் ராகு புத்தி

முன்னமேசனியில்ராகு முப்பதுமதிநாளாறும்
சொர்னமும்சேதமாகும் விஷமதுபற்றித்தீண்டும்
இன்னமுஞ்சரீரமெங்கு மேருதவியாதியுண்டாம
அன்னியர்பகையதாகு மல்லதுமிகுதியாமே.

இ-ள். சனிதிசையில் இராகுபுத்தி வருடம்-2 மாதம்-10 நாள் 6-க்கும் பொன்சேதமாகும். விஷம் பற்றித்தீண்டும். சரீரத்தில் விஷமேருதிருக்கும். வியாதியுண்டாகும். அன்னியர்களுடைய பகையுண்டாகும் அல்லது மிகுத்தாகிய வியாதிகாட்டும் எ-று. 53

சனிதிசையில் குரு புத்தி

முன்புருசனியில்மன்னன் முப்பதுநாளீராறும்
அன்புருமடியார்சேர்வ ராடையாபரணமுண்டாம்
இன்பமாமரசராலே எண்ணியகருமமாகும்
மின்கொடியுடனேசுற்ற மிகுதியாம்பலனுண்டாமே.

இ-ள். சனிதிசையில் குருபுத்தி வருஷம்-2|மாதம்-6 நாள் 12-க்கும் நண்புள்ள அடியார்கள் சேர்வார்கள். ஆடையாபரணங்களுண்டாகும். அரசர்களால் நினைத்தவேலைகள் யாவுமுடியும். மனையாளுடன் சுற்றமும் மிகுந்த பலனுடன் வாழ்குவன் எ-று. 54

புதன்திசையில் புதன் புத்தி

வலம்புரிதன்னிற்புந்தி மாதமோரிருபத்தெட்டுந்
துலங்குநாள்மூவொன்பானுஞ் சுற்றமுந்துணையுமுண்டாம்
பலன்தருமாதர்லாபம் பாக்கியமிகவுமுண்டாம்
நலம்பெறும்ஞானங்கல்வி நாடியகருமமாமே.

இ-ள். புதன் திசையில் புதன்புத்தி வருடம்-2 மாதம்-4 நாள் 27-க்கும் சுற்றத்தாருடன் துணைவர்களுண்டாம். பலன் பெருகத்தக்க மாதர் லாபமுண்டாம். பாக்கியமுண்டாம். நலம்பெறத்தக்க ஞானமுங் கல்வியும் உண்டாகி நினைத்தகாரியம் முடிப்பான் எ-று. 55

புதன்திசையில் கேது புத்தி

பரிந்திடும்புதனிற்கேது பதினொருமாதம்பின்னும்
வருந்துநாள்மூவொன்பானு மாதவந்தனைவிட்டேகும்



பொருந்திடும்வியாதிபீடை பொருட்சேதமுற்றூர்கேடு
மருந்திடுங்குணத்தால்துன்ப மனமதுகிலேசந்தானே.

இ-ள். புதன்திசையில் கேதுபுத்தி மாதம்-11 நாள் 27-க்கும் நன்மையானது தன்னைவிட்டு நீங்கும். குடியாக வியாதியும் பீடையுமுண்டாகும். பொருள் சேதமாகும். உற்றூருக்குக் கேடுவிளைவிக்கும். மருந்தினுல் துன்பம் நேரும். மனக்கிலேச முண்டாகும் எ-று. 56

புதன் திசையில் சுக்கிரன் புத்தி

வாசமாம்புதனில்வெள்ளி மாதமுப்பதுமேநான்கு
நேசமாமக்கட்பேறு நேரிழையுடனேயின்பம்
பாசமாஞ்சுபங்கள்வித்தை பலவணிமற்றுமுண்டாம்
தேசமேபோனூர்மீள்வர் சேயிழைமணமுமாமே.

இ-ள். புதன் திசையில் சுக்கிரன்புத்தி வருடம்-2 மாதம் 10-க்கும் சந்ததியுண்டாகும். மனையாளுடன் இன்பமாகவிருப்பன். சுபகாரியங்கள் முடிப்பன். வித்தை பலதுமுண்டாகும். தேசாந்திரம் போனவர்கள் மீண்டுவருகுவர். மணங்கள் நடக்கும் எ-று. 57

புதன் திசையில் சூரியன் புத்தி

நேருற்றபுதனிற்பானு நீடியமாதம்பத்தும்
சீருற்றநாட்களாறுஞ் செந்தழற்பயங்கிலேசம்
பாருற்றமனையாள்பீடை பகைவருமிடையூறுண்டாம்
வாருற்றகொங்கையாளே மன்னரால்துன்பமாமே.

இ-ள். புதன் திசையில் சூரியன்புத்தி மாதம்-10 நாள் 6-க்கும் வித்தையிற் பயங் கிலேசம். மனையாளுக்குப் பீடை பகை நேரும். இடையூறுண்டாகும். அரசர்களால் துன்பமும் உண்டாகும் எ-று. 58

புதன் திசையில் சந்திரன் புத்தி

வாரணப்புதனிற்சோமன் மாதமேபதினேழுக்கும்
பூரணமானசோகை கண்டபின்புறங்கால்வீங்கும்
காரணக்கலகம்பெண்ணாற் கனபீடைசிலுகுமுண்டு
தாரணிதன்னில்மாந்தர் தமக்கெலாம்பகையதாமே.

இ-ள். புதன் திசையில் சந்திரன்புத்தி வருடம்-1 மாதம் 5-க்கும் பூரணமான சோகைநோய் கண்டு பின்புறங்கால்கள் வீங்கும். கலகம் பெண்பாலால் விளையும். கனமாகிய பீடையுண்டாகும். சிலுகு உண்டாகும். உலகத்தில் யாவருக்கும் பகையாகுவான் எ-று. 59

புதன் திசையில் செவ்வாய் புத்தி

மன்னியபுதனிற்செவ்வாய் பதினொன்றுநாள்மூவொன்பான்
தன்னிலேபித்தரோகங் காமாலைதலைநோக்காடு

அன்னியர்பகைவிரோத மாயுதத்தாலேபீடை
முன்னொருபகையுமுண்டு முடியவேகலகந்தானே.

இ-ள். புதன் திசையில் செவ்வாய்புத்தி மாதம்-11 நாள் 27-க்கும் பித்தரோக முண்டாகும். காமாலை ரோகம் தலைநோக்காடு இவையுண்டாகும். அன்னியர்கள் பகை விரோதம். ஆயுதங்களினால் பீடையுண்டாகும். முன்னதாக ஒரு பகையுண்டாகி அதினால் கலகம் நேரும் எ-று. 60

புதன் திசையில் ராகு புத்தி

நற்புதன் தனிலேராகு முப்பதுநாள்மூவாறும்
நிற்பதோர்நிலைவிட்டேகு நீசரால்விஷத்தாலையம்
மற்பொருபூசலுண்ட மனத்திடவர்த்தவானி
சொற்பனந்தலைநோய்பித்தஞ் சூட்சுமாமன்னந்தானே.

இ-ள். புதன் திசையில் இராகுபுத்தி வருடம்-2 மாதம்-6 நாள் 18-க்கும் இருக்கும் இடத்தைவிட்டு பேர்க்கும். நீசர்களாலும் விஷஜெந்துக்களாலும் ஐயமுண்டாகும். பூசலுண்டாகும். அர்த்த ஆனியாகும். சொப்பனங்கள் காணுதலாகும். தலைநோயுண்டாகும். பித்த மதிகரிக்கும். போஜனங்கொள்ளாது எ-று. 61

புதன் திசையில் குரு புத்தி

புந்தியிற்பொன்னன்மாதம் புகழ்சொலவிருபத்தேழும்
வந்தநாளாறுமின்ப மன்னரால்மகிழ்ச்சியாகும்
சிந்தையிற்கிலேசமில்லை சிறுவருஞ்சுற்றமுண்டாம்
பைந்தொடிமணமதாகும் பாக்கியமிகவுண்டாமே.

இ-ள். புதன்திசையில் குருபுத்தி வருடம்-2 மாதம்-3 நாள் 6-க்கும் இன்பமுண்டாகும். அரசர்களால் மகிழ்ச்சி யுண்டாகும். மனதில் கிலேசமில்லை. மைந்தருஞ் சுற்றத்தாருமுண்டாம். பெண்கலியாணமாகும். பாக்கியமுண்டாகும் எ-று. 62

புதன் திசையில் சனி புத்தி

நன்றிசேர்புதனிற்காரி நாலெட்டுமதினாளொன்பான்
இன்றிடுநன்மைநாளு மெதிர்த்திடும்பகையுமுண்டாம்
சென்றிடும்வலக்கானோவாந் திசையுத்திராடந்துன்பம்
மன்றிடுமுற்றூர்க்கேடு மனதினில்கிலேசமாமே.

இ-ள். புதன்திசையில் சனிபுத்தி வருடம்-2 மாதம்-8 நாள் 9-க்கும் நன்மையானது விலகிப்போகும். பகையானது வந்தணுகும். வலதுகாலில் பிணியுண்டாகும். திசைவருங்காலம் உத்திராடத்தில் துன்ப முண்டாகும். உற்றூர்களுக்குக்கேடு உண்டாகும். மனக்கிலேச முண்டாகும் எ-று. 63



கேதுதிசையில் கேதுபுத்தி

ஈண்டியகேதிற்கேது நாலுநாளிருபத்தேழும்
வேண்டியமனையாளுமக்கட் சகோதரவெறுப்புண்டாகும்
பூண்டிடும்விலங்குகாலில் பூரட்டாதியுள்ளேநேரும்
ஆண்டதுபுருஷர்தார்க்குத் திசையதுயவதிதானே.

இ-ள். கேதுதிசையில் கேதுபுத்தி மாதம்-4 நாள் 27-க்கும் மனையாள், மக்கள், சகோதரர் இவர்களுக்கு வெறுப்புண்டாகும். விலங்குகாலிற்பூணும். பூரட்டாதி நட்சத்திரத்திற்குள் நிவர்த்தியாகும். புருஷர்களுக்கு இத்திசை துன்பப்படுத்தும் எ-று. 64

கேதுதிசையில் சுக்கிரன்புத்தி

பூரியக்கேதில்வெள்ளி புத்தியீரேழுமாதம்
பாரியுமக்கட்பேறு பலித்திடுங்கன்றுகாலி
காரியமெல்லாங்கூடும் கடைசியிற்பீடையுண்டு
வீரியமனையாள்நோயா மீளவுமகன்றுபோமே.

இ-ள். கேதுதிசையில் சுக்கிரபுத்தி வருடம்-1 மாதம் 2-க்கும் மனையாளும், மக்களும், நன்மையாக வாழ்குவர். கன்று காலி பலித்திடும். நினைத்தகாரியங்கள் யாவுங்கைகூடும். புத்தி கடைசியில் பீடையுண்டாகும். உடனே தீரும் எ-று. 65

கேதுதிசையில் சூரியன்புத்தி

அந்தமாங்கேதிற்பானு நாற்றிங்களாறுநாளும்
சிந்திடும்பூமிவிட்டுத் தேசம்போய்வருவன்பின்பு
சுந்தரமேனியெங்குஞ் சுரந்தலைநோயுண்டாகும்
மைந்தராலையமாகி மனதினிற்கிலேசந்தானே.

இ-ள். கேதுதிசையில் சூரியன்புத்தி மாதம்-4 நாள் 6-க்கும் தான் வாழ்ந்திருந்த தேசத்தை விட்டு பரதேசம்போய் மறுபடியும் வந்து சேருவன். மனையாளுக்கு திரேக முழுதும் தலையினும் நோயுண்டாம். மைந்தர்களால் ஐயமுங் கிலேசமுமுண்டாம் எ-று. 66

கேதுதிசையில் சந்திரன்புத்தி

சாதகக்கேதிலிந்து தன்புத்தியேழுமாதம்
மாதரால்வழக்குசண்டை மைந்தற்குப்பீடையுண்டாம்
போதவேகன்றுகாலி பொன்னுமாபரணமுண்டாம்
சீதளமுகத்தினாளே தீங்குவந்தகன்றுபோமே.

இ-ள். கேதுதிசையில் சந்திரபுத்தி மாதம் 7-க்கும் ஸ்திரீகளால் வழக்கு சண்டையுண்டாம். மைந்தர்களுக்குப் பீடையுண்

டாகும். கன்று காலியுடன் ஆபரணாதிகளுண்டாகும். தீங்கானது வந்துநீங்கும் எ-று. 67

### கேதுதிசையில் செவ்வாய்புத்தி

கடையரவதனிற்செவ்வாய் கலந்திடுமாதம்நாலு
இடையுறுமிருபானேழ்நா ளிடர்பயமர்த்தவாணி
தடையுரும்பெண்ணாற்கேடு தழல்பயமிகவுண்டாகும்
படையுறுவழக்குச்சண்டை பலபலவிரோதமாகும்.

இ-ள். கேதுதிசையில் செவ்வாய் புத்தி மாதம்-4 நாள் 27-க்கும் பொருள்சேதம். ஸ்திரீகளினால் கேடுநேரும். அக்கினியால் பயமுண்டாகும். படையினாலும், வழக்காலும், சண்டையுண்டாம். பல பல விரோதங்கள் வந்துசேரும் எ-று. 68

### கேதுதிசையில் ராகுபுத்தி

கேதுவில்ராகுபுத்தி கேள்பன்னிரண்டுமாதம்
மீதியீரொன்பாநாளும் விஷபயம்வந்துதீரும்
மாதர்கடமக்குப்பீடை மன்னவனாசமாவான்
யோதவேயர்த்தநாசம் புகழ்நிலைகுன்றிடாதே.

இ-ள். கேதுதிசையில் இராகுபுத்தி வருடம்-1 நாள் 18-க்கும் விஷபயமுண்டாகும். மாதர்களுக்குப்பீடை. மன்னன்நாசமடைவன். பொருள்நாசமாகும். புகழானது குறையும் எ-று. 69

### கேதுதிசையில் குருபுத்தி

பரிவுளகேதுவுக்குள் பாங்குள்ளமன்னன்புத்தி
ஒருபதினொன்றுநாட்க ளோராறுமர்த்தலாபம்
மருவியமன்னர்சேர்த்தி விஷபயம்வந்துதீரும்
திருவெனமனையாள்சேர்வள் செல்வமுமிகுதியாமே.

இ-ள். கேதுதிசையில் குருபுத்தி மாதம்-11 நாள் 6-க்கும் அர்த்தலாபமுண்டாம். மன்னர்களிடத்தில் சேர்க்கை யுண்டாம். விஷபயம் சம்பவித்துத்தீரும். அழகு பொருந்திய மனையாள் சேர்வள். செல்வமுண்டாம் எ-று. 70

### கேதுதிசையில் சனிபுத்தி

ததியுருக்கேதுவுக்குச் சனிபுத்தியானமாதம்
பதின்மூன்றுநாளொன்பானி னுயிர்பொருள்சேதமாகும்
சுதிகலம்பேதையாகுங் கக்கத்திற்சொறிசிரங்கு
மதிமுகத்தரிவைபீடை மனமருங்கிலேசமாமே.

இ-ள். கேதுதிசையில் சனிபுத்தி வருடம்-1 நாள் 9-க்கும் உயிர், பொருள் சேதமாகும். மனபேதமாகும். சொறிசிரங்குண்டாகும். மனையாளுக்குப் பீடை. மனக்கிலேச மிவைகளுண்டாம் எ-று.



### கேதுதிசையில் புதன்புத்தி

குலமுளக்கேதிற்புந்தி குறித்திடும்பத்துமாதம்
நலமுறும்பத்துமொன்று நாளிருபத்தேழுக்கும்
தலமதுவிட்டுப்போகுந் தழலினாற்பயமுண்டாகும்
நிலமையால்புத்திரசோபம் நினைத்ததுமுடிந்திடாதே.

இ-ள். கேதுதிசையில் புதன்புத்தி மாதம்-10 நாள் 27-க்கும் தலம்விட்டு நீங்குவன். அக்கினியினால் பயம் உண்டாகும். புத்திரசோபமாகும். நினைத்தவை முடியாவாம் எ-று. 72

### சுக்கிர திசையில் சுக்கிர புத்தி

வண்மையாம்புகரில்வெள்ளி மாதங்கள்நாற்பதுக்கும்
உண்மையாம்பணிகண்முத்து முயர்குடைபுரவியானை
நண்மையாம்புண்மைநீங்கி நாளிலேதனமுஞ்சேரும்
எண்மையங்கிசத்திற்றுக்க மெய்மையர்ப்பிசியிறானே.

இ-ள். சுக்கிரன் திசையில் சுக்கிரன் புத்தி வருடம்-3 மாதம் 4-க்கும் பணி, முத்துமாலை, குடை, புரவி, யானை இவையுண்டாம். புண்மையானது நீங்கி தனஞ்சேர்க்கையாகும். ஐப்பிசிமாதத்தில் துக்கமுண்டாம் எ-று. 73

### சுக்கிரன் திசையில் சூரியன் புத்தி

சிறந்திடும்புகரிற்பானு திங்களீராறுந்துன்பம்
குறைந்திடும்தனமும்நாளிற் கொடும்பகையரசராலே
பரந்திடும்மனையாள்மக்கள் பலரிடம்வழக்காமென்க
குறைந்திடும்தெய்வமுற்று முறவதுபகையதாமே.

இ-ள். சுக்கிரன் திசையில் சூரியன் புத்தி வருடம் 1-க்கும் அரசரால் பகைநேரும். மனையாள், மக்கள் அலைச்சல்படுகுவர். பலரிடத்தும் வழக்குநேரும். தெய்வசகாய மில்லாமல் உறவாகிய பகை வந்துநேரும் எ-று. 74

### சுக்கிரன் திசையில் சந்திரன் புத்தி

மருவியபுகரிற்சோமன் மாதமோரிருபதுக்கும்
கருதியக்கருமநாளில் வந்துகைகூடுமென்னக்
குருகுருமனையாளாலே பேயிடர்பகையுந்தீரும்
கருவியவொன்பாமாதம் போடுயர்விணக்கமாமே.

இ-ள். சுக்கிரன்திசையில் சந்திரன்புத்தி வருடம்-1 மாதம் 8-க்கும் நினைத்தவை வந்துகூடும். மனையாளுக்கு வந்த பேயிடர்தீரும். பகைவிலகும். 9-மாதம் துயரமானது தீரும் எ-று. 75

### சுக்கிர திசையில் செவ்வாய் புத்தி

புண்ணியம்புகரிற்செவ்வாய் புகழ்திங்களீரேழுக்கும்
நண்ணியபூமியுண்டாம் நாரியர்கருமநாசம்
எண்ணியதேவர்சேவை யிருவராற்பகையுண்டென்னும்
கண்ணிநோய்மெய்யிற்குட்டங் கண்டதுதீருந்தானே.

இ-ள். சுக்கிரன் திசையில் செவ்வாய்புத்தி வருடம்-1 மாதம் 2-க்கும் கோரிய பூமிகிடைக்கும். ஸ்திரீகளின் இடர்தீரும். தேவ சேவையுண்டாகும். இருவர்களுடைய பகைநேரும். கண்ணோயும், மெய்யிற் குஷ்டமுமுண்டாகி பின்பு தீரும் எ-று. 76

### சுக்கிர திசையில் இராகு புத்தி

திருந்தியபுகரில்ராகு திங்களோர்முப்பத்தாறும்
பொருந்தியமுனியைப்போலே பூமியிற்றபசுசெய்வன்
வருந்தியேமைந்தராலே வருங்கலகங்கண்மெத்த
அருந்தியமருந்தினாலே விஷமதாலலைச்சற்றானே.

இ-ள். சுக்கிரன் திசையில் இராகுபுத்தி வருட்ம் 3-க்கும் முனிவர்கள்போல் தபசுசெய்குவன். மைந்தர்களால் கலகம் வருகும். சாப்பிடும் மருந்தாலும் விஷத்தினாலும் அலைச்சல் உண்டாகும் எ-று. 77

### சுக்கிர திசையில் குருபுத்தி

முன்புருப்புகரின்மன்னன் முப்பத்திரெண்டுமாதம்
இன்புருதானியங்க ளெய்துமேவியர்த்தலாபம்
அன்புருமறையோராலே யதிசயமிகவுண்டாகும்
மன்புகழ்தோணிவிட்ட திசையினில்வருத்தமாமே.

இ-ள். சுக்கிரன் திசையில் குருபுத்தி வருடம்-2 மாதம் 8-க்கும் தனதான்னியங்கள் பலிதமாகும். விருத்தியான இலாபங்கிடைக்கும். பிராமணர்களால் அதிசயமான காரியங்கள்கூடும். இந்த திசை தோற்றிய முதலில் வருத்தமுண்டாகும் எ-று. 78

### சுக்கிரன் திசையில் சனிபுத்தி

சாலவேவெள்ளிதன்னிற் சனிமாதம்முப்பத்தெட்டும்
மூலமாம்நோயினாலே முயங்கியேமீளுங்கைகால்
வேலெனும்விழியாள்துன்ப மெய்யினில்ரோகமுண்டு
ஆலமாம்விஷம்போலன்ன மரோசிகமாகுந்தானே.

இ-ள். சுக்கிரன் திசையில் சனிபுத்தி வருடம்-3 மாதம் 2-க்கும் மூலரோகமுண்டாம். அதினால் மனக்கிலேசம் மனையாளுக்குத் துன்பம் மெய்யில் ரோகமுண்டாகும். அன்னம் விஷம்போல் இருக்கும் எ-று. 79



### சுக்கிரன் திசையில் புதன்புத்தி

வெள்ளியிற்புந்திமாதம் விரும்புமுப்பத்திநான்கும்
தெள்ளியமனையாள்மக்கள் சீருடன்பொருளுண்டாகும்
வள்ளியகல்விஞானம் வாக்கினால்பாடலாகும்
நள்ளியசிவப்பினாலே நன்மைகள்பலவுண்டாமே.

இ-ள். சுக்கிரன் திசையில் புதன்புத்தி வருடம்-2 மாதம் 10-க்கும் மனையாளும் மக்களும் பொருளும் உண்டாகும். கல்வியின் பயிற்சியால் ஞான முதலானதும் வாக்கால் பாட சக்தியுண்டாகும். சிவந்தபொருளால் பலன் மிகவுமுண்டாகும் எ-று. 80

### சுக்கிரன் திசையில் கேதுபுத்தி

இட்டமாம்வெள்ளிதன்னிற் கேதுவீரேழுமாதம்
துட்டமாமிருகத்தாலே துன்பமுமிகவுண்டாகும்
அட்டமாமனையாடன்னி ளனுபோகத்தாலேநோயாம்
திட்டமாம்விஷத்தால்வீட்டிற் றீண்டியேமீளுந்தானே.

இ-ள். சுக்கிரன் திசையில் கேதுபுத்தி வருடம்-1 மாதம் 2-க்கும் துஷ்டமிருகத்தால் துன்பமுண்டாகும். மனையாளிடத்தில் அனுபோகஞ்செய்தால் நோயுண்டாம். விஷபாம்பானது வீட்டில் தீண்டி உடனே நீங்கும் எ-று. 81

### திசைபலன் விபரம்

புத்தியின்பலன்கடம்மைப் பொதுமையாயுரைத்தாரேனும்
சித்தமாய்க்கோள்கள்நின்ற திரிகோணங்கேந்திரமுச்சம்
நத்தியவியமாரெட்டும் பகைநீசஞ்சலமும்மலிதும்
ஒத்தநல்லாதிபத்தியம் வர்க்கமோடவஸ்தைவக்கிரம்.

### இதுவுமது

பாவத்திற்கண்டயோக பவயோகந்தன்னைப்பார்த்து
பூவருமானேநல்ல பலன்களைப்புகலவேண்டும்
தாவருமுத்திரமுட்சித்திரத் திரத்திற்சமபுத்திபோல்
ஓவற்றபலன்கள்சொல்வ ருயர்மதிவல்லோர்தாமே.

திசாபுத்திபலன் முற்றிற்று.

---

# பாவக பலன்

1-ல் சூரியன் நின்ற பலன்

அருக்கன்றான் ஜென்மத்தி லிருந்தாரானால்
ஆகாது பலனற்பம் ஊஷ்ணங்காட்டும்
கருக்கோடு உற்றார்பகையுங் காணுமென்பர்
கனமான பிராமணரால் பீடையுண்டு
வருத்தமுடன் பொருட்சிலவு வாய்வினோடே
வளமான நீரிழிவு ரோகமுண்டு
பெருக்கமுள பந்துவினால் மனதிற்றுன்பம்
பிசகாது நேருமென்று உரைசெய்வாரே.

இ-ள். எனதன்பிற்குரிய பத்தனே! அருக்கனென்னும் சூரியன் ஜென்மத்தில் இருந்தால் அற்பபலனுண்டு, ஊஷ்ணவியாதி ஏற்படும், தன் தாய் தந்தையர் பகைகாட்டும், மேன்மையையுடைய பிராமணர்களால் பீடை யுண்டாகும், வருத்தம், பொருட்சிலவு, நீரிழிவுரோகம், தன் பந்துக்களால் துன்பம் முதலியவை யுண்டாகுமென்றுங் கூறுவாயாக எ-று. 1

2-ல் சூரியன் நின்ற பலன்

இரவியவ ரிரண்டினிலே யிருந்தகாலம்
இவனுக்கு பொருள்சேரும் யின்பமுண்டு
பரவியதோர் பயணமதால் ஜெயமேகிட்டும்
பாரிலுளோர் பலபேரும் நேசமாவார்
விரவியதோ ரரசர்களால் மகிழ்ச்சியுண்டு
வீணில்லை தொடுத்ததுவும் ஜெயமேயாகும்
அரசர்களின் கூட்டுறவா லனேகமாக
ஆபரண முண்டெனவே அறிவிப்பாயே.

இ-ள். சூரியன் லக்கினத்திற்கு இரண்டாமிராசியில் இருந்தால் மனதில் சந்தோஷம், பொருள் சேர்க்கை, தான் குறித்த பிரயாணத்தால் ஜெயம், உலகிலுள்ள அனேகர் நேசம், அரசர்களால் சந்தோஷம், தொடுத்தகாரியம் ஜெயம், மேற்படி அரசர்கள் நேசத்தால் பொன்னாபரணங்களுங் கிட்டும் எ-று. 2

3-ல் சூரியன் நின்ற பலன்

ஆதித்தன் மூன்றினிலே வாசகாலம்
அறிவனுக்குப் பிறராலே அன்னமுண்டு
வாதித்த வழக்கதுவும் ஜெயிக்கும்பாரு
வளமான சோதரரானுப காரந்தான்



போதித்த பொருளதனால் கௌரவங்கள்
புகழாக உண்டென்பார் மகிழ்ச்சியுண்டு
சாதித்த உற்றோரால் செகத்திலெங்கும்
சமர்த்துண்டு பெருமையுண்டு சரியாயோதே.

இ-ள். சூரியன் ஜென்மத்திற்கு மூன்றாமிராசியில் இருந்தால், பிறரால் அன்னமுண்டாதலும், அனேக நாட்களாயிருந்த வழக்கு ஜெயித்தலும், தன்சகோதர சகோதரிகளால் உபகாரமும், நாசமும் தன் கையிலுள்ள ரொக்க பூஸ்திதியால் கௌரவம், புகழ்ச்சி, மகிழ்ச்சியும், தன் தாய் தந்தையரால் பெருமை, டாம்பீகம் முதலியவை யுண்டாகுமென்றுங் கூறுக எ-று. 3

4-ல் சூரியன் நின்ற பலன்

சூரியன்றான் நான்கதனி லுலாவும்போது
சொன்னமொழி பிசகிவிடும் சொர்ணஞ்சேதம்
வீரியமுங் குறைவாகும் விருந்தோராலே
விளங்குமொரு பழியுண்டு வீணதாக
சீரியதோர் விஷத்தாலே துன்பமுண்டு
சிறுவர்களால் சிலுகுண்டு சிறப்புகுன்றும்
ஏரியதோர் தனங்குறையு மிவனுக்கப்பா
இன்பமிலா பெண்டீரால் இகழ்ச்சியாமே.

இ-ள். ஜென்மத்திற்கு நான்காமிராசியில் சூரியன் இருந்தால், சொல்வார்த்தை தவறுதல், பொருள் சேதம், தைரியக்குறைவு, தன்னிடம்வந்த விருந்தினரால் பழி, வீண்வார்த்தை, சீற்றமுடைய விஷஜெந்துக்களால் துன்பம், தன் புத்திரரால் சிலுகு, கௌரவகுறைவு, தன்ரொக்க ஸ்திதி குறைதல், தன் மனத்திற்குச் சம்மதமில்லா மனைவியால் இகழ்ச்சி முதலியவையுண்டு எ-று. 4

5-ல் சூரியன் நின்ற பலன்

எதிருற்ற இரவியவர் பஞ்சமத்தில்
இனிதுறவே வாழுமந்த காலந்தன்னில்
கதிபெற்ற உற்றார்க்குப் பீடையுண்டு
கணக்கறிவான் றன்னுடனே விரோதமுண்டு
மதியுற்ற மன்னவரால் பயமுமுண்டு
மனத்துயர மிகவாகும் மகிழ்ச்சியில்லை
சதியுற்ற பெண்களினால் சலிப்பேயுண்டு
சரியான மக்களுக்குச் சாவுசொல்லே.

இ - ள். ஜென்மத்திற்கு ஐந்தாமிடத்தில் சூரியன் நின்றால், தன் தாய் தந்தையர்க்குப் பீடை, கணக்குவேலை செய்யுமொருவனால் துன்பம், விரோதம், அரசர்களால் பயம், நாளுக்குநாள் மனக்கிலேசம்,

மகிழ்ச்சிகுறைவு, கொடிய ஸ்திரீஜனங்களால் சலிப்பு, புத்திரசேதம் முதலியவை யுண்டாகும் எ-று. 5

6-ல் சூரியன் நின்ற பலன்

நற்கதிரோன் சட்டமத்தி லிருந்தாலப்பா
நாடெங்கும் புகழ்ந்திடுவார் நவிலொணாது
வற்கமதில் சுபமுண்டு வாழ்க்கைமேலாம்
வளமான பொருள்சேரும் வருத்தமில்லை
சொற்புகழும் மன்னவரால் சுகமேயுண்டு
சோதரரால் பலபொருளும் சேரும்பாரு
கற்கருவி வகையாலே கனத்தசெல்வம்
நலமாகும் இவன்பெருமை கனமாயோதே.

இ-ள். நன்மையையுடைய சூரியன் ஜென்மத்திற்கு ஆறாமிராசியில் நின்றால், உலகமெங்கும் புகழ்ச்சிப்பெற வாழ்தலும், தனது வர்க்கத்தில் சுபசோபனங்களுண்டாதலும், பெருமைபெரும்வாழ்க்கையுண்டாதலும், பொருள் சேர்க்கை, சந்தோஷம், புகழ்ச்சிபெற்ற அரசர்களால் சுகம், சகோதரர்களால் இன்பம், கல்லு முதலான கருவிகளால் செல்வம் உண்டாதலும், முதலான பெருமைபெற்ற வாழ்க்கையோடு அனைவரும் புகழும்படி வாழ்ந்திருப்பானென்பதாம் எ-று. 6

7-ல் சூரியன் நின்ற பலன்

ஆதித்தன் சப்தமத்தி லணுகும்போது
அணுகிடுமவ் வறிவனுக்குத் துன்பம்பீடை
சோதித்த மனைவியினால் துன்பங்காட்டும்
சுகங்குறையும் நினைவுகுன்றும் சுருக்காய்கேளு
வாதித்த விஷமுடனே பிணிஅனேகம்
வழக்குண்டு பெண்ணையால் வருந்துவான்பார்
பேதிக்க குணங்களெலாம் பிசகும்பாரு
பேய்பிடித்தோன் போல்நெஞ்சங் கலங்குவானே.

இ-ள். ஜென்மத்திற்கு ஏழில் சூரியன் நின்றால், இவனுக்கு துன்பம் பீடை முதலியனவும், மனைவியால் துன்பம், சரீரசுகங் குறைதல், கவனகுறைவு, அனேகமான விஷப்பிணி, வழக்கு, ஸ்திரீகள் மூலமான நோய், பலவித எண்ணம், பேய்பிடித்த நெஞ்சம்போல் அலைந்துதிரியும்படி செய்யும் எ-று. 7

8-ல் சூரியன் நின்ற பலன்

அருக்கனவன் அட்டமத்தி லணுகும்போது
அறிவையால் சிலுகுண்டு அழகுகுன்றும்
திருக்கலி யாணங்களிலே செல்வம்சேதம்
திருடர்களால் பயமுண்டு தீரங்குன்றும்



உருக்கியநோய் உள்ளதெலாஞ் சேதம்சொல்லு
உற்றாரும் மற்றவருந் துரோகஞ்செய்வர்
வருத்தமுற வாழ்ந்திருப்பான் வளமைகேளு
வாழ்வில்லை யந்தமட்டும் வழங்குவாயே.

இ-ள். ஜென்மத்திற்கு எட்டில் சூரியன் நின்றால், பெண்களால் கலகம், அழகுகுறைதல், தனது குடும்பமுகாந்தர வழியில் கலியாணமுண்டாகி அதனால் பொருள் விரயம், திருடரால் பயம், தைரிய குறைவு, நோயால் திரேகநலிவு, பந்துக்களாலும் தாய் தந்தையராலும் துரோகம், வருத்தத்துடனே வாழும்படி நேரும் எ-று. 8

9-ல் சூரியன் நின்ற பலன்

சுந்தரஞ்சே ரிரவியவர் நவத்தில்வந்தால்
சோர்வில்லை பாலனுக்கு மிகுந்தசெல்வம்
இந்திரன்போல் பெருமையுண்டு இகழ்ச்சியில்லை
இவனுக்குப் பிதுர்வகையில் செல்வமுண்டு
விந்தையதாய் பெண்சேர்வள் வினோதமில்லை
விரயமுள பொருள்சேரும் வியப்பதாக
முந்தியதோர் வழக்கெல்லாம் ஜெயிக்கும்பாரு
முயற்சியினால் பூமிபல சேருப்பாரே.

இ-ள். அழகுபொருந்திய சூரியன் ஜெனமத்திற்கு ஒன்பதாமிராசியில் நின்றால், அனேக செல்வங்கள் சேர்தலும், தேவேந்திரனைப்போன்ற பெருமையும், இகழ்ச்சியில்லாமை, பிதுர்வர்க்க செல்வமுண்டாதல், அழகுடைய பெண் சேர்தல், கைவிட்டுப்போன பொருள் வந்து சேர்தல், முன்னிருந்த வழக்கெல்லாம் ஜெயிக்குதல், தன் சுயமுயற்சியினால் அனேக விதமான பூமி முதலியன சேரும். 9

10-ல் சூரியன் நின்ற பலன்

அம்புவியோர் போற்றுகின்ற இரவிதானும்
அழகான தசமமதி லணுகும்போது
தெம்புடைய பூமியினால் செல்வமோங்கும்
திரவியங்கள் பலவழியில் சேரும்பாரு
அன்புடைய வாகனங்க ளழகாய்கிட்டும்
ஆரணங்கு தன்னாலு மன்புஓங்கும்
நம்பியதோர் அறிஞர்களால் செல்வமோங்கும்
நானிலத்தோ ரிவனுக்கு அடக்கமாமே.

இ-ள். யாவரும் போற்றப்பட்ட சூரியன் ஜென்மத்திற்கு பத்தாமிராசியில் நின்றால், பூமியால் செல்வமோங்குதலும், பற்பல விவகாரங்களில் பொருள் வருத்து, தன் மனதிற்குத்தகுந்த வாகனங்கள் கிட்டுதலும், தனது மனைவியினால் சந்தோஷமும், தான் குறித்த

மனுஷரால் செல்வமும், அனைவருக்கும் மேம்பட்டவனாகவும் விளங்குவான் எ-று. 10

### 11-ல் சூரியன் நின்ற பலன்

சூரியனே பதினொன்றிற் றுலங்கும்போது
        சுற்றமெலாம் நேசமுண்டு சுகமுமுண்டு
வீரியதோர் வாணிபத்தால் லாபமோங்கும்
        விரவியதோர் சோதரரால் பீடைகிட்டும்
காரியங்கள் ஜெயமடையுங் கவலையில்லை
        கருதியதோர் பூமியதை வாங்கநேரும்
பாரியதோர் பந்துவகை கர்மமுண்டு
        பலபேர்க்கும் நல்லவனாய் வழங்குவானே.

இ-ள். ஜென்மத்திற்கு.பதினோராம் ராயிசில் சூரியன் நின்றால், சுற்றத்தார் நேசம், சுகம், தான் செய்யும் வியாபாரத்தால் நீண்ட லாபம், தனது துணைவர்களுக்கும் பூரண சுகம், தான் குறித்த காரியமானது விக்னமின்றி ஜெயமடைதல், தான் குறித்த பூமியை வாங்குதல், ஆயினும் தான் பந்துவகையில் பீடைகளும், அனைவர்க்கும் இனிதுடையவனாய் வாழ்ந்திருப்பன் எ-று. 11

### 12-ல் சூரியன் நின்ற பலன்

காரியவற் கருந்தந்தை கதிரோன்றானும்
        கவனமுட னீராறிற் கலக்கும்போது
வீரியங்கள் குறைவதுடன் விரயமுண்டு
        வேந்தர்களால் பகையுண்டு விவசாயத்தால்
சீரியதோ பலிதமெலாங் குறைந்துகாட்டும்
        சிறுவர்களாற் றுன்பமுண்டு சிறப்புகுன்றும்
நாரியர்கள் வகையாலே நவிலொணாத
        நட்டமுண்டு இட்டமில்லை நவில்வாய்நீயே.

இ-ள். சனிக்கு அருந்தந்தையான சூரியன் பன்னிரண்டில் நின்றால், வீரபராக்கிரமம் குறைதல், விரயம், வேந்தர்களால் பகை, விவசாயத்தால் பலனற்பம், தன் புத்திரரால் துன்பம், பெண்கள் வகையில் சொல்லவொண்ணாத விரயம், விரக்தி முதலியவையுண்டாகு மென்றுங் கூறுவாயாக எ-று. 12

### சந்திரன் நன்மை தீமை

சுந்தரஞ்சேர் சந்திரனே நான்கிரண்டு
        சுகமென்றும் நான்குடனே ஐந்துஎட்டு
அந்தமிகும் விரயமெனும் பன்னிரண்டில்
        ஆகாது தீயபலன் ஒன்றுமூன்று



விந்தையுடன் ஆறுடனே எழுஒன்பான்
        விளங்குகின்ற பத்துடனே பத்துமொன்றில்
சிந்தைமிகு நல்லபல னளிப்பாரென்று
        சிறப்பிப்பார் கணிதவல்லோர் சொல்லக்கேளே.

இ-ள். அழகுபொருந்திய சந்திரன் ஜென்மத்திற்கு இரண்டு, நான்கு, ஐந்து, எட்டு, பன்னிரண்டு முதலிய யிடங்களிலிருக்கின் தீயபலனைக் கொடுப்பாரெனவும், ஜென்மம் மூன்று, ஆறு, எழு, ஒன்பது, பத்து, பதினொன்று முதலிய யிடங்களிலிருப்பின் சுகபலனைத் தருவாரென்றும் சொல்வார். அகத்தியமாமுனியே! அவ்விவரமும் சொல்லுகிறேன் கேட்பாயாக எ-று. 13

### 1-ல் சந்திரன் நின்ற பலன்

நண்புறுகுஞ் சந்திரனே ஜென்மந்தன்னில்
        நலமாக வாசம்செய்யும் காலந்தன்னில்
பண்புடனே வாழுமந்த காலந்தன்னில்
        பலபொருளுஞ் சேருமென்பார் பரிவினோடு
தண்பொருளால் வியாபார மோங்கும்பாரு
        தனித்தபிர யாணமதில் ஜெயமேகிட்டும்
உண்மையதாய் உற்றோரால் கௌரவங்கள்
        உண்டாகும் வஸ்திரங்க ளோங்கும்பாரே.

இ-ள். யாவரும் கொண்டாடும் சந்திரன் ஜென்மத்தில் வாசம் செய்யுங்காலம் பற்பலபொருள் சேர்க்கையும், சந்தோஷம், தன் சுய பொருளால் செய்யும் வியாபாரத்தால் கீர்த்தியும், தானே தனித்து செல்லும் பிரயாணத்தில் கீர்த்தியும் ஜெயம் உண்டாவதோடு, தன் பெற்றோரால் பல கௌரவ சிலாக்யமும், பற்பல வஸ்திரங்களும் சேரும் எ-று. 14

### 2-ல் சந்திரன் நின்ற பலன்

சந்திரனே குடும்பமதில் வாசகாலம்
        சலிப்பாகும் தாயவளால் சிணுகுகாட்டும்
சுந்தரஞ்சேர் மனைவியினால் கிலேசஞ்சொல்லு
        சோர்வுண்டு அலைவதுடன் ஜெயமோயில்லை
விந்தைபெரு நண்பர்களால் பொருளும்சேதம்
        வேலொத்த விழியவரால் கலகஞ்சொல்லு
சிந்தையினில் விசனமுடன் சேயன்றானும்
        சேகரித்த பொருளிற்பல நாசந்தானே.

இ-ள். சந்திரன் இரண்டாமிராசியில் வாசஞ் செய்யுங்காலம் சலிப்பு, தன் தாயால் சிணுகுண்டாதல், அழகுபொருந்திய தன் மனைவியால் கிலேசம், சோர்வு, அலைச்சல், திரிச்சல், அபஜயம், தனது ஆப்த நண்பர்களால் பொருட்சேதம், கூர்மைபொருந்திய ஸ்திரீ

ஜனங்களால் கலகம், மனத்தில் கலக்கம், தான் தேடிய பொருளிற் சில நாசமுண்டாதல் முதலிய பலன் நடக்கும் எ-று. 15

3-ல் சந்திரன் நின்ற பலன்

அம்புலிதான் மூன்றிருந்தா லந்தகாலம்
அரிவையர்கள் சேர்க்கையுண்டு அன்பினோடே
செம்பொன்னுஞ் சேருமப்பா சிறப்புமுண்டு
சேயர்களால் மனக்குறையு நீங்கும்பாரு
நம்பியதோ ராடவரால் ஜெயமேயுண்டு
நண்பர்களா லுதவியுண்டு நயமாயோது
வம்புடைய வழக்கதனை ஜெயிப்பானப்பா
வாழ்வுண்டு யிப்பலனை வளமாயோதே.

இ-ள். சந்திரன் ஜென்மத்திற்கு மூன்றாமிராசியில் வாசஞ் செய்யுங்காலம் ஸ்திரீசேர்க்கை, சந்தோஷம், பொன்னாபரணஞ் சேர்தல், சிறப்புண்டாதல், தன் புத்திரரால் தனது மனக்குறை நீங்குதல், தானெதிர்பார்த்திருந்த மனுஷரால் ஜெயம், தனது ஆப்த நண்பர்களால் உதவி, அனேக நாட்களாய் சிரமப்பட்டிருந்த வழக்கை ஜெயிக்குதல் முதலிய பலனுண்டாகும் எ-று. 16

4-ல் சந்திரன் நின்ற பலன்

மங்காத சந்திரனோ நான்கதனில்
மலினமொடு வாழுமந்த காலங்கேளு
தங்கநகை விரயமென்பார் சலிப்பேயுண்டு
தளராத மனைவிக்கு பீடைகாட்டும்
செங்கதிரோன் கிரணமதி லலைந்துவாடி
சேயனுக்கு நோய்காட்டும் சிறுமையுண்டு
அங்கமதில் காயமுண்டு அன்பேகுன்றும்
அறிவுடையோர் கலகமது நேருந்தானே.

இ-ள். ஒளி குறைபாத சந்திரன் ஜென்மத்திற்கு நான்காமிராசியில் வாசம் செய்யும்போது தன் கையிலுள்ள தங்கம் பொன் முதலிய நகைகள் சேதமாதலும், தைரியத்தையுடைய தன் மனைவிக்குப் பீடையும், வெய்யலிலலைந்து திரிந்து அதனால் வியாதியும், தனது தேகத்தில் காயமுண்டாதலும், விசனம், அறிவுடைய உத்தமர் கலகம் முதலியவையுண்டு எ-று. 17

5-ல் சந்திரன் நின்ற பலன்

வட்டமதி யைந்திருந்தால் வளமேகுன்றும்
வழக்குண்டு பூமியினால் வரிசையாக
இட்டஜனந் தன்னாலே பகையேஉண்டு
இடருண்டு புத்திரரால் நட்டமுண்டு



கஷ்டமுடன் அலைந்திருப்பான் கவலைகாட்டும்
கணக்கதனில் கிலேசமுண்டு கண்ணோய்காட்டும்
நட்டமென்பார் பொருள்கொஞ்சங் குடும்பத்தாலே
நான்மறையோர் துவேஷமுண்டு நன்றாயோதே.

இ-ள். ஜென்மத்திற்கு ஐந்தாமிராசியில் சந்திரன் வாசம் செய்யும்போது பூமி மூலமாய் வழக்கு முதலியவை உண்டாதல், தனது இஷ்டஜனங்களால் பகை உண்டாதல், தன் மைந்தர்களால் பல தொந்திரவு, நஷ்டம், கஷ்டத்துடன் அலைந்து திரிதல், கணக்கு வகையில் சந்தேகம், கண்ணோய், நஷ்டம், கஷ்டம், வேதங்களை உணர்ந்த விப்பிரரால் துவேஷமுதலிய பலனுண்டாகுமென்றுங் கூறுவாயாக எ-று.

6-ல் சந்திரன் நின்ற பலன்

நன்றிசெயு சந்திரனோ ஆறுதன்னில்
நலமாக வாழுமந்த காலந்தன்னில்
வென்றிசெறி யரசர்களால் ஜெயமேகிட்டும்
விளங்குமிவன் குடும்பமதில் செல்வந்தானும்
கன்றுபெருங் காலிகளா லிவனுக்கப்பா
கனமான பாத்திரங்கள் வந்துசேரும்
குன்றேறு முலையவளா லின்பமுண்டு
குணமுண்டு யிப்பலனுக் குறைவிராதே.

இ-ள். நன்மையை விளைவிக்கத்தகுந்த சந்திரன் சென்மத்திற்கு ஆறாமிராசியில் வாசஞ்செய்யில் வெற்றிபெற்ற அரசர்களால் லாபமும், தன் குடும்பத்தில் அளவிறந்த தனமிருத்தலும், அநேக மாடுகன்று பெருதலும், பாத்திர வகைகளால் லாபமும், ஸ்திரீயால் சந்தோஷ முதலிய பலன் வந்தடையும் எ-று. 19

7-ல் சந்திரனிருந்த பலன்

வெண்மதியோனே ழதனில் விளங்கும்போது
வேணதுண்டு மனைவியினால் செல்வமப்பா
பண்புறுகுஞ் செல்வர்களால் மகிழ்ச்சியுண்டு
பட்டாடை பலவுண்டு பாங்கினோடே
உண்மையதாய் வெளிதேசந் தனிலிருந்து
உறவினரால் பொருள்வருத்து உண்டுபாரு
வண்மையுள நேசர்களால் சந்தோஷந்தான்
வாழ்வுண்டு யிப்பலனை யுரைசெய்வாயே.

இ-ள். வெண்மைப்பிரகாசத்தையுடைய சந்திரன் சென்மத்திற்கு ஏழாமிராசியில் வாசம்செய்யில் தன் மனைவியினால் அளவிறந்த செல்வம் உண்டாதலும், தன் அருமைப் புதல்வர்களால் சந்தோஷமும், பட்டாடைகள் அநேகமாய் வந்து சேர்தலும், அந்நிய தேசங்களில்

இருக்கும் தனது உறவினரால் பொருள் வருத்து, தன் உண்மைத் தோழர்களால் சந்தோஷம், வாழ்வு முதலியவை உண்டு எ-று. 20

8-ல் சந்திரன் நின்ற பலன்

அம்புலிதா னட்டமத்தி லணுகும்போது
ஆரணங்கு வீட்டைவிட் டோடிப்போவாள்
தெம்புடைய நேசரெலாம் விரோதமாவார்
தெவிட்டாத தாயவளால் சிறுகுகாட்டும்
நம்பியதோர் நேசர்களால் மோசமுண்டு
நானிலத்தோ ரிகழ்ச்சிசெய்ய நேரும்பாரு
வெம்பிடுவா னந்தமட்டும் வீணதாக
விரயமுண்டு பலவகையில் விளக்கமோதே.

இ-ள். ஜென்மத்திற்கு எட்டாமிராசியில் வாசம்செய்யில் அவன் மனைவி கலகத்தால் வீட்டைவிட்டு ஓடிப்போதலும், தனது ஆப்த நண்பரெல்லாம் விரோதமாதலும், அன்புடைய தாயால் சிறுகுண் டாதலும், தான் நம்பியிருந்த தோழர்களால் மோசமும், அனைவரும் இகழ்ச்சிசெய்ய நேருவதோடு மனதில் விசனமும், பற்பல வகையால் வீண் விரயங்களும் உண்டாகும் எ-று. 21

9-ல் சந்திரன் நின்ற பலன்

அன்பான சந்திரனே நவத்தில்வந்தால்
ஆற்றவொணு துன்பமெலா மழியும்பாரு
தென்பாகுங் காரியங்கள் சிறுவராலே
சீற்றமெலாங் குறைவதுடன் சுபங்கள்நேரும்
வன்பான மனைவியுடன் பிரயாணங்கள்
வரிசைபெற உண்டென்பார் வழக்குநீங்கும்
இன்பான வாணிபத்தோ டரசராலே
இவனுக்கு கீர்த்தியுண் டியினிதுகூறே.

இ-ள். சந்தோஷத்தைத் தரத்தக்க சந்திரன் ஜென்மத்திற்கு ஒன்பதாமிராசியில் வாசம் செய்யுங்காலம் தன் கொடுநோய் யாவும் நீங்குதலும், சந்தோஷமான காரியங்களையே செய்தலும், தன் மைந் தர்களால் கீர்த்தியும், கோபங்குறைதலும், சுபசோபனங்கள் உண்டா தலும், தன் ஆசை மனைவியுடன் பிரயாணஞ் செய்தலும், வழக்கு ஜெயமும், வியாபாரத்தாலும், அரசர்களாலும், மிகுந்த கீர்த்தி பிர தாபமும் உண்டாகும் எ-று. 22

10-ல் சந்திரன் நின்ற பலன்

பலர்புகழுஞ் சந்திரனே தசமந்தன்னில்
பாங்காக வாழுமந்த காலந்தன்னில்
நலமருவு மிவனுக்கு நானிலத்தில்
நன்மைபல வுண்டாகும் பிறராலென்க



குலமருவும் பெண்டிரால் குறித்தபூமி
குற்றமற வந்தடையுங் குணமாய்க்கேளு
சிலபொருளும் வந்தடையுஞ் சிறப்பினோடே
சேயனிட வாழ்க்கையது சிறப்புதானே.

இ-ள். யாவரும் போற்றத்தகுந்த சந்திரன் தசமராசி என்னும் 10-ல் வாசமாயின் பற்பல நன்மை வந்தடைதலும், உலகத்தவரால் நன்மையும், தன்குல ஸ்திரீயால் குறித்த பூமியை வாங்குதலும், சில பொருள் சேர்தலும், சிறப்பு மேன்மை முதலிய பலன் உண்டாகும் என்று மேலோர் சொல்வர் எ-று. 23

11-ல் சந்திரன் நின்ற பலன்

பத்துடனே ஒன்றினிலே சந்திரன்தான்
பாங்காக வாழுமந்த காலந்தன்னில்
மெத்தபொருள் சேருமென்பார் எவ்வகைக்கும்
மேலான லாபமுண்டு துணைவராலே
இத்தரையோர் போற்றவல்ல கௌரவங்கள்
இனிதுண்டு நூதனப் பெண்போகமுண்டு
சித்தமதில் கலக்கமிலா தினிதுவாழ்வன்
சிறுவர்களால் பொருள்சேரும் சிறப்பாய்சொல்லே.

இ-ள். சந்திரன் ஜென்மத்திற்குப் பதினொன்றில் வாசஞ் செய் யில் அனேகமான பொருள் சேர்தலும், எவ்வகையைச் செய்யினும் மேலான லாபமும், தன்சகோதரரால் யாவரும் போற்றத்தக்க கௌர வங்களும், நூதன ஸ்திரீயை சம்போகம் செய்தலும், மனத்தில் சஞ்சலமின்றி சுகித்திருத்தலும், தன் மைந்தர்களால் பொருள் சேர்க்கையு முண்டாகும் எ-று. 24

12-ல் சந்திரன் நின்ற பலன்

ஈராறிற் சந்திரன்ரு னிருக்கும்போது
இவனுக்கு கொடுநோயுங் காட்டும்பாரு
பேரானசீதளமும் பெருத்து காட்டும்
பேயனைப்போ லலைந்திடுவான் பிழைகள்செய்வான்
சீரான தனங்குறையும் சிறப்புகுன்றும்
செய்வகையில் பலிதமிலை சேயனுக்கு
வாராது போனபொருள் வளமாய்க்கேளு
வண்புடையோர் பகையுண்டு வளமாயோதே.

இ-ள். ஜென்மத்திற்கு பன்னிரண்டாமிராசியில் சந்திரன் வாசம் செய்யில் கொடிய நோயுண்டாதலும், சீதளநோய் மிகுத்து காட்டலும், பயித்தியம் பிடித்தவனைப்போலலைதலும், குற்றம் செய் தலும், சிறப்புபெற்ற தனங்குறைதல், தான் செய்யுந் தொழிலால்

பலிதமில்லாமை, கைவிட்டு போனபொருள் வராமல் தனது அன்புடைய நேசர்களால் பகையுண்டாதல் முதலியவையுண்டு எ-று. 25

மதிமிகுத்த சித்தர்களில் மேலோர்கூறும்
மேன்மைமிகு சந்திரனே இரவியோடு
சதியுறவே சேருமந்த காலந்தன்னை
சதுர்மறையி லவமாகு மென்றுஓதும்
கதியுறுக்கு மிரவியைவிட் டேழாம்ராசி
காணுமந்த சந்திரர்க்கு பூரணமாகும்
நிதிமிகுத்த ஏழைவிட் டப்பால்வந்தால்
நிலவினுக்கு இருள்காணும் நின்றுபாரே.

இ-ள். அறிவில்மிக்க சித்தர்களுக்கு மேலான அகத்தியமாமுனியே! சந்திரன் சூரியனோடு சேர்ந்தகாலத்தை வேதங்களில் அமாவாசை என்று கூறும். சூரியனிருந்த ராசிக்கு ஏழாம்ராசியிலிருக்கும்போது பூரண சந்திரனாகும். ஏழாம் ராசியை விட்டு அடுத்த ராசியில் பிரவேசிக்கத் தொடங்கினதிலிருந்தே சூரியனுடைய ஒளி நாளுக்குநாள் குறைந்துகொண்டே வரும். இவ்வாறாக சூரியனை விட்டு 7-ராசிகளுக்குள் ளிருக்குங்காலம் சுக்லபக்ஷமென்றும், ஏழாம் ராசியைவிட்டு விலகியகாலம் முதல் மறுபடியும் சூரியனுடன் வந்து சேருங்காலம் வரையில் கிருஷ்ணபக்ஷம் (தேய்பிறை) என்றும் கூறுவதுண்டு. அவற்றின் விவரங் கேட்பாயாக எ-று.

வி-ரை. சூரியனுடன் சேர்ந்தகாலம் அமாவாசை பிரதமையென்றும், 7-ஆம் ராசியிலிருந்து விலகுங்காலம் கிருஷ்ணபக்ஷ பிரதமையென்று கொள்ளவும். இவற்றின் விபரம் இராசி திதி நக்ஷத்திரம் முதலியவைகள் மாறிவரும் விவரங்கள் பின்வரும் உதாரண சக்கரத்தில் சூரியன் எந்த ராசியிலிருந்தானோ அந்த ராசி முதல் 1-முதல் 12 எனக்கொள்க. 1 என்னும் எண் மேஷத்தைக் குறித்தால் சூரியனிருந்த ராசியைக் குறித்ததாம்.

கவனிப்பு:—இதுகாறுங் கூறிவந்த பாவபலன்களும், இனி வரப்போகும் பாவபலன்களும், ஜென்மலக்கினத்தையே ஆதியாகக் கொண்டு தனம், சகோதரம், மாதுரு, புத்திரர், சத்துரு, களத்திரம், ஆயுள், பிதா, தொழில், லாபம், விரயம் எனக் கொள்ள வேண்டுவதாகும். 26

1-ல் செவ்வாய் நின்ற பலன்

சுந்தரஞ்சேர் சோதிடரே சுருக்காய்கேளு
சோர்வில்லா செவ்வாயோ ஜென்மந்தன்னில்
வந்திருக்கும் பலாபலனை விளம்பக்கேளு
மகிழான சுகங்குறையும் போகம்குன்றும்



விந்தைபெற ஜென்மத்தி லிருக்கும்போது
சோதரரால் பகையுண்டு விரோதமுண்டு
சிந்தைமிக வாடிடுவான் சிறப்புகுன்றும்
சேயனுக்கு நோய்காட்டும் விரயமாமே.

இ-ள். அழகுடைய சோதிட விற்பன்னர்காள்! செவ்வாய் ஜென்மத்திலிருக்கில் சகோதரரால் பகை விரோதங்களுண்டாகும். அன்றியும் மனத்தில் கொடிய விசனமும், தன் மேன்மைகுன்றும், தேகத்தில் வியாதியுண்டாவதோடு பொருள் விரயமும் ஏற்படும் எ-று. 27

2-ல் செவ்வாய் நின்ற பலன்

நிலமகன்று னிரண்டிலிருந்தால் நினைவாய்கேளு
நேர்த்தியுள குடும்பமதில் கலகம்சேரும்
உலகினிலே உற்றோரு முடன்பிறந்தோர்
உறவினர்கள் மட்டாக விரோதங்காட்டும்
சிலபொருளுஞ் சேதமுண்டு சேயருக்கு
சீற்றமுறும் விஷத்தாலே பீடையுண்டு
பலவகையி லலைச்சலுண்டு பரிவாய்கேளு
பாங்கான மனைவிக்குந் தோஷஞ்சொல்லே.

இ-ள். ஜென்மத்திற்கு இரண்டாமிராசியில் செவ்வாய் வாசஞ்செய்தால் தனது குடும்பத்தில் கலகமுண்டாதலும், தனது தாய் தந்தையரும் உடன்பிறந்த சகோதரர்களும் உறவினர்களும் விரோதமுண்டாதலும், கையிலுள்ள பொருள் விரயமுண்டாதல், தன் மைந்தர்களுக்கு கொடியவிஷ ஜந்துக்களால் பீடையும், பற்பலவகையாலலைச்சலும், தன் மனைவிக்கு கெண்டாதி தோஷங்களும் உண்டாகுமென்றுங் கூறுக எ-று. 28

3-ல் செவ்வாய் நின்ற பலன்

செவ்வாயோ மூன்றிருந்தால் சிறப்பைக்கேளு
சேயனுக்கு பலபொருளும் சேரும்பாரு
கொவ்வைவாய் மொழியவரால் குடும்பந்தன்னில்
குறையாத செல்வமுண்டு குலத்தோராலே
செவ்வைபெரு மணமுண்டு சிறுவராலே
சீற்றமுறும் பகைதீரும் சிறப்புண்டாகும்
இவ்வகையாய் பலன்மீறும் எளியோருக்கு
ஈகைசெய்வா னிவன்பலனை யினிதுகூறே.

இ-ள். ஜென்மத்திற்கு மூன்றாமிராசியில் செவ்வாய் நிற்கில் பற்பல பொருள் சேர்தலும், ஸ்திரீஜனங்களால் தனதில்லத்தில் குறையாத செல்வ முண்டாதலும், தனது பந்துக்கள் வகையில் நேர்த்தியுற்ற மணமுண்டாதலும், தன் மைந்தர்களால் கொடும்பகை யாவுந் தீர்தலும், சிறப்பும் நாளடைவில் செல்வம் மிகுத்தலும்,

ஏழைகட்கு தானம் முதலியவற்றைச் செய்தல் முதலிய பலனுண்டாகும் என்றுங் கூறுக எ-று. 29

4-ல் செவ்வாய் நின்ற பலன்

முழங்கிடுசேய் நான்கதனி லிருந்தபோது
 மூளுமென்பர் வாதபித்த மிவனுக்கப்பா
வழங்கியதோர் பொருளிற்பல சேதமுண்டு
 வறுமையினு லுடல்மெலிவா னின்னங்கேளு
பழயவழக் கதுதொடுக்கும் பண்போராலே
 பலபகையு முண்டாகும் பணியுஞ்சேதம்
வழங்கியதா யுடல்மெலிவாள் வாழ்க்கைகுன்றும்
 வந்தபிணி தீரநெடு நாளாஞ்சொல்லே.

இ - ள். சென்மத்திற்கு நான்காமிராசியில் செவ்வாய் வாசம் செய்யுங்காலம் வாதபித்த வியாதி அதிகமாதல், தன் கையிலுள்ள பொருள் நாசமடைதல், வறுமை, திரேகபலயீனம், பழமையான வழக்கு இம்சித்தல், தனது நண்பர்களால் பலவித சிந்தனை, பொன்னுபரணஞ் சேதமடைதல், தன் தாய்க்கு உடல் மெலியத்தக்க வியாதி, அவ்வியாதி தீரவென்றால் நெடுநாளாகும் என்றுங் கூறுவாயாக எ-று.

5-ல் செவ்வாய் நின்ற பலன்

சுந்தரஞ்சே ரைந்தினிலே செவ்வாய்நின்றால்
 சுகமுண்டு வாழ்வுண்டு துலக்கமுண்டு
விந்தைபெருங் கன்னியினால் விசனந்தீரும்
 வீரமுள சோதரரால் விரோதந்தீரும்
மந்திரங்கள் சித்தியுரு மகிழ்வதான
 மைந்தர்களோ வித்தையினால் மகிழ்வார்பாரு
சொந்தமதாய் வாகனங்கள் சூழும்பூமி
 சோகமிலா விளைவுண்டு சுகத்தைச்சொல்லே.

இ-ள். அழகு பொருந்திய செவ்வாய் சென்மத்திற்கு ஐந்தாமிராசியில் நின்றால் சுகம் வாழ்க்கை விநோதம் கீர்த்தியுண்டாதல், அழகான தனது மனைவியால் தன் விசனந்தீர்தல், வீரபராக்கிரமமுடைய தனது சகோதரர்களால் பகை நிவர்த்தியாதல், மந்திரவகையில் சித்தி, தனது மைந்தர்களுக்கு வித்தைபெருக்கு, சந்தோஷம், சொந்தமாய் வாகனஞ்சேர்தல், பூமி மூலமாய் அநேக விளைவுண்டாதல் முதலியவற்றால் சுகித்திருப்பானென்றுங் கூறுவாயாக எ-று. 31

6-ல் செவ்வாய் நின்றபலன்

வீரமுள வாறினிலே செவ்வாய்நின்றால்
 விளக்கமுறு மிவன்கீர்த்தி வீரமோங்கும்
சீறுடைய செய்தொழிலால் ஜெயமேசொல்லு
 சிறப்புடைய சோதரர்க்கு சுபங்களுண்டாம்



தாரமதால் மனக்குறையும் நீங்கும்பாரு
 தரித்திரலை காட்டா தந்தமட்டும்
பாரமனை யுண்டாகும் பயமோநீங்கும்
 பணிகள்பல வுண்டாகும் பலமாய்சொல்லே.

இ - ள். தைரியத்தானமென்னும் ஆறாமிராசியில் செவ்வாய் நிற்கில் கீர்த்திபிரதாபம், தைரியமுண்டாதல், தான் செய்யுந்தொழில் மூலமாய் ஜெயம், தன் சகோதரர்களுக்கு கலியாண சுபசோபனம், தன் களத்திரத்தால் மனக்குறை நீங்குதல், தரித்திரமென்பதே இவனிடத்தில் நில்லாது, நூதனமாய் கிரக கட்டடம் ஏற்படும், பயம் நிவர்த்தியாதல், பற்பல பூஷணங்கள் சேருமென்றுங் கூறுவாயாக எ-று. 32

7-ல் செவ்வாய் நின்ற பலன்

நாடியதோ ரேழதிலே செவ்வாய்நின்றால்
 நலமுண்டு விவாகமுண்டு நாற்காடன்னால்
நீடியதோர் பொருளுண்டு நினைத்துசென்று
 நினைவதனை ஜெயமுண்டு நீனிலத்தில்
தேடியதோர் பொருள்தானே கிட்டும்பாரு
 திருடர்களால் போனபொருள் வந்துசேரும்
பாடியதோர் புத்திருண் டாவார்பாரு
 பாலனுக்குக் குறைவில்லை பலமாயோதே.

இ-ள். யாவரும் மகிழும் ஏழாமிராசியில் செவ்வாய் நிற்கில் நன்மையும், விவாகமுண்டாதலும், நாற்கால் ஜீவன்களால் பொருள் சேர்தலும், தான் குறித்துச்சென்ற காரியம் ஜெயமுண்டாதலும், தான் நெடுநாளாய் தேடியிருந்த பொருள் தானே சேர்தலும்; களவு போனபொருள் கைக்குவந்து சேர்தலும், புத்திருண்டாகி ஏதொரு குறைவுமின்றி வாழும்படி நேரும் என்றுங் கூறுவாயாக எ-று. 33

8-ல் செவ்வாய் நின்ற பலன்

வடிவுடைய செவ்வாயே அட்டமத்தில்
 வந்திருக்குங் காலமதின் பலனைக்கேளு
நெடியபகை வந்தடையும் நினைத்துச்சென்ற
 நினைவதனு லலைச்சலுடன் பொருளுஞ்சேதம்
படிமிசையில் வசைசெய்வார் பாலன்றன்னை
 பலத்தபிணி வாதையினால் பாதையுண்டு
கொடியவரால் துன்பமுண்டு குறிப்பாய்கேளு
 கோபமதா லரசர்வகை வழக்கதாமே.

இ-ள். அழகு பொருந்திய செவ்வாய் அட்டமராசியில் நின்றால் பெரிய பகைவந்து மூளுதலும், தான் குறித்துச்சென்ற காரியத்தால் அலைச்சல் பொருள் சேதமுண்டாதல், உலகிலுள்ளோர் ஏளனம்

செய்வர், கொடிய நோயுண்டாதல், கொடிய ஜனங்களால் துன்பமும், கோபத்தால் ஏற்பட்ட தொந்தரவால் அரசர்வகையில் வழக்கு முதலியவை உண்டாகுமென்றுங் கூறுவாயாக எ-று. 34

9-ல் செவ்வாய் நின்ற பலன்

பொருந்தியதோ ரொன்பதிலே சேயிருந்தால்
போற்றரிய பொருள்சேரும் புண்யமுண்டு
வருந்தியதோர் நோய்தீரும் வழக்குதீரும்
வளமான தானியங்கள் வந்துசேரும்
திருந்தியதோர் பந்துவிலே சுபங்கள்நேரும்
திடமான பூமியதை வாங்கநேரும்
இருந்தயிடந் தனில்வெற்றி யுண்டுயுண்டுபாரு
இவனுக்கு பணியாடை யுண்டுபாரே.

இ-ள். போற்றத்தகுந்த செவ்வாய் ஒன்பதாமிராசியில் நின்றால் பொருள்சேர்க்கை புண்யமுண்டாதல், வருத்தத்தைத்தரும் நோய் குணமடையும், வழக்கு ஜெயிக்கும், பலவிததானியங்கள் சேரும், தனது பந்துக்களில் கலியாண முண்டாகும், சிறப்புபெற்ற பூமி யொன்றை வாங்க நேரும், தானிருந்த யிடத்திலேயே வெற்றி, அணிபணிகள் முதலியன சேர்தல் முதலியவையுண்டு எ-று. 35

10-ல் செவ்வாய் நின்ற பலன்

மன்னியதோர் பத்தினிலே செவ்வாய்நின்றால்
மனத்துயர மிகுதியென்பார் வர்க்கந்தன்னில்
சொன்னபடி சூதகமுண் டாகும்பாரு
சோர்வில்லா பாலர்களால் சுகங்கள்கிட்டும்
மன்னியதோர் மங்கையரால் மகிழ்ச்சியுண்டு
மனத்திடமும் மந்திரமு முண்டுபாரு
கனத்ததொரு ஆரியரால் கவலைநீங்கும்
காசினியில் கீர்த்தியுறுங் கண்யந்தானே.

இ-ள். போற்றத்தகுந்த செவ்வாய் பத்தாமிராசியில் நிற்கில் மனதில் அதிக விசனமுண்டாதல், தன் வர்க்கத்தில் சூதகாதிதோஷ முண்டாதல், மேலான தனது புத்திரர்களால் சுகமுண்டாதல், தன் களத்திரத்தால் சுகமுண்டாதல், மனோதைரியமும், மந்திரசித்தியும், கீர்த்திபெற்ற பிராமணரால் விசனம் நீங்குதல், கீர்த்தியுண்டாதல் முதலிய பலன்களெல்லாம் உண்டாகும் எ-று. 36

11-ல் செவ்வாய் நின்ற பலன்

மதித்தபதி னொன்றினிலே செவ்வாய்வந்தால்
மக்களுக்குப் பீடையுண்டு துயரமுண்டு
விதித்தவவன் மனைவிக்குத் துன்பமுண்டு
வீட்டினிலே களவுண்டாம் விளங்கக்கேளு



கதித்தவிவன் காதினிலே நோயுண்டாகும்
கனமான அரசர்வகை துன்பமுண்டு
விதித்ததலம் விட்டேக நேரும்பாரு
வீணான காரியத்தா லலைச்சலாமே.

இ-ள். யாவரும் போற்றும் பதினொன்றாம் ராசியில் செவ்வாய் நிற்கில் தன் மைந்தர்களுக்குப் பீடையும், தன் சொந்த மனைவிக்குப் பீடையும், வீட்டில் களவுபோதல், காதுநோயுண்டாதல், ராஜாக்களால் துன்பமுண்டாதல், தானிருக்கும் இல்லத்தைவிட்டு வேறில்லம் போதல், வீணான காரியங்களில் அலைச்சல் திரிச்சல் முதலியவை உண்டாகும் எ-று. 37

12-ல் செவ்வாய் நின்ற பலன்

பரவியதோர் பன்னிரண்டில் செவ்வாய்நின்றால்
பாங்கான பாலனுக்கு தொல்லைமீறும்
விரவியதோர் வாணிபத்தால் செல்வமில்லை
வீரமது குறையுமென்பார் அன்னமூலம்
பெருகிடுமே சஞ்சலங்கள் பேய்கொண்டோன்போல்
பிறருடனே வார்த்தைசெய்வான் பிசகிராது
நிரவியதோர் குடும்பமதில் நெருப்பினாலே
நேருமொரு பயமுண்டு நினைவாயோதே.

இ-ள். சென்மத்திற்கு பன்னிரண்டாமிராசியில் செவ்வாய் நிற்கின் தொல்லையுண்டாதல், தான் செய்யும் வாணிபத்தால் வருமானங் குறைதல், தைரியங் குறைதல், அன்னத்திற்கே குறைவு, சஞ்சலம், பலவிதமான விசனம், பேய்பிடித்தவன்போல் பேசுதல், தன் வீட்டில் நெருப்பினால் ஆபத்து முதலியன உண்டாகுமென்றுங் கூறுக எ-று. 38

புதன் நன்மை தீமை

சென்மமொடு மூன்றைந்தோ டேழுஎட்டு
செழிப்புடைய ஒன்பதுடன் வியங்கள்மட்டாய்
அன்புபெற வாழுமந்த காலமெல்லாம்
ஆகாது யின்னமொன்று சொல்லக்கேளு
தென்புடைய இரண்டுடனே நான்குஆறு
தெளிவான தசமமுடன் தசமமொன்று
இன்புடனே வாழுகின்ற காலந்தன்னி
லினிதுண்டு விவரமெலா முரைப்பேன்கேளே.

இ-ள். ஜென்மம் மூன்று ஐந்து - எழு - எட்டு - ஒன்பது பன்னிரண்டு இந்த ராசிகளில் மேற்படி புதன் வாசம்செய்யுங் காலங்களில் துன்பமானபலனும், இரண்டு-நான்கு-ஆறு-பத்து-பதினொன்று இந்த

இடங்களில் வாசம் செய்யுங்காலம் நல்ல பலனுமளிப்பான். அவ்விவரத்தை உரைப்பேன் கேட்பாயாக எ-று. 39

### புதன் சென்மத்திலிருந்த பலன்

பலந்தருகுஞ் சென்மமதில் புதனிருந்தால்
பலிதமில்லை வாணிபத்தா லின்னங்கேளு
துலங்குபொருள் கிட்டாது துணைவருக்கு
துஷ்டர்களால் சிஷ்டைபல வுண்டுபாரு
நலங்குறையும் பலபேரும் தூஷிப்பார்கள்
நான்மறையோர் மோசமதால் செல்வம்சேதம்
நிலங்களிலும் விளைவில்லை நெறியோகுன்றும்
நின்றபடி வீண்சிலவு முண்டுசொல்லே.

இ-ள். பலம்பெற்ற ஜென்மத்தில் புதன் நிற்கில் பலிதகுறைவு, வியாபாரபங்கம், வருமானபங்கம், தன் துணைவர்களுக்கு கொடியோர் சேர்க்கையால் தண்டனை, நன்மை குறைவு, பலராலும் தூஷிக்கப்படுவன், நான்கு வேதங்களையுமுணர்ந்த பிராமணரால் செல்வம் விரயமாதல், பூமி மூலமாய் பலிதகுறைவு, வீண் விரயம் முதலியவை உண்டாகுமென்று கூறுக எ-று. 40

### 2-ல் புதன் நின்ற பலன்

பரிந்தபுத னிரண்டிலிருந்தால் பாக்கியமுண்டு
பற்பலரால் செல்வமுண்டு பாங்காய்கேளு
வருந்தியதோர் பிணிதீரும் வாழ்க்கைமேலாம்
வளமைபெரு வாகனங்கள் வாய்க்கும்பாரு
பொருந்தியதோர் வாணிபத்தால் புகழ்ச்சியுண்டு
புன்செய்நிலச் சேர்த்தியுண்டு புகழ்வர்கேளு
மருந்துவகை வாணிபத்தால் மாளாச்செல்வம்
மக்களுடன் சுகித்திருப்பான் மகிழ்வாய்கூறே.

இ - ள். ஜென்மத்திற்கு இரண்டாமிராசியில் புதன் நிற்கில் பாக்கிய சித்தியும், அனேகரால் பொருள் சேர்க்கையும், தனக்கு அனேக நாளாயிருந்த பிணிதீர்தலும், மேலானவாழ்க்கையும், மேலான வாகனங்கள் வந்தடைதலும், தான் செய்யும் வியாபாரத்தால் புகழ்ச்சியும், புஞ்சைநிலங்களை வாங்குதலும், புகழ்ச்சி மருந்துசரக்குகளின் வியாபாரத்தால் மேலான செல்வமும், தன் மைந்தர்களுடன் சுகமாயுஞ் ஜீவித்திருப்பானெனவுங் கூறுக எ-று. 41

### 4-ல் புதன் நின்ற பலன்

நேருற்ற புதன்நான்கி லிருந்தாலப்பா
நிகரில்லை எவருமிவ னெதிரிலென்பர்
சீருற்ற மனைவியினால் சிறப்புண்டாகும்
செழிப்புடைய தாய்வகையில் செல்வமுண்டு



பாருற்ற மன்னர்களால் பயமேநீங்கும்
பரிவுடைய வாகனங்கள் பலவுஞ்சேரும்
வாருற்ற கொங்கையர்கள் தங்களாலே
வளமான பொருளுண்டு வண்மைகூறே.

இ-ள். ஜென்மத்திற்கு நான்காமிராசியில் புதன் நிற்கில் அவனுக்கு எவரும் நிகராகமாட்டாத பலனுண்டு, தன் சொந்த மனைவியால் செல்வமுண்டாகும், மேன்மையையுடைய தன் தாய் வர்க்கங்களிருந்து பொருளுண்டாகும், உலகை அரசாளும் அரசர்களால் தன் மனதிலுள்ள கிலேசம் நீங்குதல், அழகான வாகனங்கள் சேர்தல், அழகுடைய ஸ்தனங்களையுடைய ஸ்திரீ ஜனங்களால் மேலான பொருள் பல சித்திக்கும் என்பதாம் எ-று. 42

### 5-ல் புதன் நின்ற பலன்

பன்னியதோர் புதனைந்தின் பலனைக்கேளு
பலவகையாய் சிலவுண்டு பசாசுபீடை
உன்னியதோர் காரியத்தா லலைச்சலுண்டு
உற்றோரால் பகைகாட்டு முண்மையாக
அன்னியரால் மனத்தாபம் நேரும்பாரு
அழகுடைய மக்களுக்கு அவதிநேரும்
முன்னவரால் கிலேசமுணடு மூளும்வஞ்சம்
முயற்சியினால் ஜெயித்திடுவான் முறைசெய்வாயே.

இ-ள். ஜென்மத்திற்கு ஐந்தாமிராசியில் புதன் நிற்கில் பற்பலவகையால் பொருட்சிலவு, பிசாசுபீடை, தான் குறித்த காரியத்தால் அலைச்சல் திரிச்சல், தன் தாய்தந்தையரால் பகை, அன்னியரால் மனஸ்தாபம், தன் மைந்தர்களுக்குத் துன்பம், தன் முன்பிறந்த சேட்டரால் பகை அதிகமாதல், முயற்சியினால் ஜெயமுதலிய பலன் உண்டு எ-று. 43

### 6-ல் புதன் நின்ற பலன்

புந்தியவர் சஷ்டமத்தி லிருந்தபோது
புகழ்ச்சியுண்டு மகிழ்ச்சியுண்டு புலவராலே
வந்தபகை நீங்கிவிடும் மனதில்துக்கம்
மாறிவிடு மன்னவரால் பொருள்கள்சேரும்
சிந்தையினில் தெய்வபக்தி யுண்டுபாரு
சிறப்பான தந்தையினால் மகிழ்ச்சியுண்டு
விந்தையுள கன்னியவள் சேர்வாள்பாரு
வித்தையினால் செல்வமுண்டு வீரந்தானே.

இ-ள். ஜென்மத்திற்கு ஆறுமிராசியில் புதன் நிற்கில் புகழ்ச்சி, மகிழ்ச்சி, வித்துவான்களால் தனக்குண்டாகும் பகை நிவர்த்தியாதல், மனத்திலுள்ள விசனம் நீங்குதல், அரசர்களால் பொருள் சேர்தல்,

தெய்வபக்தி உண்டாதல், தன் தந்தையால் சந்தோஷ கீர்த்தி, அழகுடைய கன்னி ஒருத்தி வந்துசேர்தல், வித்தையால் அநேகம் பொருள் வந்துசேர்தல் முதலிய பலனுண்டாகும் எ-று. 44

## 7-ல் புதன் நின்ற பலன்

பூரியதோர் புதனேழின் பலனைக்கேளு
புகழ்ச்சியிலை யக்காலம் பொய்யேசொல்வன்
வீரியங்கள் குறையுமென்பார் விவசாயத்தால்
விரயமுண்டு கடனுண்டு வேந்தராலே
காரியங்கள் நாசமென்பார் கவலையுண்டு
கருத்துடைய மனைவிக்கு பீடைகாட்டும்
பாரியதோர் குடும்பமது பிரிந்துபோகும்
பக்ஷமுள நேசரெலாம் பகையதாமே.

இ-ள். ஜென்மத்திற் கேழாமிராசியில் புதன் நிற்கில் மேன்மை குறைவு, பொய்சொல்ல நேர்தல், பலமுதலிய தைரியக்குறைவு, பூமி மூலமாய் பலிதக்குறைவு, அதனால் விரயம், அரசர்களால் தான் குறித்த கார்யம் அபஜெயம், விசனமுண்டாதல், அருமைமனைவிக்குப் பீடை, குடும்பபிரிவு, தனது இஷ்டஜனங்கள்யாவும் பகையாதல் முதலிய பகையுண்டாகும் எ-று. 45

## 8-ல் புதன் நின்ற பலன்

போற்றுகின்ற புதனெட்டி லிருந்தாலப்பா
பொன்பலவும் மாதர்களால் நாசமுண்டு
ஏற்றுகின்ற குடும்பமதில் பீடையுண்டு
எல்லோர்க்கும் பொல்லானாய் விளங்குவான்பார்
சாற்றுகின்ற வாணிபத்தால் விரயங்கொஞ்சம்
சரியற்ற நண்பர்களால் பீடைகாட்டும்
தூற்றுகின்ற மாதர்களால் வழக்குகாட்டும்
துரையவரால் துன்பமுண்டு சுருக்காயோதே.

இ-ள். போற்றத்தகுந்த புதன் அட்டமஸ்தானத்தில் நிற்கில் பணிகள் யாவும் சேதம், பெண்கள் மூலமாய்ப் பொருள் நாசம், யாவருக்குங் கொடியவனாயிருத்தல், தான் செய்யும் வியாபாரத்தால் நஷ்டம், உண்மையற்ற சினேகிதரால் பீடையுண்டாதல், இகழ்ச்சி செய்யாநின்ற பெண்களால் வழக்கும், அரசர்களால் துன்பம் முதலியன உண்டாமெனக் கூறுவாயாக எ-று. 46

## 9-ல் புதன் நின்ற பலன்

சேருமந்த ஒன்பதிலே புதனேநின்றால்
செழித்ததொரு குடும்பமதில் சூன்யமுண்டு
நேருகின்ற வாணிபமோ பலிதமில்லை
நினைவற்று பலவழியில் செல்வஞ்சேதம்



மேருவொத்த மலைமீது தவரிவீழ்வன்
மின்னனையாள் வியாதியினால் மெலிந்துபோவாள்
தேருபிதா மாதாவுக் கதிகபீடை
தெரிந்தவரால் துரோகமுண்டு திரமாயோதே.

இ-ள். ஜென்மத்திற்கு ஒன்பதாமிராசியில் புதன் நிற்கில் தழைத்தோங்கிய குடும்பத்திற்கு பிறரால் சூன்னியமுண்டாதல், செய்யும் வியாபாரததால் பலிதகுறைவு, புத்தி குறைவால் பற்பல வகையாய்த் தன் செல்வம் யாவும் சேதம் உண்டாதல், மேருகிரிக்குச் சமமான மலைமீதிற் செல்லுகையில் தவரி வீழ்தல், தன் மனைவி விபாதியினால் வாடுதல், தன் தாய் தந்தையர்களுக்குப் பெருத்த பீடை, தனக்குத் தெரிந்த மனுஷரால் துரோகம் முதலிய பலன் நடக்கும் எ-று. 47

## 10-ல் புதன் நின்ற பலன்

மேவுபுதன் தசமமதி லிருந்தபோது
மேலான பலனுண்டு மேலோர்நேசம்
ஏவுமந்த வாணிபங்க ளோங்கும்பாரு
எழிலான வாகனங்கள் பலவுமுண்டு
தாவியதோர் தந்தையினால் தயவேயுண்டு
தனயனெனும் பெயரோங்கும் தனிவாய்கேளு
மேவியதோர் பயணமதால் சுகங்களுண்டு
மேன்மையுறுஞ் சோதரர்க்கு மின்பமோதே.

இ-ள். போற்றத்தக்க புதன் தசமராசியில் நிற்கில் நல்ல மேன்மைபெற்ற பலனும், தனவந்தர் நேசம், தான் செய்யும் வாணிப விருத்தி, அழகான வாகனங்கள் வந்து சேர்தல், தன்னைப்பெற்ற தந்தையால் சில வுதவி, தனவந்தனெனுங் கீர்த்தி, தான் சென்ற பிரயாணத்தினால் சுகம், மேன்மை பெற்ற தனது சகோதரர்களுக்கும் இன்பமுதலான பலனுண்டாகும் எ-று. 48

## 11-ல் புதன் நின்ற பலன்

பாங்கான பதினொன்றில் புதனிருந்தால்
பணிபலவுஞ் சேருமென்பார் பயமோநீங்கும்
ஓங்குமிவன் குடும்பமதி லுண்மையாக
ஓதிடுவார் விவாகமுண்டு உற்றோர்செல்வம்
ஈங்கிவனுக் கடையுமப்பா ஈனராலே
எழிலான பூமிபல சேரும்பாரு
ஓங்குகின்ற வாணிபமோ உறுதியாகும்
உற்றபல னுண்மையென உரைப்பாய்நீயே.

இ-ள். ஜென்மத்திற் பதினோராம்ராசிசில் புதன் நிற்கில் பற்பல அணிபணிகள் சேர்தலும், பங்கம் நீங்குதல், தன் குடும்பத்தில்

கல்யாண சுபசோபன முண்டாதல், தன்னை பெற்ற தாய் தந்தையரால் செல்வம், நீச்சர்களால் பற்பல பூமி சேர்தல், தான் செய்யும் வியாபாரமே நிலைப்படுதல் முதலிய பலனுண்டாகும் எ-று. 49

12-ல் புதன் நின்ற பலன்

கூறியதோர் பன்னிரண்டில் புதனிருந்தால்
குவலயத்தில் வெகுகலக முண்டுபாரு
வீறியதோர் வேந்தர்களால் துன்பமுண்டு
விரயமதால் வெளிதேயம் செல்லநேரும்
பூரியதோர் மனைவியவள் சண்டையாலே
போய்விடுவா ளில்லதில் கலகம்சொல்லு
ஆரியர்தன் னுதவியினு லன்னமுண்டு
ஆகாது யிப்பலனை யறிவாய்கூறே.

இ-ள். ஜென்மத்திற்குப் பன்னிரண்டாமிராசியில் புதன் நிற்கில் இப்பூமியில் தனக்காய் அநேக கலகமுண்டாதலும், வீரமுடைய அரசர்களால் துன்பம், தனக்கிருக்கும் அதிகச் செலவால் வீட்டைவிட்டு வெளியே செல்லுதல், தன் மனைவி பல சண்டையால் வீட்டைவிட்டு வெளியே செல்லுதல், குடும்பத்தில் கலகமுண்டாதல், அக்காலம் பிராமணர் உதவியால் அன்னமுண்டிருப்பான் எ-று. 50

குரு நன்மை தீமை

செய்யகுரு ஜென்மமுடன் மூன்றுநான்கு
செழிப்பான எட்டுடனே பத்துமட்டும்
உய்யுபனி ரெண்டினிலே ஆகாதப்பா
உரைத்திடுவா ரிரண்டுடனே ஐந்துவழு
நையுநவ மாறுடனே பத்துமொன்றில்
நல்லபல னளித்திடுவார் நவிலொண்ணாத
வையகத்தோர் போற்றுகின்ற வியாழனென்பார்
வரிசைபெரு விபரமதை யுரைப்பேன்கேளே.

இ-ள். குரு ஜென்மம் மூன்று-நான்கு - எழு-எட்டு-பத்து-பன்னிரண்டு முதலிய இடங்களில் வாசம் செய்யும் வருடம் ஒவ்வொன்றுக்குந் தீயபலனென்றும், ஆறு-ஒன்பது-இரண்டு-ஐந்து-எழு-பதி ஞென்று முதலிய இடங்களில் வாசம்செய்யும் வருடம் ஒவ்வொன்றிலும் நற்பலனை விளைவிப்பரெனவுங் கொள்க. அவற்றின் விவாத்தைச் சொல்லுகிறேன் கேட்பாயாக எ-று. 51

1-ல் குரு நின்ற பலன்

வல்லகுரு ஜென்மமதில் வாசம்செய்யில்
வளமான பூமிநஷ்டம் வழுத்தொண்ணாத
தொல்லையுண்டு அரசர்களால் சுருக்காய்கேளு
தோற்றுமென்பர் கடன்கொஞ்சம் தோகைதன்னால்



அல்லலுண்டு செய்தொழிலு மற்பமாகும்
அரசர்களா லின்பமில்லை அதிசயந்தான்
வல்லவிவன் சோதரர்க்கும் பீடையுண்டு
வளமான வாகனங்கள் சேதமாமே.

இ-ள். பராக்கிரமத்தையுடைய குரு ஜென்மத்தில் நிற்கில் பூமிலாபம், சொல்லவொண்ணாத இன்பம், அரசர்களால் பல இன்பம், கடனுண்டாதல், தன் மனைவியினால் அல்லலுண்டாதல், செய்தொழிலால் அற்பபலிதம், மன்னரால் சுகங்குறைதல், தனது சகோதரர்களுக்கு இன்பம், வளமை பொருந்திய வாகனங்கள் லாபம் உண்டாதல் முதலிய பலனுண்டு எ-று. 52

2-ல் குரு நின்ற பலன்

பொருந்தியதோ ரிரண்டினிலே குருவிருந்தால்
போற்றுவர்காண் பலவகையுஞ் செல்வமுண்டு
திருந்தியதோ ரரசர்களால் செல்வமுண்டு
திரமான மனைவிக்குந் துன்பமில்லை
அருந்தியதோர் மருந்தாலே வியாதிதீரும்
ஆற்றவொண்ணா ரொணந்திரு மன்பாய்கேளு
வருந்தியதோர் சோதரற்கு மின்பமுண்டு
வளமான பூமிபல நேரும்பாரே.

இ-ள். ஜென்மத்திற் கிரண்டாமிராசியில் குரு நிற்கில் அனைவராலும் போற்றப்படுதலும், பற்பல வகையாலும் செல்வமுண்டாதலும், மகிழ்ச்சிபெற்ற அரசர்களால் செல்வமுண்டாதல், தன் மனைவிக்குஞ் சுகமுண்டாதல், தானருந்திய மருந்தினால் வியாதி தீருதல், பழையகடன் தீருதல், வருத்தமடைந்திருக்கும் தனது சகோதரர்களுக்கும் இன்பம் முதலானவை உண்டு எ-று. 53

3-ல் குரு நின்ற பலன்

திடமுற்ற குருமூன்றி லிருந்தாலப்பா
தேற்றிடுவா ரில்லையென அலைந்திருப்பான்
வடிவுற்ற மனைவியினால் வழக்குசண்டை
வளமான சோதரரு மெதிரியாவர்
படிமிசையி லன்னமில்லை பலிதமில்லை
பற்பலரால் மோசமுண்டு பணிவாய்கேளு
கொடியவரின் சேர்க்கையினால் குற்றஞ்சேரும்
கோபமதால் தொந்தரவு முண்டுபாரே.

இ-ள். ஜென்மத்திற்கு மூன்றாமிராசியில் குரு நிற்கில் அவனுக்குதவி செய்வாரின்றி அலைந்திருத்தலும், அழகுபொருந்திய தன் மனைவியால் வழக்கு சண்டை முதலிய உண்டாதலும், தன்னுடன் பிறந்த சகோதர உதவி யிருத்தல், உண்பதற்கும் அன்னமின்றி யிருப்பான், பூமியில் விளைவு அற்பம் பலராலும் மோசம்போவான்,

கொடியோர்களின் சேர்க்கையால் குற்றமுண்டாகும், கோபத்தால் பலதொந்திரவு முதலியவையுண்டு எ-று. 54

4-ல் குரு நின்ற பலன்

தக்ககுரு நான்கிருந்தால் பலனைக்கேளு
தளராத செல்வமெலாந் தளர்ந்துபோகும்
ஒக்கவிவன் தேகமதில் நோயுங்காட்டும்
உற்றோரும் மற்றோரும் பிரிந்துபோவார்
மிக்கவிவன் செய்தொழிலான் கடனேமீறும்
மேலான ஆடவரால் பகையுங்கிட்டும்
தக்கவனை மடிந்திடுவான் தரித்திரங்கள்
தலைமீருந் தயவுடையோர் விரோதமாமே.

இ-ள். ஜென்மத்திற்கு நான்காமிராசியில் குரு நிற்கில் தளராச் செல்வமாயினும் தளர்ந்துபோதலும், தேகத்தில் நோயுண்டாதல், தாய் தந்தையர் பந்து ஜனங்கள் முதலானோர் சுகங்களும், தான் செய்யுந் தொழிலால் கடனதிகமாதல், பெருமைபெற்ற புருஷர்கள் இன்பம் தாயார்க்கு தீர்க்கவயது, அதிகமான தரித்திரமுண்டாதல், தன்னிடம் பக்ஷமுள்ளோர் யாவரும் சுகித்திருப்பார் எ-று. 55

5-ல் குரு நின்ற பலன்

அம்புவியோர் போற்றுகுரு ஐந்திருந்தால்
அனைவருமே புகழ்ச்சிபெற வாழ்வான்பாரு
நம்பியதோர் மாதர்களால் நன்மையுண்டு
நானிலத்து ராஜர்களால் மகிழ்ச்சியுண்டு
தெம்புடைய கன்னியரால் பொருளுங்கிட்டும்
தேசமதில் புகழ்ச்சியுண்டு வாகனங்கள்
இப்புவியில் வந்தடையு மிவனுக்கப்பா
எழிலான யோகமுண்டு யின்பமோதே.

இ-ள். மானிலத்தோர் போற்றத்தகுந்த குரு ஜென்மத்திற் கைந்தாமிராசியில் குரு நிற்கில் யாவராலும் போற்றத்தகுந்தவனும், தான் நம்பின மாதர்களால் நன்மையும், அரசர்களால் சந்தோஷம், அன்பான தனது மனைவியால் பொருள் சேர்தலும், இப்புவியில் சந்தோஷமும், அழகான வாகனங்கள் சேர்தல், மேற்படி வருடமொன்றுக்கும் நல்ல மேன்மையைப்படைத்த யோகங்கள் பல சித்திக்குமென்றுங் கூறுவாயாக எ-று. 56

6-ல் குரு நின்ற பலன்

சேருகுரு ஆறிருந்தால் சிறப்பைக்கேளு
செழித்தவிவன் பூமியதில் தனங்கள்கிட்டும்
நேருமந்த தொழிலதனல் பூமிவாங்கி
நிலைத்திருப்பான் பலமழியுஞ் செல்வமுண்டு



சாருமிவன் சோதரரின் பொருளின்கொஞ்சம்
சரியான பெண்களினல் செம்பொன் னுண்டு
பாரினிலே யிவன்பெருமை பகரொணுது
பணிகளதால் கௌரவங்க ளோங்கும்பாரே.

இ-ள். குரு ஜென்மத்திற்கு ஆறுமிராசியில் நிற்கில் தனது பூமியால் தனஞ்சேர்தலும், தான் செய்யுந் தொழிலாலும் தனம் சேர்ந்து அப்பொருளால் பூமிமுதலியவை வாங்குவான், பற்பல வகையிலுஞ் செல்வமுண்டு, இவன் துணைவன் பொருள் வந்தடையும், ஸ்திரீஜனங்களால் பொன்னுபரணஞ் சேரும், ஜனித்த வருஷம் ஒன்று வரையில் சொல்லவொண்ணுத யோகமுண்டென்றுங் கூறுவாயாக எ-று. 57

7-ல் குரு நின்ற பலன்

மேலவர்கள் போற்றுகுரு ஏழிலிருந்தால்
மின்னனையாள் வந்தடைவா ளின்னங்கேளு
சாலவிவன் தந்தைக்கும் யோகமுண்டு
சரியான கூபமொன்று உண்டுசெய்வான்
பாலர்களால் பெருமையுண்டு பகரொணுத
பாக்கியங்கள் சேருமென்று பகர்வாயப்பா
மேலவர்க ளுதவியினுல் தான்குறித்த
நினைவெல்லாம் ஜெயிக்குமப்பா நினைவாயோதே.

இ-ள். மேன்மைபெற்ற தேவர்கள் கொண்டாடும் குரு ஜென்மத்திற்கு ஏழாமிராசியில் நிற்கில் அழகிய ஸ்திரீ வந்தடைவாள், இவனது பிதாவுக்கும் மேலான யோகமுண்டு, கிணறுண்டாக்குவான், சிறுவர்களால் சொல்லவொண்ணுத பெருமையும் பாக்கியமும் உண்டாவதோடு, மேலான தனவந்தர்களுதவியால் தான் குறித்த காரியம் யாவும் ஜெயிக்குமென்றுங் கூறுவாயாக எ-று. 58

8-ல் குரு நின்ற பலன்

கூறுமந்த அட்டமத்தில் குருவிருந்தால்
கோபமுண்டு மன்னவரால் பொருளும்சேதம்
ஏறுதனங் குறைந்துவிடுஞ் சூலைநோயும்
எண்ணவொணு மண்டையிடி வந்துகிட்டும்
வீறுகின்ற மைந்தர்களால் பொருளுஞ்சேதம்
வீணன காரியத்தா லலையநேரும்
சேருபொரு சிலவழிய வனேகதொல்லை
சிறப்பில்லை யிப்பலனைத் திரமாயோதே.

இ-ள். ஜென்மத்திற் கெட்டாமிராசியில் குரு நிற்கில் அரசர்களால் கோபம், பொருட்சேதம், கையிலுள்ள தனங்குறைதல், சூலைநோய், மண்டையிடி, தனது சிறுவர்களால் பொருட்சிலவு, வீண்

காரியங்களில் அலைந்துதிரிதல், தனக்கு வரும்பொருள், அநேக தொல்லை முதலியவற்றால் சிலவழிதல், சிறப்பு குன்றுதல் முதலிய பலனெல்லாம் வந்தடையும் எ-று. 59

### 9-ல் குரு நின்ற பலன்

பொருந்துகுரு ஒன்பதினி லிருந்தாலப்பா
புகழ்ச்சியுண்டு மகிழ்ச்சியுண்டு புண்யமுண்டு
இருந்தயிடந் தன்னில்வெகு இஷ்டராலே
இவனுக்கு காரியங்கள் பலவுங்கிட்டும்
திருந்தியதோர் தந்தைபொருள் சிறப்பதாக
தேரியதால் பூமிபல வுண்டுபாரு
வருந்தியதோர் நோய்பலவுந் தீரும்பாரு
வளமான வாகனத்தா லிலாபஞ்சொல்லே.

இ-ள். ஜென்மத்திற் கொன்பதில் குரு நிற்கில் புகழ்ச்சி, மகிழ்ச்சி, புண்ணியமுண்டாதல், தானிருந்த இடத்திலுள்ள நண்பர்களால் தான் குறித்த காரியம்பலவுஞ் சித்தியாதல், மகிழ்ச்சி பெற்ற தனது தந்தைப் பொருளைக்கொண்டு பூமி முதலியவற்றை வாங்குதல், வருந்தத்தக்க நோய்பலவும் மாறிப்போகும், மகிழ்ச்சி பெற்ற வாகனங்களால் லாபமுண்டாதல் எ-று. 60

### 10-ல் குரு நின்ற பலன்

இலகுகுரு தசமமதி லிருந்தபோது
இவனுக்கு நோயுண்டு இன்பமில்லை
கலகமுண்டு கன்னியரால் கனவழக்கு
காசினியோர் விரோதமென்பார் கவலையுண்டு
பலகுறைகள் வந்தடையு மக்காலத்தில்
பகரவொணா வியமுண்டு பணியுஞ்சேதம்
சிலகுறையா லில்லமதை விட்டுப்போவான்
சிறப்பெல்லாங் குன்றுமென உரைசெய்வாயே.

இ-ள். மேன்மைபெற்ற குரு ஜென்மத்திற்குப் பத்தாமிராசியில் நிற்கில் நோயுண்டாதல், துன்பம், ஸ்திரீ ஜனங்களால் கலகம் உண்டாதல், அதனால் வழக்கு, உலகிலுள்ள அனைவரும் விரோதம், விசனம், பற்பல குறையுண்டாதல், அளவில்லாத சிலவேற்படுதல், இவ்விதத்தால் தனது இல்லத்தைவிட்டுப் போகநேரும், கௌரவக் குறைவுண்டாமென்றுஞ் சொல்வாயாக எ-று. 61

### 11-ல் குரு நின்ற பலன்

உரைசெய்வார் பதினொன்றிற் குருவிருந்தால்
உற்றபலன் மிகுதியென்பார் சுபங்கள்சொல்லு
தரைதனிலே தானியத்தா லதிகசெல்வம்
தன்னியனுய் வாழ்ந்திடுவா னின்னங்கேளு



திரமுடனே செய்தொழிலால் கௌரவங்கள்
தீரமொடு வீரமுண்டு திறமையுண்டு
கரியகுழன் மாதர்களால் கவலைநீங்கும்
காசினிக்கு அரசருறவாவார் பாரே.

இ-ள். ஜென்மத்திற்குப் பதினொன்றில் குரு நிற்கில் பலன் அதிகம், கலியாணம் உண்டாதல், பூமியில் உற்பத்தியாகும் தானியங்களால் மிக்க செல்வம், தனவானென்னும் பிரக்யாதியுடன் வாழ்தல், தான் செய்யுந்தொழில் முகாந்தரமாய் கௌரவமேம்பாடு, தீரம், வீரம், பராக்கிரமம், ஸ்திரீ ஜனங்களால் தன் விசனம் நீங்குதல், அரசர்களெல்லாம் உறவாதல் முதலிய பலனுண்டு எ-று. 62

### 12-ல் குரு நின்ற பலன்

நிச்சயமாய்ப் பன்னிரண்டில் குருவிருந்தால்
நினைவுகுன்றும் விஷபேதி வீக்கமுண்டு
அச்சமுள அரசர்களா லனேகந்துன்பம்
ஆற்றவொணாக் கொடுநோயால் பொருளுஞ்சேதம்
உச்சிதமாய் செய்ததொழில்தான் விட்டுப்போகும்
உற்றோரால் துன்பமுண்டு உண்மையாக
இச்சையுள கன்னியினால் பலவுஞ்சேதம்
இவனுக்கு கண்டமொன்று உண்டுபாரே.

இ-ள். ஜென்மத்திற்குப் பன்னிரண்டாமிராசியில் குரு நிற்கில் அறிவு குறைதல், விஷபேதி, வீக்கமுண்டாதல், அரசர்களால் பற்பல விதமான துன்பமுண்டாதல், ஆற்றவொண்ணாத நோயால் பொருள் சேதமுண்டாதல், தான் செய்யுந்தொழில் தன்னைவிட்டு நீங்குதல், தன் பெற்றோரால் துன்பமுண்டாதல், தான் இச்சித்த ஸ்திரீயால் பொருள்சேதமுண்டாதல், இவை ஓர் கண்டமென்றுங் கூறுக எ-று.

### 1-ல் சுக்கிரன் பலன்

வண்மையுள சென்மமதில் வெள்ளிநின்றால்
வளமான பொன்பொருளுஞ் சேரும்பாரு
உண்மையதாய் வாகனங்க ளுண்டுமேலும்
உற்றோரும் மற்றோரும் க்ஷேமமாவர்
தன்மையதாய் புன்மையினால் தழைத்துவாழ்வன்
தளராத குடும்பமதில் கலியாணங்கள்
வெண்மைநிற வஸ்துவினால் செல்வமுண்டு
வேந்தர்களா லுபகார முண்டுபாரே.

இ-ள். அழகு பொருந்திய சுக்கிரன் சென்மராசியில் நிற்கில் அநேக பொன்பொருள் சேர்தல், வாகனங்கள் சேர்தல், தனது தாய் தந்தையரும் மற்றவருஞ் க்ஷேமமாயிருத்தல், சந்தோஷத்தோடு சுகித்து வாழ்தல், தன் குடும்பத்தில் சுபசோபனங்கள் உண்டாதல்,

வெள்ளை நிறமுடைய வஸ்துக்களின் வியாபாரத்தால் செல்வமும், அரசர்களால் உபகாரம் முதலியன உண்டாகும் எ-று. 64

2-ல் சுக்கிரன் நின்ற பலன்

சிறந்தபுக ழிரண்டிருந்தால் செழிப்பைக்கேளு
செல்வமதில் மிக்கனும் சேர்ந்தோராலே
குறைந்ததன மிகுதியுண்டு குறிப்பாய்க்கேளு
குறையகலும் யாத்திரையும் செய்வான்பாரு
உறைந்தபிதுர் குடும்பமதில் கலியாணந்தான்
உள்ளபடி நடக்குமதால் பெருமையுண்டு
மறந்தமனை வந்தடையும் மகிழ்ச்சியோடு
மாளாத வியாபாரச் செல்வஞ்சொல்லே.

இ-ள். சிறப்புபெற்ற சுக்கிரன் சென்மத்திற் கிரண்டாமிராசியில் நிற்கில் அளவிறந்த செல்வத்தையுடைய தனவந்தனும், சில வழிந்த தனம் மறுபடியுஞ் சேர்தலும், தன் மனக்குறை நீங்குதல், தலயாத்திரை செய்தல், தன் பிதுர்வர்க்கத்தில் கலியாண முதலியவை உண்டாதல், அதனால் பெருமை உண்டாதல், தான் மறந்துபோன மனை வந்துசேர்தல், வியாபாரத்தால் அளவில்லாச் செல்வமுதலியன உண்டாகுமென்றுங் கூறுக எ-று. 65

3-ல் சுக்கிரன் நின்ற பலன்

சுக்கிரனே மூன்றிருந்தால் பலனைக்கேளு
சுகமான சோதரிக்கு விவாகமுண்டு
தக்கவிவன் பூமியினிற் செல்வமோங்கும்
தவராத வாலிபரால் பொருளுங்கிட்டும்
ஒக்கவிவன் களத்திரத்தா லோங்குஞ்செல்வம்
உற்றோரால் பெருமையுண்டு உணவுமுண்டு
மிக்கவிவன் செய்யுமொரு வியாபாரத்தால்
விளக்கமற வாழ்ந்திடுவான் விவரங்கேளே.

இ-ள். ஜென்மத்திற்கு மூன்றுமிராசியில் சுக்கிரன் நிற்கில் அவன் சகோதரிக்குக் கலியாணமுண்டாதலும், தன் பூமியின் விளைவு தானியத்தால் செல்வமோங்குதலும், உண்மையையுடைய வாலிப நேசர்களால் பொருள் உபகாரம், தனது களத்திரத்தால் செல்வம் உண்டாதல், தன் தாய்தந்தையரால் பெருமை, உணவு முதலியவை கிடைக்குதல், தான் செய்யும் வியாபாரத்தால் பெருமைபெற வாழ்ந்திருத்தல் முதலிய பலன் நடக்கும் எ-று. 66

4-ல் சுக்கிரன் நின்ற பலன்

புண்ணியஞ்சேர் சுக்கிரனு லுன்கிருந்தால்
புரவலராற் செல்வமுண்டு புண்யமுண்டு
பண்ணியதோர் செட்டுவகை பலிதமாகும்
பணிபலவுஞ் சேர்த்திடுவான் பாக்யமுண்டு



எண்ணியதோர் கருமமெலாங் கூடும்பாரு
ஏற்றமைந்தர் தன்னாலு மின்பமுண்டு
கண்ணியமாய் வாழ்ந்திருப்பான் கவலையில்லை
காணறியா வாகனங்கள் சேரும்பாரே.

இ-ள். புண்யம் பெருகும் சுக்கிரன் சென்மத்திற்கு நான்காமிராசியில் இருந்தால் அரசர்களால் செல்வம், புண்யமுண்டாதல், தான் செய்யும் விவசாயத்தொழிலால் மிக்க செல்வம் பலிதமாதல், அநேக ஆபரணங்கள் சேர்தல், பாக்யமுண்டாதல், தான் நினைத்த காரியஞ் ஜெயமாதல், தன் புத்திரர்களால் சந்தோஷம், சந்தோஷத்துடன் வாழ்ந்திருப்பதோடு அநேக வாகனங்களும் சித்திக்குமென்று கூறுக எ-று. 67

5-ல் சுக்கிரன் நின்ற பலன்

திருந்தியதோ ரைந்தினிலே புகரிருந்தால்
தெளிவான கன்னியவள் சேர்வாள்பாரு
பொருந்தியதோ ரிராசர்களால் புகழ்ச்சியுண்டு
போற்றறியா ஞானிகளால் சிலாக்யமுண்டு
வருந்தியதோர் மனைவிக்கு வாழ்வுமுண்டு
வளமுடைய பூமிபல சேரும்பாரு
மருந்துவகை யாலிவனுக் கின்பமுண்டு
மாளாதப் பொன்னுண்டு மகிழவாயோதே.

இ-ள். ஜென்மத்திற்கு ஐந்தாமிராசியில் சுக்கிரன் வாசமாயின் அழகான பெண்ணொருத்தி சேருதல், மன்னர்களால் புகழ்ச்சியுண்டாதல், போற்றத்தக்க ஞானியர்களால் சிலாக்கியம், வருத்தப்படுந் தனது மனைவிக்கும் வாழ்வுண்டாதல், மேன்மை பொருந்திய பூமி பல சேர்தல், மருந்துவகையால் சந்தோஷமும் இலாபமும் உண்டாகும் எ-று. 68

6-ல் சுக்கிரன் நின்ற பலன்

தெள்ளியதோர் சஷ்டமத்தில் புகரிருந்தால்
தேற்றிடுவா ரனேகருண்டு தெளிவுமுண்டு
கள்ளமனக் காரிழையால் கனத்தசெல்வம
காசினியிற் பலவுண்டு கவனமாய்க்கேள்
வள்ளியதோர் கல்வியினால் வருத்தமில்லை
வற்கமதிற் கலியாண முண்டுபாரு
நள்ளியதோர் சிவப்பவனால் நன்மையுண்டு
நானிலத்தி லிவன்பெருமை நவிலொணாதே.

இ-ள். அழகுபொருந்திய சுக்கிரன் ஜென்மத்திற்கு ஆறுமிராசியில் நிற்கில் அனேகராலுபகாரம் பெருதலும், தெளிவுண்டாதல், திருட்டுமனமுடைய பெண்களால் மிக்க செல்வமும், அனேகம்

பொருள் சேர்தல், தான் குறித்த கல்விமூலமாய் சந்தோஷம், தன் வற்கங்களில் கலியாணமுண்டாதல், ஓர் சிவந்த மனிதனால் நன்மை யுண்டாதல், அளவில்லா பெருமை முதலியன உண்டாகும் எ-று. 69

7-ல் சுக்கிரன் நின்ற பலன்

தென்புற்ற சுக்கிரன்றா னேழில்வந்தால்
தெளிவான மனைவிக்கு பீடையுண்டு
இன்புற்ற வாகனங்கள் சேதமாகும்
எழிலான மாதாவுக் கின்பமில்லை
அன்புற்ற சோதருக் கலைச்சலுண்டு
அழகுகுறைந் தவமானம் நேரும்பாரு
முன்புற்ற கலமதா லலைச்சலாகும்
மூளுமிவன் காதினிலே நோயுமாமே.

இ-ள். சந்தோஷத்தைத்தருஞ் சுக்கிரன் ஜென்மத்திற்கு எழா மிராசியில் வாசம் செய்யில் தன் மனைவிக்குப் பீடையும், அழகான வாகனங்கள் சேதமடைதலும், தன் தாய்க்கு இன்பங்குறைதலும், தனது சகோதாருக் கலைச்சலுண்டாதலும், அழகுகுறைதல், அவமானம் முதலியவைகளும், நான்பட்ட கலகத்தாலலைச்சலும், காது நோய் முதலியன உண்டாகும் எ-று. 70

8-ல் சுக்கிரன் நின்ற பலன்

அட்டமத்திற் சுக்கிரன்றா னணுகும்போது
ஐயையோ வியாதியினா லழிந்துபோவான்
திட்டமுள பொன்னுக்கோ வழக்குமுண்டு
தேற்றறியா கடனுண்டு திடமாய்கேளு
கட்டமுண்டு அன்னத்திற் கலைச்சலுண்டு
கவலையுண்டு கன்னியரால் துரோகமுண்டு
இட்டமுளோர் விரோதமதா லிவனுக்கப்பா
இடருண்டு இவனுக்குயினத்தா லென்னே.

இ-ள். ஜென்மத்திற்கு எட்டாமிராசியில் சுக்கிரன் வாசம் செய் யில் மாளாத வியாதியால் மடிதல், தன் பூர்வோத்திர தனத்திற்கு வழக்குண்டாதல், அளவில்லாத ரொணச்சல்லிய முண்டாதல், கஷ்டம், அன்னத்திற்கே அலைச்சல், விசனம், பெண்களால் துரோகம், தனது இஷ்டஜனங்கள் விரோதமாதல், இவனினத்தவரால் பலவித விசனம் முதலிய உண்டாகுமென்றும் கூறுக எ-று. 71

9-ல் சுக்கிரன் நின்ற பலன்

வாழுகின்ற சுக்கிரனோ நவத்தில்நின்றால்
வளமான மனைவியினால் துன்பஞ்சேரும்
சூழுகின்ற உறவினரால் தொடுவழக்கு
சுற்றமதில் கர்மமொன்று சூழும்பாரு



தாழுமிவன் குடும்பமப்பா தளர்ச்சியுண்டு
தனவான்கள் விரோதமுண்டு தனியேநின்று
ஊழுவினை யிதுவெனவே எண்ணியப்பா
உருகிடுவா னிவனுக்கு உணவுமட்டே.

இ-ள். கொண்டாடத்தக்க சுக்கிரன் ஜென்மத்திற்கு ஒன்பதா மிராசியில் வாசம் செய்யில் தனது மனைவியினால் துன்பமுண்டாதல், தனது உறவினர்களால் துன்பமுண்டாதல், தனது பிதுர்வற்கங்களில் சூதகாதிகளுண்டாதல், குடும்பந்தாழ்தல், தளர்ச்சி, தனவந்தரின் விரோதங்கள், தான் செய்த ஊழ்வினைப்பயனென்று மனதிலெண்ணி உருகி யிருப்பானென்றுங் கூறுக எ-று. 72

10-ல் சுக்கிரன் நின்ற பலன்

வேண்டியதோர் சுக்கிரன்றான் பத்திலிருந்தால்
விளக்கமுள செய்தொழிலோ விட்டுப்போகும்
தூண்டியதோர் சோதரரா லின்பமில்லை
துணைவருகும் நேயர்களும் பிரிந்துபோவார்
நீண்டவிவன் மனைவிக்கு கெண்டமுண்டு
நீனிலத்திலுள்ள சிலர்விரோத மாவாரப்பா
பூண்டிருந்த பணிகள்பல சேதமாகும்
புருடரெனில் மனைவிக்கு கெண்டஞ்சொல்லே.

இ-ள். போற்றத்தகுந்த சுக்கிரன் ஜென்மத்திற்கு பத்தாமிராசி யிலிருந்தால் தான் செய்யுந்தொழில் விட்டுப்போதலும், தன் சகோ தரர்களால் இன்பங்குறைவு, தனக்கு துணைவரத்தகுந்த சினேகர் பிரிந்துபோதல், தன் மனைவிக்கு கெண்டமுண்டாதல், இப்பூமியி லுள்ள சிலர் விரோதமாதல், தானணிந்திருந்த பூஷணங்கள் பல சேதமாதல், இவ்வாறு புருடப்பிரஜைக்கென்னில் கட்டாயம் தன் மனைவி யிறந்து போவாளென்றே கூறுவாயாக எ-று. 73

11-ல் சுக்கிரன் நின்ற பலன்

பரிவான பதினொன்றில் வெள்ளிவந்தால்
பலபேர்க்கும் நேயனுமாய் வாழ்வான்பாரு
அரிவான மனைவிக்கு அன்பேயுண்டு
அந்தணரா லின்பமுண்டு அனந்தகோடி
திரிவானிச் சாதகனே தேசமெங்கும்
தேற்றியதோர் வியாபார வகையிலப்பா
சரியான வாகனத்தா லிலாபமுண்டு
சாற்றவொணா திவன்பெருமை சரியாயோதே.

இ-ள். போற்றத்தகுந்த சுக்கிரன் ஜென்மத்திற்கு பதினொன் றில் வாசம் செய்யில் பலபேர்க்கும் அன்புடையவனாக வாழ்ந்திருத்த

லும், தன் மனைவிக்கு இன்பமும், பிராமணர்களால் பலவிதமான சந்தோஷங்களும், இத்தேசமெங்கும் வியாபாரத்தால் புகழ்ச்சியடைந்து லாபத்தைச் சம்பாதிப்பா னென்றுங் கூறுக எ-று. 74

12-ல் சுக்கிரன் நின்ற பலன்

பாங்குடனே சுக்கிரனே பத்திரண்டில்
பலமாக வாழுமந்த காலந்தன்னில்
ஓங்குமிவன் குடும்பமதில் உயர்தனங்கள்
உள்ளபடி வாணிபத்தா லிலாபமுண்டு
தேங்கியதோர் துணைவரெலாம் செழித்துவாழ்வர்
தெளிவான வாகனத்தா லிலாபமுண்டு
வாங்கியதோர் கடன்பலவு நீங்கும்பாரு
வளமான ஆயுதங்கள் சேரும்சொல்லே.

இ-ள். புகழ்ச்சிபெற்ற சுக்கிரன் ஜென்மத்திற்கு பனிரெண்டாமிராசியில் நிற்கில் குடும்பத்தில் பலவித மகிழ்ச்சியும், தனஞ்சேர்தலும், செய்யுந்தொழிலால் மேன்மை கீர்த்தி பிரதாபங்களும் லாபமுமுண்டாகும், வருந்தியிருந்த தனது துணைவர்களனைவரும் சந்தோஷத்துடன் வாழ்தல், மேன்மைபெற்ற வாகனத்தாலிலாபம், தான் வாங்கிய கடனெல்லாம் நீங்குதல், அழகான ஆயுதங்கள் பற்பல சேருமென்றுங் கூறுக எ-று. 75

கோசார சனி விவரம்

வங்குசனி பொங்குசனி மரணஞ்செய்யும்
மரலியென்பார் மூவகையின் பெயருரைத்தேன்
பொங்கியதோர் விரயமுடன் சென்மம்ரெண்டு
புகலறியா ராசிகளே கொடியதாகும்
மங்கியதோர் நான்கைந்து ஏழுஎட்டு
மறக்கவொணு ஒன்பதுடன் பத்துமட்டாய்
தங்குமந்த காலமதில் துன்பமுண்டு
தாரணியில் வாழ்வெல்லாந் தயங்கும்பாரே.

இ - ள். அகத்தியமாமுனியே! மூவகைச் சனியென்பது வங்கு சனி-பொங்கு சனி-மரண சனி என்னும் பெயருடையதாம். இவை ஜென்மம் இரண்டு பனிரெண்டு என்னும் மூன்று க்ஷேத்திரங்களில் வாசகாலமாகும். இதுவுமன்றி, சென்மத்திற்கு நான்கு-ஐந்து-ஏழு-எட்டு-ஒன்பது-பத்து முதலிய க்ஷேத்திரங்களில் வருங்காலமுங்கூட துன்பமும் வாழ்க்கையாவுந் தயங்கும் எ-று.

வி-ரை. வங்குசனி, பொங்குசனி, மரணசனியென்பது ஆதியில் 12-1-2-ல் சனி வரும்போது வங்குசனி யென்றும், இரண்டாவது 12-1-2-ல் வரும்போது பொங்குசனி யென்றும், அந்தியில்



மூன்ருவதாக 12-1-2-ல் வரும்சனியை மரணசனி என்றுங் கூறுவர். இவற்றுள் முதல் சனியைவிட கடைசி சனியே கொடியவன், மத்தியில் வரும் சனியோகத்தை தருபவன் என்றும் வேறு சாஸ்திரங்கள் கூறும். இவற்றின் விவரம்:—ஓராசாரம், பிருகத் ஜாதகம் முதலிய நூற்களில் விவரமாய் காணலாம்.

சனி ராசியொன்றுக்கு வாசம்செய்யும் வருஷம்-2, மாதம்-6 வீதம் 12-ராசிகளுக்கும் வருடம்-30, சுபக்ஷேத்திரங்களான 3-6-11 என்னும் மூன்றிராசிகளுக்கும் வருஷம்-7, மாதம்-6 போக மிகுந்துள்ள வருஷம்-22, மாதம் 6-க்கும் கொடியராசி யென்னும் பெயரால் கொடிய பலனையே உபதேசித்து வந்தமையால் மானிடர்க்கு $7\frac{1}{2}$-வருடம் இன்பபலனும், மற்றும் $22\frac{1}{2}$-வருடங்களுக்கும் துன்பமே ஏற்படுமாயின், ஜனங்கள் உஜ்ஜீவிப்பதே பிரமாதம் இயற்கையிலும் அவ்வாறு இல்லையே அவ்வாறு இருக்குமாயின் உலகம் எவ்வாறு நிலைக்குமென்ற சந்தேகத்தால் கேட்டதேயாகும். 76

1-ல் சனி நின்ற பலன்

காரியவன் ஜென்மத்திற் கலந்தானுகில்
கலக்கமுருங் குடும்பமதில் வழக்குசண்டை
வீரியங்கள் குறைவாகும் விசனந்தோன்றும்
விளங்கியதோர் வாணிபத்தால் பொருளும்சேதம்
கூறியதோ ரரசர்களால் விரோதமுண்டு
குன்மமெனும் நோய்காணும் குவலயத்தில்
ஆரியரா லச்சமுண்டு ஆரணங்கு
அன்னியஊர் சென்றிடுவா ளறிவாயோதே.

இ - ள். சென்மத்தில் சனி நிற்கில் கலக்கம், குடும்பத்தில் சண்டை வழக்கு, வீரபராக்கிரமங் குறைதல், தான் செய்யும் வாணிபத்தால் பொருள்சேதம், அரசர்கள் விரோதம், குன்ம நோயுண்டாதல், பிராமணர்களால் அச்சம், தன்மனைவி அன்னியகிராமம் சென்று விடுவாளென்றுங் கூறுக எ-று. 77

2-ல் சனி நின்ற பலன்

இங்கிதமா யிரண்டினிலே சனியிருந்தால்
இவனுக்கு அலைச்சல்பல வுண்டுபாரு
தங்கமெலாம் சேதமென்பார் தவித்திருப்பான்
தளராத தேகமதில் கொடுநோய்காட்டும்
மங்கையர்கள் பலராலும் வழக்குகாட்டும்
மானிலத்தோர் தூஷிக்கப் பெயரெடுப்பான்
பொங்கமதாய் மன்னர்களால் புகழ்ச்சிகுன்றி
புகுந்திடுவான் காவல்தனில் பொய்யாகாதே.

இ-ள். ஜென்மத்திற்கு இரண்டாமிராசியில் சனி நிற்கில் அலைச்சல், திரிச்சல், தங்கநகையாவுஞ் சேதமாதல், தளர்ச்சியில்லாத தனது தேகத்தில் கொடுமையான நோயுண்டாதல், அநேக பெண்களால் வழக்குண்டாதல், உலகத்தவர் யாவராலும் தூஷிக்கும்படி பெயரெடுத்தல், மேன்மை பொருந்திய ராஜாக்களால் தன் பெருமை முழுவதுங்குன்றி கடுங்காவலிலும் இருப்பான் எ-று. 78

### 3-ல் சனி நின்ற பலன்

படிமிசையோர் போற்றுசனி மூன்றிருந்தால்
பாரமனை மேடையுண்டு பக்தியுண்டு
கொடியவிஷப் பீடையெலாங் குன்றுமப்பா
குவலயத்தி லவனுக்குப் பெருமையுண்டு
நெடியவிவன் செய்தொழிலால் லாபமுண்டு
நினைத்ததெலாம் முடியுமென்பார் நேயராலும்
அடியவரா லிவனுக்கு அநேகமுண்டு
அன்பாக யிப்பலனை யுரைசெய்வாயே.

இ-ள். யாவரும் போற்றும் சனி ஜென்மத்திற்கு மூன்றாமிராசியில் நிற்கில் நூதனமான அழகிய மாடகூட முண்டாதலும், தன் தேகத்திலுள்ள கொடிய விஷநோய்யாவுங் குன்றுதலும், இப்பூமியில் யாவரும் போற்றும்படி வாழ்தலும், தான் செய்யுந் தொழிலால் மிக்க லாபமும், தான் நினைத்தபடி யாவுங் கைக்கூடுதலும், சிநேகராலும், அடியார்களாலும் அநேகம்பொருள் சேருமென்றுங் கூறுவலாயாக. 79

### 4-ல் சனி நின்ற பலன்

முனிவுருகுஞ் சனிநான்கி லிருந்தபோது
மூர்க்கமுண்டு இளையவற்கு கெண்டமுண்டு
இனியபணி பூஷணங்கள் நீங்கும்பாரு
இன்பமுள ஸ்திரீநோயால் வருந்துவான்பார்
வனிதையரால் பொருள்சிலவு வாய்க்குமென்பர்
வணங்கிவந்தோ ரெதிரிகளாய்த் தோன்றுவார்கள்
தனியதொரு வாணிபத்தி லிலாபமில்லை
தன்யனெனும் பேர்குறையுஞ் சாற்றுவாயே.

இ-ள். கோபத்தையுடைய சனி ஜென்மத்திற்கு நான்காமிராசியில் நிற்கில் கோபமுண்டாதல், தன் இளைய துணைவர்களுக்கு கெண்டாதி கெண்டங்களுண்டாதல், மகிழ்ச்சிபொருந்திய ஆபரணங்கள் கைவிட்டு நீங்கும், தனக்கு சேர்க்கைநோயால் வருந்தும்படிநேரும், பெண்களால் சிலவு, தன்னை வணங்கியிருந்தோரெல்லாம் விரோதமாதல், தான் செய்யும் வியாபாரத்தால் பலிதங்குறைதல், தனவந்தனெனும் பிரக்யாதி குறைதல் முதலிய பலனுண்டு எ-று. 80



### 5-ல் சனி நின்ற பலன்

பஞ்சமத்தில் சனியிருந்த பலனைக்கேளு
பகரவொண்ணு தரித்திரங்கள் பலிதங்குன்றும்
வஞ்சியர்கள் தன்னாலும் வழக்குகாட்டும்
வளமான வாகனங்கள் சேதமாகும்
கொஞ்சியதோர் மைந்தனுக்குக் குறைகள்நேரும்
குறிப்பான காரியத்தில் ஜெயங்களில்லை
அஞ்சிடுவா னரசர்களா லையோவென்று
அறிவிப்பா யிப்பலனை யறிகுவாயே.

இ-ள். ஜென்மத்திற்கு ஐந்தாமிராசியில் சனி நிற்கில் சொல்லவொண்ணாத தரித்திரம், பூமிமூலமான பலிதங்குறைதல், பெண்களால் வழக்கு, மேன்மைபொருந்திய வாகனச்சேதம், தனது புத்திரர்களுக்குப்பீடை, குறித்த காரியங்கள் அபஜெயமுண்டாதல், மன்னர்களால் அச்சமுண்டாதல் முதலிய பலனுண்டு எ-று. 81

### 6-ல் சனி நின்ற பலன்

பரவியதோர் சனியாறி லிருந்தபோது
பாலனுக்கு பாக்கியங்கள் பலவுமுண்டு
நிரவியதோர் மனைவியினால் மேன்மையுண்டு
நேர்ந்தவழக்கே ஜெயிக்கும் நிச்சயந்தான்
விரவியதோர் பூமியினால் பலிதமுண்டு
வேந்தர்களால் கௌரவங்க ளுண்டுபாரு
சரசமதாய் வாகனங்கள் சேரும்பாரு
சமர்த்துடையோ னாகியிவன் வாழ்வான்பாரே.

இ-ள். மேன்மைபொருந்திய சனி ஜென்மத்திற்கு ஆறாமிராசியில் வாசம் செய்யுங்காலம் மேலான பொன்பூஷண பாக்கியங்கள் சேர்தலும், தன் மனைவியினால் மிகுந்த செல்வமும், அக்காலத்திலுண்டான வழக்கு ஜெயித்தலும், அரசர்களால் கௌரவமேம்பாடும், அழகிய வாகனங்களும், பலமுடையவனாக வாழ்ந்திருப்பானென்றுங் கூறுக எ-று. 82

### 7-ல் சனி நின்ற பலன்

மதமுற்ற சனியேழி லிருந்தாலப்பா
மாமனையில் சூதகங்கள் பலவுமுண்டு
பதனமுள பணிகளெலாம் சேதமாகும்
பணியணிகள் பிறராலே சேதமாகும்
விதவிதமாய் வழக்குண்டு வேந்தர்மூலம்
விவசாயம் பலிக்காது விவரங்கேளு
அதனமதாய் சிலவாகும் அறிவுகுன்றும்
ஆகாது யிப்பல னன்பாயோதே.

இ-ள். பலம்பொருந்திய சனி ஜென்மத்திற்கு ஏழாமிராசியில் வாசம் செய்யுங்காலம் மேன்மையுடைய தனது குடும்பத்தில் பற்பல சூதகாதி பீடைகளும், பத்திரமாயிருக்குந் தனது பொன்னுபரணங் கள் சேதமாகும், பிறராலும் (மோசத்தால்) அணிபணிகள் சேதம், அனேகவிதமான வழக்கு முதலியவை யுண்டாதல், பூமிமூலமாய்ப் பலிதகுறைவு, குடும்பத்தில் அமோகமாய் சிலவு, புத்திகுறைச்சல், கொடியபலனே நடக்கும் என்றும் கூறுக எ-று. 83

8-ல் சனி நின்ற பலன்

பலனில்லா அட்டமத்தில் சனியிருந்தால்
பாலனுக்கு தாயாதி வழக்குசொல்லு
குலங்களிலே மாணமுண்டு கொடுமையுண்டு
குவலயத்தி லிவனுக்கு பெருமையில்லை
அலைந்திடுவான் தேசமெங்கும் மன்புகுன்றும்
ஆகாது கண்களுக்கு ரோகமுண்டு
தலங்களிலே சஞ்சாரஞ் செய்யநேரும்
தரித்திரமு மிகுதியென்பார் தணிவாய்கூறே.

இ-ள். பலன் குறைந்த சனி ஜென்மத்திற்கு அட்டமஸ்தானத் தில் நிற்கில் தாயாதிகளால் வழக்கு முதலியவை உண்டாதல், பிறந்த வருடம் 20-க்குள் மரணமுண்டாதல், கொடுமையுண்டாதல், இப் பூமியில் புகழ்ச்சி குறைந்து பல தேயங்களிலும் அலைந்து திரிதல், புத்திரசோபம், விழிகளுக்கு ரோகமுண்டாதல், தலங்களிலே சஞ் சாரம் செய்யவும் நேருமென்றுங் கூறுவாயாக எ-று. 84

9-ல் சனி நின்ற பலன்

அன்புற்ற ஒன்பதினிற் சனியிருந்தால்
அறிவுடையோர் விரோதமுண்டு அழகுகுன்றும்
தென்புற்ற பிதுர்பொருளுஞ் சேதமாகும்
தேன்போன்ற களத்திரத்தால் கோபமுண்டு
இன்புற்ற வாகனங்கள் பலங்குறைந்து
இருக்குமப்பா கொடியோரால் இன்பங்குன்றும்
வன்புற்ற புத்திரரோ பிரிந்துபோவார்
வயித்தியத்தால் பலபொருளுஞ் சேதமாமே.

இ-ள். ஜென்மத்திற் கொன்பதாமிராசியில் சனி நிற்கில் அறி வாளர் விரோதம், அழகு குறைதல், சந்தோஷத்தையுடைய பிதுர் செல்வம்யாவும் பாழாகுதல், இனிமையான களத்திரத்தால் கோபம், தன்னிடத்திலுள்ள வாகனங்கள்யாவும் பலங் குறைந்துபோம், துன் மார்க்கரால் துன்பமுண்டாதல், தன் புத்திரர்கள் தன்னை விட்டுப் பிரிதல், வயித்தியத்தால் பொருள்சேதம் உண்டாதல் முதலிய பலன் உண்டாகுமென்றுங் கூறுக எ-று. 85



10-ல் சனி நின்ற பலன்

பேருற்ற தசமமதில் சனியிருந்தால்
பிரபலங்கள் குறைவாகும் பித்தன்போல
நேருற்ற தேயமதில் வாழநேரும்
நினைத்தவகை கிட்டாது நெறியும்போகும்
பேருற்ற பூமிதனில் பலிதங்கொஞ்சம்
பிறராலே உதவியுண்டு றுணங்களுண்டு
சீருற்ற மனைவிக்கு திரேகம்குன்றும்
சிறுவர்களுக் கலைச்சலுண்டு செம்மைதானே.

இ-ள். பிரக்யாதிபெற்ற சனி சென்மத்திற்கு பத்தாமிராசியில் நிற்கில் மேன்மை குறைவு, பயித்தியம் பிடித்தவனைப்போல் தான் குறித்த இடத்தில் வாழும்படி நேரும், தான் நினைத்தது கைகூடாது, நெறிதவருதல், தன் பூமியில் பலிதங்குறைதல், பிறரால் கடனுக உதவியுண்டாகும், தனது மனைவிக்கு திரேகம் மெலிந்து காட்டும், தனது மைந்தர்களுக்கும் அலைச்சல் உண்டாகுமென்றுங் கூறுக எ-று.

11-ல் சனி நின்ற பலன்

பாசமுள பதினொன்றில் சனியிருந்தால்
பறந்துவிடுந் தரித்திரங்கள் பசுவுஞ்சேரும்
வாசமுள நகரமதில் வாய்க்குமில்லம்
வளமான பெண்ணொருத்தி சேர்வாள்பாரு
பாசமுள மனைவிக்குப் பலவுஞ்சேரும்
பணிந்திடுவார் பலபேரும் பணியுமுண்டு
தேசமதி லிவன்பெருமை சொல்லொணுது
திறமுடை யோனுகி வாழ்வான்பாரே.

இ-ள். ஆசைபொருந்திய சனி சென்மத்திற்கு பதினொன்றும் ராசியில் நிற்கில் இச்சாதகனுக்கு தரித்திரமென்பதே தலைகாட்டாது, பசு வாகனங்கள்சேரும், தான்வாழும் தேசத்திலேயே நூதன இல் லஞ்சேரும், அழகுபொருந்திய பெண்ணொருத்தி சேர்வாள், தனது மனைவிக்கும் அநேக அணிபணிகள் சேரும். அநேகரால் போற்றும் படி வாழ்வன், இவன் அளவிறந்த பெருமையுடன் தைரியமுடையவ னுகி வாழ்ந்திருப்பான் எ-று. 87

12-ல் சனி நின்ற பலன்

பன்னியதோர் பன்னிரண்டிற் சனியிருந்தால்
பலவகையு நட்டமுண்டு லாபங்குன்றும்
துன்னியதோர் விழிகளுக்கு ஊனமுண்டு
துணைவருக்குச் சிலுகுண்டு துயாமுண்டு

அன்னியர்கள் விரோதமதா லரசர்மூலம்
அழகான பணிகளெலா மிழந்துபோவான்
தன்னிடத்தி லுள்ள ஒரு அடிமையாலே
தானியங்கள் களவாகுந் தனிவாயோதே.

இ-ள். ஜென்மத்திற்குப் பன்னிரண்டாமிராசியில் சனி நிற்கில் பற்பல வகையில் நட்டமுண்டாதல், வருமானங் குறைதல், அழகிய விழிகளுக்கு ஊனம், துணைவருக்குச் சிலுகுண்டாதல், துயரமுண்டாதல், பிறர் விரோதத்தால் தன்னிடத்திலுள்ள அணிபணிகளை அரசர் கைக்கொள்ளுதல், தன்னிடத்திலுள்ள அடிமையாளால் தானியங்கள் களவுபோதல் முதலிய பலன் நடக்கும் எ-று. 88

சனியின் பலத்தை நான்குவிதமாகப் பிரித்துக் கூறுகிறார்

பன்னிரண்டு ஜென்மம்ரெண்டு பலத்ததோஷம்
பகருகின்ற நாலேழு பத்துமட்டும்
உன்னுகின்ற கால்தோஷமெட்டு மைந்தொன்பான்
உரைசெய்வா ரதைதோஷம் மூன்றும்ஆறும்
வன்னமிகும் பதினொன்றும் மேன்மையாகும்
வளமான யிப்பலனோ டிறைவன்றன்னை
நன்னயமாய் சேர்த்துபல னுரைக்கவேண்டும்
நாற்றிசையுங் கீர்த்திபெற நவிலுவாயே.

இ-ள். ஜென்மம் இரண்டு பனிரண்டு இம்மூன்றிராசியிலும் சனி வாசகாலம் கொடியதிலுங் கொடியபலனாகும். நான்கு-ஏழு-பத்து இம்மூன்றுராசியிலும் சனி வாசகாலம் கால்பாகம் கொடிய பலனுண்டு. ஐந்து-ஒன்பது-எட்டு என்னும் 3-க்ஷேத்திரங்களிலும் சனி வாசகாலம் அரைபாகம் கொடிய பலனும், 3-6-11 இவ்விடங்களில் சனி வாசகாலம் முழுசுபத்துவமு முண்டாகுமென்றுங் கூறுவாயாக. இத்துடன் குருவிருக்குங் கோசார பலத்தையுங் கூட்டி நிலை கூறுவாயாகின் இம்மண்ணுலகத்தோர் யாவரும் போற்றுவார் எ-று.

வி-ரை. குருவையுங்கூட்டி நிலைகூறுக வென்றது உதாரணமாக சனி 5-லிருந்தால் அரைபாகம் கஷ்டத்தை தருபவனென்றபடி. அதேகாலத்தில் 80-ஆம் செய்யுளின்படி குரு ஜென்மத்திற்குப் பதினொன்றிலிருந்தால், மேற்படி சனிக்குரிய அரைபாவ பலனும் நீங்கி முழுசுபபலனை எனவும், மற்றும் முறையே சனி கொடியவனாகிற போது குருவையும், குரு கொடியவனாகிறபோது சனியையுங் கூட்டிச் சொல்வதே யாகும் எ-று. 89

இராகு கேதுகளுக்கு துர்ஸ்தான விவரமும் பலனும்

நிச்சயமாய் சென்மமுடன் நான்கைந்தேழு
நினைவான விரண்டுடனே எட்டுபத்து



அச்சமிலா நவமுடனே வியங்கள்மட்டாய்
ஆகாது பலனென்பா ரறைகுவேன்கேள்
உச்சிதமாய் தனங்கள்பல சேதமாகும்
உயர்ந்தவரால் சிலுகுண்டு உயிர்க்குஞ்சேதம்
இச்சையுள கன்னிஉற்றோர் நண்பரெல்லாம்
இருந்திடுவர் விரோதமென யினிவாயோதே.

இ-ள். பாம்புகளென்னும் இராகு கேதுக்கள் ஜென்மம் இரண்டு-நான்கு-ஏழு-எட்டு-ஒன்பது-பத்து-பன்னிரண்டு என்னும் இவ்விடங்களிலிருந்தால் கொடிய பலனையே தருகுவார். அவற்றின் விபரமெப்படியெனில்:—அழகுபொருந்திய தனங்கள் பல சேதமாதலும், மேலான ஜனங்கள் விரோதம், பிராணஆபத்து, தனதன்பிற்கிசைந்த மனைவி, தாய், தந்தையர், நண்பர் முதலானவரெல்லாம் விரோதமாகக் காண்பாரெனவுங் கூறுவாயாக எ-று. 90

பாம்புகள் நற்பலனைத்தரு மிராசியும் பலனும்

எண்ணியதோர் மூன்றுடனே ஆறுங்கூட
இனியபதி னொன்றினிலே பாம்பிருந்தால்
கண்ணியமாம் பூமிபல சேரும்பாரு
கனவழக்கை ஜெயித்திடுவான் கவலையில்லை
புண்ணியங்கள் பலவுண்டு புலவராலும்
புகழுமந்த மனைவியினால் பலவுஞ்சேரும்
பண்ணியதோர் பயிர்செட்டும் பலிக்கும்பாரு
பாலனுக்குக் குறைவில்லை பண்பாய்யோதே.

இ-ள். பாம்புகளாகிய இராகு கேதுக்கள் ஜென்மத்திற்கு மூன்று - ஆறு - பதினொன்று முதலிய ஸ்தானங்களில் வாசகாலம் பற்பல இன்பபலனுண்டு. அவற்றின் விவரம் எப்படியெனில்:—மேன்மைபெற்ற பூமிகள் பல சேர்தலும், பழைய வழக்கை ஜெயிக்குதல், கவலை நீங்குதல், புண்ணியமுண்டாதல், புகழ்ச்சி பெற்ற தனது மனைவியால் பொருளுண்டாதல், தான் செய்யும் பூமி வகைத் தொழில் பலிதமாதல், குறைவில்லாமல் வாழ்ந்திருக்கவும் நேரும் எ-று. 91

பஞ்சபூத விலக்கணம்

மூலமாகிய மூர்த்தி வீமேசர்கண்
முதியதந்தை மதியுறு தாயாரே
கோவலஞ் செழுத்தாங் குருவெள்ளிசேய்
கோதிற்றாதுவன் வான்சனி கொண்டதே

காலகற்ப் முடிவுபே ரண்டமுங்
காணுமே புல்லுயிற் பிண்டகாரணஞ்
சீலநூன் மறையாக மந்தத்துவங்
தேவர்கோ ணகரத்தார் செருக்குமே.

இ-ள். யாவற்றையும் படைத்தருளிய ஈஸ்வரருக்கு இரவி உயிரென்றும், சந்திரன் உடலென்றும், தனது திரிநேத்திரமான அன்பத்தோரக்ஷரத்திற்கு மூலமாகிய பஞ்சாக்ஷரமே பஞ்சபூதங்களென்றும், பஞ்சபூதங்களுக்கு ஆதாரமான நகாரமென்றும், பிரிதிவு குருவாகவும், மகாரமான அப்பு சுக்கிரனாகவும், சிகாரமான தேயு குஜனாகவும், வகாரமான வாயு புதனாகவும், யகாரமான ஆகாயம் சனியெனவுங்கொண்டு, இவற்றின் சப்தம் சனிபிடமாய் செல்லவும், இரசம் சுக்கிரனிடமாய்ச் செல்லவும், ரூபம் குஜனிடமாய்ச் செல்லவும், கந்தம் குருவினிடமாய்ச் செல்லவும், இப்படித் தத்துவங்களை அமைத்து உலகங்களு மூழிகளுங் காலங்களுமாக நடக்க, அகார-உகார-மகார - விந்துநாதமே ஆதாரமாக இடை-பிங்கலை - சுழிமுனையென்கிற சூஸ்திரக் கயிற்றினால் இந்த கிரகங்களைச் சரியாக நிறுத்தி திருவிளையாடல் கொண்டருளுவார். இவ்வாறு பூர்வோத்திர நல்வினையாலுதித்த ஆத்துமாக்களுக்கு நற்பலனும், சுவர்க்காதிலோகமும், தீவினைப்பயனால் உதித்தோர்க்கு கஷ்டமும், நரகமும் செய்தருளுவார். அகத்தியமாமுனியே! இவை அண்டத்திற்கும் பிண்டத்திற்கும் உண்டென்று அறிவாயாக எ-று. 92

பாவகபலன் முற்றிற்று.

---



## கௌரிபஞ்சாங்கம் பார்க்கும்வகை

வாசகம்

நாளொன்றுக்கு பகல் முகூர்த்தம்-8, இராமுகூர்த்தம்-8, அம்முகூர்த்தம் ஒன்றுக்கு நாழிகை மூணேமுக்கால் இந்தப்படி அந்தந்த வாரங்களினும் இராப்பகல் முதலாக ஒவ்வொரு முகூர்த்தங்களுக்கும் பலன் அடியிற்கண்டவாறு அறியவேண்டும்.

பகல் முதலாவது முகூர்த்தபலன்:—ஞாயிற்றுக்கிழமை-உத்தியோகம், திங்கட்கிழமை-அமுதம், செவ்வாய்க்கிழமை-ரோகம், புதன்கிழமை-இலாபம், வியாழக்கிழமை-தனம், வெள்ளிக்கிழமை-சுகம், சனிக்கிழமை சோரமாமெனவறிக.

பகல் 2-வது முகூர்த்தபலன்:—ஞாயிற்றுக்கிழமை-அமுதம், திங்கட்கிழமை-விஷம், செவ்வாய்க்கிழமை-இலாபம், புதன்கிழமை-தனம், வியாழக்கிழமை-சுகம், வெள்ளிக்கிழமை-சோரம், சனிக்கிழமை உத்தியோகமெனவறிக.

பகல் 3-வது முகூர்த்தபலன்:—ஞாயிற்றுக்கிழமை - ரோகம், திங்கட்கிழமை-ரோகம், செவ்வாய்க்கிழமை-தனம், புதன்கிழமை-சுகம், வியாழக்கிழமை-சோரம், வெள்ளிக்கிழமை-உத்தியோகம், சனிக்கிழமை விஷமெனவறிக.

பகல் 4-வது முகூர்த்தபலன்:—ஞாயிற்றுக்கிழமை - இலாபம், திங்கட்கிழமை-இலாபம், செவ்வாய்க்கிழமை-சுபம், புதன்கிழமை-சோரம், வியாழக்கிழமை-உத்தியோகம், வெள்ளிக்கிழமை-விஷம், சனிக்கிழமை-அமுதமெனவறிக.

பகல் 5-வது முகூர்த்தபலன்:—ஞாயிற்றுக்கிழமை-தனம், திங்கட்கிழமை-தனம், செவ்வாய்க்கிழமை-சோரம், புதன்கிழமை-விஷம், வியாழக்கிழமை-அமுதம், வெள்ளிக்கிழமை-அமுதம், சனிக்கிழமை-சோரமெனவறிக.

பகல் 6-வது முகூர்த்தபலன்:—ஞாயிற்றுக்கிழமை-சுகம், திங்கட்கிழமை-சுகம், செவ்வாய்க்கிழமை-உத்தியோகம், புதன்கிழமை-உத்தியோகம், வியாழக்கிழமை-விஷம், வெள்ளிக்கிழமை-ரோகம், சனிக்கிழமை-இலாபம் என்றறிக.

பகல் 7-வது முகூர்த்தபலன்:—ஞாயிற்றுக்கிழமை - சோரம், திங்கட்கிழமை-சோரம், செவ்வாய்க்கிழமை-விஷம், புதன்கிழமை-அமுதம், வியாழக்கிழமை-ரோகம், வெள்ளிக்கிழமை-இலாபம், சனிக்கிழமை தனமெனவறிக.

பகல் 8-வது முகூர்த்தபலன்:—ஞாயிற்றுக்கிழமை-விஷம், திங்கட்கிழமை-உத்தியோகம், செவ்வாய்கிழமை-அமுதம், புதன்கிழமை-

ரோகம், வியாழக்கிழமை-இலாபம், வெள்ளிக்கிழமை-தனம், சனிக்கிழமை-சுகமெனவறிக.

இரவு முகூர்த்த பலன்

இரவு முதலாவது முகூர்த்தபலன்:—ஞாயிற்றுக்கிழமை-தனம், திங்கட்கிழமை - சுகம், செவ்வாய்க்கிழமை - சோரம், புதன்கிழமை-உத்தியோகம், வியாழக்கிழமை-அமுதம், வெள்ளிக்கிழமை-ரோகம், சனிக்கிழமை-இலாபம் எனவறிக.

இரவு 2-வது முகூர்த்தபலன்:—ஞாயிற்றுக்கிழமை-சுகம், திங்கட்கிழமை-சோரம், செவ்வாய்க்கிழமை-உத்தியோகம், புதன்கிழமை-அமுதம், வியாழக்கிழமை-விஷம், வெள்ளிக்கிழமை-இலாபம், சனிக்கிழமை-தனம் எனவறிக.

இரவு 3-வது முகூர்த்தபலன்:—ஞாயிற்றுக்கிழமை - சோரம், திங்கட்கிழமை - உத்தியோகம், செவ்வாய்க்கிழமை - விஷம், புதன்கிழமை-ரோகம், வியாழக்கிழமை-ரோகம், வெள்ளிக்கிழமை-தனம், சனிக்கிழமை-சுகம் எனவறிக.

இரவு 4-வது முகூர்த்தபலன்:—ஞாயிற்றுக்கிழமை-விஷம், திங்கட்கிழமை-அமுதம், செவ்வாய்க்கிழமை - அமுதம், புதன்கிழமை-இலாபம், வியாழக்கிழமை-இலாபம், வெள்ளிக்கிழமை-சுகம், சனிக்கிழமை-சோரம் எனவறிக.

இரவு 5-வது முகூர்த்தபலன்:—ஞாயிற்றுக்கிழமை - உத்தியோகம், திங்கட்கிழமை - விஷம், செவ்வாய்க்கிழமை - ரோகம், புதன்கிழமை-தனம், வியாழக்கிழமை-தனம், வெள்ளிக்கிழமை - சோரம், சனிக்கிழமை-உத்தியோகம் எனவறிக.

இரவு 6-வது முகூர்த்தபலன்:—ஞாயிற்றுக்கிழமை - அமுதம், திங்கட்கிழமை-ரோகம், செவ்வாய்க்கிழமை-இலாபம், புதன்கிழமை-சுகம், வியாழக்கிழமை-சுகம், வெள்ளிக்கிழமை-உத்தியோகம், சனிக்கிழமை-விஷம் எனவறிக.

இரவு 7-வது முகூர்த்தபலன்:—ஞாயிற்றுக்கிழமை - ரோகம், திங்கட்கிழமை-இலாபம், செவ்வாய்ச்கிழமை-தனம், புதன்கிழமை-சோரம், வியாழக்கிழமை - சோரம், வெள்ளிக்கிழமை-விஷம், சனிக்கிழமை-அமுதம் எனவறிக.

இரவு 8-வது முகூர்த்தபலன்:—ஞாயிற்றுக்கிழமை - இலாபம், திங்கட்கிழமை-தனம், செவ்வாய்க்கிழமை-சுகம், புதன்கிழமை-விஷம், வியாழக்கிழமை - உத்தியோகம், வெள்ளிக்கிழமை - அமுதம், சனிக்கிழமை-ரோகம் எனவறிக.

கௌரிபஞ்சாங்கம் பார்க்கும்வகை முற்றிற்று.



## உயிரெழுத்து ஆரூடம்

| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அ | 1 | உ | 5 | ஐ | 9 | ங | 13 | ண | 17 | ம | 21 | வ | 25 |
| ஆ | 2 | ஊ | 6 | ஒ | 10 | ச | 14 | த | 18 | ய | 22 | ழ | 26 |
| இ | 3 | எ | 7 | ஓ | 11 | ஞ | 15 | ந | 19 | ர | 23 | ள | 27 |
| ஈ | 4 | ஏ | 8 | க | 12 | ட | 16 | ப | 20 | ல | 24 | ன | 28 |

மேற்கண்ட உயிரெழுத்து சக்கரத்திலுள்ள எழுத்துகளில் ஏதேனும் தனக்கிஷ்டமான எழுத்திலொன்றைத் தொட்டு உத்தேசித்தகாரியத்தின் பலாபலனை எளிதில் கண்டுகொள்ளலாம். தொட்ட எழுத்தின் பாடலைக்கண்டு வாசிக்கவேண்டும்.

விருத்தம்

1 அகாரத்தின் பலன்

தொட்டதோர்முதலெழுத்தால் தோற்றிடும்பொருள்கைகூடும்
இட்டமாய்வதுவையாகு மிருநிதிசெல்வஞ்சேரும்
அஷ்ட லட்சிமிகடாட்ச மருள துவந்துகூடும்
புஷ்டியாம்போகிறவேலை புகழுடன்பலிதமாமே.

2 ஆகாரத்தின் பலன்

ஆமெனுமிரண்டுக்குற்ற அட்சரந்தொட்டதாலும்
போமெனுமிடருமுண்டாம் புத்தியும்நிலைப்படாது
தாமெனுந்தொடுத்தவேலை தடையுடனலைச்சலாகும்
பூமியும்பலிதமாகாப் பொல்லாங்குவிளையும்பாரே.

3 இகாரத்தின் பலன்

பார்க்கவேமூன்றுக்குற்ற பண்புறுமெழுத்தைதொட்டால்
தீர்க்கமாமுயற்சியாலே தான்பெரும்லாபமுண்டாம்
தேர்க்கவேபதினல்வந்த குலவியதனங்களெல்லாம்
கோர்க்கவேகலகத்தாலே தோன்றிடுமென்றுசெப்பே.

4 ஈகாரத்தின் பலன்

செப்பவேநான்கிற்குற்ற செயமுறுமெழுத்தைத்தொட்டால்
ஒப்பியநடக்கைதன்னை யொழுங்கதாய்நடக்கநாளும்
கொப்பனவிவாகங்கூடிக் குலவிடுமதினுற்செல்வம்
தப்பியந்தொழிலுமாகுந் தானொருவுதவியாலே.

5 உகாரத்தின் பலன்

ஆலவேயைந்துக்குற்ற வட்சரந்தொட்டால்கேளும்
சாலவேகஷ்டமெத்தச் சஞ்சலம்பயம்விரோதம்
கோலவேவ்ழக்குச்சண்டை குற்றமாய்த்தொழிலும்போகும்
ஏலவேநினைத்தவேலை யாவதுதிண்ணந்தானே.

### 6 ஊகாரத்தின் பலன்

தானெனுமாறுக்குற்ற தடையதாமெழுத்தைத்தொட்டால்
ஊனமாம்நினைத்தபெண்ணு முனக்கதுகிட்டிடாது
போனதோர்ஜீவன்தானும் பிடிபடநாள்கள்செல்லும்
ஏனமாந்துலைவிருந்து எட்டிடுஞ்சேதிகாண்பாய்.

### 7 எகரத்தின் பலன்

காணவேயெழுக்குற்றக் களிப்புருமெழுத்தைத்தொட்டால்
வேணவேவுனக்குத்தானும் விரோதியாமொருவனுண்டு
பூணவேயுனக்குமெத்தப் பொல்லாங்குச்செய்வோனாகும்
நாணவேயவனைனாளும் நம்பினீயிருந்தால்மோசம்.

### 8 ஏகாரத்தின் பலன்

இருந்திடயெட்டுக்குற்ற ஏகாரத்தைதொட்டதாலும்
சிரந்திடகுறித்தவாறே சித்தியாம்மணங்களாகும்
பொருந்தியவழகுமுள்ள புருஷனால்புகழுமுண்டாம்
திருந்தியவழக்குவெல்லும் தேவதைதுணையுமுண்டே.

### 9 ஐகாரத்தின் பலன்

உண்டெனவொன்பானுக்கு வுற்றதோரெழுத்தைத்தொட்டால்
பண்டுடன்நினைத்தவேலை பலித்திடுமென்மேலாகும்
கொண்டதோர்பெண்ணினாலே குலமதுவிருத்தியோங்கும்
விண்டதோர்மொழிவிளங்கும் வேந்தரால்நன்மைபேச.

### 10 ஒகாரத்தின் பலன்

பேசவேபத்துக்குற்றப் புகழுருமெழுத்தைத்தொட்டால்
கூசவேபிரயாணந்தான் கூடிடுந்திடும்பிரவேசம
நேசமாம்வழித்துணைக்கு நல்லதோர்துணையுங்கூடும்
பாசமாம்பத்துக்கொன்றும் பலித்திடும்பயப்படாதே.

### 11 ஓகாரத்தின் பலன்

பயமிலைப்பதினொன்றுக்குப் பன்புருமெழுத்தைத்தொட்டால்
நயம்பெறக்கடல்மார்க்கமாய் நண்ணியேபோனோர்மீள்வர்
வயமுருமவர்களாலே வருமனுகூலமென்ற
தயவுடனினைத்தவேலை தடையிலாக்கூடுமின்னே.

### 12 ககாரத்தின் பலன்

மின்னவேபனிரெண்டிற்கு மருவியவெழுத்தைத்தொட்டால்
உன்னிடப்புதல்வர்க்கேனு முனக்கேனுமாபத்துண்டாம்
பன்னியவதினால்மெத்தப் பாதையும்வந்துநேரும்
பின்னமாமுத்தேசங்கள் பேசிடப்பலனுமில்லை.



### 13 ஙகாரத்தின் பலன்

இல்லவேபதிமூன்றிற்கு யேற்பட்டயெழுத்தைத்தொட்டால்
அல்லலுமகன்றுப்போகு மகத்தினுத்தேசங்கூடும்
புல்லவேசகாயமுண்டு புகழுடன்கீர்த்தியோங்கும்
வெல்லவேதீரமோடு வழுத்தியமொழியாமுண்மை.

### 14 சகரத்தின் பலன்

உண்மையாம்பதினாலுக்கு உகந்திடுஞ்சகரந்தொட்டால்
திண்மையாங்கொஞ்சகாலந் தீண்டிடுங்கஷ்டமுண்டாம்
வண்மையாங்கொஞ்சகாலம் வாய்ந்திடுயோகமோக்ஷம்
புண்மையாய்ப்பொறுப்பாய்நீயும் புகழ்வடிவேலர்காப்பார்.

### 15 ஞகாரத்தின் பலன்

கார்க்கவேமூவைந்திற்கு காணுமோர்ஞகரந்தொட்டால்
வேர்க்கவேதாரம்மூன்றும் வாய்க்கினுங்கஷ்டமெத்த
தோர்க்கவேபொருளும்போகுந் தரித்திரந்துலையதாகும்
பார்க்கவேயதைசெய்தாலும் பலித்திடாதென்றுசெப்பே.

### 16 டகரத்தின் பலன்

செப்பவேபதினாறுக்குச் சேர்ந்ததோரெழுத்தைத்தொட்டால்
தப்பியப்பொருளுங்காணாத் தரித்திரமிகுதியாகும்
மெப்புறயெதைச்செய்தாலும் மீண்டிடுந்துன்பமேலாய்
கப்பியமெய்யிற்வாதக் கடும்பிணிவாட்டுந்தானே.

### 17 ணகரத்தின் பலன்

வாட்டமாய்பதினேழுக்கு வருமொருயெழுத்தைத்தொட்டால்
கேட்டதோர்பெண்ணைகடுங் கலியாணஞ்செய்யக்ஷேமம்
கூட்டமாமுறவோர்சேர்வர் கோரியதொழிலுங்கிட்டும்
நாட்டியப்பயிறுமோங்கும் நாள்சென்றவழக்குவெல்லும்.

### 18 தகரத்தின் பலன்

வெல்லவேபதினெட்டோடு வாழுமோரெழுத்தைத்தொட்டால்
அல்லவேயகத்தில்கொண்ட வாசையுமீடேறாது
புல்லவேகளவுபோன பொருளதும்புலப்படாது
சொல்லவேயரசராலே துன்பமும்விளையும்பத்தி.

### 19 நகரத்தின் பலன்

பத்தியபத்தொன்பானில் பாகமாமெழுத்தைத்தொட்டால்
சுத்தமாம்நல்லயோகம் சம்பத்துமிகவுண்டாகும்
சித்தமாங்குடும்பந்தானுந் திகழ்பெறதழைத்துஓங்கும்
உத்தேசவெண்ணமெல்லா மொருகுறைவின்றியாமே.

### 20 பகரத்தின் பலன்

ஆகவேஇருபானோடு மடுத்திடுமெழுத்தைத்தொட்டால்
தாகமாமுனக்குமெத்தத் தரிக்கொணாக்கெடுதிநேரும்
பாகமாஞ்சினேகரோடு பண்புடனாலோசிக்க
வேகமாமிவைகளெல்லாம் விலகிடுமறிந்திடாயே.

### 21 மகரத்தின் பலன்

அறிந்திடுமிருபத்தொன்றுக் கமர்ந்திடுமெழுத்தைத்தொட்டால்
சிறந்திடுஞ்சினேகத்தாலே சினந்துமேவேறுபட்டாய்
பிரிந்திடக்ஷேமமில்லை பேசியயிருவருக்கும்
நிறைந்திடநேசமாகிற் நீடியபலன்களோதே.

### 22 யகரத்தின் பலன்

ஓதவேயிருபான்ரெண்டிற் குற்றதோரெழுத்தைத்தொட்டால்
போதவேசினேகனாலே பொல்லாதகெடுதிநேரும்
தீதெனயவமானங்கள் தீண்டிடுமரசராலே
காதகச்சினேகந்தன்னைக் கண்டிப்பாயவிலக்கித்தள்ளே.

### 23 ரகரத்தின் பலன்

தள்ளவேயிருபான்மூன்றில் தானுறுமெழுத்தைத்தொட்டால்
கொள்ளவேலாபமுண்டு குலவியமனையாளாலே
தெள்ளியநினைத்தவேலை தானாகநாள்கள்செல்லும்
கள்ளமாங்கோளினாலே கலகமுங்கெடுதிகாட்டும்.

### 24 லகரத்தின் பலன்

காட்டவேயிருபானான்கிற் கலந்ததோரெழுத்தைத்தொட்டால்
நாட்டில்நல்மழையுமுண்டு நன்மனையாட்டிவாழ்க்கை
நேட்டமாய்பெரியோர்நேசந் தேடிடுமதினால்லாபம்
வாட்டமாய்ப்பகைத்துப்போனார் வந்துறவாடுவாரே.

### 25 வகரத்தின் பலன்

வாரெனயிருபத்தைந்திற் வழங்கியவெழுத்தைத்தொட்டால்
சீரெனமனையாளுண்டு சந்ததியாவதில்லை
பேரெனப்புகழுமுண்டு பெருகியதனமுமுண்டாம்
காரெனநினைத்தவெண்ணங் கைகூடுங்கவலைநீக்கே.

### 26 ழகரத்தின் பலன்

நீக்கவேயிருபத்தாறில் நின்றதோரெழுத்தைத்தொட்டால்
பார்க்கவேயெண்ணங்கொண்ட பாவையும்வருவதில்லை
தோர்க்கவேபொருளுஞ்சேதம் தோஷமாம்பகையும்நேரும்
கார்க்கவேமனதில்கொண்ட கருத்ததுமுடிந்திடாதே.



### 27 ளகரத்தின் பலன்

ஆதெனுமிருபத்தேழோ டடுத்திடுமெழுத்தைத்தொட்டால்
தீதெனுந்துன்பமுண்டாந் தேடியபொருள்கிட்டாது
தூதெனவொருவனாலே தூண்டிடுங்கலகம்நேரும்
ஓதெனத்திங்களொன்று வொழிந்தபின்சுகமுண்டாமே.

### 28 னகரத்தின் பலன்

சுகமெனயிருபத்தெட்டில் துலங்கியவெழுத்தைத்தொட்டால்
அகமதுமகிழநாளும் அன்பருஞ்செல்வமுண்டாம்
உகமையாமுத்தேசங்கள் ஒருகுறைவன்றியாகும்
தகமையாஞ்சுப்ரமண்ணியர் தன்னருள்நாளுமோங்கும்.

### நவக்கிரகதேயங்கள்

பாரெலாஞ் சசிகதிரோ னிருவற்குமாகும்
பனிவரை கேகயத்தின் நடுபாம்புசனிநாடாம்
ஏருலவுங் கேகயந்தொட் டெழில்விந்தமட்டும்
இந்துசுதன் பூமியென்றே யியம்புவர்நல்லோர்கள்
கார்செறியும் விந்தமுதற் கௌதமைமட்டாக
கனகனுக்காங் கிருஷ்ணைவரை காப்பியநாடாமே
சீருலவு கிருஷ்ணைமுதல் லங்கைவரையந்த
செவ்வாயின் றேயமென்றே செப்புவர்நல்லோரை.

இ-ள். சூரியன், சந்திரன் இவ்விருவர்களுக்கும் உலகமெல்லாஞ் சொந்தம். இமயமலைமுதல் கேகயதேசம் வரையில் இராகு, கேது, சனி இவர்களுக்குரிய தேசங்களாம். கேகயதேசமுதல் விந்தையபர்வத வரையில் புதனுடைய தேசமாகும் விந்தையபர்வத முதல் கௌதமநாடு வரையில் குருவுக்குரிய தேசங்கள். கௌதம நாடுமுதல் கிருஷ்ணை வரையில் சுக்கிரனுக்குரிய தேசமாகும். கிருஷ்ணைமுதல் இலங்கை வரையிலுமுள்ள தேயங்கள் செவ்வாய்க்குரிய தேசங்களாம் எ-று.

### நவகோட்களுக்குள்ள சக்தி

இயம்பிடுவேன் சூரியற்கோ வளர்க்குஞ்சக்தி
இனியமதி இரத்தமதை விருத்திசெய்வான்
நயம்பெருகுஞ் செவ்வாயோ சக்தியீவான்
நல்லபுதன் தசைவளர்ப்பா னிறைவனேதான்
செயம்பெருகு மறிவிற்காம் வெள்ளிதானும்
சேர்க்கையெனு மிந்திரிய விருத்திசெய்வான்
பயமுடைய சனியவனே நரம்புக்கெல்லாம்
பலந்தருவா னிதையறிந்து பலன்சொல்வாயே.

இ-ள். சூரியனால் வளர்க்கும் சக்தியும், சந்திரனால் இரத்த விருத்தியும், செவ்வாயால் எலும்புக்குள்ள மூளை சக்தியும், புதனால் தசையும், குருவால் சிரசிலுள்ள மூளையும், சுக்கிரனால் இந்திரிய சேட்டையும், சனியால் நரம்புகளும் அவரவர்களுள்ள க்ஷேத்ரத்திற்குத் தக்கபடி பலத்தைக் கொடுத்தலும் கெடுத்தலுமே இவர்களுக்கு உரிய காரகம் எ-று.

வி-ரை. ஆகாயத்திலுள்ள சூரியகிரகணம் நம்மீது வீசுவதால் திரேகம் வளர்ச்சியடைகிறது. சந்திரனால் இரத்த விருத்தியடைகிறது. செவ்வாயால் எலும்புகளிலுள்ளிருக்கும் மூளை விருத்தியடைகிறது. புதனால் தசை விருத்தியடைகிறது. குருவால் அறிவென்னும் மூளை விருத்திடைகிறது. சுக்கிரனால் இந்திரியம் விருத்தியடைகிறது. சனியால் நரம்புகள் விருத்தியடைகிறது. வருங்காலங்களில் ரவிகோட்கள் தினசரியாய் நற்க்ஷேத்திரங்களிலும் துற்க்ஷேத்திரத்திலும் மாறி மாறி வருங்காலமே மேற்படி சக்தி குறைவது மதிகமாவதுமாயிருக்கிறது.

வாழி விருத்தம்

ஆதியாம்மறைகள்வாழி அரனயன்மாலும்வாழி
நீதியாம்முனிவர்வாழி நிறைகல்விதழைத்துவோங்கும்
சோதியாய்யெவரும்காண சோதிடபாலபாடம்
போதமேவயிதைப்படித்தோர் புவியுள்ளமட்டும்வாழி.

## சோதிடபாலபாடம்

முற்றிற்று.

---

பூமகள்விலாசம் பிரஸ், சென்னை:—1939.